# குடியியல்

(முதலாம் பாகம்)

(G. C. E. வகுப்பிற்குரியது)

ஆக்கியோன்:

**அ. விசுவநாதன் B. A.**

(ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி.)

70 283
விசுவ
SLIPR

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

# குடியியல்

(முதலாம் பாகம்)

370.283
விசுவ
SL/PR

(G. C. E. வகுப்பிற்குரியது)

தமிழ்ச் சங்கம்
57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு 6

ஆக்கியோன்:

**அ. விசுவநாதன் B. A.**

(ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி.)

4228.

பிரசுரம்:

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை,**

யாழ்ப்பாணம்.

# FORWARD

Mr. Visuvanathan's book on S. S. C. Civics is a welcome addition to the series he has already produced. The social bias that runs through the book redeems it from being just another text-book of civics in the swabasha. The book is well-written, factual, generally informative and enables the student to better appreciate the political, economic and social forces that shape the lives of the people of a state. A study of the book will serve as a preparation for citzenship in a democratic state. The auther is a teacher with considerable first hand knowledge of political affairs both local and national. That makes it easier for him to present a more direct and realistic approach to the subject.

49, Arasady Road,
Jaffna. 1-1-58

**A. S. Kanagaratnam**

---

# அணிந்துரை

சமூக மிருகமாகிய மனிதன் ஒரு கூட்டமாகச் சேர்ந்து தேசிய இன உணர்ச்சியுடையனாகிச் சட்ட ஒழுங்குக்கமைந்து ஜனநாயக அரசியலை அமைத்துப் பொருளாதார அரசியல் சமத்துவ உரிமைகளைப் பெற்றுத் தன்னாட்டை முன்னேற்றப் பாதையில் நடத்துவதற்கு அவன் முதற் கற்க வேண்டியது குடியியற் கல்வியாகும். இன்று நம் நாடு போகிற போக்கிலே குடியியற்கல்வி மாணவர்க்கு மாத்திரமன்று அறிஞர்க்கும் அரசியற் றலைவர்கட்குமே மிக அத்தியாவசியமாகும். அன்றியும் இலங்கை மக்களாகிய நாம் அரக்கர் சந்ததியிலும் குவேனி சந்ததியிலும் தோன்றிய ஆதிக்குடிமக்கள் எனப் பெருமைப்

க ச. இ 7

பட்டு அதனால் நம் மூதாதைகளின் குணத்திலேயே ஊறி வளர்ந்து நாட்டின் அரசியலை நாசவழியிற் செலுத்தும் நமது கொடு நோய்க்கும் குடியியற் கல்வியே சிறந்த மருந்தாகும். பழந்தமிழர் வாழ்வில் குடியியற் கல்வி போற்றப்பட்டதைத் திருக்குறள் முதலிய தமிழ் நூல்கள் கூறுகின்றன. திருக்குறள் பொருட்பாலின் இறுதியிலே வள்ளுவனார் இக்குடியியற் கலையை விளக்கியமைத்திருக்கின்றார். அப்பகுதிக்கு ஒழிபியல், எனப் பரிமேலழகர் குறிப்பிட மனக்குடவர் **குடியியல்** என்றே குறிப்பிடுகின்றார். அப்பகுதியில் "குற்றமிலனாய்க் குடிசெய்து வாழ்தல்", "மரம்போல்வர் மக்கட்பண்பில்லாதவர்" எனும் பல கூற்றுக்களும் அக்குடியியல் அதிகாரங்களில் உள்ள ஜன நாயக, பொருளாதார சம்பந்தமான குறள் மணிகளும் பண்டைத்தமிழ் வாழ்வில் இக்குடியியற் கலை எத்தகைய தொடர்புற்றிருந்ததென்பதைக் காட்டுமன்றோ?

இவ்வாறாய் நமது நேச வாழ்வின் உயிர் நாடியாகிய குடியியலை விளக்கிப் பேராசிரியர் **அ. விசுவநாதன்** அவர்கள் சிறந்த முறையில் இக்குடியியல் நூலை ஆக்கியளித்திருக்கின்றார்கள். இந்நூலில் இலங்கையின் பொருளாதாரம், ஜனநாயகம் எனும் அதிகாரங்களும், பல வகைப்பட்ட புள்ளி விபரங்களும் ஆசிரியரின் மேனாட்டு விஷயத்திறைற் பெற்ற அரசியல் அநுபவ அறிவையும் பொருளாதாரக் கலைத் தெளிவையும் எடுத்துக்காட்டுகின்றன.

பொருளாதார சமத்துவத்தை மையமாக வைத்துச் ஜன நாயக அரசியலை நோக்கும் ஆசிரியரின் நுண்ணுணர்வு போற்றத்தக்கது. இந்நூல் மாணவரது பரீட்சைக்கு மாத்திரமன்றி அவர் தம் தேசப்பணிக்கும் சிறந்த வழி காட்டியுமாகும் எனக் கூறல் மிகையன்று.

சாதனா பாடசாலை,
நல்லூர்,
2-1-58.

**கு. பே. முத்தையா**

---

# முகவுரை

பெரும்படியாகக் கூறுமிடத்து, குடியியல் என்பது ஒரு பிரசைக்கும், அரசாட்சிக்கும், சமூகத்துக்கும் இடையேயுள்ள தொடர்பை முன்னிட்டு நிகழும் அவனது நடவடிக்கைகளை உள்ளடக்கியது எனலாம். முன்பெல்லாம் அது அரசாங்கத்தைப் பற்றிய அறிவுத்துறையாகக் கருதப்பட்டது. குடியியலின் கருத்தைப் பின்வருமாறு வரையறுக்கலாம்:

உள்ளூராட்சியினதும் தேசிய அரசாங்கத்தினதும் அமைப்பையும் நிர்வாகத்தைப் பற்றியும்; அவ்வரசாங்கங்களிலே நன்மை பயக்கும் ஆக்கவழியிலே பங்குகொள்ளும் வகையில் பொது மனித மனம் வளர்ச்சிபெறுவதைப் பற்றியும்; எல்லாச் சமூக இனப் பிரிவுகளிடையேயும் உள்ள தொடர்புகளினால், அரசாங்க விவகாரங்களில், ஆகக்கூடிய தொகையினர்களுக்கு ஆகக்கூடிய நன்மை தரவல்ல நடைமுறைகளும், வழிவகைகளும் விருத்தியடையும் முறைமை பற்றியும் ஆராயும் விஞ்ஞானப் பிரிவே குடியியல் எனலாம். அரசாங்க உறுப்புகளின் அமைப்பையும் தொழிலையும் பற்றிய வெறும் ஆராய்வையோ, அல்லது இவை பற்றிய சட்டங்களின் பொது வியாக்கியானத்தை அறிவதையோ விட விரிவான அர்த்தமுடையது குடியியல். அது பொது நல மனப்பான்மையை உள்ளடக்கியது. நல்ல அரசாங்கத்திலே நன்கு பங்குகொள்ளும் வகையில் மக்களின் நடவடிக்கைகள் வளர்ச்சி பெறுவதை உள்ளடக்கியது. சிறியனவும், பெரியனவுமான எல்லாச் சமூகப் பிரிவுகளிலும் உள்ள ஆகக்கூடிய தொகையினருக்கு ஆகக்கூடிய அளவு நன்மை பயக்கும் நடைமுறைகளையும் வழிவகைகளையும் விருத்தி பண்ணிப் பயன் படுத்துவதை உள்ளடக்கியது.

மேற்காணும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு G. C. E. வகுப்புப் பாடத்திட்டத்துக்கமைய ஆக்கப்பட்டது இந்நூல். இது ஒரு பாடப்புத்தகமாகப் பயன்படுவதோடு

இக்காலத்துக்கேற்ற பொதுவான அரசியல் கருத்துக்களையும் கொண்டதாகும். மேலும் அரசியலில் உயர்தரக்கல்வியை நாடுவோருக்கு இது தோற்றுவாயாகவும் அமைந்து உதவும்.

தவிர்க்க முடியாத காரணங்களால், இப்புத்தகத்தை இரண்டு பாகங்களாக அமைக்க நேர்ந்தது. இதன் அடுத்த பகுதி **வைகாசி** மாதம் வெளிவருமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஏழாம் எட்டாம் வகுப்புக்களுக்கென எழுதப்பட்ட 'குடியியலை' ஆதரித்து, அதனைத் தொடர்ந்து இத்தகைய நூலை வெளியிட வேண்டுமென்னும் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் நல்கிய ஆசிரிய நண்பர்களுக்கு எனது நன்றி. இப்புத்தகத்தை உருவாக்குவதில் உதவிபுரிந்த உற்ற நண்பர்களுக்கும், அணிந்துரைகள் எழுதிய அறிஞர்களுக்கும், இதனை அச்சேற்றி வெளிப்படுத்திய ஸ்ரீ பார்வதி அச்சகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

93, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
6-1-1958.

அ. விசுவநாதன்

---

## பொருளடக்கம்.


பக்கம்

1. நாம் இலங்கையர் 1

2. மனிதன் – ஒரு சமூக மிருகம் 8

மனித சமுதாயம்; தேசீய இனம்; சமூகம்; சமூகமும் சங்கமும்; அரசு, ஓர் சங்கம்; அரசாங்கம்.

3. மனித சமுதாயத்தின் தேவைகள் 23

(i) உணவு—நீர்ப்பாசன இலாகா; நில அபி விருத்தி இலாகா; விவசாய இலாகா.

4. மனித சமுதாயத்தின் தேவைகள் 41

(ii) சுகாதாரம், கல்வி, சமூக சேவைகள்— சுகாதாரம்; கல்வி; சமூக சேவைகள்.

5. சட்டமும் ஒழுங்கும் 64

இலங்கையின் சட்டங்கள்; 'பொலீஸ்' சேவை; நீதிஸ்தலங்கள்; ஜூரி சேவை; நீதி பரிபால னத்தின் சுதந்திரம்; சிறைச்சாலைகள் முதலியன; நன்னடத்தைச் சேவை.

6. இலங்கையின் பொருளாதாரம் 82


பழையன கழிதலும், புதியன புகுதலும்; இன்றைய பொருளாதார நிலை; தொழிற்சாலை மயமாக்குதல்.

7. ஜனநாயகம் 118

விவரணம்; உரிமைகள்; சுதந்திரம்; வாக்குரிமை; பிரதிநிதித்துவ உரிமை; தொகுதிகள்; அரசியல் கட்சிகள்; எதிர்க்கட்சி; விவாதம், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை; எதிர்க்கட்சியின் பலம்; எத்தனை கட்சிகள் இருத்தல் நன்று? அரசியலறிவு; பொதுஜன அபிப்பிராயம்; உரிமைகளும் சுதந்திரமும்; பல இன நாட்டில் சமத்துவம்; சிறுபான்மையும் பெரும்பான்மையும்; பாராளுமன்ற ஜனநாயகம்; ஜனநாயகத் தடைகள்.

8. சர்வாதிகாரம், பொதுநல அரசாங்கம் சோஷலிஸம் 162

சர்வாதிகாரம்; பொதுநல அரசாங்கம்; சோஷலிஸம்; அரசும் தனி ஒரு நபரும்; தொழிற்சங்கங்கள்.



# 1. நாம் இலங்கையர்.

இலங்கை ஒரு சிறிய தீவு. அதன் பரப்பளவு 25,000 சதுரமைல்களாகும். இத்தீவில் 1953-ம் ஆண்டு நடந்த குடிசன மதிப்பின் பிரகாரம் 80, 98, 637 மக்கள் வாழ்ந்தனர். எனவே, சராசரியாக ஒரு சதுரமைலுக்கு 325 மக்கள் வாழ்ந்தனர். வருடாவருடம் இலங்கையின் ஜனத்தொகை ஏறக்குறைய 2,00,000 மாக அதிகரித்துக்கொண்டே போகின்றது. ஆகவே 1957-ம் ஆண்டு ஏறக்குறைய 88,00,000 மக்கள் வாழ்கின்றனர் என்றும், இந்நூற்றாண்டு முடியும்பொழுது ஜனத்தொகை இரண்டு மடங்குக்கு மேலதிகமாகும் எனவும் கூறலாம். ஆதலினால் ஒவ்வொரு சதுரமைலிலும் வாழ்கின்றவர்களின் தொகை அதிகரித்து இந்நூற்றாண்டு முடியும்பொழுது இரண்டு மடங்கிற்கு மேலதிகமாக இருக்கும் என்பது வெளிப்படை. இலங்கையையும் அவுஸ்திரேலியாவையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். 30,00,000 சதுரமைல் பரப்பளவுடைய அவுஸ்திரேலியாவில் ஏறக்குறைய 90,00,000 மக்கள் வாழ்கின்றனர். இதனால் ஒரு சதுரமைலுக்கு 3 பேர் மட்டுமே வாழ்கின்றனர். எனவே ஜனத்தொகை எத்தனை மடங்காகப் பெருகினாலும் அவுஸ்திரேலியாவில் வாழ்வதற்குப் போதிய இடமிருக்கின்றது. ஆனால் இலங்கையிலே ஜனத்தொகை இப்பொழுது அதிகரித்துக்கொண்டு போவதுபோல் மேலும் அதிகரிக்குமேயாயின், அவர்கள் வாழ்வதற்குப் போதிய நிலம் இல்லாதிருக்கும் நிலைமை ஏற்படுவதுடன் ஜனத்தொகை அதிகரிப்பதனால் ஏற்படக்கூடிய பொருளாதாரப் பிரச்சனைகளும் எழக்கூடும்.

இலங்கையில் வாழ்வோர் ஒரு இனத்தைச் சேர்ந்தவர் அல்லது ஒரு சமயத்தை ஒழுகுபவர் அல்லது ஒரு பாஷையைப் பேசுபவர் அல்லது ஒரு சாதியைச் சேர்ந்தவரல்லர். எனவே, இலங்கை பல்வேறு வகுப்பினர் வாழும் நாடு எனப்படும். இலங்கையில் வாழ்கின்றவரை இனம், சமயம், பாஷை ஆகிய அடிப்படையிலுள்ள விபரத்தைக் கீழே காண்க.

## 1953-ம் ஆண்டு குடிசனமதிப்பின் பிரகாரம்

## ஜனத்தொகை - இன அடிப்படையில்

**இலங்கையர் :**

| | | | |
|---|---|---|---|
| கரையோரச் சிங்களவர் | — 34,64,126 | | |
| மலைநாட்டுச் சிங்களவர் | — 21,57,206 | — | 56,21,332 |
| இலங்கைத் தமிழர் | | — | 9,08,705 |
| இலங்கைச் சோனகர் | | — | 4,68,146 |
| மலாயர் | | — | 28,736 |
| பறங்கியர் | | — | 43,916 |
| ஏனையோர் | | — | 20,678 |

**இலங்கையரல்லாதோர் :**

| | | |
|---|---|---|
| இந்தியர் | — | 9,83,304 |
| பாக்கிஸ்தானியர் | — | 5,749 |
| ஐரோப்பியர் | — | 6.909 |
| ஏனையோர் | — | 11,162 |
| | — | 80,98,637 |

**மொழி அடிப்படையில்** (குறிப்பாகக் கணிக்கப்பட்டது)

| | | | | |
|---|---|---|---|---|
| சிங்களம் | பேசுபவர் | 56 | இலட்சம் | (ஏறக்குறைய) |
| தமிழ் | ,, | 23 | ,, | ,, |
| ஆங்கிலம் | ,, | 1 | ,, | ,, |
| | | 80 | ,, | ,, |

**சமய அடிப்படையில் :**

| | | |
|---|---|---|
| புத்த சமயத்தவர் | — | 52,17,143 |
| இந்து ,, | — | 16,14,004 |
| கிறிஸ்தவ ,, | — | 7,14,874 |
| முஸ்லிம் ,, | — | 5,41,812 |
| ஏனையோர் | — | 10,804 |
| | | 80,98,637 |

இலங்கையில் வாழ்கின்றவரை இனம், சமயம், மொழி முதலிய அடிப்படைகளில் நாம் பிரிப்பது வழக்கம். இருப்பினும், இலங்கையில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் இலங்கையர் என்ற தேசீய இனத்தைச் சேர்ந்தவராவர். ஆனால், இத்தகைய பரந்த மனப்பான்மை மக்களிடையே பரந்து நாம் ஒரு தேசீய இனத்தைச் சேர்ந்தவர் என்ற உணர்ச்சி அவர்களிடம் இல்லாதிருப்பது வருந்தத்தக்கது. ஐக்கிய அமெரிக்காவில், பல்வேறு இனத்தவர்கள் பல்வேறு மொழிகளைப் பேசுகின்றவர்கள் வாழ்ந்தாலும் அந்நாட்டில் வசிக்கின்ற ஒவ்வொருவரும் ‘நான் அமெரிக்கன்’ என்ற மனப்பான்மையுடன் வாழ்கின்றனர். ஒரு தேசீய இனத்தைச் சேர்ந்தவருள் பல்வேறு வகுப்பினர் இருந்தாலும் அவ்வினத்தவரிடையே, “நாம் ஒரு தேசீய இனத்தைச் சேர்ந்தவர்” என்ற எண்ணம் இருப்பது அவசியம். ஒரு தேசீய இனத்தைச் சேர்ந்தவர் என்ற எண்ணம் ஒவ்வொருவரிடமும் இருந்தாற்றான் நாட்டின் பிரச்சனைகளை அவர்கள் ஒற்றுமையாகத் தீர்க்கலாம். ஆதலினால், இவ்வுணர்ச்சியை வளர்ப்பதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும்.

தேசீய ஒற்றுமையை நாம் கட்டி வளர்ப்பதற்குப் போதிய சந்தர்ப்பங்கள் இருந்தன. இருப்பினும், அது வளராததற்கு இலங்கையை அரசாண்ட ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை மூலகாரணமாக இருந்தது. இலங்கையில் வாழ்பவரை இன அடிப்படையிலும் சமய அடிப்படையிலும் பிரித்து ஒருவருக்குக் கூடிய சலுகையும் இன்னொருவருக்குக் குறைந்த சலுகையும் கொடுக்கப்பட்டதனாலும், ஒருவரை இன்னொருவருடன் மோத வைத்ததாலும் இலங்கையில் வாழ்கின்றவர்களுள் முக்கியமான இனத்தவரான சிங்களவருக்கும் தமிழருக்குமிடையே முரண்பாடான வேறுபாட்டு உணர்ச்சியும் நலனும் வளர்ந்து வந்தது. இவ்வாறு தோன்றிய வேற்றுமை அவர்களிடையே இருக்கவேண்டிய ஒற்றுமையைப் பிளவு படுத்தியது. மேலும், இவ் வேற்றுமையின் காரணமாகப் பெரும்பான்மை இனத்திற்குச் சிறுபான்மை இனம் பயந்து வாழும் நிலைமையும் தோன்றியது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இலங்கையின்

தேசீய இனத்தை வளர்ப்பதற்காக முயல்வதை விடுத்து ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் எவ்வாறு பிரிக்கப்பட்டு ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டு வாழ்ந்தோமோ அவ்வாறே சுதந்திரத்திற்குப் பின்னரும் வாழும் நிலைமை ஏற்பட்டது. இது இவ்வாறிருக்க, எம். இ. பி. யின் ஆட்சியின்கீழ் ஆக்கப்பட்ட 'சிங்களம் மட்டும்' என்ற சட்டம் தேசீய ஒற்றுமையை வளர்ப்பதற்கு இன்னொரு தடையாக எழுந்திருக்கிறது. இதன் காரணமாகத் தமிழ்ப் பேசும் மக்களின் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டது மல்லாமல், பெரும்பான்மை மக்களாகிய சிங்களவருக்கு இருக்கும் சலுகைகளும் உரிமைகளுமற்று வாழும் நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டது. எனவே, பெரும்பான்மை இனத்திற்குப் பயந்து வாழ்வதுடன் அவ்வினத்தின் தஞ்சத்தில் வாழும் நிலைமை தோன்றியது. இக்காரணங்களினால் தேசீய ஒற்றுமை அற்றுப் போவதுடன் இலங்கையர் என்ற தேசீய இனத்தைக் கட்டி வளர்க்கவும் முடியாது.

இலங்கையின் பிரச்சனைகள் பல. அவை எவ்வளவிற்குத் துரிதமாகத் தீர்க்கப்பட முடியுமோ அவ்வளவிற்குத் துரிதமாகத் தீர்க்கப்படுதல் வேண்டும். இப்பிரச்சனைகளை ஏதாவது ஒரு இனம் தனித்துத் தீர்க்க முடியாது. எனவேதான், இலங்கைவாழ் மக்களிடையேயுள்ள வேறுபாட்டுணர்ச்சியை அகற்றி எல்லோரும் ஒருமித்து நம் நாட்டின் பிரச்சனைகளைத் தீர்க்க முயலவேண்டும். இதற்கு இலங்கையில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் சம உரிமையுடனும் சம சந்தர்ப்பத்துடனும் வாழ்வார்களேயாயின் ஒன்றுபட்ட தேசீய இனத்தை நாம் கட்டி வளர்க்கலாம். இலங்கையில் வாழ்கின்றவர்கள் தாம் விரும்பியோ விரும்பாமலோ சந்தர்ப்ப வசமாக இலங்கையில் வாழ வேண்டியவர்களானார்கள். இதனை எவரும் தவிர்க்க முடியாது. ஆகவே, தாராளமான பரந்த மனப்பான்மையுடன் இலங்கையில் வாழ்கின்ற எல்லோரும் தம்மிடமுள்ள வேறுபாட்டுணர்ச்சியை நீக்கி நாம் இலங்கையர் என்ற உணர்ச்சியை வளர்த்து ஒரு தேசீய இனத்தை வளர்க்க வேண்டும்.

இலங்கை, இலங்கையில் வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் சொந்தமானது. இலங்கையின் ஜனத்தொகைச் செறிவை அவதானிக்கும்பொழுது, வட-கீழ்மாகாணங்களில் பெரும்பாலும் தமிழ் பேசும் மக்களும் ஏனைய ஏழு மாகாணங்களில் வாழ்கின்றவர்களில் பெருப்பாலானோர் சிங்களம் பேசுகின்ற மக்களுமாக இருப்பதைக் கவனிக்கலாம். இவ்வாறிருப்பதனால், வட-கீழ் மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களுக்குச் சொந்தமானதென்றும், ஏனைய ஏழு மாகாணங்களும் சிங்களவர்களுக்குச் சொந்தமானதென்றும் கருதுவது தவறுதலான அபிப்பிராயமாகும். இலங்கையின் ஒவ்வொரு சதுரமைலும் இலங்கையில் வாழ்கின்ற ஒவ்வொருவனுக்கும் சொந்தமாகும். ஒவ்வொரு தமிழனுக்கும், தமிழ்ப் பிரதேசம் எனக் குறிப்பிடப்படும் வட-கீழ் மாகாணம் மட்டுமல்ல இலங்கை முழுவதும் சொந்தமாகும். அவ்வாறே, ஒவ்வொரு சிங்களவனுக்கும் சிங்களப் பிரதேசம் எனக் குறிப்பிடப்படும் ஏனைய ஏழு மாகாணங்கள் மட்டுமல்ல இலங்கை முழுவதும் அவனுக்கும் சொந்தமாகும். ஆதலினால், இலங்கை, இலங்கையில் வாழும் ஒவ்வொருவனுக்கும் சொந்தமாகும். இவ்வுரிமை எல்லோருக்கும் உண்டு. அவ்வுரிமையை இனம், சமயம், மொழி, சாதி முதலிய வேறுபாடுகள் பறிக்க முடியாது. எனவே, இலங்கை எம்முடையது; இலங்கையை வளர்க்கும் பொறுப்பு எம்முடையது; அதன் உயர்வு தாழ்வு எமது உயர்வு தாழ்வு என்ற பரந்த மனப்பான்மையுடன், நாம் இலங்கையர் என்ற ஒரு தேசிய இனத்தை வளர்க்க வேண்டும்.

பண்டைக்காலத்தில் அரக்கர் இலங்கையில் வாழ்ந்திருக்கலாம், ஆரிய வம்சத்தைச் சேர்ந்த விஜயன் முதன் முதலாகக் குடியேறியிருக்கலாம், புத்தர் காலத்திலேயே புத்த சமயம் இலங்கையில் புகுத்தப்பட்டிருக்கலாம், தமிழர் சிங்களவரின் பின் வந்திருக்கலாம், இல்லையேல் சிங்களவர் வருவதற்கு முன்னரே தமிழர் வாழ்ந்திருக்கலாம், தமிழ்மொழி சிங்களமொழியிலும் பார்க்கச் சிறந்ததாக இருக்கலாம் அல்லது சிங்களப் பாஷை தமிழிலும் சிறந்ததாக இருக்கலாம், சைவ சமயம் புத்த சமயத்திலும் சிறந்ததாக இருக்கலாம்.........இவையல்ல பிரச்சனைகள். மேலே குறிப்பிட்ட வேறுபாடுகளாயினும் சரி

அல்லது வேறு வகையான காரணங்களினாலும் சரி, இலங்கையில் வாழ்கின்றவரைப் பிரிக்கலாம். இருப்பினும், நாம் இன்று ஒருமித்து ஒரு நாட்டில் வாழ்கின்றோம். இலங்கை, இலங்கையில் வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் சொந்தம் என்பதை இன்று நாம் வலியுறுத்திக் கூறுவதற்கு சில காரணங்கள் உதவியளிக்கின்றன. எமது சரித்திரத்தை ஆராயும்பொழுது இலங்கையில் பல அரசுகள் இருந்தன என்றும், அவை ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டிருந்தன என்றும் அறிகின்றோம். வேறுபட்டுக் கிடந்த இலங்கையை ஒரு ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தவர்கள் ஆங்கிலேயரே. இருப்பினும், 1833-ம் ஆண்டு வரை இலங்கையின் நிர்வாகம் பிரிக்கப்பட்டிருந்தது. இக்காலத்தில் வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு சட்டங்கள் இருந்தன. ஆதலினால், இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்தாலும் அதை ஒரு நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர முடியவில்லை. கோல்புறூக் கொமிஷனின் சிபார்சின்படி, 1833 லேயே இலங்கை ஒரு நிர்வாக அமைப்பின்கீழ் வந்தது. அதில் இலங்கையும் ஒரு ஆட்சியின்கீழ், ஒரு அரசாங்கத்தின்கீழ், ஒரு நிர்வாக அமைப்பின்கீழ், ஒரு சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. இதுவே, இலங்கையர் என்ற தேசீய இனத்தை வளர்ப்பதற்கு மூலகாரணமாயிருந்தது எனலாம்.

இதன்பின்னர் ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ் ஏற்பட்ட சில மாற்றங்கள் ஒரு தேசீய இனத்தைக் கட்டி வளர்ப்பதற்கு ஆதாரமாயிருந்தன. நாட்டின் நாலாபாகங்களுக்கும் தெருவீதிகளையும் பின்னர் புகையிரதப் பாதைகளையும் அமைத்தமையால் மக்கள் ஒரு இடத்திலிருந்து இன்னோரிடத்திற்குப் போக்குவரத்துச் செய்வதற்கு வாசியாக இருந்தது. இதனால் கிணற்றுத் தவளைகள் போல் ஒரு இடத்திலிராது வெவ்வேறு இடத்திற்குச் சென்று மற்றவர்களுடன் கூடிப்பழகி ஊடாடச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. போக்குவரத்து வசதிகள் வளரவளரக் கிராமங்கள் ஒன்றோடொன்று தொடர்புற்று வியாபாரமும் வர்த்தகமும் கிராமங்களுக்கிடையே ஓங்கி வளர்ந்தன. எனவே, வெவ்வேறாகத் தனித்திருந்த கிராமங்கள் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டன. இத்துடன் மேல்நாடுகளிலிருந்து ஆக்கப்

பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டு விற்கப்பட்டமையாலும் தேயிலை, றப்பர் தோட்டங்கள் மலைப்பிரதேசங்களில் அமைக்கப்பட்டமையாலும் மேல்நாட்டுக் கல்விமுறை இலங்கைக்குட் புகுத்தப்பட்டமையினாலும், பண்டைக்காலத்திலிருந்த இராஜகாரிய முறை அழிக்கப்பட்டமையினாலும், பண்டமாற்று தொழில் முதலியவற்றிற்குப் பணம் மூலகருவியாக மாறியதினாலும் மக்களிடையே ஒன்றுபட்ட உணர்ச்சி எழுந்தது. மேலே குறிப்பிட்ட காரணங்கள் ஒவ்வொன்றும் தனித்தும் ஒருமித்தும் இலங்கையர் என்ற தேசீய இனத்தை வளர்ப்பதற்கு ஏதுவாக இருந்தன. இக்காரணங்களின் பயனாக ஒருவன் தான் வாழும் கிராமத்தை விட்டு வெளியேறி ஒரு தொழிலைத் தேடிப் பிற இடங்களில் வாழும்பொழுது தனது மொழியைப் பேசாதவர்கள் மத்தியில் வாழ நேரிட்டது. இச்சந்தர்ப்பங்களில், அவன் மற்றவனுடைய பாஷையைக் கற்று அவர்களுடன் தொடர்பு பூண்டான். இதனால் ஒருவனுடைய மொழியை மற்றவன் பேசும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இத்துடன் ஆங்கிலப் பாஷை அரசாங்க பாஷையாக இருந்தமையால் சிங்கள - தமிழ் இனங்களிடையே தொடர்பை ஊட்டி வளர்ப்பதற்கும் தேசீய இனத்தை உருவாக்குவதற்கும் அப்பாஷை பெருமுதவியளித்தது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், தேசீய பாஷைகளாகிய சிங்களம் தமிழ் ஆகியன தத்தமக்குரிய இடத்தைப் பெறவேண்டும் எனப் பலர் விரும்பினர். இதற்கிடையில் இவ்விரு பாஷைகளுட் சிங்களம் மட்டும் அரசாங்க பாஷையாக ஆக்கப்பட்டபடியினால் தேசீய ஒற்றுமை சீர்குலைக்கப்பட்டுள்ளது. ஆதலினால் தேசீய ஒற்றுமையை வளர்ப்பதற்காக இருபாஷைகளையும் இலங்கை முழுவதும் அரசாங்க பாஷையாக ஆக்குவது சிறந்தது.

மேலே கூறப்பட்ட காரணங்களினால் இலங்கை மக்கள் அனைவரும் இனம். சாதி, சமயம், மொழி முதலிய வேறுபாடுகளின்றி எல்லோரும் ஒரு குலத்தவர் என்ற சகோதரத்துவ மனப்பான்மை படைத்தவராய் வாழ வேண்டும். எமது வாழ்வு வளம் பெறுவதற்கு வேண்டிய அத்தியாவசியமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாமெல்லோரும் இலங்கையர் என்ற ஒற்றுமையுணர்ச்சியுடன் முயற்சித்தல் வேண்டும்.

ஏறக்குறைய 250 கோடி மக்களைக்கொண்ட மனித சமுதாயச் சமுத்திரத்தில், 85 லட்சம் மக்களைக்கொண்ட இலங்கையர் என்ற தேசீய இனம், ஒரு சிறு துளியே.

# 2. மனிதன் - ஒரு சமூக மிருகம்.

## மனித சமுதாயம் :

மனிதன் கூட்டமாக வாழும் இயற்கைத் தன்மையுடையவன்; மனிதன் சமூக உணர்ச்சியுடையவன்; மனிதன் தன் சமூகத்தைக் கட்டி வளர்க்கும் மிருகம் என அறிஞர்கள் கூறியுள்ளார்கள். மனிதன் தோன்றிய காலம் தொட்டு இற்றை வரை ஒருவரோடொருவர் கூடிவாழும் உணர்ச்சியுடையவனுக வாழ்கின்றுன், இவ்வுணர்ச்சியின் பயனுலேயே மனிதன் தன்னைப் பாதுகாத்து வருகின்றுன், தனக்கு உணவு முதலியவற்றைத் தேடுகின்றுன், முன்னேற்றப்பாதையிலும் செல்கின்றுன். கூட்டுவாழ்க்கை, கூட்டுணர்ச்சி ஆகியவற்றினுல் பரஸ்பர சகோதரத்துவமும் ஒற்றுமையும் அவனிடம் இருக்கின்றன. றேபின்சன் குறூசோ போன்ற பல்லாயிரத்திலொருவர் ஒரு சில காலம் தனித்து வாழ்ந்திருக்கலாம். ஆதலினுல் எல்லோரும் என்றும் வாழ முடியாது.

கூட்டம் கூட்டமாகக் கூட்டுணர்ச்சியோடு வெவ்வேறு இடங்களில் மனிதன், பண்டைக்காலத்தில் வாழ்ந்து வந்தான். வெவ்வேறு இடங்களில் வாழ்ந்ததினுல் வெவ்வேறு பாஷைகளை அவன் உருவாக்கி, வெவ்வேறு பழக்கவழக்கங்களைப் பழகி, வெவ்வேறு கலை கலாச்சாரங்களைக் கட்டி வளர்த்து, வெவ்வேறு சரித்திரங்களை ஆக்கியதை நாம் சரித்திர வாயிலாக அறிகின்றேம். மேலும், வெவ்வேறு இடங்களில் தோன்றியவர்கள் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவரென்றும், ஒரு இனத்தவர் மற்றவரிலும் பார்க்க மேன்மையானவரென்றும், இவ்வினத்தவரிடையே போட்டியும் குரோதமும் ஏற்பட்டது என்றும் நாம் சரித்திரவாயிலாக அறிகின்றேம். ஆனுல், மனிதன் எந்த இனத்தைச் சேர்ந்தவனுயினும் சரி, எந்தப் பாஷையைப் பேசுபவனுயினும் சரி, எந்தச் சமயத்தை ஒழுகுபவனுயினும் சரி, எந்த நிறமுடையவனுயினும் சரி, அவன்

மனித சமுதாயத்தைச் சேர்ந்தவனுவான். ஆதிகாலத்தில் ஒரு சிறிய இடந்தான் உலகம் என அவ்விடத்தில் வாழ்ந்தவரால் கணிக்கப்பட்டு, அவ்விடத்தில் வாழ்ந்தவரிடையே கூட்டுணர்ச்சியும் கூட்டுவாழ்க்கையும் இருந்தது உண்மை. ஆனுல் இன்று நாகரீகம், விஞ்ஞானம், தொடர்பு, ஒருவரை ஒருவர் நம்பி வாழும் தன்மை முதலியன உலகத்தில் வாழ்கின்ற அனைவரையும் இணைத்திருக்கின்றன. மேலும், உலக மக்களிடையே எத்தனை வேறுபாடுகள் இருந்தும் அவ்வேறுபாடுகளினுல் பெருமை சிறுமை பாராட்டப்பட்டாலும் ஒருவன் இன்னெருவனின் உதவியின்றி அல்லது ஒரு நாடு இன்னெரு நாட்டின் உதவியின்றி வாழ முடியாது. ஆகவே, உலகிலுள்ளோர் ஒரு சமுதாயத்தவராவர்.

மனித சமுதாயத்தைச் சேர்ந்தவர்களிடையே வேற்றுமை இல்லை. அவர்களெல்லோரும் சமம். எல்லோரும் ஒரு குலத்தைச் சேர்ந்தவராவர். சரித்திரகாலத்திற்கு முன் இங்குமங்குமாக வாழ்ந்தவர்கள் இன்று பல்லாயிரம் மடங்காகப் பெருகி உலகின் நாலாபாகங்களிலும் வாழ்கின்ருர்கள். இவர்களிடையே நெருங்கிய தொடர்பு வியாபாரம், வர்த்தகம், போக்குவரத்து விஞ்ஞானம் முதலிய பல காரணங்களால் வேற்றுமைகள் பல இருந்தும் மனித வர்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் ‘ஒரு சமுதாயத்தை’ச் சேர்ந்தவர் என இன்று கருதுகின்றனர். இப் பரந்த உலகிலே பல தேசங்கள் இருக்கலாம், இத் தேசங்களை இயற்கைப் பிரிவுகள் அல்லது மனிதனின் செயற்கைப் பிரிவுகள் எனப் பிரிக்கலாம், ஆனுல் இப்பிரிவுகள் மனித சமுதாயத்தைப் பிரிக்க முடியாது. இப்பிரிவுகளை விட இனம், சமயம், சாதி, பாஷை, நிறம் முதலிய அடிப்படைகளிலும் மனித சமுதாயத்தைப் பிரிக்கின்றனர். ஆனுல், இப்பிரிவினைகள் இருந்தபோதிலும் மனித சமுதாயத்தினர் அனைவரும் ஒரு குலத்தவரே.

மனித சமுதாயத்தவர் பிணைக்கப்படுவது போல் உலகிலுள்ள நாடுகளும் ஒன்ருகப் பிணைக்கப்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள் உலக வல்லரசுகளில் ஒன்று. செல்வம் படைத்த

நாடாகத் திகழ்வதினால் மற்றைய அரசுகள் அ. ஐ. நாடுகளை மீறி நடக்கப் பயப்படுகின்றன. இருப்பினும், ஆக்கப் பொருள் களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்களைப் பெறுவதற்கும், ஆக்கப் பொருள்களை விற்பனை செய்வதற்கும் மற்றைய நாடுகளின் உதவியின்றி அ. ஐ. நாடுகள் இயங்க முடியாது. அதுபோலவே மற்ற ஒவ்வொரு நாட்டின் நிலைமையும். இவ்வாறு, உலகில் வாழ்கின்ற மக்கள் அனைவரையும் ஒன்றாகப் பிணைப்பதற்கு முதலாளித்துவ முறையே காரணமாகும். முதலாளித்துவ அமைப்பினால் ஏற்படுத்தப்பட்ட இத் தொடர்பிலே, ஒரு சிறிய தீவுகூடத் தப்பவில்லை. எனவே, மனிதன் தனித்து வாழ முடியாது; ஒருவன் இன்னொருவனையும் ஒரு நாடு இன்னொரு நாட்டையும் நம்பி வாழவேண்டும்.

## தேசீய இனம்:

மனித சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் உலகின் நாலாபக்கங்களிலும் பரந்திருக்கின்றனர். மேலே குறிப்பிட்ட பிரிவினைகளை விட, தேசீய எல்லைகளும் மனித சமுதாயத்தினரைப் பிரிக்கின்றன. இங்கிலாந்து தேசத்தவன், ஆங்கிலேயன்; அமெரிக்க தேசத்தவன், அமெரிக்கன்; ருஷ்ய தேசத்தவன், ருஷ்யன்; இலங்கையில் வாழ்பவன், இலங்கையன் என ஒவ்வொரு தேசத்திலும் வாழ்கின்றவர்கள் தத்தம் தேசத்தின் பெயரையும் பெறுவது வழமை. மேலும் ஒவ்வொரு தேசத்தில் வாழ்கின்றவர் "ஒரு தேசீய இனத்தவர்" என அழைக்கப்படுகின்றனர். எனவே இலங்கையில் வாழ்கின்றவர்கள், இலங்கையர், என்ற தேசீய இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

**ஒரு குறிக்கப்பட்ட எல்லைக்குள் மக்கள் ஒருமித்து வாழும் பொழுது அவர்களுக்கும் பொதுவான சரித்திரம், பாரம்பரியம், கலை, கலாச்சாரம், இனம், பாஷை, சமயம், பாதுகாப்பு, சட்டம், அரசியல் - பொருளாதார அமைப்பு முதலியன அவர்களை ஒன்றாக இணைப்பதனால் அவ்வெல்லைக்குள் வாழ்கின்றவர்கள் ஒரு தேசீய இனத்தவர் எனக் கூறப்படுவர்.**

இங்கிலாந்து தேசத்தில் வாழ்கின்றவர்களைச் சரித்திரம், பாரம்பரியம், கலை கலாச்சாரம், அரசாங்கம், சட்டம், அரசியல் - பொருளாதார அமைப்பு முதலியன ஒன்ருக இணைப்பதுடன் அவர்கள் ஒரு பாஷையையும் பேசுகின்றனர். ஆகையால், ஒரு தேசீய இனத்தவர் ஒரு பாஷையைப் பேச வேண்டுமென்பது அர்த்தமல்ல. சுவிற்சலாந்து தேசத்தவர் ஜெர்மன், இத்தாலி, பிரெஞ்சு, ரூமாஞ்சே பாஷைகளைப் பேசினுலும் அவர்கள் ஒரு தேசீய இனத்தவராவர். அதுபோலவே, ஒரு தேசீய இனத்தவர் ஒரு இனத்தவராக இருத்தல் வேண்டும் என்றும் கூறலாகாது. ஆதலினுல் மேலே குறிப்பிட்ட அம்சங்களுள் ஒன்று அல்லது பல தனித்து அல்லது ஒருமித்து ஒரு எல்லைக்குள் வாழ்கின்றவரை இணைக்குமேயாயின் அவர்களை ஒரு தேசீய இனத்தவர் எனக் கூற வேண்டும். ஆகவேதான், இலங்கையில் பல இனத்தவர் வாழ்ந்தாலும், பல பாஷைகள் பேசப்பட்டாலும், பல சமயங்களை அனுசரித்தாலும், பல சாதியைச் சேர்ந்தவராயிருந்தாலும் எல்லோரும் ஒருமித்து வாழ்வதுமல்லாமல் சரித்திரம், சட்டம், பாதுகாப்பு, அரசியல் - பொருளாதார அமைப்பு முதலியவை எம்மை ஒன்ருகப் பிணைப்பதனுல் நாம் இலங்கையர் என்ற தேசீய இனத்தைச் சேர்ந்தவராவோம்.

## சமூகம் :

ஒன்றுதிரண்ட பல சமூகத்தவர் ஒரு தேசீய இனத்தவராவர். ஒரு குறிப்பிட்ட இடத்தில் அல்லது எல்லைக்குள் வாழ்கின்றவர்கள், இனம், பாஷை, சமயம், பாரம்பரியம், நலன்கள் முதலிய காரணங்கள் ஒன்றுசேர அல்லது தனித்து அவர்களை ஒன்ருக இணைக்கப்படுபவர்களை, ஒரு சமூகத்தினர் எனக் கூறப்படுவர். உதாரணமாக, ஒரு கிராமத்தில் வாழ்கின்றவர்கள் ஒரு சமூகத்தவராவர். ஏனெனில், அக்கிராம வாசிகள் பற்பல சமயத்தவராயினும் சரி, இனத்தவராயினும் சரி, ஒருமித்து வாழும்பொழுது அவர்களுடைய தேவைகள், நலன்கள் முதலியன அவர்களை ஒன்ருக இணைக்கின்றன. தேவைகள், நலன்கள் எனக் கூறும்பொழுது கிராம

மக்களின் பொது நலன் முன்னேற்றம் ஆகிய பொதுவான பிரச்சனைகளைக் குறிக்கும். இவை, கிராம மக்களை ஒன்றுக்கக் கூடியவையே. அவ்வாறே பட்டினங்களிலும், நகரங்களிலும் வாழ்கின்றவர்கள் ஒரு சமூகத்தவராவர். ஒரு கிராமம் சிறிய இடமாக இருப்பதால் அக்கிராமத்தில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் மற்ற ஒவ்வொருவரையும் அறியக்கூடியதாயிருக்கும். இதன் காரணமாகக் கிராமத்தில் வாழ்கின்றவரிடையே உள்ள தொடர்பு பட்டினங்கள், நகரங்களில் வாழ்கின்றவரிடையே இருக்கும் தொடர்பிலும் பார்க்கக் கூடுதலாக இருக்கும். மக்களிடையே நெருங்கிய தொடர்பு இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன, பொதுநலன், அவர்களைப் பிணைக்கும் எனவே தான் இவர்கள் ஒரு சமூகத்தவர் எனக் கருதப்படுவர்.

மேலும், ஒரு இனத்தவர் ஒரு சமயத்தவர், ஒரு பாஷை பேசுபவர் ஒரு சாதியினர் ஒரு சமூகத்தவர் எனவும் கருதப்படுவதை நாம் அறிகின்றோம். தமிழ் பேசும் மக்கள் எந்தச் சமயத்தவராயினும் சரி, அல்லது எந்தச் சாதியினராயினும் சரி எல்லோரும் ஒரு பாஷையைப் பேசுகின்றார்கள் என்ற காரணத்தினால் அவர்கள் பரந்த தேசத்தில் செறிந்திருந்தாலும், தமிழ் பேசும் சமூகத்தவர் எனக் கருதப்படுகின்றனர். அவ்வாறே ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவரும் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர் எனக் கருதப்படுகின்றனர். ஆதலினால் ஒரு சமூகத்தவர் எனக் கூறும்பொழுது ஏதாவது ஒன்று அல்லது பல காரணங்களால் மக்களை ஒன்றாக இணைக்கையில் அவர்கள் ஒரு சமூகத்தவர் எனக் கூறப்படுவர். ஆனால், ஒரு சமூகத்தவர் ஒரு தேசிய இனத்தவராகக் கருதப்பட்டாலும் ஒரு தேசிய இனத்தவர் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர் எனக் கூற முடியாது.

ஒவ்வொரு சமூகத்தவரும் தத்தம் சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும் நலனுக்காகவும் உழைக்க விரும்புவது இயற்கை. ஒரு கிராம மக்கள் தம் கிராமத்தின் முன்னேற்றத்திற்காகவும், ஒரு சமயத்தவர் தம் சமயத்தின் வளர்ச்சிக்காகவும், ஒரு பாஷையைப் பேசுபவர் தம் பாஷையின் வளர்ச்சிக்காகவும்

முயற்சி செய்வது இயற்கையன்ரே. ஒவ்வொரு சமூகத்த வரிடமும் இருக்கும் இவ்வுணர்ச்சியை வளரச் செய்தாற்ருன் அச் சமூகம் ஓங்கி வளரும். ஆதலினுல் ஒவ்வொரு சமூகத் தவரும் தத்தம் சமூகம் ஓங்கி வளர்வதற்காக உழைக்க வேண்டும். ஆனுல் சமூக உணர்ச்சி தேசீய இனத்தின் முன் னேற்றத்திற்காக உழைக்கும் உணர்ச்சியோடு முரண்பட்டதாக இராது அதற்கு இணைந்த உணர்ச்சியாக இருத்தல் அவசிய மாகும்.

ஒரு தேசீய இனம் முன்னேற்றமடைய அத் தேசீய இனத்தின் ஒவ்வொரு அங்கமும் முன்னேற்றமடைய வேண் டும். மேலும், ஒரு தேசீய இனத்தின் அங்கமாக இருக்கும் ஒவ்வொரு சமூகமும் முன்னேற்றமடையத் தேசீய இனம் முன் னேற்றமடையும் எனவும் கூறலாம். ஆகவேதான், சமூக முன்னேற்றமும் தேசீய இனத்தின் முன்னேற்றமும் ஒன்ரே டொன்று இணைந்ததாக அமைந்திருக்கின்ற காரணத்தால் இவ் விரண்டிற்கு மிடையே முரண்பாடு ஏற்படாதவாறு இருத்தல் வேண்டும். மேலும், சமூக உணர்ச்சி தேசீய உணச்சியிலும் பார்க்கக் கூடுதலான உணர்ச்சியாக இருக்குமேயாயின், தேசீய முன்னேற்றத்திலும் பார்க்க, சமூக முன்னேற்றம் முக்கிய மானதாகத் தோன்றும். இங்ஙிலையில், சமூக முன்னேற்றம் தேசீய முன்னேற்றத்திற்கு முரண்பட்டதாக இருக்குமாதலால் தேசீய முன்னேற்றத்திற்கு விரோதமாகச் சமூக முன்னேற்றத் திற்காக உழைக்க நேரிடும். ஆதலினுல், சமூக உணர்ச்சி ஒவ் வொருவரிடமும் இருத்தல் அவசியமானுலும் சமூக உணர்ச்சி தேசீய உணர்ச்சிக்குக் கட்டுப்பட்டதாக இருத்தல் வேண்டும். இதனை நாம் மறக்கலாகாது.

## சமூகமும் சங்கமும்:

ஒருவன் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்களில் தனிப்பட்ட ஒருவனே. தனிப்பட்ட ஒருவன் எக்காலத்திலும் தனித்து வாழ இயலாது. அவன் மற்றவர்களுடன் ஒன்றுசேர்ந்துதான் வாழவேண்டும். ஒருவன் ஒரு வீட்டைக் கட்டினுலென்ன அல் லது வேறு எதைத்தான் செய்தாலும் தனித்து அதனைச்

சாதிக்கமுடியாது. இக்காரணத்தால் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆதிகாலம் முதல் கூட்டாகவே வாழ்ந்து வருகின்றார்கள். எனவே தான், ஒரு சமூகத்தினர் ஒரு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ஒரு சமூகம் ஒரு சங்கம் என்றும் கூறப்படுகின்றது.

சங்கம் என்றவுடன் நாம் சாதாரணமாக எமது வாழ்க்கையில் காண்கின்ற சங்கங்களைப் பற்றி யோசிக்கின்றோம். எமது சமுதாயத்தில் பல்லாயிரக் கணக்கான சங்கங்கள் உண்டு. ஆனால் இச் சங்கங்களுக்கும் சமூகம் எனப்படும் சங்கத்திற்கும் வித்தியாசங்கள் பல உண்டு. இவற்றுள், சாதாரணமான ஒரு சங்கத்திற்கும் சமூகம் என்ற சங்கத்திற்குமுள்ள வித்தியாசம் என்னவெனில், சாதாரணமான ஒரு சங்கம் சுவாதீன சங்கமாகும். (voluntary association) ஆனால் சமூகம் எனப்படும் சங்கம் சுவாதீனமற்ற சங்கமாகும். சங்கங்கள் பல உண்டு என்றோம். அவற்றுள் ஒன்றை எடுத்துச் சாதாரணமான ஒரு சங்கத்திற்கும் சமூகம் என்ற சங்கத்திற்குமுள்ள வித்தியாசத்தை அறிவோமாக.

இலங்கையிலிருக்கும் சங்கங்களுள் ஒன்று, அகில இலங்கை விஞ்ஞான விருத்திச் சங்கமாகும். இச் சங்கத்தில் இலங்கையில் வாழ்கின்ற எல்லோரும் அங்கத்தினராக இல்லை. ஆனால். விஞ்ஞானத்தில் விருப்பமுடையவரும், அதனை விருத்தி செய்ய விருப்பமுடையவரும் இச் சங்கத்தில் அங்கத்தினராகச் சேருகின்றனர். அதுபோலவே, அகில இலங்கை மதுவிலக்குச் சங்கத்திலும் அங்கத்துவம் வகிக்கின்றவர்கள் தமது சொந்த விருப்பத்திற்கு இணங்கியே அங்கத்தினராகின்றனர். எனவே, சுவாதீன சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கின்றவர்கள் தமது விருப்பத்திக்கு இணங்கியே அங்கத்தினராக இருக்கின்றனர், அங்கத்தினராகச் சேரவிரும்பாதோர் அவ்வாறு சேர வேண்டும் என்ற நியதி இல்லை. மேலும், சங்கங்களில் அங்கத்திைராக இருக்கின்றவர்கள் அச் சங்கத்திலிருந்து வெளியேற விரும்பினால் வெளியேறலாம். ஆதலினால் சுவாதீன சங்கங்களில் அங்கத்தினராக இருக்கின்றவர்கள் தமது விருப்பு வெறுப்பிற்கு

இணங்கியே அங்கத்தினராக இருக்கின்றனர். மாணவர் தேர்ச்சிச் சங்கமும் ஒரு சங்கமாகும். இச் சங்கத்தில் அங்கத்துவம் வகிப்பவர்கள் தமது விருப்பத்திற்கு இணங்கி அங்கத்துவம் வகிக்க இல்லை. மாணவராக இருக்கின்ற அனைவரும் இச் சங்கத்தில் கட்டாயமாக அங்கத்துவம் வகிக்க வேண்டும். மாணவர் தேர்ச்சிச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்காத மாணவர்கள் அல்லது அங்கத்துவம் வகிக்க விரும்பாத மாணவர்கள் கல்லூரி அதிபரின் கட்டளைக்கு இணங்க அங்கத்துவம் வகிக்க வேண்டும். கட்டளையை மீறுகின்றவர்கள் அதிபரால் தண்டிக்கப்படலாம். எனவே, மாணவர் தேர்ச்சிச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றவர்கள் தமது விருப்பத்திற்கு இணங்கி அங்கத்துவம் வகிக்கவில்லை என்பது வெளிப்படை. அவ்வாறே, சமூகம் என்ற சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றவர்கள், தாம் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன, பிறந்தநாள் தொட்டு அச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றார்கள். எனவே, சாதாரணமான சங்கங்கள் சுவாதீன சங்கங்கள் அச் சங்கங்களில் அங்கத்துவம் ஒருவனின் விருப்பத்திற்கு இசைந்ததாக இருக்கும். ஆனால், சமூகம் என்ற சங்கத்தில் ஒருவன் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன அதில் அங்கத்துவம் வகிக்கின்றான். சமூகம் என்ற சங்கத்தில் அங்கத்துவம் வகியாத சமூகத்தினர் இல்லை என்றே கூறவேண்டும்.

ஒரு சங்கத்தின் அவசியம் என்ன? ஒரு சங்கம் எந்த நோக்கத்திற்காக அல்லது நோக்கங்களுக்காக அமைக்கப்படுகின்றதோ அந்த நோக்கங்களை அடைவதே அதன் குறிக்கோளாக இருக்கும். மேலும், அவ்வெல்லையை அடைவதினால் அச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றவர்கள் பயன் அல்லது முன்னேற்றமடைகின்றார்கள். உதாரணமாக, விஞ்ஞான விருத்திச் சங்கம் விஞ்ஞானத்தை விருத்தி செய்வதற்காகவும், மாணவர் தேர்ச்சிச் சங்கம் மாணவர்களின் தேர்ச்சியை ஓங்கி வளரச் செய்வதற்காகவும், ஐக்கிய விளைபொருள் உற்பத்தி வியாபாரச் சங்கம் விளைபொருள் உற்பத்தியாளரின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, ஒவ்வொரு சங்கமும் தத்தம் நோக்கங்களுக்காக உழைத்து,

தமது அங்கத்தவருக்கு நன்மையைக் கொடுப்பதே அவர்களுடைய குறிக்கோளாகும். சங்கம் எனக் கூறும்பொழுது, சங்கத்திற்கு நோக்கம் இருத்தல் வேண்டும். நோக்கமில்லையேல் சங்கத்தினால் பயனில்லை. ஆதலினால் சமூகம் ஒரு சங்கமென்றால், சமூகமெனப்படும் சங்கத்திற்கு நோக்கம் என்ன? சமூகம் என்ற சங்கத்தில் அங்கத்தினரான சமூகத்தினரின் பொது நலனுக்காக, முன்னேற்றத்திற்காக உழைப்பதே அதன் நோக்கமாகும். சாதாரணமான ஒரு சங்கத்தின் நோக்கங்களுக்காக அச் சங்கத்தின் அங்கத்தவர்கள் உழைப்பது போலவே சமூகம் என்ற சங்கத்தின் அங்கத்தினரான சமூகத்தவர் ஒருமித்துத் தமது பொது நலனுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் உழைப்பார்கள். மேலும், சாதாரணமான ஒரு சங்கதிற்கு ஆரம்பமும் உண்டு முடிவுமுண்டு. ஒரு குறிக்கப்பட்ட நோக்கத்தை அடைய விரும்புகின்ற ஒரு சிலர் ஒன்று கூடி ஒரு சங்கத்தை உருவாக்கலாம். அச் சங்கத்திற்கு அங்கத்தவர்கள் இருக்குமளவிற்குச் சங்கம் நிலைத்திருக்கும். அங்கத்தினர் இல்லாமற் போகும் சமயத்தில் சங்கம் தானாகவே அழிந்துவிடும் இல்லையேல், சங்க அங்கத்தினர் ஒன்றுகூடிச் சங்கத்தைக் கலைக்க வேண்டுமெனத் தீர்மானித்தால் சங்கம் இல்லாது அழிந்துவிடும். ஆனால், சமூகம் என்ற சங்கம் இத் தன்மையுடையதல்ல. ஒரு சமூகம் இருக்குமளவிற்கும் இச் சமூகத்தினர் சமூகம் என்னும் சங்கத்தின் அங்கத்தினராவர். எனவே, இச் சங்கம் இல்லாது அழிவதானால் சமூகமே அழியவேண்டும். சமூகம் என்ற சங்கம் ஏனைய சங்கத்தைப் போல் ஒன்று அல்லது பல நோக்கங்களை அடைவதற்காக இயங்குகின்றது எனக் கூறினாலும் இச் சங்கம் ஏனைய சங்கங்களைப் போன்றதல்ல.

எமது சமுதாயத்தில் எத்தனையோ சங்கங்கள் உண்டு. ஒவ்வொரு சங்க அங்கத்தவரும் தத்தம் சங்கங்களுக்குள்ள விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பர். சங்கங்கள் அமைக்கப்படும் பொழுது சங்கத்தின் விதிகளும் வரையப்படுவது வழமை. இவ்விதிகளை ஆக்குவது, சங்க அங்கத்தவரே. பின் அவ்விதிகளுக்கு அமைந்து ஒவ்வொரு அங்கத்தவரும் நடத்தல்

வேண்டும். விதிகளுக்குப் பணிந்து நடவாத அங்கத்தவர்களை சங்கத்திலிருந்து நீக்கலாம். சாதாரணமான ஒரு சங்கத்தின் அங்கத்தவர்கள் சங்க விதிகளுக்கு அமைந்து நடக்கின்றனர். ஒருவன் ஒரு சங்கத்தில் அங்கத்தவனாக இருக்கலாம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பல சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கலாம். இவ்வாறு ஒன்றிற்கு மேற்பட்ட சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கும்பொழுது, அங்கத்துவம் வகிக்கின்ற சங்கங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக இருக்கலாகாது. உதாரணமாக ஒரு பஸ் கொம்பனி முதலாளி பஸ் முதலாளிகளுடைய சங்கத்தில் அங்கத்துவம் வகித்து அச் சங்கத்தின் மூலமாக அதிக இலாபத்தைப் பெற முயல்வான். அதே நேரத்தில் தனக்குக் கீழ் கடமையாற்றும் தொழிலாளர்களுடைய தொழிற் சங்கத்திலும் அங்கத்துவம் வகிக்க முடியாது. ஏனெனில் தொழிற் சங்கம் முதலாளிகளுக்கு விரோதமானது. முதலாளிகளிடமிருந்து பெறக்கூடிய சலுகைகளைப் பறிப்பதே தொழிற் சங்கத்தின் நோக்கமாக இருக்கும். முதலாளிகளின் சங்கமும் தொழிற் சங்கமும் ஒன்றிற்கொன்று விரோதமாக இருக்கும்பொழுது ஒருவன் இரண்டிலும் அங்கத்துவம் வகிக்க முடியாது. மேலும், ஒருவன் அங்கத்துவம் வகிக்கும் சங்கத்தின் அல்லது சங்கங்களின் விதிகள் தீர்மானங்கள் முதலியவற்றிற்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். இல்லையேல் வெளியேற வேண்டும். ஆதலினால், சமூகத்தவர்கள் சமூகம் என்ற சங்கத்தில் அங்கத்தவர்களாக இருக்கும்பொழுது அதன் விதிகள் தீர்மானங்கள் முதலியவற்றிற்குக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். ஆனால், அவ்வாறு கட்டுப்படாவிட்டாலும் இச் சங்கத்திலிருந்து வெளியேற முடியாது. சமூகம் என்ற சங்கத்தின் தீர்மானங்கள் ஒருவனின் விருப்பத்திற்கு நேர்விரோதமாக இருந்தாலும் கூட, அவன் இச் சங்கத்தின் கட்டாய அங்கத்தவனாக இருக்கின்றபடியால் அவன் தொடர்ந்து அங்கத்தவனாக இருப்பதுடன் சமூகத்தவரின் பெரும்பான்மையான விருப்பத்திற்கு இசைய நடக்க வேண்டியது அவசியமாகின்றது.

**அரசு (STATE) சங்கம் :**

ஒரு சமூகத்தினர் பற்பல சங்கங்களை வெவ்வேறு நோக்கங்களுக்காக அமைக்கும்பொழுது, இச் சங்கங்கள் ஒன்றிற்கொன்று முரண்பட்டதாக இருக்கும் என்ற காரணத்தினால், சமூகத்தினரின் பொது நலனுக்காக இச் சங்கங்கள் உழைக்க வேண்டுமேயாயின், அவற்றிற்கு மேலான ஒரு சங்கம் இருத்தல் அவசியமாகின்றது. அவ்வாறு எல்லாச் சங்கங்களுக்கும் மேலான ஒரு சங்கம் இருக்குமேயாயின், சகல சங்கங்களையும் கட்டுப்படுத்திச் சமூகத்தின் பொது நலனுக்காக உழைக்கச் செய்விக்கலாம். எல்லாச் சங்கங்களுக்கும் மேலாக ஒரு சங்கம் இருக்குமேயாயின், அச் சங்கங்களின் அதிகாரங்களிலும் பார்க்கக் கூடுதலான அதிகாரம் எல்லாவற்றிற்கும் மேலான சங்கத்திற்கு இருத்தல் வேண்டும். எல்லாச் சங்கங்களையும் கட்டுப்படுத்தி நடாத்துவதற்கு வேண்டிய கூடுதலான அதிகாரம் இல்லையாயின், எல்லாச் சங்கங்களுக்கும் மேலான ஒரு சங்கம் இருக்க வேண்டியதில்லை. எல்லாச் சங்கங்களுக்கும் மேலான சங்கத்தை அரசு என அழைக்கப்படும்.

அரசு என்ற சங்கம் ஏனைய சங்கங்களைப் போன்ற சங்கமாக இயங்கினாலும், சாதாரணமான ஒரு சங்கத்தைப் போன்றதல்ல. அரசு என்ற சங்கத்திற்கு அங்கத்தவர்களும் எல்லையும் இருத்தல் வேண்டும். ஒரு குறிக்கப்பட்ட எல்லைக்குள் வாழ்கின்றவர்களே அரசு என்ற சங்கத்தில் அங்கத்தவராக இருக்கலாம். ஒரு குறிக்கப்பட்ட எல்லை எனக் கூறும்பொழுது, அவ்வெல்லை ஒரு இடத்தைச் சுற்றி இருக்க வேண்டும் என்ற நியதியில்லை. ஆனால் எல்லை ஒன்றிற்கு மேற்பட்ட பல இடங்களைச் சுற்றியிருக்கலாம். உதாரணமாக, பாக்கிஸ்தானின் எல்லைகள் இரு இடங்களைச் சுற்றியிருக்கின்றன. எனவே, எல்லைகள் எனக் குறிப்பிடும்பொழுது ஒன்றாக இயங்குகின்ற தேசத்தின் எல்லைகளைக் குறிப்பிடும். இவ்வெல்லைகளுக்குள் வாழ்கின்றவர்கள் அரசு என்ற சங்கத்தின் அங்கத்தவர்களாவர். சாதாரணமான ஒரு சங்கத்தின் அங்கத்தவர்கள் தமது சொந்த விருப்பத்திற்கு இசையவே அங்கத்தவர்களாக இருக்கின்றனர் ஆனால், அவ்வுரிமை அரசு என்ற சங்கத்தைப் பொறுத்த அள

வில் ஒருவருக்குமில்லை. பிறந்த நாள் தொட்டு சாகும் வரை ஒரு தேசத்தின் எல்லைக்குள் பிறந்து வாழ்கின்றவர்கள் அரசு என்ற சங்கத்தின் அங்கத்தவர்களாக இருக்கின்றோம். இவ்வுரிமையை எமது மூதாதைகள் தமது விருப்பத்திற்கு இசைந்தோ, இசையாமலோ அரசு என்ற சங்கத்திற்குப் பறிகொடுத்துவிட்டார்கள். 'எனது சமயம் என்ன?' என என்னை ஒருவர் கேட்டால், நான் இந்து சமயத்தவன் எனக் கூறுவேன். அவ்வாறு கூறுவதற்குக் காரணம் என்னவென்றால், எனது தாய் தகப்பனார் இந்துக்களாக வாழ்ந்து வந்ததுமல்லால் அவர்கள் எனக்கு ஊட்டிய சமய அறிவு, சமய உணர்ச்சி முதலியன என்னை, நான் இந்து சமயத்தவன் எனக் கூறத் தூண்டுகின்றன. இது போலவே ஏனைய சமயத்தவரும் கூறுவது இயற்கை. அவ்வாறே, எமக்கு முன்னிருந்த மூதாதைகள் எமது அரசு என்ற சங்கத்தின் அங்கத்தவர்களாக இருந்தமையினாலும், அவர்கள் அதற்குப் பணிந்து நடந்தமையினாலும், நாமும் அதனை ஆட்சேபிக்காது அச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றோம். ஒரு சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும்பொழுது, இச் சங்கத்தில் அங்கத்துவம் வகியாது வேறு ஒரு சங்கத்தில் அங்கத்துவம் வகித்தால் நல்லதெனத் தோன்றும். இங்கிலையில் ஒரு சங்கத்தை விடுத்து வேறு ஒரு சங்கத்தில் சேரலாம். இப்படிப்பட்டோரும் உளர்.

பிறந்த நாள் முதல் ஒரு அரசின் அங்கத்தவனாக இருக்கின்றபடியால், நாம் பிறக்கும்பொழுதே ஒரு அளவிற்கு எமது உரிமையை இழந்தவராகவே பிறக்கின்றோம். ஆகவே, மனிதன் சுதந்திரத்துடன் பிறக்கின்றான் எனக் கூறுவது தவறு. ஏனெனில், பிறக்கும்பொழுது சுதந்திரமிருந்தாலும் ஏதாவதொரு அரசு என்ற சங்கத்தில் சேர்வதற்கு எமக்கு உரிமை இல்லை. ஆதலினால், அரசு என்ற சங்கத்தில் விரும்பியோ விரும்பாமலோ அங்கத்துவம் வகிக்கும்பொழுது, உரிமையை அச் சங்கத்திற்குப் பறிகொடுத்தது மல்லாமல் அச் சங்கத்திற்குக் கட்டுப்பட்டவராகவே வாழ்கின்றோம். அரசு என்ற சங்கத்தின் கொள்கைகள், திட்டங்கள், நோக்கங்கள் முதலியவற்றை ஏற்றாலென்ன ஏற்காவிட்டாலென்ன அதற்குக் கட்டுப்பட்டே நடக்கவேண்டும்.

சாதாரணமான ஒரு சங்கத்தில் அங்கத்துவம் வகிப்பவர், சங்கத்தின் நோக்கங்களை ஏற்காவிட்டால் அச் சங்கத்திலிருந்து வெளியேறலாம். ஆனால், இவ்வுரிமை அரசு என்ற சங்க அங்கத்தவர்களுக்கு இல்லை. எனவே, இவ்வுரிமையும் பறிக்கப்பட்டுள்ளது. சாதாரணமான சங்கங்களுக்கு நோக்கங்கள் உண்டு. அது போலவே, அரசு என்ற சங்கத்திற்கும் நோக்கம் உண்டு. அரசு என்ற சங்கத்தின் அங்கத்தினரின் பொது நலனை வளர்த்து அங்கத்தினரை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதே அதன் நோக்கமாகும். மேலும், சாதாரணமான ஒரு சங்கம் என்றும் நிலைக்காது; சில சந்தர்ப்பங்களில் நோக்கங்கள் மாற்றியமைக்கப்படும். ஆனால் அரசு என்ற சங்கம் அழியாது. அதன் அங்கத்தினர் இருக்கும் வரையும் அரசும் இருக்கும். ஆனால் அதன் நோக்கங்கள் அதன் அங்கத்தவர்களால் மாற்றியமைக்கப்படக் கூடும். இச் சங்கத்திற்கு நோக்கங்கள் இருப்பது போலவே, விதிகளும் உண்டு. இவ் விதிகள் தான் அரசின் சட்டங்கள். நாம் இச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும்பொழுது சட்டங்களுக்குப் பணிந்து நடக்கின்றோம். பணிந்து நடக்காதவர்கள் சங்கத்திலிருந்து நீக்கப்படுவதில்லை. ஆனால், அதற்கிருக்கின்ற அதிகாரங்களைக் கொண்டு அரசு எம்மைச் சட்டங்களுக்குப் பணிந்து நடக்கச் செய்யும். இவ்வதிகாரம் சாதாரணமான ஒரு சங்கத்திற்கு இல்லை. பணிந்து நடக்கச் செய்யும் அதிகாரம் அரசு என்ற சங்கத்திற்கு மட்டுமே உண்டு. பணிந்து நடக்கச் செய்வதற்காக பொலீஸ், படை முதலிய ஆயுதங்களை இச் சங்கம் உபயோகிக்கின்றது.

அரசு என்ற சங்கத்தின் தன்மையை நன்கு ஆராயுமிடத்து அச் சங்கம் எல்லாவற்றிற்கும் மேலானது எனக் கூறினால் போதாது. அதற்கிருக்கும் அதிகாரங்களைக் கொண்டு அதன் அங்கத்தவரைப் பணியச் செய்யும் தன்மை மிகவும் முக்கியமானது. இவ்வுரிமையை ஆதாரமாகக் கொண்டே அரசிற்குப் பணியாது அதற்கு விரோதமாகக் கிளம்புபவர்கள், துரோகிகள் எனக்கூறி அவர்களைச் சுட்டுக் கொல்லவும் அரசு துணிகின்றது. எனவே, இச் சங்கம் ஒரு சர்வாதிகாரச் சங்கமாக விளங்குவதற்கும் அதற்கு அதிகாரமும் தத்துவமும் உண்டு. இருப்பினும்,

சங்க அங்கத்தவர்களின் பெரும்பான்மையானோரின் தீர்மானங்களை ஆதாரமாகக் கொண்டு இச் சங்கம் இயங்குவதாற்றான், அரசு என்ற சங்கம், ஒரே எண்ணக் கருத்துடன் என்றும் நிலைத்திராது காலத்திற்குக் காலம் மாற்றமடைகின்றது. மாற்றங்கள் ஏற்படும்பொழுது மாற்றங்கள் படிப்படியாகவும் ஏற்படும். தீவிரமான மாற்றம் சடுதியாகவும் ஏற்படும். ஆகவே, சர்வ அதிகாரங்களைக் கொண்ட அரசு என்ற சங்கம் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றமடைந்து, என்றும் நிலைத்து பொதுமக்களின் பொது நலனை வளர்க்கும் தன்மையுடையதாக விளங்குகின்றது.

**அரசாங்கம் (Government)** அரசு ஒரு சங்கம் எனக் கூறினோம். இச் சங்கத்திற்கு அங்கத்தவர்கள் அரசின் எல்லைக்குள் இருப்பவர் என்றும், இவ்வங்கத்தவர்களின் நலனுக்காக உழைப்பதே அதன் நோக்கம் எனவும் கூறினோம். இச் சங்கம் தன் நோக்கங்களை நிறைவேற்றும் பொழுது அவற்றை நேரடியாகச் செய்யாது மறைமுகமாக அரசாங்கம் என்ற தாபனத்தினூடாகவே செய்து முடிக்கின்றது. சாதாரணமான ஒரு சங்கம், உதாரணமாக வரியிறுப்போர் சங்கம், மாநகர சபையின் தீர்மானம் ஒன்றை எதிர்த்துப் பிரசாரம் செய்வதாகத் தீர்மானித்தால், அத்தீர்மானத்தை நடைமுறையில் கொண்டுவரும் பொறுப்பு அச் சங்கத்தின் நிர்வாக சபையினுடைய கடமையாகும். அதுபோலவே, அரசு என்ற சங்கத்தின் கடமைகளைச் செய்யும் தாபனம் அரசாங்கம் எனப்படும்.

இன்றைய ஜனநாயக முறையின் பிரகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் பெரும்பாலானோர் ஒன்றுகூடி அரசாங்கத்தை நடத்துகின்றனர். அவ்வாறு நடாத்தும் பொழுது, அரசாங்கத்தை நடாத்துகின்றவர்களுடைய கொள்கையும் நோக்கமும் அரசின் கொள்கையும் நோக்கமுமாக விளங்கும். எனவே, மக்களின் ஆதரவைப் பெற்றவர்கள் மக்களுடைய விருப்பத்திற்கு இணங்கிய கொள்கையையும் நோக்கத்தையும் நடைமுறையிற் கொண்டு வருவதால் அரசு என்ற சங்க அங்கத்தவர்களின் பெரும்பான்மையோரின் கொள்கையையும் நோக்கத்தையும் அரசாங்கம் நடைமுறையில் கொண்டு வருகின்றது எனக் கூறப்படும். மேலும், அரசாங்கம் அரசு என்ற சங்கத்தின் நிர்வாகசபை போன்றதாகும். நிர்வாகசபை எவ்வாறு காலத்திற்குக் காலம் மாற்றமடைகின்றதோ அவ்வாறே அர

சாங்கமும் மாற்றமடையும். மக்களுடைய ஆதரவை அரசாங்கம் இழந்தால் அவ்வரசாங்கத்தை விடுத்து வேறு ஒரு அரசாங்கத்தை அமைப்பது ஜனநாயக முறையிலே இயற்கையன்றோ இதனாலேயே யூ. என். பி. வீழ்த்தப்பட்டு எம். இ. பி. ஆட்சி பீடத்திலேறியது. ஆதலினால் அரசு அழிவற்ற சங்கமாகும் ஆனால் அரசாங்கம் அரசின் ஆயுதமாக விளங்குவதுமல்லாமல் என்றும் நிலைக்கக்கூடியதல்ல.

அரசாங்கம் எக்கருமத்தையும் செய்யும் பொழுது தனது சொந்த அதிகாரத்தைக் கொண்டு செய்வதில்லை, ஆனால் அரசின் அதிகாரத்தைக் கொண்டே செய்கின்றது. அரசாங்கம் அரசின் கருவியாக இருந்தாலும் அரசாங்கத்தின் மூலம் அரசின் அதிகாரங்களை உபயோகிக்கக்கூடியதா யிருக்கின்றது. ஆதலினால் அரசாங்கத்தைக் கைப்பற்றி அதன்மூலம் அரசின் அதிகாரத்தை உபயோகிப்பதால் அரசாங்கத்தை நடாத்துபவர் அரசை நடாத்துகின்றனர் எனக் கூறலாம். எனவே, ஒரு அரசின் நோக்கம், கொள்கை, திட்டம் முதலியன அதன் கருவியாக விளங்கும் அரசாங்கத்தின் நோக்கம், கொள்கை, திட்டமாக இருக்கும். அரசாங்கம் அரசின் அதிகாரத்தைப் பெற்று அரசின் நோக்கத்தை நடைமுறையில் கொண்டுவரும்பொழுது மக்கள் பெறக்கூடிய பொதுநலனை அரசாங்கம் பெற்றுக்கொடுக்க முயலும். இவ்வழி ஒன்றாலேயே மக்களின் ஆதரவை அரசாங்கம் பெற்று அதிகாரத்தில் கூடிய காலத்திற்கு இருக்கக்கூடியதாயிருப்பதுடன் அரசின் நோக்கத்தையும் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கின்றது.

எனவே, ஒரு தேச எல்லைக்குள் வாழ்கின்ற மக்களின் சங்கமாக விளங்கும் அரசின் சார்பாக அதன் நோக்கங்களை நிறைவேற்றும் அரசாங்கம், இன்றைய ஜனநாயக முறைக்கு ஏற்க, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருப்பதுமல்லாமல் மக்களுடைய ஆதரவைப் பெற்று அவர்களுக்குச் செய்யக்கூடிய பொது நலன்களைச் செய்து முடிக்கின்றது. இவ்வாறு அரசு என்ற சங்கம் மக்களுடைய உரிமைகளைப் பெற்று அவ்வுரிமைகளைத் தன் ஆயுதமாகிய அரசாங்கத்திற்கு ஒப்படைத்து எவ்விதம் தன் கடமைகளை அரசாங்கத்தின் மூலம் செய்விக்கின்றது என்பதை நாம் ஒவ்வொருவரும் குறிப்பாக இலங்கை அரசாங்கத்தோடு சம்பந்தப்பட்டவற்றை அறிவது நன்மையுடையதாயிருக்கும்.

# 3. மனித சமுதாயத்தின் தேவைகள்

## (i) உ ண வு.

மனிதன் தோன்றிய காலம் தொடக்கம் உணவு, உடை, இல்லம் ஆகியவை அவனது முக்கிய தேவைகளாக இருந்து வருகின்றன. உணவில்லையேல் பட்டினியால் வாடி வதங்கிச் செத்திருப்பான். உடையும் இல்லமும் இல்லையேல் வெய்யில், மழை, குளிர் ஆகியவற்றால் செத்து மாண்டிருப்பான். அன்று முதல் இத்தேவைகளுக்காகவும் மற்றும் தேவைகளுக்காகவும் முயற்சி செய்வதே மனிதனின் பிரதானமான நோக்கமாக இருக்கின்றது. மனிதனின் தேவைகள் பல்லாயிரக்கணக்கானதாக இருந்தாலும், அத்தேவைகளுள் உணவு முக்கியமானது. ஆதலால், உணவுற்பத்தியைப் பெருக்கித் தினமும் அதிகரித்துக் கொண்டே போகும் ஜனத்தொகையின் தேவையைப் பூர்த்தி செய்வதே அவனின் முக்கியமான தொழிலாக இருக்கின்றது. ஜனத்தொகை அதிகரிக்க, அதற்கு ஏற்றவாறு உணவுற்பத்தியும் அதிகரித்தாற்றான் முழுத் தேவையையும் பூர்த்தி செய்யலாம். இல்லையேல் பசியால் ஒரு பகுதியினர் சாக நேரிடும். ஆதலினால், மனித சமுதாயத்தின் தேவைகளுள் உணவுற்பத்தி மிக முக்கியமானதாகும்.

இலங்கையில் வாழ்பவர்களின் பிரதான உணவு, சோறாகும். எனவேதான் நெல் உற்பத்தி இங்கு பிரதானமான தொழிலாக இருக்கின்றது. பண்டைக்காலத்தில் நெல்லுற்பத்தி இலங்கையின் தேவைக்கு மேலதிகமாக இருந்தமையால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதென நாம் அறிகின்றோம். ஆனால் இன்று எமது தேவையின் அரைப்பாகமளவிற்குத்தான் நெல்லுற்பத்தி செய்யப்படுகின்றது. இதனால் இலங்கையின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகையான அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றது.

**இலங்கையின் நெல் உற்பத்தி, அரிசி இறக்குமதி விபரம்**

| வருடம் | நெல் உற்பத்தி | | அரிசி இறக்குமதி |
|---|---|---|---|
| | புசல் நெல் | அரி. நிறை(தொ) | நிறை (தொன்) |
| 1954 | 3,10,00,000 | 3,10,000 | 3,95,950 |
| 1955 | 3,50,00,000 | 3,50,000 | 3,75,900 |

மேலே காட்டிய விபரத்தின்படி வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுவதால் நாம் வெளிநாடுகளை நம்பி வாழ்பவராக இருப்பதுடன், இதற்காக நாம் பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்கின்றோம். இறக்குமதி செய்யப்படும் பொருள்களுள் அரிசிக்காகச் செலவிடும் தொகையே மிகவும் கூடுதலாக இருக்கின்றது. இதன் விபரம்:

| வருடம் | முழு இறக்குமதிச் செலவின் வீதம் |
|---|---|
| 1954 | 19·6 % |
| 1955 | 15·2 % |

ஆகவே, நெல்லுற்பத்தியைப் பன்மடங்காக அதிகரிக்கச் செய்தால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியைக் குறைக்கக்கூடியதாயிருக்கும். அவ்வாறு குறையும் பொழுது, அதற்காகச் செலவிடும் பணத்தொகையும் குறையும். இவ்வாறு மிஞ்சும் பணத்தை மிகவும் அத்தியாவசியமான பொருளாதார வளர்ச்சிக்காக உபயோகிக்க முடியும். ஆதலினால், நெல்லுற்பத்தி அதிகரித்தால், அது நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்குவதற்கும் உதவியாயிருக்கும். மேலும், இலங்கையின் ஜனத்தொகை வருடா வருடம் 2·2 இலட்சத்தினால் அதிகரித்துக் கொண்டே போகின்றது. இவ்வாறு ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே போகும்பொழுது, அதிகரிக்கின்ற தொகையின் தேவைக்கு மேலதிகமாக நெல் உற்பத்தியும் அதிகரித்தாற்றான் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசித் தொகையைக் குறைக்க முடியும்.

M. Jayaratnam



நெல்லுற்பத்தியைப் பெருக்குவதற்காக, நெற்சாகுபடி செய்யும் பரப்பளவைப் பெருக்குவதுடன் ஒவ்வொரு பரப்பிலிருந்து உற்பத்தி செய்யப்படும் நெல்லின் அளவையும் அதிகரிக்கச் செய்யவேண்டும்.

நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மேலே குறிப்பிட்ட இரு வழிகளையும் கையாள வேண்டும். உதாரணமாகத் தற்பொழுது 1,000 ஏக்கர் நிலம் சாகுபடி செய்யப்படுகின்றது என்றும் அதன் சராசரி விளைவு 30 புசல் என்றும் எடுத்துக் கொள்வோம். எனவே, 30,000 புசல் நெல் உற்பத்தி செய்யப்படுகின்றது. பண்படுத்தப்படும் நிலப்பரப்பை இரண்டு மடங்காகப் பெருக்கினால், உற்பத்தி 60,000 புசல்களாகும். ஆனால், சராசரி உற்பத்தியை இரண்டு மடங்காக்கினால் 1,000 ஏக்கரிலிருந்தே 60,000 புசல் நெல் உற்பத்தி செய்யலாம். ஆனால், பரப்பளவையும் இரண்டு மடங்காக்கினால் 1,20,000 புசல் நெல் உற்பத்தி செய்யக்கூடும். ஆதலினால் சாகுபடி செய்யப்படும் பரப்பளவை அதிகரிப்பதுடன் சராசரி உற்பத்தியையும் அதிகரிக்கச் செய்தால் நெல் உற்பத்தி பன்மடங்காகப் பெருகும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு நெல்லுற்பத்தியை இரண்டு மடங்காகப் பெருக்கினால் எமது இன்றைய தேவையைப் பூர்த்தி செய்யமுடியும்.

இலங்கையைப் பொறுத்த வரையில், முழுப்பரப்பளவில் ஏறக்குறைய நாலில் மூன்று பாகம் காடாக இருக்கின்றது. இப்பகுதிகளில் மலேரியா ஜுரம் மக்களை வாட்டி வதைத்தமையினால் விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் தமது தொழிலைக் கைவிட வேண்டியதாயிற்று. முன் நெற்சாகுபடி செய்யப்பட்ட பிரதேசங்களில் தொடர்ந்து சாகுபடி செய்யப்படாமையால் அப்பிரதேசங்களும் காடாக மாறின. இப்பிரதேசங்கள் மீண்டும் நெற்சாகுபடி செய்யும் பிரதேசங்களாக மாற்றப்பட்டால், நெல் உற்பத்தியைப் பெருக்கலாம். இத்துடன் சராசரி உற்பத்தியையும் பெருக்கினால், எமது உணவுப் பிரச்சனையை ஓரளவிற்குத் தீர்க்கலாம். தற்பொழுது, இலங்கையின் பூகோள

நிலையின் காரணமாகப் போதிய மழை பெய்தாலும் விவசாயி களின் தேவைக்கு வேண்டிய காலத்தில் வேண்டிய இடத்தில் போதிய மழை பெய்யாமையால், நெல் உற்பத்தி மிகவும் குறை வாக இருக்கின்றது. இயற்கையினால் அளிக்கப்படும் அனுகூலங் களை விவசாயிகள் அனுபவிக்க முடியாமையால், செயற்கை வழியை உபயோகித்தாவது உற்பத்தியைப் பெருக்குவது அவ சியமன்றோ. இதற்கு, நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தல் அத்தியாவசியமாகும். இதன் அவசியத்தை உணர்ந்த சிங்கள மன்னர்களுள் மகாசேனன், பராக்கிரமபாகு ஆகியோர் நீர்ப் பாசன வசதிகளைப் பெருக்குவதற்காகப் பெரும் முயற்சிகளைச் செய்தனர். நீர்ப்பாசன வசதிகளை அளிப்பதற்குப் போதிய ஆறுகள், குளங்கள் முதலியன உண்டு. இவ்வசதிகளை உப யோகித்து நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கலாம். இலங்கை யில் பெய்யும் மழைநீர் ஆறுகள் மூலமாகக் கடலுக்குச் சென்று வீணே போகின்றது. கடலுக்குச் செல்கின்ற மழை நீரை உபயோகிக்கக்கூடிய அளவிற்கு உபயோகித்தால், விவ சாயம் தழைத்தோங்கும். மேலும், இலங்கையிலுள்ள விவசா யிகள் இன்னும் பண்டைக்காலத்து முறைகளையே உபயோ கித்து வருகின்றார்கள். விஞ்ஞானம் ஓங்கி வளர்ந்திருக்கும் இக்காலத்தில் விஞ்ஞான முறைகளை உபயோகிப்போமேயானல் உற்பத்தி பெருகும். ஜப்பான் இத்தாலி போன்ற தேசங்களில் புதிய விஞ்ஞான முறைகள் உபயோகிக்கப்படுவதினால் ஒரு ஏக் கருக்கு சராசரியாக 150 புசல் நெல் விளைகின்றது. அதாவது இலங்கையில் விளைவதிலும் பார்க்க 5 மடங்கு விளைகின்றது. இம்முறைகளை உபயோகித்து உற்பத்தியை 5 மடங்காக அதி கரிக்கச் செய்யாவிட்டாலும் 2, 3 மடங்கு அதிகரிக்குமேயாயின் எமது உணவுப் பிரச்சனையை நாம் மிகவும் சுலபமாகத் தீர்க்க முடியும். இவ்விரு வழிகளையும் இலங்கை அரசாங்கம் உபயோ கித்து எவ்விதம் உற்பத்தியைப் பெருக்க முயல்கின்றது என் பதை ஆராய்வோம்.

## நீர்ப்பாசன இலாகா :

நீர்ப்பாசன இலாகா 1900-ம் ஆண்டு ஆரம்பமானது. அக் காலத்தில், நீர்ப்பாசன வசதிகளை அளிப்பதற்காக ஆராய்தல், பழுதடைந்த நீர்ப்பாசன முறைகளைச் சீராக்கி நீர்ப்பாசன வசதியளித்தல், நீர்ப்பாசன வாய்க்கால்கள் பழுதடையாது பாதுகாத்தல், பண்டைக்காலத்தில் உபயோகித்த நீர்ப்பாசன கால்வாய்கள், குளங்களை மீண்டும் உபயோகித்தல் ஆகியவை களே இவ்விலாகாவின் நோக்கமாக இருந்தது. இதன்பின்னர், உலக யுத்தங்களினால் ஏற்பட்ட உணவு நெருக்கடியிலிருந்து தப்ப நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, நெல் உற்பத்தியைப் பெருக்கும் அத்தியாவசியம் அதிகரித்தமையினால் இவ்விலாகா வின் நோக்கங்களும் அதிகரித்தன. அவையாவன :

(1) பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் சிறிய நீர்ப்பா சனத் திட்டங்களையும் புதுப்பித்தும், புதிய நீர்ப்பா சனத் திட்டங்களைச் செய்துமுடித்து நீர்ப்பாசன வசதியை அளித்தல்;

(2) வெள்ளங்களிலிருந்து நகரங்கள், கிராமங்கள் முதலிய வற்றையும் நெல் சாகுபடி நிலங்களையும் பாது காத்தல்;

(3) பெரிய நீர்ப்பாசன திட்டங்களிலிருந்து நீர் வீழ்ச்சி யினால் மின்சாரம் உற்பத்தி செய்தல்.

(4) நீர்ப்பாசன வாய்க்கால்களைக் கட்டுதல்.

(5) சதுப்பு நிலங்களைத் திருத்தி நெற்சாகுபடி செய்யும் நிலங்களாக்குதல்.

(6) நெற்சாகுபடி நிலங்களில் உவர்நீர் அல்லது கடல்நீர் வராது தடுத்தல்.

(7) நீர்ப்பாசனத்திட்ட இடங்களில் வீதிகள், வாய்க்கால் கள் முதலிய வசதிகளை அளித்தல்.

(8) இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு வீடுகளமைத்தல் ஆகியவைகளே.

இவ்விலாகா ஆரம்பிக்கப்பட்டபின் எத்தனையோ நீர்ப்பாசனத் திட்டங்களை முடித்தமையினால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் நெற்சாகுபடி செய்யப்படுகின்றது. இதுவரை செய்து முடித்த திட்டங்கள் பல. அவற்றுள் மின்னேரியா, கந்தளாய், மினிப்பே, இரணைமடு, கட்டுக்கரைக்குளம் (Giant's Tank), பராக்கிரம சமுத்திரம் போன்றவை ஒரு சில. டொனமூர் அரசியல் அமைப்பின்கீழ் உள்நாட்டு விவகாரங்கள் யாவும் இலங்கையரின் பொறுப்பில் விடப்பட்ட பின்னர், நீர்ப்பாசன இலாகா சாதித்தவை பாராட்டத்தக்கதாகும். இத்தகைய புத்துணர்ச்சிக்குக் காலம் சென்ற கௌரவ திரு. D. S. சேனநாயக்கா அவர்கள் முக்கிய காரண கர்த்தாவாக விளங்கினர். அவர் 1931-ம் ஆண்டு தொடக்கம் விவசாய, நில மந்திரியாகக் கடமையாற்றினர். அக்காலத்தில் விவசாயத் திட்டங்களில் ஊக்கமெடுத்து வந்தார். நீர்ப்பாசன வசதிகளை அளித்து புதிய நிலங்களில் நெற்சாகுபடி செய்வதினால் நெல் உற்பத்தியைப் பெருக்குவதுடன் நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கலாம் என்பதை அவர் உணர்ந்தார். நீர்ப்பாசன வசதிகளை அளிப்பதற்காக பெருந்தொகையான பணம் அக்காலம் தொடக்கம் செலவிடப்பட்டது. 1948-ம் ஆண்டில் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் நீர்ப்பாசன வசதியை அளிப்பதற்காக பணம் ஒதுக்கப்பட்டதுமல்லாமல் ஒரு திட்டவட்டமான முறையிலே இவ்விலாகா குறிக்கப்பட்ட ஒரு திட்டத்தை இட்டு அதன் பிரகாரம் செய்து முடிக்க வேண்டுமென அரசாங்கம் விரும்பியது. எனவே, 1954 – 55 ல் ஆரம்பித்த 6 வருடத் திட்டத்தின் பிரகாரம், 6 வருட கால எல்லைக்குள் 1,10,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிப்பதாகவும் அதற்காக 23·5 கோடி ரூபா செலவிடுவதாகவும் திட்டமிடப்பட்டது. இதன் பிரகாரம்,

| | | |
|---|---|---|
| (1) | கல்ஓயா திட்டம் — | கிழக்கு மாகாணம் |
| (2) | அல்லை விஸ்தரிக்கும் திட்டம் | ,, |
| (3) | கந்தளாய் திட்டம் — | ,, |
| (4) | இரணைமடு விஸ்தரிக்கும் திட்டம் | வட மாகாணம் |

(5) பாவற்குளம் திட்டம் — வட மாகாணம்
(6) வவுனிக் குளம் திட்டம் — ,,
(7) ஹுருளுவாவ திட்டம் — வட மத்திய மாகாணம்
(8) பதவியா திட்டம் — ,,
(9) கந்தலாம திட்டம் — மத்திய மாகாணம்

ஆகிய திட்டங்களில் வேலை ஆரம்பிக்கப்பட்டு சிலவற்றின் வேலை முடிந்துள்ளது. கடந்த பொதுத் தேர்தலில், எம். இ. பி., அரசாங்கத்தைக் கைப்பற்றியதன் காரணமாக, யூ. என். பி. யினுல் அமைக்கப்பட்ட 6 வருட திட்டத்திற்குப் பதிலாக வேறு ஒரு திட்டம் வரையப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்காகப் பொருளாதாரத் திட்டக் கமிஷன் (Planning Commission) அமைக்கப்பட்டுள்ளது. இக்கமிஷன், ஒரு திட்டவட்டமான பொருளாதாரத் திட்டத்தை வரையும்பொழுது, அதில் விவசாய விருத்தி முக்கிய இடம்பெறும் என்பதில் ஐயமேதுமில்லை. அவ்வாறு இடம்பெறும் பொழுது, நீர்ப்பாசன வசதியளிப்பதற்காகப் போதிய பணமும் செலவிடத் திட்டமிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கல் ஓயா திட்டம் :** கல் ஓயா திட்டம், பல உபயோக திட்டம் அல்லது பல பயன்தரு திட்டம் (Multi - Purpose Scheme) எனப்படும். இத்திட்டத்தின் மூலம் விவசாய விருத்தி, தொழிற்சாலை அபிவிருத்தி, மின்சார உற்பத்தி, வெள்ளப்பெருக்கு பாதுகாப்பு முதலிய உபயோகங்களைப் பெறக் கூடியதாயிருக்கும். சிறிய திட்டங்களைச் செய்து முடிப்பதிலும் பார்க்க, ஒரு பெரும் பல உபயோகத் திட்டத்தைச் செய்து முடித்தால், அதனுல் ஏற்படக்கூடிய பலாபலன்கள் பல. ஆதலினுல் பல உபயோக திட்டங்களைச் செய்து முடித்தல் நன்மையைப் பயக்கும் என்ற காரணத்திற்காக அமெரிக்க ஐக்கிய நாடு, ருஷ்யா, சீனு, இந்தியா போன்ற நாடுகளில் பொருளாதாரத்தைப் பெருக்குவதற்காக, அதிகமான பல உபயோக திட்டங்கள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் கல்ஓயா திட்டம் முடிவெய்தியது. இதைத் தழுவி வளவைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டாலும் இன்னும் தீவிரமாக வேலை செய்யப்படவில்லை.

கல்ஓயா திட்டம் 1949-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 60,000 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்வதாகவும், ஒரு வருடத்தில் காலபோகம் சிறுபோகம், ஆகிய இரு போகங்களில் நெற் சாகுபடி செய்யப்பட்டால், 120,000 ஏக்கர் நிலத்தில் நெற் சாகுபடி செய்வதாகவும்; 9,000 குதிரைச் சக்தி (Horse Power) மின்சாரம் நீர் வீழ்ச்சியிலிருந்து தயாரிப்பதாகவும், சீனித் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளை அமைப்பதாகவும் திட்டமிடப்பட்டது. எமது, கல் ஓயாத் திட்டம், அமெரிக்காவின் **டெனசிவலி திட்டத்தை** ஆதாரமாகக்கொண்டு அமைக்கப்பட்டது. இருப்பினும், கல் ஓயா திட்டத்தின் கீழ், டெனசிவலி திட்டத்திலிருப்பது போல, தொழிற்சாலைகள் இதுவரை அமைக்கப்படவில்லை. பல உப யோக திட்டங்கள் மூலம் விவசாய விருத்திக்காக நீர்ப்பாசன வசதிகள் அளிக்கப்படுவதுடன் நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் ஆக்கப்படுகின்றது. இந்த மின்சாரத்தைச் சிறந்த முறையில் உபயோகிப்பதாயின் அத்திட்டத்திற் கருகாமையில் தொழிற்சாலைகள் அமைக்கப்படவேண்டும். டெனசிவலித் திட்டத்தின் கீழ் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. கல்ஓயா திட்டத்தின் கீழ் இன்னும் தொழிற்சாலைகள் அமைக்கப்படவில்லை. ஆதலினால், அத்திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள் அமைப்பது அவசியமாகின்றது. இதனை உணர்ந்து, சீனித் தொழிற்சாலை; சைக்கில் டையர் டியூப் தொழிற்சாலை ஆகியவற்றை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைகளை அநேகமாக அடுத்த வருடம் அமைக்க ஆரம்பித்து வெகு விரைவில் அமைத்துவிடுவார்கள் என அறியக்கிடக்கின்றது.

கல்ஓயா திட்டம் அமைக்கப்பட்டதால், காடாக விருந்த பிரதேசம் இன்று செழித்தோங்குகின்றது. மேலும், வருடா வருடம் 1,20,000 ஏக்கர் நிலத்தில் நெற் சாகுபடி செய்வதற்குப் போதிய நீர்ப்பாசன வசதியளிக்கப்படுவதால், இலங்கையின் நெல் உற்பத்தி அதிகரித்துள்ளது. இத்துடன், அத் திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகளை அமைக்கக்கூடியதாக இருப்பதினால் பொருள் உற்பத்தியையும் பெருக்குவதற்கு இத்திட்

டம் அடிகோலியுள்ளது எனலாம். இது ஒன்றிற்காக நாம் பெருமிதப்படலாகாது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு கல்லோயா திட்டம் போதாது. பல கல்லோயா திட்டங்கள் வேண்டும். கல்லோயாத் திட்டம் போன்ற அதிகமான பல உபயோக திட்டங்கள் அமைக்கப்பட்டால் ஆறு வழியாக வீணாகக் கடலை நாடும் மழை நீரை எமது தேவைகட்காக உபயோகிக்கலாம், வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் சேதத்தை இல்லாதொழிக்கலாம், உணவுற்பத்திக்கு அத்தியாவசியமான நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கலாம், நெல் உற்பத்தி பன்மடங்கு அதிகரிக்கச் செய்யலாம், தொழிற்சாலைகள் பலவற்றை நாடெங்கும் அமைத்துப் பொருளுற்பத்தியையும் தொழில் வளத்தையும் பெருக்கலாம். இதனால், நம்நாடு பண்டைக் காலத்துப் புலவர்கள் கண்ட பாலும் தேனும் வழிந்தோடும் நாடாக விளங்கும் என்பதால் சிறிதேனும் ஐயமுண்டோ? கல்லோயாத் திட்டத்தை ஆதாரமாகக் கொண்டு **வளவைத் திட்டம்** அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவெய்திய பின்னர் 40,000 ஏக்கர் நிலத்தில் நெற்சாகுபடி செய்யலாமெனவும் 6,000 குதிரை சக்தி மின்சாரம் நீர்வீழ்ச்சியிலிருந்து உற்பத்தி செய்யலாம் எனவும் கூறப்படுகின்றது. இத்திட்டம் முடிவெய்தியபின் இலங்கையின் நெல் உற்பத்தி அதிகரிக்கும். இவ்வாறு, இலங்கையிலிருக்கும் ஆறுகளை உபயோகித்து பல உபயோக திட்டங்களை அமைப்பது நன்மையைப் பயக்கும்.

கல்லோயா திட்டத்தின் நிர்வாகம் கல்லோயாச் சபையினால் நடாத்தப்படுகின்றது. இச்சபை கல்லோயாச் சபைச் சட்டம் என்னும் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. நாலு அங்கத்தவர் கொண்ட கல்லோயாச் சபையின் தலைவரும் இரு அங்கத்தவர்களும் நில, நில அபிவிருத்தி மந்திரியினால் நியமிக்கப்படுவார்கள். நாலாவது அங்கததவர், நிதி மந்திரியினால் நியமிக்கப்படுவார். கல்லோயாச் சபை அங்கத்தவர்கள் 5 வருட காலத்திற்குப் பதவியிலிருக்கலாம். கால எல்லை முடிவுற்ற பின்னர் மீண்டும் அச் சபைக்கு நியமிக்கப்படலாம். கல்லோயாப் பிரதேசத்தையும் அதனைச் சுற்றியிருக்கும் பிரதேசத்தையும் விருத்தியடையச் செய்வதற்காகவும் விவசாய வளர்ச்சிக்காகவும்

தொழிலபிவிருத்திக்காகவும் ஆவன செய்வதற்கு கல்லூயாச் சபைக்கு அதிகாரமுண்டு. கல்லூயாச் சபையின் நிர்வாகம் சீராக இருந்தாற்றான் மிகவும் குறைந்த செலவில் அதிக பலா பலனைப் பெறமுடியும். சில காலத்திற்கு முன்னர், பல்லாயிரம் ரூபா பெறுமதியான இயந்திரங்கள் மழையிலும் வெய்யிலிலும் கிடந்து பழுதடைகின்றன எனத் தினப் பத்திரிகைகள் எடுத்துக் காட்டின. இவ்வாறு வீண் செலவுகள் செய்யாதிருத்தல் அத்தியாவசியமாகும். எவ்வளவிற்கு நிர்வாகம் சீராக நடக்கின்றதோ அவ்வளவிற்கு பலாபலனுமுண்டு.

எனவே, இலங்கையின் விவசாய விருத்திக்கு அத்தியாவசியமான மழை விவசாயிகளுக்கு வேண்டிய காலத்தில் வேண்டிய நேரத்தில் பெய்யாமையினால், செயற்கை ரீதியாக நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி நெல் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல் வேண்டும். இவ் வசதியை அளிப்பதே நீர்ப்பாசன இலாகாவின் நோக்கமாகும். இவ் விலாகாவின் நிர்வாகம் நீர்ப்பாசன இலாகா அதிபரின் கீழ் இருக்கின்றது. இவருக்கு உதவியாக ஒரு பதிலதிபரும் (Deputy Director) உதவி அதிபரும் (Assistant Director) உளர். இவ்விலாகா, மத்திய ஸ்தாபனத்தையும் ஐந்து கிளை ஸ்தாபனங்களை (Auxiliary Branches) யும் கொண்டுள்ளது. இவற்றுள் மத்திய ஸ்தாபனத்தின் கீழ், பிரிவு எஞ்சினியர்கள் (Divisional Engineers) தலைமையின் கீழ் பல பகுதிகள் உள. ஒவ்வொரு பிரிவு எஞ்சினியர்களின் கீழ் பல நீர்ப்பாசன எஞ்சினியர்கள் உளர். இவ்வாறு அமைக்கப்பட்ட இலாகா அரசாங்கம் தீர்மானித்த திட்டங்களைச் செய்து முடிக்கும். இந்த மத்திய ஸ்தாபனத்திற்கு உதவியளிப்பதற்காகவே கிளை ஸ்தாபனங்கள் உள. ஒவ்வொரு கிளை ஸ்தாபனமும் விசேஷ கடமைகளைச் செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளன. இவ்விலாகாவின் விசேஷ கடமைகளுள் ஆராய்ச்சி செய்து, திட்டமிட்டு, படம் வரைந்து, செலவுத் தொகையைக் கணித்தல்; தொழில் நுட்ப பயிற்சி யளித்தல்; பெரிய நீர்ப்பாசன திட்டங்களை அமைத்தல் என்பன முக்கியமானவையாகும். நீர்ப்பாசன இலாகா கடந்த 56 வருடங்களுள் இலங்கையின் நீர்ப்பாசன வசதிகளை அளிப்பதற்காகப் பெரிதும்

உழைத்துள்ளது. இருப்பினும், சுதந்திர இலங்கையின் எதிர் கால சுபீட்சத்திற்காகச் செய்து முடிக்க வேண்டிய திட்டங் கள் பல உள. இவற்றையும் இவ் விலாகா செய்து முடிக்க வேண்டும்.

## நில அபிவிருத்தி இலாகா :

இலங்கை அரசாங்கம் முடிக்குரிய நிலத்தை விவசாயிகளுக் கும் நடுத்தர வர்க்கத்தினருக்கும் கொடுத்து விவசாயத்தை விருத்தி செய்ய வேண்டுமென்ற கொள்கையை ஏற்று இதனை மிகவும் தீவிரமாக நடைமுறைக்குக் கொண்டுவருகின்றது. இலங்கையில் வாழ்வோரில் பெரும் பகுதியினர் விவசாயிகளாக இருப்பதுடன் அவர்களுள் பெரும்பகுதியினர் நிலமற்ற விவசாயிகளாக இருக்கின்றனர். முடிக்குரிய நிலத்தைப் பெறு வதற்குப் போதிய விவசாயிகள் இருப்பினும் தேவைக்கேற்ற அளவு நிலத்தை அரசாங்கம் விவசாயிகளுக்கு அளிக்கமுடியாத நிலையில் இருக்கின்றது. இலங்கையில், நிலப்பிரச்சனை மிகவும் முக்கியமான பிரச்சனையாகும். இப் பிரச்சனையைத் தீர்த்தாற் றான் ஒவ்வொரு ஏக்கர் நிலத்தின் வருமானத்தில் தங்கியிருக் கும் குடும்பங்களின் தொகை குறையும். அவ்வாறு குறையு மிடத்து ஒவ்வொரு குடும்பத்தின் வருமானமும் அதிகரிக்கும். எனவே, முடிக்குரிய நிலத்தை விவசாயிகளுக்குக் கொடுப்ப தால் விவசாயத்தை ஓங்கி வளரச் செய்வதற்கு அடிகோலுவ தோடு விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தி வாழ்க்கைத் தரத்தையும் உயரச் செய்யலாம். ஆதலினால், முடிக்குரிய நிலத்தை விவசாயிகளுக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்கும் கொடுக்கும் கடமையையே நில அபிவிருத்தி இலாகா செய்து வருகின்றது. இவ்வாறு, விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கப் படுவதால் ஜனத்தொகை கூடிய இடங்களிலிருந்து சீவியத்துக் குக் கஷ்டப்படும் மக்களை தற்பொழுது காடாகக் கிடக்கும் இடங்களில் குடியேறச் செய்யலாம்.

இலங்கையின் முழுப் பரப்பளவில் ஏறக்குறைய 3/4 பாகம் காடாக இருக்கின்றது. காடாக இருக்கின்ற பகுதி வரண்ட பிரதேசமாகவும் இருக்கின்றது. ஆதலினால், இப் பிரதேசங்

களை விவசாயிகளுக்குக் கொடுப்பதாயின் நீர்ப்பாசன வசதிகளிருத்தல் அவசியமாகின்றது. மேலும், காடாக இருக்கின்ற பிரதேசத்தில் மலேரியா ஜுரம் மக்களை வாட்டி வதைத்ததால். அப்பிரதேசங்களில் குடியேற விவசாயிகள் விரும்பவில்லை, மலேரியாவை அழிப்பதற்காக டி. டி. ரி. மருந்து அடிக்கப்பட்டதால் மலேரியா ஜுரம் எவ்வளவோ குறைந்துள்ளது. அதனால், வரண்ட பிரதேசத்தில் மக்கள் குடியேறக் கூடியதாக இருக்கின்றது. முன் இந்நோயின் தீவிரத்தினால் குடியேற விரும்பாத விவசாயிகள் தற்பொழுது நிலம் வேண்டும் எனப் போட்டியிடுகின்றார்கள் என்றால் எவ்வளவு தூரத்திற்கு நீர்ப்பாசன வசதியும் மலேரியா ஜுரம் பரப்பும் நுளம்பு கொல்லப்பட்டமையும் பயனளித்துள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டியதில்லை.

முடிக்குரிய நிலம் விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு முன்னர் அரசாங்கம் செய்யவேண்டிய கடமைகளோ பல. நிலம் கொடுக்கப்படும் பகுதி தீர ஆராயப்பட்டு மேடு பள்ளம் எனப் பிரித்தல் வேண்டும். இதன் பின்னர் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு விவசாயிக்கும் பள்ளக் காணியில் ஒரு துண்டும் மேட்டுக் காணியில் ஒரு துண்டும் கொடுக்கப்படும். இவ்வாறு துண்டாடுவது மிகவும் கஷ்டமாகும். இதனைச் சுறு சுறுப்பாகச் செய்வதற்குப் போதிய உத்தியோகஸ்தர்கள் இல்லாமையால் சுணக்கம் ஏற்படுவது சகஜம் இவ்வாறு துண்டாடப்பட்டதும், காடுகள் வெட்டப்படும்; நீர்ப்பாசன வசதிக்காக வாய்க்கால்கள் முதலியன அமைக்கப்படும்; குடியேறுகின்ற விவசாயிகளின் தேவைகளுக்காக வீடுகள், ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம் முதலியவைகளும் அங்கு கட்டப்படும். இதன் பின்னரே விவசாயிகள் அங்கு குடியேறுவார்கள். குடியேறுகின்ற விவசாயிகளுக்கு நிலம், காணிக் கச்சேரி என்ற கச்சேரிகளில் கொடுக்கப்படும். இக் கச்சேரிகளில் காணி வேண்டும் என விண்ணப்பம் செய்தவர்கள் எக் காரணத்திற்காகத் தமக்குக் காணி வேண்டும் எனக் கோருவர். காணி அவசியமாகக் கொடுக்கப்படவேண்டியவர்களுக்கு, காணி கொடுக்கப்படும். 1955-ம் ஆண்டு எல்லாமாக 629 காணிக் கச்சேரி

கள், இலங்கை பூராகவும் நடத்தப்பட்டது. இக் கச்சேரிகளின் மூலம் 31,818 ஏக்கர் நிலம் எல்லாமாகக் கொடுக்கப்பட்டது. காணி எக் காரணத்திற்காகக் கொடுக்கப்பட்டதோ அக்காரணத்திற்காகவே உபயோகிக்க வேண்டும். மேலும், காணி கொடுக்கும்பொழுது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கேற்பக் காணி வாங்குபவர் ஒழுகவேண்டும். அவ்வாறு ஒழுகாதவர்களிடமிருந்து காணியை அரசாங்கம் எடுத்து வேறு விவசாயிகளுக்குக் கொடுக்கும். இதற்காக, அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட நிலத்தை மேற்பார்வை செய்வதற்கென உத்தியோகஸ்தர் உளர். 1955-ம் ஆண்டு 6,051 குடும்பத்தினருக்குக் கொடுக்கப்பட்ட 6,705 ஏக்கர் நிலம் பறிமுதலாயிற்று. இவ்வாறு பறிமுதலாக்கப்பட்ட நிலத்தை நீக்கினால் 1955-ம் ஆண்டு முடிவெய்தும் வரை 2,25,282 குடும்பத்தினருக்கு 3,20,457 ஏக்கர் கிராம அபிவிருத்தி நிலம், நில அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கப்படுவது போலவே, மத்தியதர வர்க்கத்தினருக்கும் நிலம் கொடுக்கப்படுகின்றது. மத்தியதர வர்க்கத்தினருக்கு நிலம் வழங்கப்படும்பொழுது, அவர்கள் தமது மூலதனத்தைக் கொண்டு நில அபிவிருத்தி செய்தல் வேண்டும். இவ்வாறு, 1955-ம் ஆண்டு முடியும் வரை 4,799 பேருக்கு 65,482 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் புள்ளி விபரங்களிலிருந்து, ஒவ்வொரு விவசாயிக்கும் சராசரியாக $1\frac{1}{3}$ ஏக்கர் நிலமும், ஒவ்வொரு மத்தியதர வர்க்கத்தினருக்கு சராசரியாக 12 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக, இலங்கை அரசாங்கம் கடந்த 27 வருடங்களாகக் குடியேற்றத் திட்டங்கள் மூலம் நில அபிவிருத்தியை வளர்க்க முயற்சித்துள்ளது. எனினும், நிலமற்ற விவசாயிகளின் தொகை இன்னும் குறையாததால், முடிக்குரிய நிலத்தை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டத்தை இன்னும் தீவிரமாகச் செய்தால் நன்மை உண்டாகும். அத்துடன் நிலமற்ற விவசாயிகளுக்குக் கூடுதலான நிலம் வழங்குவதால் அவர்களின் வாழ்க்கைத் தரமும் உயரும்.

## அதிக விவசாய உற்பத்தி - (Intensive Agricultural Cultivation)

### விவசாய இலாகாவின் கடமை:

நெல் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு இரு வழிகளுண்டு எனக் கூறினோம். இவ்விரண்டினுள், நிலப்பரப்பை அதிகரிக்கச் செய்தல் ஒன்று; ஒவ்வொரு ஏக்கருக்கும் உற்பத்தியாகும் நெல் அளவை அதிகரித்தல் அடுத்தது. இவ்விரு வழிகளில் இரண்டாவதாகக் குறிப்பிட்ட வழி முக்கியமானது. ஜப்பானில் ஒவ்வொரு ஏக்கருக்கும் சராசரியாக 150 புசல் நெல் விளைகின்றது. ஆனால் இங்கு சராசரியாக 30 புசல் நெல் மட்டுமே விளைகின்றது. ஆதலினால், இலங்கையின் உற்பத்தி இன்னும் 5 மடங்களவிற்கு அதிகரிக்க முடியும். இதனையே விவசாய இலாகா செய்ய முயலுகின்றது.

இலங்கையில் வாழும் விவசாயிகள் இன்னும் பண்டைக் கால முறைகளையே கடைப்பிடித்து வருகின்றனர். உற்பத்தியைப் பெருக்குவதற்கு இம்முறைகளை மாற்றிப் புதிய விஞ்ஞான முறைகளைக் கையாள வேண்டும். விஞ்ஞான முறைகளைக் கடைப்பிடித்தற்கு நிலம் ஆழமாக உழுதல், போதிய பயளை உரம் முதலியவை இடுதல், சிறந்த விதைநெல் உபயோகித்தல், ஜப்பானிய முறை போன்ற புதிய முறையைக் கையாளுதல் போன்ற முறைகளை விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டும். ஆழமாக உழுதால், கீழே உள்ள சத்துள்ள மண்ணை மேலேயும் தரையிலுள்ள சத்தற்ற மண்ணைக் கீழேயும் போகச் செய்யலாம். தற்பொழுது விவசாயிகள் எருதுகளாலேயே உழுகின்றனர். இதனால் ஏறக்குறைய ½ அடி ஆழத்திற்குத் தான் உழலாம். ஆனால் 'டிராக்டர்' ரால் (Tractor) உழுதால் 1 அடி ஆழத்திற்கு உழமுடியும். நெற் பயிரின் வேர் ஏறக்குறைய ½ அடி ஆழத்திற்குச் செல்லுமாதலால் தரைமட்டத்திலிருந்து ½ அடி ஆழ மண்ணின் சத்து முழுவதையும் நெற் பயிர் உறிஞ்சி எடுத்துவிடும். ½ அடி ஆழத்திற்கு உழுவதினால், கீழே உள்ள சத்துள்ள மண்ணை மேலே கொண்டுவர முடியாது. ஆதலினால் 1 அடி ஆழத்திற்கு உழுவதினால் சத்துள்ள மண்ணை மேலும், சத்தற்ற மண்ணைக் கீழும் மாற்றலாம்.

அடுத்ததாக பயளை, உரம் முதலியவற்றை உபயோகித்தல். நெற்பயிர் நிலத்திலுள்ள சத்து முழுவதையும் உறிஞ்சக்கூடிய பயிராகும். எனவே, ஆழ உழுதல் போதாது. அதற்கு ஆதாரமாகப் பயளையும் இடல் வேண்டும். தற்பொழுது விவசாயிகள் எரு முதலியவற்றையே உபயோகிக்கின்றனர். எரு, நல்ல இயற்கைப் பயளையாயினும் அதுமட்டும் போதாது. அதற்கு ஆதாரமாக, செயற்கை உரம் உபயோகிப்பதால் நெற் பயிருக்கு வேண்டிய சத்துக்களைக் கொடுக்கலாம். அடுத்ததாக, சிறந்த விதைநெல் உபயோகித்தல். சாதாரணமான விதைநெல் உபயோகிப்பதிலும் பார்க்க பண்படுத்தப்பட்ட நல்ல விதை நெல் உபயோகித்தால் பயிர் செழித்து வளரும், நெற்கதிர்களின் தொகையும் நெல்லும் அதிகரிக்கும்.

அடுத்ததாக, புதிய விஞ்ஞான முறைகளைக் கையாளுதல். நாம் வழமையாக, நெற் காணியை உழுத பின்னர் விதைக்கும் காலத்தில் விதைநெற்களைத் தூவுகின்றோம். இதனால் சில இடங்கள் அடர்த்தியாகவும் சில இடங்கள் ஐதாகவும் இருக்கும். இவ்வாறிருப்பதால் நெற்பயிர் பண்படுத்த வேண்டிய முறையில் பண்படுத்த முடியாது. இம்முறையை விடுத்து ஜப்பானிய முறையை உபயோகித்தால் நன்மை உண்டு. ஜப்பானிய முறையின் பிரகாரம். வரிவரியாக நாற்று நடப்படும். பின்னர், வரிகளுக்கிடையே இருக்கும் மண்ணை இயந்திரத்தினால் நன்கு கிளறலாம். அத்துடன், களை பிடுங்குவதும் சுலபமாக இருக்கும். நாற்று நடும்பொழுது ஒவ்வொரு இடத்திலும் இரண்டு அல்லது மூன்று நாற்றுகள் ஒருமித்து நடப்படும். இதனால் நெற்பயிர் நெருக்கமின்றி ஓங்கி வளர முடியும். நெற்பயிர் வளரும்பொழுது அதற்கு வேண்டிய உரம் இலகுவாகத் தூவலாம். இதனால் விளைவு அதிகரிக்கும். எனவே, விவசாயிகள் பழைய முறைகளைக் கைவிட்டுப் புதிய முறைகளைக் கையாண்டால், நெல் உற்பத்தி பன்மடங்கு அதிகரிக்கும். இம்முறைகளைக் கையாண்ட இடங்களில் சராசரி உற்பத்தி அதிகரித்துள்ளது. உதாரணமாக கண்டி, பொலனறுவா பகுதிகளில் சராசரி உற்பத்தி ஏக்கருக்கு 53 புசல் விளைந்துள்ளது. ஆனால் யாழ்ப்பாணப் பகுதியில் 23 புசல் மட்டுமே விளைந்துள்ளது. மேலே காட்டிய வழிகளைக் கடைப்பிடித்தால் உற்பத்தி அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

நெல்லுற்பத்தியைப் பெருக்குவதற்காக, ஆராய்ச்சி செய்து, சிறந்த முறைகளை விவசாயிகளுக்கு விளக்குவது விவசாய இலாகாவின் கடமையாகும். விவசாய இலாகாவின் ஒரு பிரதான பிரிவு, ஆராய்ச்சி செய்யும் ஸ்தாபனங்களாகும். இந்த ஸ்தாபனங்கள் பயிற்சிபெற்ற உத்தியோகஸ்தர்களின் தலைமையில் இயங்குகின்றன. பயிற்சி செய்து சிறந்ததெனக் கண்ட முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக்காட்டுவதற்காக விவசாய பாடசாலைகள் (Farm Schools) விவசாயம் செய்யப்படும் பிரதேசங்களில் உண்டு. இவ்விடங்களில் புதிய முறைகளைக் கடைப்பிடித்து பயிற்சி செய்து காட்டப்படுவதுடன் மாணவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படும். மேலும், புதிய முறைகளைப் பரப்புவதற்காக உத்தியோகஸ்தர்கள் விவசாயிகளிடம் சென்று பிரசாரம் செய்து புதிய முறைகளை விவசாயிகளிடையே புகுத்துவார்கள். இவ்விரு கடமைகளையும் விட விவசாய நிலங்களின் மண் ஆராய்ச்சி செய்தல், பயிர்களுக்கு நோய்கள் வராது தடுத்தல் போன்ற கடமைகளையும் இவ்விலாகா செய்யும்.

இதனால் ஒவ்வொரு சாதி மண்ணுக்குமேற்ற பயிர் நடவேண்டுமெனவும் அல்லது மண்ணுக்கு ஏற்ற உரம் என்ன எனவும் ஆராய்ந்து அறிவதினால் ஒவ்வொரு இடத்திற்கேற்ற பயிரை நட்டு அதற்கு வேண்டிய உரத்தை உபயோகிப்பதற்காக விவசாயிகளுக்கு உதவி புரிகின்றது. பயிர் நோய்களினால், உற்பத்தி குறையும். இந்நோய்களை அளிப்பது அவசியம். பயிர் நோய்களை ஆராய்ந்து அவற்றை அழிப்பதற்கு ஏற்ற மருந்துகளை அறிந்து விவசாயிகளிடம் பிரசாரம் செய்தால் உற்பத்தி பெருகுமன்றோ. ஆதலினால், விவசாய இலாகா இத்தகைய கடமைகளைச் செய்கின்றது. இதைவிட, விவசாயத் தொழில் பலதரப்பட்டதாக இருப்பதால் இலங்கையிலிருக்கும் விவசாயத்தை விருத்தி செய்வதற்கு வேண்டிய முறைகளை ஆராய்ந்து பிரசாரம் செய்தல், புதிய விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக ஆராய்ச்சி செய்தல், அவற்றைப் பிரசாரம் செய்து பரப்புதல் போன்றவை இவ்விலாகாவின் கடமைகளாகும். உதாரணமாக, உருளைக்கிழங்கு செடி இலங்கையில் பண்படுத்தப்பட்டு உற்பத்தி செய்யலாம் என்று இவ்விலாகா ஆராய்ச்சி செய்ததுமல்லாமல் ஒவ்வொரு

ஏக்கருக்கும் உற்பத்தியாகும் கிழங்கின் தொகை மேல்நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் தொகைக்குச் சமமாக இருக்கின்றது எனவும் கூறப்படுகின்றது. இவ்வாறு, புதிய விவசாயத் தொழில்களையும் பரப்பலாம்.

விவசாய உற்பத்தி எனக் கூறும்பொழுது உணவுற்பத்தியை மட்டும் குறிக்காது. விவசாயப் பொருள்களை இரு பிரிவாகப் பிரிக்கலாம் — உணவுப் பொருட்கள்; பண வருவாயுடைய பொருட்கள் (Cash Crops). உணவுப் பொருட்கள், உணவிற்காக உபயோகிக்கப்படுவனவற்றைக் குறிக்கும். தற்பொழுது உணவிற்காக உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| உணவுப் பொருள் | 1954 பரப்பள. (1) (ஏக்கர்) | 1954 உற். நிறை (2) அங். (112 lb.) | 1954 – 55 (1) | 1954 – 55 (2) |
|---|---|---|---|---|
| மரவள்ளி | 99,118 | 22,53,008 | 1,04,744 | 24,99,059 |
| வத்தாழை | 19,540 | 3,60,353 | 21,354 | 5,33,681 |
| வெங்காயம் | 5,356 | 1,82,703 | 10,144 | 5,41,103 |
| மிளகாய் | 13 946 | 1,19,995 | 18,148 | 2,29,275 |
| சோளம் | 12,250 | 1,13,319 | 22,966 | 1.91,838 |
| குரக்கன் | 24,979 | 2,04,662 | 82,331 | 5,06,197 |

மக்களின் வாழ்க்கைக்குப் பால் ஒரு முக்கிய உணவாகும். பாலிலுள்ள சிறந்த சத்துள்ள சக்திகள் மனிதனின் உடம்பைப் பலப்படுத்தும். இக்காரணத்தினுற்றான் பால் முக்கிய உணவாக இருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றனர். இலங்கையில் உற்பத்தியாகும் பால் மக்களின் தேவைக்குப் போதுமானதல்ல. இக்காரணத்தினால் மேல் நாடுகளிலிருந்து பெரும் தொகையான செலவில் பால் உணவுப் பொருள்கள் (Milk Foods) இறக்குமதி செய்யப்படுகின்றன. இதன் விபரம் பின்வருமாறு :

| | செலவு செய்த பணம் 1000 ரூபா | முழு இறக்குமதி தொகையில் வீதம் |
|---|---|---|
| 1954 | 28, 063 | 2 |
| 1955 | 35, 173 | 2· 4 |

ஆதலினால், இலங்கையின் பால் உற்பத்தி அதிகரிக்கவேண்டும். இதற்கு அதிக பால் உள்ள மாடுகள் கூடுதலாக வேண்டும், மாட்டு நோய்கள் அழிக்கப்பட வேண்டும். ஆகவேதான், விவசாய இலாகா பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்காக விவசாயிகளுக்கு இவ்விரு துறைகளிலும் உதவி புரிகின்றது. இத்துடன், இலங்கை அரசாங்கமும் பால் பண்ணைகளை அமைத்துப் பால் உற்பத்தியைப் பெருக்குகின்றது. சமீபகாலத்திற்கு முன்னர் பால் சபை (Milk Board) என்ற ஒரு சபையையும் அமைத்துப் பால் விநியோகம் செய்கின்றது. இம்முயற்சிகளைப் பெருக்கிப் பால் உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

உணவுப் பொருட்களை விட, தேயிலை, றப்பர், தென்னை ஆகியவற்றின் உற்பத்தியே இலங்கையின் வருமானத்திற்கு மூல காரணமாக இருக்கின்றது. எனவே, வயதுபோன மரங்கள் அல்லது செடிகளுக்கு இளம் கண்டுகள் அல்லது செடிகள் நடுவது; பயளை இடுதல் போன்றவை அவசியமாகச் செய்யப்படவேண்டும். இவற்றை விருத்தி செய்வதற்காகத் தேயிலை, றப்பர், தென்னை ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சி நிலையங்கள் தேயிலை, றப்பர், தென்னம் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக உழைத்து வருகின்றன.

| | ஏக்கர் 1955 | உற்பத்தி 1955 |
|---|---|---|
| தேயிலை | 5,65,518 | 380,012,637 ரா. |
| றப்பர் | 6,60,985 | 93,830 தொன் |
| தென்னை | 10,70,942 | 2,582,000,000 தேங்காய்கள். |

இம்மூன்று பொருள்களைவிட கொக்கோ, 'சிற்ரொனெல்லா' (Citronella) புகையிலை, பருத்தி முதலியனவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றுள், பருத்தி பிரதானமான பண வருவாயுடையபொருளாகும். இதனைக் கூடுதலான அளவிற்கு உற்பத்தி செய்யக் கூடியதாயிருந்தும் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு உற்பத்தி செய்யப்படவில்லை. இவ்வாறு, விவசாய இலாகா விவசாயத்தை விருத்தி செய்யத்தீவிரமாக உழைக்க வேண்டும்.

[பண வருவாயுடைய பொருள்களின் விபரத்தை "இலங்கையின் பொருளாதாரத்"தில் விரிவாக ஆராயப்படும்.]

# 4. மனித சமுதாயத்தின் தேவைகள்

## (ii) சுகாதாரம், கல்வி, சமூக சேவைகள்.

மனித சமுதாயத்தின் தேவைகள் பல. அவற்றுள் உணவு அத்தியாவசியமானது. அதனை உற்பத்தி செய்வதற்காக இலங்கை அரசாங்கம் கையாளும் முறைகளைக் கடந்த அத்தியாயத்தில் அவதானித்தோம். இதனை அடுத்து சுகாதாரம், கல்வி, சமூக சேவைகள் முதலியவற்றை மக்களுக்கு அளிப்பதற்காக இலங்கை அரசாங்கம் கையாளும் முறைகளைக் கவனிப்போம்.

### சுகாதாரம்:

ஒரு நாடு நல்ல நாடாக விளங்குவதற்குப் பசியும் பிணியும் இருத்தலாகாது என்றார் வள்ளுவனார். எவ்வாறு, பசியைத் தீர்ப்பது அத்தியாவசியமோ அவ்வாறு பிணியையும் தீர்ப்பது அத்தியாவசியமாகும். பிணியைப் போக்கி மக்களை ஆரோக்கியமானவர்களாக்குவதே சுகாதார இலாகாவின் நோக்கமாகும். இந்நோக்கத்தை அடைவதற்காக இரு வழிகளைக் கடைப்பிடிக்கின்றது. (1) நோயாளருக்கு ஏற்ற சிகிச்சை செய்தல். (2) நோய்கள் பரவாது தடுத்தல்.

சிகிச்சை செய்வதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாண ஆஸ்பத்திரிகள் (Provincial Hospitals) உண்டு. இந்த ஆஸ்பத்திரிகளின் கீழ் வட்டார ஆஸ்பத்திரிகள் (District Hos-pitals) உள. இவற்றை விட டிஸ்பென்சறிகள் எங்கும் காணப்படுகின்றன. சிகிச்சை இரு தரப்பட்டது: கடுமையான நோயாளர்கள் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பெறுதல்; சாதாரண நோயாளர்கள் டாக்டர்மாரால் அல்லது தகுதிவாய்ந்த 'அப்போதிக்கரி'மாரால் பரிசோதிக்கப்பட்டு மருந்து கொடுத்தல் ஆகியனவாகும். வட்டார ஆஸ்பத்திரிகள்

சாதாரணமான டாக்டர்களின் மேற்பார்வையிலிருக்கும். இந்த ஆஸ்பத்திரிகளிலே, தகுதியான சிகிச்சை பெற முடியாதவர்கள் மாகாண ஆஸ்பத்திரிக்கு 'அம்பியூலன்ஸ்' வண்டியில் கொண்டு செல்லப்படுவார்கள். மாகாண ஆஸ்பத்திரியிலே விசேஷ சிகிச்சைகளுக்கென பயிற்சிபெற்ற டாக்டர்கள் இருப்பார்கள். ஒவ்வொரு வட்டார எல்லைக்குள்ளிருப்பவர்கள் வட்டார ஆஸ் பத்திரிகளிலும் விசேஷ கவனம் எடுக்கப்பட வேண்டியவர்கள் மாகாண ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை செய்யப்படுவார்கள். இதற்காகவே, மாகாண ஆஸ்பத்திரிகளுக்கும் வட்டார ஆஸ் பத்திரிகளுக்குமிடையே 'அம்பியூலன்ஸ்' (Ambulance) சேவை நடைபெறுகின்றது. மாகாண ஆஸ்பத்திரிகளிலேயே அதற்குரிய நிபுணர்களைக் கொண்டு விசேஷ சிகிஷ்சை செய் யப்படுவதால் அங்கு ரண சிகிஷ்சை செய்வதற்கும், X-றே படம் பிடிப்பதற்கும், இரத்தம் முதலியவை பரிசோதிப்பதற் கும், வசதிகள் உண்டு. மேலும் இரத்த வங்கி (Blood Bank) காது, மூக்கு, தொண்டை சம்பந்தமான வியாதிகளுக்கும் கண் வியாதிகள் பற்களில் ஏற்படும் நோய்கள் பகுதிகளில் விசேஷ பட்டம் பெற்ற டாக்டர்மாரும், ரண சிகிஷ்சை செய்பவர்களும் உளர். இவ்வாறமைக்கப்பட்ட ஆஸ்பத்திரிகள் மூலம் சிகிச்சை செய்யப்படும். மேலும், ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் பிரசவ சாலைகளும் உள. இச் சாலைகளில் பிரசவம் செய்வதற்கு வசதிகள் இருப்பதுடன், கர்ப்ப ஸ்திரீகளைக் காலத்திற்குக் காலம் பரிசோதிப்பதற்கு 'கிளினிக்' (Ciinic) களும் உள. ரண சிகிஷ்சை செய்யப்பட வேண்டிய பிரசவப் பெண்கள் மாகாண ஆஸ்பத்திரிகளுக்கு 'அம்பியூலன்ஸ்' வண்டியில் கொண்டு செல்லப்படுவார்கள். இச் சேவையை விட சாதாரண மான நோயாளிகள் ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் டிஸ்பென் சறிகளிலுமிருந்தும் மருந்துகள் பெற்றுச் செல்லலாம். ஆஸ் பத்திரிகளில் டாக்டர்மார் சாதாரணமான நோயாளிகளைப் பரி சோதித்து மருந்து கொடுப்பார்கள். ஆனல் டிஸ்பென்சறிகளில் அப்போதிக்கறிமார் பரிசோதனை செய்து மருந்து கொடுப்பார் கள். இவற்றை விட கிராம ஆஸ்பத்திரிகளும் பிரசவ விடுதி களும் உள. இவ்வாறு, நோயாளிகளுக்கு சிகிச்சை செய்வ தற்கு வசதிகள் அளிக்கப்படுகின்றன.

இலங்கையில் 1955-ம் ஆண்டு வரை 354 ஆஸ்பத்திரிகளில் 19,478 கட்டில்கள் இருந்தன. இருப்பினும், இன்றைய தேவைக்கு இவை போதியனவல்ல. மேலும் ஆஸ்பத்திரிகளில் போதிய கட்டிட வசதிகளும் இல்லை. இலங்கையின் தேவைக்கேற்ற விசேஷ தேர்ச்சி பெற்ற வைத்திய நிபுணர்களும், டாக்டர்களும், தேர்ச்சிபெற்ற தாதிமாரும் (Nurses) போதாது. எனவே, இக்குறைகளைத் தீர்க்க வழி தேடுவது அவசியமாகும்.

அடுத்தபடியாக, நோய்வராது தடுக்கும் சேவையும் முக்கியமானது. சில வருடங்களுக்கு முன் இலங்கையில் மலேரியா ஜுரம் மிகவும் தீவிரமாக இருந்தது. இந்நோயால் பலர் இறந்துமிருக்கின்றனர். ஆனால், டி. டி. ரி. மருந்து அடிக்கப்பட்டதன் காரணமாக மலேரியா ஜுரமுடையவர்களின் தொகை எவ்வளவோ குறைந்திருக்கின்றது. 1940-ம் ஆண்டு ஒவ்வொரு 1000 பேருக்கும் 527 பேருக்கு இந்நோய் இருந்தது. இத்தொகை 1946-ல் 412 ஆகவும் 1947-ல் 196 ஆகவும் குறைந்தது. டி. டி. ரி. ஒவ்வொரு வீட்டிலும் அடிக்கப்பட்டமையால் 1955-ல் இத்தொகை 0·85 ஆகக் குறைந்து விட்டதென்றால் மலேரியாவிற்கு எதிராக நடாத்தப்பட்ட போராட்டம் போற்றத்தக்க வெற்றியைக் கொடுத்துள்ளது எனக் கூறவேண்டும். இப்பொழுது காசநோய் (T.B) எமது முதலாம் எதிரியாக இருக்கின்றது. காசநோயினால் வருந்துவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றது. காசநோயினால் வருந்துவோரின் தொகை சரியான முறையில் கணக்கிடப்படவில்லை. Dr. பார்லோவின் அறிக்கையின்படி இப்பொழுது இந்நோய் பரவும் ரீதியின்படி கணக்கிட்டால் இன்னும் சில வருடங்களில் இலங்கையே ஒரு காச ஆஸ்பத்திரியாக மாறிவிடும் எனக் கூறினாலும் மிகையாகாது. ஆகவே, இந்நோயை வெகு விரைவாக அழிப்பதற்கு ஏற்ற வழிவகைகள் எடுக்கப்படல் வேண்டும். அத்துடன் இந்நோயுடையவர்களின் தேகநிலை திருந்தும் பொருட்டு நல்ல சத்துள்ள உணவு, சுகாதாரமான வீட்டு வசதி முதலியன இருத்தல் வேண்டும். காசநோயாளருக்கு விசேட சிகிச்சை செய்வதற்கென ஏழு கசநோய் ஆஸ்பத்திரிகள் உள.

மேலும், பொதுமக்களிடையே காச நோயைக் கண்டுபிடிப்பதற்காக பி. சி. ஜி. (B. C. G.) பரிசோதனையும் எக்ஸ்ரே (X-Ray) பரிசோதனையும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் (W. H. O.) உதவியோடு நடாத்தப்படுகின்றது. இந்நோயை ஒழிப்பதற்காக ஏறக்குறைய 1·1 கோடி ரூபாய் செலவிடப்படுகின்றது. இப்பணம் தற்போதைய தேவைக்குப் போதுமானதல்ல. காச நோயாளர்களுக்குச் சிகிச்சை செய்வதுடன் அவர்களின் குடும்பங்களுக்குப் பணஉதவியும் செய்யப்படுகின்றது.

காசநோயை விட குஷ்டரோகம், பிலேரியாசிஸ் (Filariasis) மேக ரோகங்கள் (V. D.) முதலிய நோய்கள் பரவுவதைத் தடுத்து ஒழிக்கவேண்டும். 1955-ம் ஆண்டு 4,052 பேர் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டோர் சிகிச்சை பெற்றனர். இந்நோயாளருக்காக 3 ஆஸ்பத்திரிகள் உள. ஹென்தல எனும் இடத்தில் சைக்கியாற்றிக் கிளினிக் (Psychiatric Clinic) அமைக்கப்பட்டமையால் குஷ்ட ரோகத்தினரின் மன நிலையை ஆராய்ந்து பரிகாரம் தேடுவதற்கு உதவியாக இருக்கின்றது. இருப்பினும், இந்நோயுடையவரின் தொகை கூடிக்கொண்டே போவதால் நோயாளரைத் தேடி சிகிச்சை செய்வதற்கு வசதிகளை அளிக்க வேண்டும்.

பிலேரியாசிஸ், (யானைக் கால்) நோய் மன்சோனியோய்ட் நுளம்பினால் ஏற்படுவது. இவ்வியாதியைத் தடுப்பதற்காக கிராமங்களிலுள்ள குளங்களிலும் தண்ணீர் பாயும் இடங்களிலும் பிஸ்டியா எனப்படும் கிருமியை இல்லாது ஒழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இது மிகவும் சுலபமானதாகும். ஆனால், சிலாபம் தொடக்கம் மாத்தறை வரை கடற்கரையோரங்களிலுள்ள பன்கிரோப்டின் என அழைக்கப்படும் பிலேரியாசிஸ் நோயை அழிப்பது மிகவும் கஷ்டமாகும். இதற்கு அதிக பணமும் பொதுமக்களின் ஒத்துழைப்பும் அத்தியாவசியமாகும். 1956 - 57 வரவு செலவுத் திட்டத்திலே இந்நோயை ஒழிப்பதற்காக விசேஷமாகப் பணம் ஒதுக்கப்பட்டது.

இலங்கையில் மன நோயாளருக்குச் சிகிச்சை செய்வதற்காக இரண்டு ஆஸ்பத்திரிகள் உள. 1955-ம் ஆண்டில் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றவர்கள் 4,596. இருந்தாலும் இந்நோயாளருக்கு அளிக்கப்படும் வசதிகள் போதாது. மேலும், இலங்கையில் ஏறக்குறைய 10,000 சித்த சுவாதீனமற்றவர்கள் இருக்கின்றனர். எனவே, அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் போதிய சிகிச்சை பெறாதிருக்கின்றனர். சில காலத்திற்கு முன்னர், அங்கொடை ஆஸ்பத்திரியிலிருக்கும் மன நோயாளர்களுக்குச் சரியான முறையில் சிகிச்சை செய்யப்படுவதில்லை யென்றும், அவர்களுக்குப் போதிய வசதிகளில்லை யெனவும் பத்திரிகையில் எடுத்துக் கூறப்பட்டது. இந்த சுவாதீனமற்றவர்கள் மீண்டும் சமூகத்தினராக வாழ்ந்து சமூகத்தின் முன்னேற்றத்திற்கு உழைப்பதற்காக, அவர்களுக்குச் செய்யவேண்டிய உதவிகள் புரிவது அவசியமன்றோ.

மேக ரோகங்களால் அவஸ்தைப்படுவோரின் தொகை மேலைத் தேசங்களிலும் பார்க்க இலங்கையில் குறைவாகவே இருக்கின்றது. 1954-ல் – 4,514 பேரும்; 1955-ல் – 2,822 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களை விட இன்னும் பலர் தனிப்பட்ட வைத்தியசாலைகளை நடாத்தும் டாக்டர்மாரிடம் சிகிச்சை பெறுவதும் வழக்கம். மேக ரோகங்களுள்ளோர் சமூகத்தினரிடையே இக்கொடிய நோயைப் பரப்பக் கூடும். இந்நோயை அழித்தாற்றான் சமூகத்தினர் சுகாதார வாழ்வை நடாத்தலாம். எனவே, இலங்கையிலுள்ளோர் அனைவரையும் பரிசீலனை செய்து, இந்நோயுடையோருக்குச் செய்ய வேண்டிய சிகிச்சை செய்வது அவசியமாகும். இத்துடன் இந்நோய் பரவுவதற்குக் காரணமாயிருப்போருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் பிரதான கடமையாகும்.

இலங்கையின் சுகாதாரத்தை வளர்ப்பதற்காக அரசாங்கம் வருடா வருடம் பெரும் தொகையான பணத்தைச் செலவு செய்கின்றது .1945 - 46ல் ரூ 2,86,63,401 செலவு செய்யப்பட்டது; 1954 - 55ல் 9,09,52,634 ரூபா செலவு செய்யப்பட்டது.

எனவே ஏறக்குறைய இந்தப் பத்துவருட காலத்திற்குள் சுகாதாரத்திற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை மூன்று மடங்கிற்கு மேலதிகமாக அதிகரித்துள்ளது. இருப்பினும், சுகாதார சேவை இன்னும் திருந்துவதற்குப் போதிய இடமுண்டு என்பதை மறுக்கமுடியாது.

சுகாதாரத்தை மேலும் சீராக்குவதற்காக கிராமங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் வருடாவருடம் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது. பள்ளிக்கூட மாணவர்களைச் சோதனை செய்து அவர்களுக்கிருக்கும் நோய்களைத் தீர்ப்பதால் சுகாதார வாழ்க்கையை நிறுவ முடியும். எனவே, இக்கடமையை அரசாங்கம் தவறாது செய்து வருகின்றது. 1955-ம் வருடம், 4,022 பள்ளிக்கூடங்கள் பரிசோதிக்கப்பட்டன. இப்பள்ளிக்கூடங்களில் பரிசோதிக்கப்பட்ட மாணவர்கள் தொகை 1,30,636. இவர்களுள் 67·8 வீதமானோர் குறைபாடுடைய மாணவர்களாக இருந்தனர். அநேகமாக சத்துள்ள உணவுக் குறைபாடு (Malnutrition) கொழுக்கிப் புழுநோய் (Hookworm) நல்லிரத்தமின்மை (Anemea) பல்நோய்கள் (Tooth diseases) முதலியன கூடுதலாகக் காணப்பட்டன. இந்நிலைமை இன்னும் இருந்துகொண்டே வருகின்றது. இவற்றுள் சத்துள்ள உணவு அருந்தாமையைத் தீர்க்க மக்களின் வருமானம் அதிகரிக்கவேண்டும். சுகாதார வாழ்விற்கு சத்துள்ள நல்ல உணவு அருந்துதல் அவசியமானபடியால் வருமானத்தைப் பெருக்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது அவசியமாகும். இப்பிரச்சனையைத் தீர்க்காவிட்டால், சுகாதார சேவைக்காக இன்னும் 5 மடங்கு பணம் செலவழித்தாலும் போதாது. இருப்பினும் சுகாதார சேவையினால் பலனுண்டு. உதாரணமாக சிறு பிள்ளைகள் சாகும் தொகை (Infant Mortality) எவ்வளவோ குறைந்துள்ளது. அவ்வாறே பிரசவ இறப்புத் தொகையும் (Maternal Death) குறைந்துள்ளது. இதன் விபரம் பின்வருமாறு :

| | சிறுபிள்ளைகள் சாகும் தொகை 1000 ற்கு | பிரசவ இறப்பு தொகை 1000 ற்கு |
|---|---|---|
| 1935 | 260 | 26 |
| 1938 | 160 | 20 |
| 1946 | 140 | 16 |
| 1950 | 85 | 6 |
| 1955 | 70 | 4 |

இவ்விபரங்களிலிருந்து, இலங்கை அரசாங்கத்தினால் அளிக்கப்படும் சுகாதார சேவை பயனளித்தது எனலாம். இச் சேவையைப் பெருக்கினால் பாமர மக்கள் இன்னும் கூடிய நன்மையடைவார்கள்.

இலங்கையில் வாழ்கின்றவர்களில் பெரும்பாலானோர் ஆயுள்வேத வைத்தியத்தையே விரும்புகின்றனர். ஆயுள்வேத வைத்திய முறையைப் பண்டைக்காலம் முதல் மக்கள் உபயோகித்து வந்தமையால், மேல்நாட்டு முறைகள் இருப்பினும், ஆயுள்வேத வைத்தியத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள். உண்மையில், ஆயுள்வேத மருந்துகள் மிகவும் சிறந்தவை என ஆராய்ச்சி செய்தவர்கள் கூறுகின்றார்கள். ஆனால், இம்மருந்துகளை உபயோகிக்கும் சில ஆயுள்வேத வைத்தியர்கள் போதிய பயிற்சியற்றவர்களாக இருப்பதினால், இவர்கள் வியாதிகளுக்கேற்ற மருந்துகளைக் கொடுக்கத் தகுதியுடையவர்களோ என சந்தேகிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது. எனவே, ஆயுள்வேத வைத்தியர்களுக்குப் பயிற்சியளித்தல் அவசியமாகின்றது. மேலும், ஆயுள்வேத மருந்துகளை ஆராய்ந்து ஒவ்வொரு வியாதிக்கேற்ற மருந்துகள் எவை எனப் பரீட்சை செய்தலும் அவசியம். இதனால், ஆராய்ச்சியாளரின் அனுபவத்தை வைத்தியர்கள் பெறக்கூடியதாயுமிருக்கும். இக் கடமையை அரசாங்கம் ஏற்று நடாத்த வேண்டும். அடுத்ததாக, ஆயுள்வேத மருந்துகளைச் சரியான முறைப்படி செய்தாற்றான், அவற்றால் பயனுண்டு. இதற்கு, மருந்துகள் செய்வதற்கென ஒரு ஸ்தா

பனத்தையும் அமைத்தல் அவசியமாகும். தற்பொழுது, ஆயுள் வேத வைத்தியர்களுக்குப் பயிற்சியளித்தாலும், ஏனைய கடமைகளையும் செய்தாற்ருன் ஆயுள்வேத முறையில் நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்குத் தகுந்த சேவை புரியலாம். இதற்கு, ஆவனவற்றை அரசாங்கம் உடன் செய்யவேண்டும்.

## சுகாதாரப் பயிற்சியும் ஆராய்ச்சியும் :

சுகாதார சேவையை அரசாங்கம் செய்வதுடன் இச் சேவைக்கு அவசியமான வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் தாதிமார் முதலானோர் இருப்பது அவசியமாகும். எவ்வளவு தொகையான ஆஸ்பத்திரிகள் இருந்தபோதிலும் மேற்கூறிய சேவையாளர் இல்லாவிடின் பயனற்றதாகும். இக்காரணத்தினுல் வைத்திய கல்லூரிகள், தாதிமார் பயிற்சி பெறும் ஸ்தாபனங்கள் முதலியன உள. இருப்பினும் இலங்கையின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய சேவையாளர்கள் குறைவு. உதாரணமாக வருடா வருடம் பயிற்சி பெற்றுப் பட்டம் பெறுகின்ற டாக்டர்மாரின் தொகை இன்னும் நான்கு மடங்காய் அதிகரிப்பின் இலங்கையின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடும். தற்பொழுது இருக்கும் நிலைமையை நிவர்த்தி செய்ய வருடா வருடம் பயிற்சி அளிக்கப்படும் டாக்டர்மாரின் தொகையைக் கூட்டுவதற்காக இன்னொரு வைத்தியக் கல்லூரி அமைப்பது அத்தியாவசியமெனக் கருதப்படுகின்றது.

இலங்கைப் பல்கலைக் கழகம் ஆரம்பிப்பதற்கு முன்பாக வைத்தியக் கல்லூரி தனிப்பட்ட ஒரு கல்லூரியாக இயங்கியது. அக்காலத்தில் எல். எம். எஸ். (L. M. S.) என்ற பட்டம் வழங்கப்பட்டது. பல்கலைக் கழகம் ஆரம்பமான பின்னர் இக் கல்லூரி, சர்வகலாசாலையின் ஓர் அங்கமாகி பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு எம். பி. பி. எஸ். (M. B. B. S.) பட்டம் வழங்கப்படுகின்றது. இவ்வாறு பயிற்சி பெறுகின்ற மாணவர்கள் கொழும்பில் இருக்கின்ற ஆஸ்பத்திரிகளிலுள்ள நிபுணர்களின் மேற்பார்வையிற் தகுந்த பயிற்சியைப் பெறுகினறனர்.

நோயாளிகளைப் பேணுவதற்குத் தாதிமார் அவசியமாகும். இச் சேவையைச் செய்வதற்குப் போதிய பெண்கள் முன்வராமையால் இச் சேவையின் தரமும் சேவையாளரின் தொகையும் ஒருகாலம் குறைவாகவும் இருந்தது. ஆனால் இப்பொழுதோ நிலைமை மாறிக்கொண்டே வருகின்றது. தாதிமாருக்குப் பயிற்சி அளிப்பதற்கென பயிற்சிச்சாலை கொழும்பிலிருக்கின்றது. இது போதாதென்ற காரணத்தினால் கண்டி, காலி, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் பயிற்சிச்சாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இவ்வாறு தாதிமாருடைய தராதரத்தை உயர்த்துவதினால் நோயாளர்களுக்குத் தகுந்த சேவை புரியக்கூடியதாக இருக்கும். மேலும் காசரோகம் பல்நோய்கள் முதலிய துறைகளிலும் தாதிமார்களுக்கு விசேஷ பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதுவரை காலமும் கத்தோலிக்க சன்னியாசினி (Nuns) ஆஸ்பத்திரிகளில் நோயாளரைப் பேணுவதற்காக அளவற்ற சேவையைச் செய்து வந்திருக்கின்றார்கள். நோயாளரைப் பராமரிக்கும்போது அவர்கள் காட்டுகின்ற கண்ணியம் வாய்ந்த தன்மையை நாம் போற்றவேண்டும். தற்பொழுது இவர்களுடைய சேவை அவசியமற்றதெனவும் அச் சேவையைப் பயிற்சி பெற்ற இலங்கைத் தாதிமார் செய்யலாமெனவும் ஒரு சிலர் கருதுகின்றனர். அவ்வாறு நடப்பின் வருங்கால ஆஸ்பத்திரி ஒழுங்கு முறைகள் சென்ற காலத்தைப் போல இருக்குமோ வென ஐயமுற இடமுண்டு.

கொழும்பு மாநகரத்தில் ஆயுள்வேதக் கல்லூரி ஒன்று இருக்கின்றது. இக்கல்லூரியில் ஆயுள்வேத வைத்திய முறைகளைக் கல்லூரி மாணவர்கள் கற்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. இற்றைவரை பரம்பரை வைத்தியர் பட்டமெதுவுமில்லாத பொழுதிலும் வைத்தியஞ் செய்ய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றிருந்தனர். ஆனால் வருங்காலத்தில் ஆயுள்வேதக் கல்லூரிகளிற் பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே வைத்தியஞ் செய்ய அனுமதிக்கப்படுவர். இவ்வாறாக ஆயுள்வேத வைத்திய முறையைக் கட்டுப்பாடாக நடாத்துவதற்கு அரசாங்கம் உதவி புரிகின்றது.

பயிற்சி பெற்ற வைத்தியர் நோயாளர்களின் சிகிச்சைக்காக இருந்த பொழுதிலும் வைத்திய சம்பந்தமான சகல துறைகளிலும் ஆராய்ச்சி இருந்தல் அவசியமாகும். விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த இக்காலத்தில் புதிய புதிய மருந்துகள் தினமும் கண்டுபிடிக்கப்பட்ட வண்ணமே இருக்கின்றன. இதற்கு ஒவ்வொரு நோயின் தன்மையையும் நோய்க்குக் காரணமான கிருமியையும் ஆராய்ந்தாற்றான் நோய்க்குத் தகுந்த மருந்துகளைக் கண்டு பிடிக்கலாம். உதாரணமாக சில காலத்திற்கு முன்பு மலாய சளிச்சுரம் (Malayan Flu.) என்ற நோய் உலகெங்கும் பரவியது. இந்நோய்க்குக் காரணம் என்ன என ஆராய்ச்சி நடாத்தினர். ஆனால் அதை எதிர்த்துப் போராடக்கூடிய மருந்து இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆகவே, நோய்களைத் தீர்க்கும் மருந்துகளைக் கண்டு பிடிக்க ஆராய்ச்சியில் ஈடுபடுவது அத்தியாவசியமாகும். இக் கடமையை உலகிலுள்ள வைத்திய நிபுணர்களும் ஆராய்ச்சியாளர்களும் செய்து கொண்டே வருகின்றனர். இருப்பினும் இத்தகைய ஆராய்ச்சியை இலங்கையி லுள்ளோரும் செய்யத்தான் வேண்டும். ஏனெனில் இலங்கையில் இருக்கின்ற நோய்களிற் பல ஆராய்ச்சி செய்யும் ஏனைய நாடுகளில் இல்லாதிருக்கக்கூடும். அத்துடன் இலங்கையும் உலக வைத்திய ஆராய்ச்சியில் தனது பங்கைச் செய்யக் கூடியதாக இருக்குமல்லவா ?

## கல்வி :

கல்வி, மக்களின் இருளைப்போக்க வல்லது. கல்வி இல்லையேல் உலக அறிவு இல்லை. இலங்கையில் வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் கல்வி ஊட்டப்பட்டால், அவர்கள் தமது வாழ்க்கையைச் சிறப்பாக நடாத்துவதற்கு ஏதுவாக இருப்பதுடன் சிறந்த பிரஜைகளாக வாழ்ந்து ஜனநாயக ஆட்சி முறையைக் கட்டி வளர்க்கவும் ஏதுவாக இருக்கும். ஆகவே, கல்வியை மக்களுக்கு ஊட்டுவதற்காகவும் அதனை வளர்ப்பதற்காகவும் ஏற்ற நடவடிக்கைகளைக் கல்வி இலாகா எடுக்கின்றது. இலங்கையில் கல்வி கற்றவர்களின் தொகை குறைவாக இருப்பினும் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களின் தொகை மற்றைய

தென் - கிழக்கு ஆசிய நாடுகளிலும் பார்க்கக் கூடுதலாக இருக்கின்றது. 1953-ம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பின் பிரகாரம் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களின் வீதம் 100-க்கு 65·3 ஆக இருந்தது. இருப்பினும், எழுத வாசிக்கத் தெரிந்தால் கல்வியறிவு உண்டு என்ற அர்த்தமில்லை. ஆதலினால் கல்வியைக் கூடுதலாக வளர்த்து இலங்கையில் வாழ்கின்றவர்களிற் பெரும்பாலானோர் கல்வியறிவுடையவர்களாகத் திகழச் செய்தால் நாடு முன்னேற்றமடையும். எனவே, இலங்கையில் தற்பொழுது அளிக்கப்படும் கல்வி முறையையும் அதனைத் திருத்துவதற்கு ஏற்ற வழிவகைகளையும் அறிதல் அத்தியாவசியமாகும்.

கல்வி பயிற்றப்படும் முறையையும் அது எவ்வாறு அமைக்கப்படவேண்டும் என்பதையும் சிபார்சு செய்வதற்காக 1941-ம் ஆண்டு ஒரு விசாரணைச் சபை நியமிக்கப்பட்டது. இச்சபையின் சிபார்சு 1943-ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டது. அவையாவன: பாலர் கீழ்ப்பிரிவு முதல் சர்வகலாசாலைவரை இலவசக்கல்வி ஊட்டல்; ஆரம்ப வகுப்புகளில் தாய்ப்பாஷை மூலம் கல்வி ஊட்டல்; பிள்ளைகளின் தராதரத்திற்கு ஏற்ற கல்வியூட்டல்; ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்குப் பின்னர் பள்ளிக்கூடங்களை மூன்று பிரிவுகளாகத் தரப்படுத்தி அமைத்தல். இச் சிபார்சுகளில் கடைசியாகக் கூறப்பட்டதின் விபரம் பின்வருமாறு:

(i) சர்வகலாசாலை, தொழிற் கல்லூரிகளுக்குச் செல்வதற்காக சிரேஷ்ட கல்லூரிகள் (Secondary Colleges) மூலம் கல்வி கற்பித்தல்;

(ii) தொழில் நுட்ப பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதற்காகச் சிரேஷ்ட தராதரப் பள்ளிக்கூடங்கள் (Senior Schools) மூலம் கல்வி கற்பித்தல்;

(iii) விவசாயம் தொழில் முதலியவற்றிற்குச் செல்வதற்காகப் பயிற்சிப் பாடசாலைகள் மூலம் கல்வி கற்பித்தல்.

இவ்வாறு சிபார்சு செய்யப்பட்டாலும் இலவசக் கல்வி, ஆரம்ப பள்ளிக்கூடங்களில் தாய்மொழி மூலம் கல்வி கற்பித்தல் ஆகியவற்றையே அரசாங்கம் ஏற்றது. இதன் காரணமாக,

1943-ம் ஆண்டு இலவசக் கல்வித்திட்டம் அமுல் நடாத்தப்பட்ட பின்னர், இலவசக் கல்வி ஒரு சில பள்ளிக்கூடங்களைத் தவிர ஏனைய பள்ளிக்கூடங்களில் அளிக்கப்பட்டது. ஆதலினுல் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் தொகையும் அதிகரிக்கத் தொடங்கியது. மேலும், இலவச மத்தியான போசனம் பள்ளிக்கூட மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டதால், பள்ளிக்கூடங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் தொகை கூடுவதற்குக் காரணமாக இருந்தது. 1943-ம் ஆண்டு இலவசக் கல்வி ஊட்டுவதாகத் தீர்மானிக்குமுன் தமிழ் - சிங்களப் பள்ளிக்கூடங்களிலேயே இலவசக் கல்வி ஊட்டப்பட்டது. இதன் பின்னர் அநேகமாக எல்லாப் பாடசாலைகளும் இலவசக் கல்வித் திட்டத்திற் சேர்ந்து இலவசக் கல்வி ஊட்டி வருகின்றன. தற்பொழுது அரசாங்க உதவி பெறும் பள்ளிக்கூடங்கள் யாவும் இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் கல்வியூட்டுகின்றன. ஆனுல் ஒரு சில பள்ளிக்கூடங்களே சம்பளம் வாங்கிக் கல்வி ஊட்டுகின்றன. இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் உள்ள பள்ளிக்கூடங்கள் விளையாட்டு முதலிய வசதிகளை அளிப்பதற்காக வசதிச் சம்பளம் வாங்குகின்றன. வசதிச் சம்பளம் வாங்கும் முறை 1950-ம் ஆண்டு முதல் இன்று வரையும் அமுலிலிருந்து வருகின்றது. இம்முறை அழிக்கப்பட வேண்டுமெனப் பலர் வற்புறுத்துகின்றனர். அரசாங்கம் எவ்வித தீர்மானத்திற்கும் இன்னும் வரவில்லை.

இதன் பின்னர் 1950-ம் ஆண்டு அரசாங்கத்தின் கல்வி சம்பந்தமான கொள்கை அடங்கிய அரசாங்க வெள்ளைப் பத்திரம் (Govt. White Paper) வெளியிடப்பட்ட இதன் பிரகாரம், பள்ளிக்கூடங்கள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டன. அவையாவன :

| | | | |
|---|---|---|---|
| (i) | ஆரம்ப | பாடசாலைகள் | (5—11 வயது வரை) |
| (ii) | கனிஷ்ட தராதரப் | ,, | (11+ — 14+ ,, ) |
| (iii) | சிரேஷ்ட தராதரப் | ,, | (14+ ற்கு மேல் ) |

மேலும், கனிஷ்ட தராதரப் பத்திர வகுப்பு முடிவில் தகுதிகாண் பரீட்சை நடாத்தப்படும் என்றும், அதில் சித்தி எய்தியவர்கள் சிரேஷ்ட தராதர வகுப்புகளுக்குச் செல்லலாம் எனவும் ஆனால் சித்தி எய்தாதவர்கள் மற்றைய அரசாங்க இலாகாக்களால் நடாத்தப்படும் தொழிற் பயிற்சிப் பள்ளிக் கூடங்களில் (Vocational Schools) சேர்ந்து கல்வியைத் தொடர்ந்து பெறலாம் எனவும்; கண்டி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பல தொழிற் கல்லூரிகள் (Polytechnics) அமைக்கப்பட வேண்டுமெனவும், கனிஷ்ட தராதர வகுப்புவரை படிப்படியாகத் தாய்மொழி மூலம் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமெனவும், 3-ம் வகுப்பிற்கு மேல் ஆங்கிலம் ஒரு கட்டாய பாடமாக இருத்தல் வேண்டுமெனவும் அந்த அரசாங்க வெள்ளைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு 1951-ம் ஆண்டு கல்வி திருத்தச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் கல்வி மந்திரிக்குப் புத்திமதி அளிப்பதற்காக மத்திய ஆலோசனைச் சபையும் (Central Advisory Committee) அமைக்கப்பட்டது.

அடுத்ததாக, தேசிய பாஷைகள் மூலம் 7-ம் 8-ம் வகுப்புகளில் கல்வி கற்பிக்கவேண்டும் என்ற திட்டத்தை ஆராய்ந்து சிபார்சு செய்யும் வண்ணம் 1953-ம் ஆண்டு ஒரு கமிட்டி கல்வி மந்திரியினால் நியமிக்கப்பட்டது. இதன் சிபார்சு 1954-ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டது. அதன் பிரகாரம், பொது விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைத் தேசிய பாஷைகள் மூலம் கல்வி கற்பிக்கத் தராதரமுள்ள ஆசிரியர்கள் இல்லாத பள்ளிக் கூடங்களில் 1956-ம் ஆண்டு ஜனவரி மாதம் வரை இப்பாடங்களை (ஆங்கிலத்தில்) 7-ம் வகுப்பிற்குப் படிப்பிக்கலாமெனவும், 1957-ம் ஆண்டு ஜனவரி மாதம் வரை 8-ம் வகுப்பிற்குப் படிப்பிக்கலாமெனவும், அதன் பின்னர் எல்லாப் பாடங்களும் இவ் வகுப்பு வரை தேசிய பாஷையில் கட்டாயமாகப் படிப்பிக்க வேண்டுமெனவும், தேசிய பாஷைகளில் கல்வி கற்பிப்பதற்காக ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமெனவும், தேசிய பாஷைகளில் புத்தகம் பிரசுரிப்பதற்கு உற்சாகமூட்ட வேண்டு

மெனவும் இக் கமிட்டி சிபார்சு செய்தது. இதனை அடுத்து, விஞ்ஞானம், கணிதம் முதலிய பாடங்களிலிருக்கும் சொற்களுக்கு ஏற்ற சொற்களைத் தேசீய பாஷைகளில் தயாரிப்பதற்காக விசேஷ சபைகள் அமைக்கப்பட்டன. இச் சபைகள் ஏறக்குறைய தமது கடமைகளைச் செய்து முடித்துவிட்டன எனலாம். அத்துடன், மகாரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் படிப்பிப்பதற்கு (வருடாவருடம்) 100 ஆசிரிய மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் நடைமுறையில் கொண்டுவரப்பட்டது. இதன் பின்னர் 1956-ம் ஆண்டு ஜனவரி மாதம் பிரசுரிக்கப்பட்ட விசேஷ அரசாங்க கசற்றில் கல்வி மந்திரியின் அறிக்கை வெளியாகியது. இதன் பிரகாரம், ஆரம்ப சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பில் 1956, ஜனவரி 7-ம் தேதி முதல் ஆங்கிலத்தில் படிப்பிக்க முடியாத பாடங்களைத் தவிர ஏனைய பாடங்கள் யாவும் சிங்களம், தமிழ் ஆகிய தேசீய பாஷைகள் மூலமாகக் கற்பிக்கப்பட வேண்டுமெனவும் சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பில் 1957 ஜனவரிக்குப் பின் கற்பிக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறாக, சிங்களம், தமிழ் ஆகிய தேசீய பாஷைகள் மூலம் கல்வி கற்பிக்கும் திட்டம் படிப்படியாக அமுல் நடத்தப்பட்டது. இதனால், இதுவரை காலமாக பள்ளிக்கூடங்களுக்கிடையே யிருந்த வேறுபாடு அற்றுப் போவதுமல்லாமல், மாணவர்கள் தமது தாய்மொழி மூலம் கல்வி கற்க வசதி அளிக்கப்பட்டுள்ளது எனலாம்.

பள்ளிக்கூடங்களை 4 பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, (1) அரசாங்க பாடசாலைகள். (2) அரசாங்க உதவிபெறும் பாடசாலைகள். (3) அரசாங்க உதவிபெறாத பாடசாலைகள். (4) புத்த பிக்குகளுக்கென விசேஷமாகவுள்ள பிறிவெனு பள்ளிக்கூடங்கள். இவற்றுள் அரசாங்க பாடசாலைகள் கல்வி இலாகாவின் நிர்வாகத்தின் கீழ் இருக்கின்றன. அரசாங்க உதவிபெறும் பாடசாலைகள் தனிப்பட்ட பாடசாலை முகாமைக்காரரின் பராமரிப்பின் கீழ் இருக்கின்றன. அரசாங்க உதவிபெறும் பாடசாலைகளின் சட்ட அமைப் (Code of Regulations for Assisted Schools) பின் கீழ் அரசாங்க உதவிபெறும் பாடசாலைகள்

நடாத்தப்படுகின்றன. இந்தச் சட்ட அமைப்பை மாற்றும் வண்ணம் ஆசிரியர்கள் கேட்கின்றனர். ஆனால் இன்னும் மாற்றி அமைக்கப்படவில்லை. அரசாங்க உதவிபெறாத பாடசாலைகள் மாணவர்களிடமிருந்து சம்பளம் வசூல் செய்கின்றன. இப் பள்ளிக்கூடங்களின் தொகை மிகவும் குறைவு. இவற்றில் ஒரு சில லண்டன் சர்வகலாசாலைப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்கின்றன. பிறிவெனா, புத்த பிக்குகளுக்கு உரியன. இப்பள்ளிக்கூடங்கள் சர்வகலாசாலை அந்தஸ்துடையதாக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்தபொழுதும், அவற்றுள் இரண்டைத்தான் சர்வகலாசாலை அந்தஸ்துடையதாக ஆக்குவ தென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 1955-ம் ஆண்டு மே 31 வரை இலங்கையில் 3,675 அரசாங்க பள்ளிக்கூடங்கள் இருந்தன. அவற்றுள் 8,61,770 மாணவர்களும் 22,938 ஆசிரி யர்களும் உளர். 2,213 அரசாங்க உதவிபெறும் பள்ளிக் கூடங்களில் 7;11,875 மாணவர்களும் 23,529 ஆசிரியர்களும் உளர்.

பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பிப்பதற்குப் பயிற்சி அளிக் கப்பட்ட ஆசிரியர்கள் அவசியம். எனவே, அரசாங்க ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளும் அரசாங்க உதவிபெறும் ஆசிரிய பயிற் சிக் கல்லூரிகளும் உள. வருடாவருடம் ஏறக்குறைய 3,000 ஆசிரியர்கள் பயிற்றப்படுகின்றனர். இவர்களை விட சர்வகலா சாலையிலும் பட்டதாரிகளுக்கு ஆசிரிய பயிற்சி அளிக்கப்படு கின்றது.

1956-ம் ஆண்டு நியமிக்கப்பட்ட கமிட்டியின் சிபார்சிற்கு இணங்க, கல்வி மந்திரியின் கீழ் உள்ள கல்வி முறை கல்வி இலாகாவினால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றது. கல்வி இலாகா அதிகாரிக்கு ஆலோசனை கூறுவதற்காக 34 ஸ்தல ஆலோசனை சபைகள் (Local Advisory Committees) உள. இச் சபைகளில் அவ்வப்பிரதேச கல்வி இலாகா உத்தியோ கஸ்தர்கள், பாராளுமன்ற அங்கத்தினர்கள், மந்திரியினால் நிய மிக்கப்பட்டவர்கள் அங்கத்துவம் வகிப்பார்கள். இவற்றை விட மத்திய ஆலோசனைச் சபையும் (Central Advisory Committee) உண்டு. இச்சபையில் பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரிய

சங்கப் பிரதிநிதிகள், கல்வி நிபுணர்கள் முதலியோர் அங்கம் வகிக்கின்றனர். கல்விமந்திரி இக்கமிட்டியின் ஆலோசனையைக் கேட்கும்பொழுது, இச் சபை தன் அபிப்பிராயத்தைத் தெரி விக்கும்.

எனவே கல்வியைப் பரப்புவதற்காக இலங்கை அரசாங்கம் மிகவும் தீவிரமாக முயற்சி எடுத்து வருகின்றது. இதற்காகச் செலவிடும் பணமும் வருடாவருடம் கூடிக்கொண்டே போகின்றது. 1940-ம் ஆண்டில் 2 கோடி ரூபா செலவு செய்த இடத்தில் 1955-ம் ஆண்டு 14,35,81,000 ரூபா செலவு செய்யப்பட்டது. 1953-ம் ஆண்டு இலவசப் போசனம் நிற்பாட்டப்பட்டமையால் அதற்காகச் செலவு செய்த பணம் செலவுத் தொகையிலிருந்து குறைக்கப்பட்டது. பின்னர் 1956-ம் ஆண்டில் மத்தியானப் போசனம் (பாண் + பால்) கொடுக்க அரசாங்கம் தீர்மானித்ததன் பேரில் 1956 – 57ல், 18,52,74,046 ரூபாவும் 1957 – 58ற்கு 18,65,23,338 ரூபாவும் ஒதுக்கப்பட்டது. எனவே கல்வியைப் பரப்புவதற்காக அரசாங்கம் பெரு முயற்சி செய்து வந்தாலும், இன்னும் கல்வி கற்க வசதியற்றவர்களின் தொகை 7,00,000 ஆக இருக்கின்றது. இவர்களுக்கும் இவ் வசதியளித்தால் நன்மை உண்டாகும்.

## உயர்தரக் கல்வி – சர்வகலாசாலை:

இலங்கையில் உயர்தரக்கல்வி வசதியளிப்பதற்காக, 1942-ம் ஆண்டு ஆக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் பிரகாரம் இலங்கைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது. சட்டப்படி, சான்சலர், பிரோ - சான்சலர், வைஸ் - சான்சலர், சர்வகலாசாலை கோர்ட், கவுன்சில் சென்ற ஆகியவை கொண்ட கார்ப்பரேஷன் (Corporation) சுயேச்சை ஆதிக்கமுள்ள சபையாகும். சர்வகலாசாலைக்கென வருடா வருடம் அரசாங்கம் உதவிப் பணம் கொடுக்கின்றது. 1955-ம் ஆண்டில் 1,429 மாணவர்கள் இருந்தனர். விஞ்ஞானம், விவசாயம், சட்டம், மருத்துவம் முதலிய 13 பகுதிகளில் மாணவர்களுக்கு உயர்தரக் கல்வி போதிக்கப்பட்டு பட்டம் வழங்குகின்றது.

**சட்டக் கல்லூரி** – இலங்கை சட்டக் கல்லூரி நியாயவாதிகள் நியாயதுரந்தரர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கின்றது.

**இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி** – இக் கல்லூரியில் தொழில் நுட்பக் கல்வி ஊட்டப்படுகின்றது. இக்கல்லூரியை நடாத்தும் இலாகா கல்வி அமைச்சின்கீழ் உள்ளது.

**செவிடர், குருடர் பள்ளிக்கூடங்கள்** – காது கேட்காதவர்களுக்கும் கண் தெரியாதவர்களுக்குமென இரு பிறம்பான பள்ளிக்கூடங்கள் உள. இக் கல்லூரிகளிலுள்ள மாணவர்களுக்கு கல்வி ஊட்டுவதுடன் தொழிலும் பயிற்றப்படுகின்றது.

**மக்கொன தொழிற் கல்லூரி** – இளம் பிராயத்தில் குற்றம் செய்பவர்களுக்குக் கல்வியும் தொழிற் கல்வியும் கற்பித்து அவர்களைத் திருத்துவதே இக் கல்லூரியின் நோக்கமாகும்.

**வயோதிபர் கல்வித்திட்டம்**–வயோதிபர்களுக்குக் கல்வி ஊட்டுவதற்காக அமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கும் ஓரளவிற்குப் படித்த பின்னர் தமது கல்வியைத் தொடர்ந்து பெறமுடியாதவர்களுக்கும் தனித் தனியாகக் கல்வி ஊட்டப்படுகின்றது. இதற்காக 9 சினிமா 'வான்'கள் உண்டு. இத்திட்டத்தினுல் அனுகூலமிருப்பினும், அது சரியான முறையில் பயன்படுகிறதுபோல் தோன்றவில்லை.

இலங்கையில் இப்போது நடைமுறையிலிருந்துவரும் கல்வித்திட்டம் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டது. அது அரசாங்க குமாஸ்தாக்களையும் உத்தியோகஸ்தர்களையும் சிருஷ்டிக்கும் கல்வித்திட்டமாகவே இருக்கின்றது. நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதற்கு கல்வித்திட்டமும் ஒரு காரணமாகும். ஏனெனில் இத்திட்டப்படி பாடசாலைகளில் கல்விகற்று வெளியேறும் மாணவர்கள் அரசாங்க உத்தியோகங்களையே எதிர்பார்க்க வேண்டியிருக்கின்றது. எல்லோருக்கும் அரசாங்க உத்தியோகங்கள் கிடைப்பது இலாத காரியமாகும். ஆகவே, கல்வித் திட்டத்தின் பிரதான நோக்கம் வருங்கால வாழ்க்கை முறையை எவ்வாறு நடத்த

வேண்டுமெனத் தீர்மானித்துக்கொள்ளக் கூடியதாயிருத்த வேண்டும். மாணவர்களின் இயல்பூக்கங்களை வளர்க்கக்கூடி முறையில் — உதாரணமாக, விவசாயம், இயந்திரவேலை, மி சாரம் முதலிய துறைகளில் — அமைக்கப்பட்டிருக்க வேண்டு இதன்மூலம் மாணவர்களுக்குத் தொழில் நுட்பக் கல்வியை போதிக்கக்கூடியதாயிருக்கும். இலங்கையின் எதிர்கால சுபீ சத்திற்காக விவசாய-தொழிற்சாலை வளர்ச்சி அதிமுக்கி மானது. இதற்கு மேலே குறிப்பிட்ட கல்வி முறையே அ சியமாகும். ஆதலினால், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி திட்டத்தை அரசாங்கம் நிர்ணயிக்கும்போது அதற்கேற் மேலே குறிப்பிட்டவாறு கல்விமுறையையும் மாற்றியமைப்ப அத்தியாவசியமாகும்.

## பொதுநல அரசாங்கம் - சமூக சேவைகள் :

சமூக சேவைகள் ஒரு அரசாங்கத்தின் முக்கியமான அம் மாக விளங்குகின்றது. உண்மையில், எவ்வளவு தூரத்திற் ஒரு அரசாங்கத்தின் சமூக சேவைகள் ஓங்கி வளர்ந்திருக்கி றனவோ அவ்வளவு தூரத்திற்கு அந்த அரசாங்கம் பொது நல அரசாங்கமாக (Welfare State) விளங்கும். இக் கால தில், உலகிலுள்ள ஒவ்வொரு அரசாங்கமும் ஒரு பொதுந அரசாங்கமாக விளங்க வேண்டும் என்ற நோக்கத்திற்கா உழைத்து வருகின்றது. இங்கிலாந்தில் தொழிற்கட்சி (Labou Party) யினர் 1945-ம் ஆண்டில் அதிகாரத்தைக் கைப்பற்றி பொழுது, சமூக சேவைகளைப் பெருக்கித் தமது அரசா கத்தை ஒரு பொதுநல அரசாங்கமெனக் கூறினர். சமூ சேவைகளைப் பெருக்கியபொழுது, வேலையில்லாத் திண்டாட்ட தைக் குறைத்தனர், தொழிலாளர்களுக்குக் கூடுதலான அடி படைச் சம்பளம் கொடுத்தனர், வயோதிபருக்குக் கூடுதலான 'பென்ஷன்' — வயோதிபர் சம்பளம் — கொடுத்தனர், ஆதரவ ற்றோருக்குப் பண வசதியளித்தனர், இலவச சுகாதா சேவையை அளித்தனர், இலவச மூக்குக் கண்ணாடி கொடு தனர் — இவ்வாறாகத் தொழிற்கட்சியினர் பொதுமக்களுக்களித் சமூக சேவையின் காரணமாகத் தமதரசாங்கத்தை ஒரு பொது

நல அரசாங்கமெனக் கூறினர். இலங்கை அரசாங்கம் இவ்வளவு தூரத்திற்குச் சமூக சேவைகளைச் செய்யாவிட்டாலும் ஒரு அளவிற்குச் செய்து வருகின்றது. இதன் விபரத்தைக் கீழே காண்க :

**பொது மக்களுக்குப் பண உதவி அளித்தல் :**

1939-ம் ஆண்டு ஆக்கப்பட்ட வறியோர் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு, கண்டி, காலி ஆகிய மாநகர எல்லைகளுக்குள் வசிப்பவருக்குப் பணவுதவி அளிக்கும் அதிகாரம் மாநகரசபைகளிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், இலங்கையில் ஏனைய சகல இடங்களில் வசிப்பவர்களுக்கு உதவியளிக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன்கீழ் வயோதிபர், நோயாளிகள், தாளுக உழைத்துத் தனது உயிரைப் பாதுகாக்கத் தகுதியற்றவர் ஆகியோருக்குப் பண உதவி அளிக்கப்படும். இவ்வாறு உதவி பெறுபவர்கள் தனித்து வாழ்கின்றவர்களாக இருப்பின் அவர்களுக்கு மாதாமாதம் ஆகக்கூடுதலாக ரூபா 10-ம் அவரை நம்பி வாழ்பவரிருப்பின் மாதத்திற்கு ஆகக்கூடுதலாக ரூ. 20-ம் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு கொடுக்கப்படும் பணத்தைக் கொண்டு அவர்கள் சுகமாக வாழ முடியாவிட்டாலும், இப் பணஉதவி அவர்களுக்குப் பெரும் உதவியை அளிக்கின்றது. இவ் வுதவியைப் பெறுகின்றவர்களின் தொகையும் முழுப்பண உதவியும் பின்வருமாறு :

| வருடம் | உதவி பெறுபவரின் தொகை | செலவு செய்த முழுப்பணத் தொகை |
|---|---|---|
| 1952 – 53 | 85,688 | ரூ. 80,31,717 |
| 1953 – 54 | 75,151 | ரூ. 73,30,304 |
| 1954 – 55 | 76,161 | ரூ. 68,90,673. |

மேலே காட்டிய விபரத்திலிருந்து உதவி பெறுகின்றவர்களின் தொகையும், அதற்காகச் செலவிடும் செலவும் குறைவதை அவதானிக்கவும். மேலும், சராசரியாக ஒருவருக்கு மாதம் 8 ரூபா கூடக் கொடுக்கப்படவில்லை. எனவே, உதவி

வேண்டியவர்களுக்குப் போதுமான அளவிற்கு உதவி அளிக்கின்றன் அவர்கள் வேறு எவரையும் நம்பி வாழவேண்டிய நிலை ஏற்படாது.

மேலே குறிப்பிட்ட காரணங்களுக்காக உதவியளிப்பதுடன், காத்திராப்பிரகாரமாக தீ, வெள்ளப் பெருக்கு புயல் முதலியவற்றல் ஏற்படும் சேதங்களால் கஷ்டத்திற்குள்ளானவர்களுக்கும் பண உதவி அளிக்கப்படுகின்றது. இவ்வாறு உதவி அளிக்கப்படும்பொழுது, அதன் தொகை ரூ. 300ற்கு மேற்பட்டதாக இராது. இன்னும், காச நோயால் வாடுகின்றவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் மாதாமாதம் 80 ரூபாவிற்கு மேற்படாத உதவியளிக்கப்படுகின்றது.

வயோதிபர்களின் அந்திய காலத்தைச் சுகமாகப் போக்குவதற்காக வயோதிபர் விடுதிச்சாலைகள், உழைப்பவர்களின் பிள்ளைகளைப் பகல் வேளைகளில் பராமரிக்கும் ஸ்தாபனங்களான 'கிறீச்' (Creche) முதலியவற்றையும் அரசாங்கம் நடாத்துகின்றது. மேலும், குருடர் செவிடர்களுக்கும் வீடற்று அலைந்து திரிபவருக்கும் அரசாங்கம் உதவியளிக்கின்றது. இவ்வாறு பல துறைகளிலும் இலங்கை அரசாங்கம் உதவியளிக்கின்ற பொழுதிலும், இவற்றிற்காகச் செலவிடும் தொகை, உதவி வேண்டியவர்களுக்குப் போதுமானதல்ல. இதன் காரணமாக, சராசரியாக ஒருவருக்குப் போகும் பணம் மிகவும் குறைவாக இருக்கின்றது. எனவே, இவற்றிற்காக ஒதுக்கப்படும் பணத் தொகையைக் கூட்டுவதுடன், அத்தியாவசியமாக உதவி வேண்டியவர்களுக்கே உதவியளித்தல் வேண்டும்.

## தொழிலாளர் நஷ்ட ஈடு:

தொழிலாளர்கள் தொழில் செய்கின்ற நேரத்தில் காத்திராப் பிரகாரமாக ஏதாவது நேரிட்டால் அவர்களின் உழைப்பு சக்தி குறையும் அல்லது அவருடைய உயிருக்கு ஆபத்து நேரிடக்கூடும். எனவே, இவ்வாறு தொழிலாளர்கள் தமது உழைப்பு சக்தியை இழக்கும் காலத்தில், உழைப்பு சக்தியை இழக்கும் வீதத்திற்கு ஏற்கவும் அவர்களுடைய சம்பளத்திற்கு

ஏற்கவும் முதலாளிகள் நஷ்ட ஈடு கொடுத்தல் வேண்டும். சமூக சேவா இலாகாவிற்கு ஒரு தொழிலாளி அல்லது தொழிலாளியை நம்பி வாழ்பவர் அறிவுப்பண்ணினுல், அவ்விலாகா அதிகாரி விசாரணை செய்து நஷ்டத்திற்கு ஏற்க நஷ்டஈடு வழங்குவார். இவ்வாறு தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காகத் தொழிலாளர் நஷ்டஈடு சட்டம் (Workman's Compensation Ordinance) என்ற ஒரு சட்டம் உண்டு. இச் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டே தொழிலாளர் இச் சலுகையைப் பெறக்கூடியதாக இருக்கின்றது.

## கிராம முன்னேற்றம் :

இலங்கையின் ஜனத்தொகையில் கூடிய பகுதியினர் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். கிராமங்களில் வாழ்கின்ற கிராமவாசிகள் சகல விஷயங்களிலும் பிற்போக்கான நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். கிராமவாசிகள் முன்னேற்றமடைந்தாற்றான் அவர்கள் இன்றைய ஜனநாயக முறையில் பங்குபற்றக்கூடியவராயிருப்பர். எனவேதான், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மூலம் கிராம மக்களுக்குச் சகல உதவிகளும் அளிக்கப்படுகின்றன. கிராம முன்னேற்றச்சங்கம் கிராம மக்களிடையே ஒன்றுபட்ட உணர்ச்சியை வளரச்செய்து அவர்களுடைய ஒன்றுபட்ட சக்தியைக்கொண்டு கிராம முன்னேற்றத் திட்டங்களைச் செய்து முடிக்கும். இச் சங்கங்களின் நோக்கங்களை 3 தலைப்பின் கீழ் பிரிக்கலாம்.

(1) தமக்குத் தாமே உதவி புரிதல் — கிராம வாசிகளிடையே ஏற்படும் வேற்றுமைகளைத் தீர்த்தல் போன்றவை.

(2) அரசாங்க உதவியுடன் நடத்தப்படும் திட்டங்களுக்கு சங்க உதவியையும் ஒத்தாசையையும் அளித்தல். உதாரணமாக, கனடா அரசாங்கம் கிராம வீதிகளைக் கட்டுவதற்காக நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட சுமார் 35 இலட்சம் ரூபா கிராம முன்னேற்றச் சங்கங்கள் மூலமாகச் செலவு செய்யப்பட்டது. இவ்வுதவியைக் கொண்டு 1953-ம் ஆண்டு 3,015 மைல் நீள

முள்ள தெருவீதிகள் கிராம முன்னேற்றச் சங்கங்களால் அமைக்கப்பட்டன. இத்துடன், கிராமங்களில் 11,345 கிணறுகளும் 64,569 கக்கூசுகளும் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறு செலவு செய்யப்பட்டுள்ள பணத்தில் ஒரு பகுதி உபயோகமற்ற முறையில் செலவு செய்யப்பட்டதெனவும் வீணாகவும் விரயம் செய்யப்பட்டதெனவும் கூறப்படுகின்றது.

(3) அரசாங்க இலாகாக்களிடமிருந்து 'கொந்தறாத்து' எடுத்தல்—பெரும்பாலான 'கொந்துறாத்து' தனிப்பட்டவர்களினால் எடுக்கப்படுவதினால், உழைத்து வாடுபவர் ஒருபுறமிருக்க இலாபத்தை இன்னுமொருவர் அடிப்பது சகஜமாயிற்று. எனவே, அரசாங்க 'கொந்தறாத்து'களைக் கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஏற்றுச் செய்தால், சங்க அங்கத்தினருக்கு வேலை, சம்பளம் ஆகியவை கிடைப்பதுமல்லாமல், அதனால் வரக்கூடிய இலாபமும் சங்கத்திற்குக் கிட்டும். இம் முறையினால் 'கொந்தறாத்து'காறர்களை இல்லாது ஒழிக்கலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆரம்பத்தில் இவ்விஷயத்தில் ஊக்கமெடுத்தபொழுதிலும் கடந்த இரண்டு மூன்று வருடகாலமாக இது சம்பந்தமாம ஊக்கமெடுக்கவில்லை என்றே கூறவேண்டும். இது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

கிராம முன்னேற்றச் சங்கங்களில் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பெண்களின் சங்கங்களும் உள. இச் சங்கங்கள் பலவிதமான கைத்தொழில் வேலைகள், தையல் வேலைகள் முதலியனவற்றைச் செய்கின்றன. இதனால், கிராமப் பெண்கள் எந்நேரமும் வீட்டிற்குள் இராது வெளியே சென்று கிராம விஷயங்களில் ஊக்கமெடுப்பதுடன் தமது வருமானத்தைப் பெருக்கக்கூடியதாகவும் இருக்கின்றது. எனவே, கிராம முன்னேற்றச் சங்கங்கள், பெண்களின் முன்னேற்றச் சங்கங்கள் மூலமாகக் கிராம மக்கள் முன்னேற்றமடைய முடியும். இவற்றைப் பயன்படுத்தி, கிராம மக்கள் பயிற்சி அளிக்கப்படுவார்களேயானால், அவர்கள் முன்னேற்றமடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

இலங்கை அரசாங்கத்தினால் செய்து வரப்படும் சமூக சேவைகள் இங்கிலாந்தில் அளிக்கப்படுவதிலும் பார்க்க மிகவும் குறைவாகவே இருக்கின்றன. இதற்கு உதவி வேண்டியவர்களின் தொகை கூடுதலாக இருக்கும்பொழுது, சமூக சேவைகளுக்காகச் செலவு செய்வதற்குப் போதிய பணம் அரசாங்கத்தினிடம் இல்லாதிருப்பதே முக்கிய காரணம் எனக் கூறப்படுகின்றது. பணமின்மை காரணமாக சமூக சேவையைக் குறைக்கலாகாது. சமூக சேவை மூலமாக ஒரு அரசாங்கம் பொதுநல அரசாங்கமாக விளங்க வேண்டுமேயானால் பணமுள்ளவரிடமிருந்து பணத்தைப் பெற்று பணமற்றவர்களுக்குக் கூடிய சேவை புரிதல் வேண்டும். எவ்வளவிற்கு சமூக சேவை கூடுதலாக இருக்கின்றதோ அவ்வளவிற்கு அரசாங்கம் பொதுநல அரசாங்கமாக விளங்கும் எனலாம்.

# 5. சட்டமும் - ஒழுங்கும்

மனித சமுதாயம் தோன்றிய காலத்தில் மக்கள் குழுக்களாக வாழ்ந்து வந்ததுமல்லாமல் அவர்கள் எல்லோரும் எவ்வித வேறுபாடுமின்றி சமத்துவமாக வாழ்ந்து வந்தனர். ஆதிகாலத்தில் அவர்களிடையே உயர்வு தாழ்வு; ஆண், பெண்; ஆள்பவன், ஆளப்படுபவன் என்ற வேற்றுமைகள் இருக்கவில்லை. சமுதாயம் தோன்றிப் பல நூற்றுண்டுகளுக்குப் பின்னரே அரசு தோன்றியது. இதன் பின்னரே மக்களிடையே வேறுபாடு ஏற்பட்டதுமல்லாமல் அரசின் அதிகாரங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் நிலையும் ஏற்பட்டது. அரசு எக்காலத்தில் தோன்றியது எனக் கூறமுடியாது.

அரசு ஓர் சங்கம் என்றேரும். இச் சங்கம் ஓர் தேசத்திலிருக்கும் சகல சங்கங்களிலும் மேலானது எனவும் கூறினேம். மேலும், அரசு என்ற சங்கம் ஏனைய சாதாரண சங்கங்களைப் போன்றதல்ல என்றும் அங்கத்தினரைக் (பிரஜைகளைக்) கட்டுப்படுத்தும் அதிகாரமும் தத்துவமும் அதற்குண்டு எனவும் கூறினேம். அரசு என்ற சங்கத்திற்கு இத்தன்மை இருப்பதினுற்ருன், அதற்கு நாம் கட்டுப்பட்டு வாழ்கின்றேம். சாதாரணமான ஒரு சங்கத்தினர் ஒன்றுகூடி ஒரு கருமத்தைச் செய்வதாகத் தீர்மானித்தால்அத் தீர்மானத்தைச் சங்கத்தினர் எல்லோரும் ஏற்று, அதனை நடைமுறையிற் கொண்டு வருவது இயற்கை. அத்தீர்மானம் சங்க அங்கத்தினரைக் கட்டுப்படுத்துகின்றது. அது போலவே, அரசு என்ற சங்கத்தின் தீர்மானங்கள் அங்கத்தினர் எல்லோரையும் கட்டுப்படுத்தும். அத்தீர்மானங்களைச் சட்டம் என அழைப்போம். சாதாரணமான சங்கத்தின் தீர்மானங்களை அங்கத்தினர் ஏற்காமலுமிருக்கலாம், அவ்வாறு ஏற்காவிட்டால் அதற்குப் பணியாமலுமிருக்கலாம். ஆனல் அரசு என்ற சங்கத்தின் சட்டங்களை ஏற்ருலென்ன ஏற்காவிட்டாலென்ன அச்

சட்டங்களுக்குப் பணிந்து நடக்கவேண்டும். இல்லையேல் தண்டிக்கப்படலாம். எனவேதான் கட்டுப்படுத்தும் தத்துவமும் அதிகாரமும் அரசு என்ற சங்கத்திற்கு உண்டு.

இலங்கையில் தற்பொழுது சட்டங்கள் எவ்வாறு ஆக்கப்படுகின்றன என்பதைப் பின் எடுத்துரைப்போம். சட்டங்களின் தன்மை முதலியவற்றையும் அவற்றை நடைமுறையிற் கொண்டு வருவதற்காக அரசு என்ற சங்கம் கையாளும் முறைகளையும் இவ்வத்தியாயத்தில் குறிப்பிடுவோம்.

அரசு தோன்றியதன் பின்னர் பல நூற்றுக்கணக்கான வருடங்கள் கழிந்துவிட்டது. இக் காலத்தின் சரித்திரத்தை மிகவும் நுணுக்கமாக ஆராயுமிடத்து காலத்திற்குக் காலம் அரசு மாற்றமடைந்து வந்துள்ளது. இவ்வாறு மாற்றமடையும் போதெல்லாம் சட்டங்களும் மாற்றமடைந்துள்ளன. பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கை விதி. இவ் விதிக்கு இணங்கப் பழைய சட்டங்கள் அற்றுப்போய்ப் புதிய சட்டங்கள் தோன்றியுள்ளன. உதாரணமாக, பிரபுத்துவ சமுதாயத்தில் பிரபுக்களுக்கு ஏற்ற சட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் இச் சமுதாயம் அற்றுப்போய் அதனழிவில் தோன்றிய முதலாளித்துவ சமுதாயத்தில் பழைய சட்டங்கள் இல்லாது அழிக்கப்பட்டதுமல்லாமல் முதலாளித்துவ சமுதாயத்திற்கு ஏற்ற சட்டங்கள் அமைக்கப்பட்டன. இவ்வாறு, இன்று சோஷலிஸ சமுதாயத்தை அமைக்கவேண்டுமெனக் கோருகின்றவர்கள் முதலாளித்துவ சமுதாயத்திலிருந்த சட்டத்தை நீக்கி அதற்குப்பதிலாக சோஷலிஸ சட்டங்களை அமைக்கின்றனர். எனவே, சட்டங்களின் தன்மை, அரசு என்ற சங்கத்திலில்லை. ஆனால் அதன் கருவியாக விளங்கும் அரசாங்கத்தை நடாத்துகின்றவர்களிலேயே இருக்கின்றது. பிரபுக்கள் அரசாங்கத்தை நடாத்தும்பொழுது பிரபுக்களுக்கேற்ற சட்டங்களும், முதலாளிகள் அரசாளும்பொழுது முதலாளிகளுக்கு ஏற்ற சட்டங்களும், சோஷலிஸ்டுகள் ஆளும்பொழுது சோஷலிஸ சட்டங்களும் இருப்பது இயற்கையாகும். இதற்கு உதாரணமாக, எம். இ. பி.

யினர் இலங்கை அரசாங்கத்தைக் கைப்பற்றிய பின்னர், நெற் காணி மசோதா ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இம் மசோதா சட்டமாக மாறினால், நிலப்பிரபுக்களுக்கு நஷ்டத்தை விளை விக்கும். எனவே இதனை நிலப்பிரபுக்கள் எதிர்க்கின்றனர் ஆனால் விவசாயிகள் வரவேற்கின்றனர். இது சட்டமாக மாறி னால் அச்சட்டம் மிகவும் முன்னேற்றமானதாகும். இவ்வாறு சட்டங்கள் காலத்திற்குக் காலம் மாற்றமடைவதுடன் சட்டங் களும் காலத்திற்கு ஏற்றவாறு முற்போக்கினை அடையும் இருப்பினும் சட்டங்கள் இருக்குமளவிற்கும் மக்களைக் கட்டுப் படுத்தும் தன்மையும் அரசாங்கத்திற்கு இருக்கும்.

ஒரு அரசின்கீழ் உள்ள மக்களின் ஆகக்கூடிய பொதுநல னுக்காக உழைப்பதே அரசின் நோக்கமாகும். ஆதலினால் ஒரு அரசின் சட்டங்களும் இந்நோக்கத்திற்கு கட்டுப்பட்ட தாக அமைதல்வேண்டும். சட்டங்களுக்கு மக்களைப் பணிய வைக்கும் தத்துவம் அரசிற்கு இருப்பினும், சட்டங்களை ஆதாரமாகக் கொண்டு மக்களின் வாழ்க்கை முறையைக் கட்டுப் படுத்தாதிருக்கும் தன்மையுடையனவாக இருந்தாற்றான் அவற் றால் ஆகக்கூடிய நன்மையை அவர்கள் பெறமுடியும். எனவே, மக்களைப் பலாத்காரமாகப் பணியவைக்கும் தன்மயுடைய தாக இராது, ஆகக்கூடிய பலனைப் பெரும்பாலானவர்களுக்குக் கொடுக்கக் கூடியதாகவும் பெரும்பாலான மக்கள் தமது விருப்பத்திற்கு இசைந்து பணியக்கூடிய சட்டங்களாகவும் அமைதல் வேண்டும். சட்டங்கள் இவ்வாறிருப்பின், அவற்றால் நன்மை உண்டு. அவை எம்மைக் கட்டுப்படுத்தினாலும் எமது பொது நலனுக்காகவே கட்டுப்படுத்தும் தன்மையுடையதாக விளங்கும்.

இலங்கையிலே தற்பொழுது சட்டங்கள் பாராளுமன்றத் தினால் ஆக்கப்படுகின்றன. பாராளுமன்றத்தின் ஒரு அம்ச மான ஜனப்பிரதிநிதிகள் சபை பொதுமக்களுடைய சபையாக இருக்கின்றபடியினால், இச் சபை அங்கீகரிக்கும் சட்டங்கள் பெரும்பாலும் பொதுமக்களின் நலனுக்கு விரோதமானதாக இராது. மக்களுக்குத் தீமை விளைவிக்கக்கூடிய சட்டங்களாக

இருப்பின் அப் பிரதிநிதிகளை மக்கள் மீண்டும் தெரிந்தெடுக்க மாட்டார்கள். ஆகவே, ஜனநாயக முறையின்கீழ் ஆக்கப்படும் சட்டங்கள் பொதுமக்களின் நலனுக்கு விரோதமாக இருக்காத வண்ணம் விளங்குமெனக் கூறலாம்.

## இலங்கையிலிருக்கும் சட்டங்கள் பின்வருமாறு :

(1) **கண்டி மக்களின் சட்டம் – (The Kandyan Law)** - இச் சட்டம் மலைநாட்டுப் பிரதேசத்தில் வாழ்கின்ற சிங்களவரின் சட்டமாகும். 1815-ம் ஆண்டு நடந்த கண்டி ஒப்பந்தத்தின் பிரகாரம், அப்பிரதேச சிங்களவரின் சட்டத்திற்கு அமைய அரசாள்வதென ஆங்கிலேயர் ஏற்றுக்கொண்டனர். இச் சட்டம் பிரதானமாக, சொத்துரிமை முறை, மணம் முதலியவற்றைப்பற்றியதாகும். இச் சட்டத்திற்கு அமையாத பகுதிகள் - குறிப்பாக குற்றம் செய்தவர்கள் - பற்றியவை, ஏனைய சட்டங்களுக்குக் கட்டுப்படல் வேண்டும்.

(2) **தேசவழமை** - இது வட, கீழ் மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் மக்களைப் பாதிக்கும் சட்டமாகும். இச் சட்டமும் முன்னையதைப்போல் சொத்துரிமை, மணம் முதலியவற்றைப் பற்றியதே. இச் சட்டத்திற்கு அமைய அரசாள்வதென முதன்முதலாகப் போர்த்துக்கேயர் ஒப்புக்கொண்டனர். பின்னர் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் அதனை ஏற்று நடந்தனர். ஒல்லாந்தர் காலத்தில் தொகுக்கப்பட்டது.

(3) **இஸ்லாமிய சட்டம்** – இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களைப் பாதிக்கக்கூடியது. இச் சட்டமும் சொத்துரிமை முறை, மணம் முதலியவற்றைப்பற்றியதாகும்.

மேலே குறிப்பிட்ட மூன்று சட்டங்களும் இலங்கையில் இருக்கின்ற மூன்று பிரதானமான வகுப்பினரின் சொந்தச் சட்டங்களாகும். இவைகள் பண்டைக்காலத்தின் முறைகளை ஆதாரமாகக் கொண்டவைகளாகும். இவற்றைவிட மேல்நாட்டவர் இலங்கைக்கு வந்தபின்னர் ஆக்கப்பட்ட சட்டங்கள் பின்வருமாறு :

(4) **ரோமன் — டச்சு சட்டங்கள்** — ஒல்லாந்தர் இலங்கையின் கரைப்பிரதேசங்களை அரசாண்ட காலத்தில் அமுல் நடத்தப்பட்ட சட்டங்கள், ரோமன் - டச்சு சட்டங்கள் எனப்படும். இச் சட்டங்களை இலங்கையினுள் புகுத்துவதற்கு ஒல்லாந்தரின் தேசாதிபதியாக இருந்த **சிமன்ஸ்** என்பவரே காரணகர்த்தராவர். இவர்தான் தேச வழமையைச் சட்டரீதியாக அமைப்பதற்கும் காரணமாக இருந்தார். இச் சட்டம் பண்டைக்கால ரோமன் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டது. அத்துடன் ஒல்லாந்தரின் அனுபவத்தின் மூலம் அவசியமெனக் கருதி ஆக்கப்பட்ட சட்டங்களும் சேர்க்கப்பட்டன. ஒல்லாந்தர் எமக்களித்த நன்மைகளுள் பிரதானமானது, இச் சட்டத்தை இலங்கையில் புகுத்தியதேயாகும்.

(5) **ஆங்கிலேயரின் சட்டங்கள்** — இவை] ஆங்கிலேயர் இலங்கையை அரசாளத்தொடங்கிய பின்னர் ஆக்கப்பட்ட சட்டங்களாகும். இச் சட்டங்கள் இங்கிலாந்து தேசத்தின் சட்டங்களை ஆதாரமாகக் கொண்டவைகளாம். இவை இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார - அரசியல் மாற்றங்களுக்கு அத்தியாவசியமானது என்ற காரணத்தினால் ஆக்கப்பட்டன. இச் சட்டங்கள் இக்கால முதலாளித்துவ முறைக்கு ஏற்றவைகளாகும்.

(6) **இலங்கை பாராளுமன்றச் சட்டங்கள்** — இவை இலங்கை குடியேற்ற நாட்டந்தஸ்தை அடைந்த பின்னர் இலங்கையில் பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டங்களாகும். ஜனப்பிரதிநிதிகள் சபை, செனற் சபை ஆகிய சபைகளால் அங்கீகரிக்கப்பட்டு மகாதேசாதிபதி கைச்சாத்திட்டால் சட்டங்களாகத் திகழும்.

(7) **நீதிஸ்தல தீர்ப்புகள்** — சட்டங்கள் விளக்கமற்ற முறையிலிருந்தால், அவற்றை நீதியரசரால் ஆராய்ந்து அளிக்கப்படும் தீர்ப்புகள் சட்டத்திற்குச் சமானமாகும்.

எனவே, இலங்கையில் ஏழு விதமான சட்டங்கள் இருக்கின்றன. இவற்றுள் இலங்கைப் பாராளுமன்றச் சட்டங்கள் இலங்கை மக்களால் இலங்கையின் நலனுக்காக ஆக்கப்பட்டவை எனக் கூறல்வேண்டும்.

ஒரு தேசத்தில் இருக்கின்ற சட்டங்கள், புதிதாக ஆக்கப்படும் சட்டங்கள் ஆகியவற்றிற்குப் பணிந்து நடக்க வேண்டியது அத்தேச மக்களுக்கு அவசியமாகின்றது. சட்டங்களை மீறுவோரைக் கைது செய்வதற்கு, பொலீஸ் படையினரும் அவர்களின் குற்றங்களை விளங்கித் தண்டிப்பதற்கு நீதிஸ்தலங்களும் வேண்டும். அரசாங்கத்தின் இவ்விரு கடமைகளும், அரசு தோன்றிய காலம் தொட்டு இருந்தன. ஆனால், அவற்றின் அமைப்பு காலப் போக்களவில் மாற்றமடைந்துள்ளன. இன்று பொலீஸ் சேவையிலுள்ளோர் சட்டங்களை மீறுபவரைக் கைது செய்வதற்கும் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்குமாகக் கடமையாற்றுகின்றனர். நீதிஸ்தலங்களில் குற்றவாளிகள் விளங்கப்பட்டு குற்றத்திற்கேற்ற தண்டனை நீதியரசரால் விதிக்கப்படுகின்றது. இதனைச் சற்று விரிவாக அறிவது நலம்,

## ‘பொலீஸ்’ சேவை :

சமுதாயத்தினருள் அமைதியையும் சமாதானத்தையும் நிலை நாட்டுவதும், சட்டங்களை மீறி நடப்பவர்களைத் தண்டித்து நீதியை வழங்குவதற்கு உதவி புரிவதுமே ‘பொலீஸ்’ சேவையாளரின் பிரதானமான நோக்கமாகும். பண்டைக்காலத்தில் இக் கடமைகளைக் கிராம விதானைமார் செய்து வந்தனர். இக் கிராம விதானைமார் கிராமங்களில் ஏற்படும் சகல விஷயங்களையும் ஆராய்ந்து தண்டிக்க உரிமையுடையவர்களாக இருந்தபடியால் அவர்கள் தத்துவமும் அதிகாரமும் உடையவர்களாக இருந்தனர். இவர்கள் செய்துவந்த கடமைகளை இப்பொழுது பொலீசார் செய்து வருகின்றனர். இருப்பினும், கிராம விதானைமார் இன்றும் இருந்து வருகின்றனர். இத் தலைமைக்கார முறையை (Headman System) நீக்குவதற்கு இன்றைய அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

இலங்கையில் பொலீஸ் சேவை முறை 1865-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கடந்த 90 வருடங்களுக்குள் இப் பொலீஸ் சேவை பன்மடங்கு வளர்ச்சியடைந்துள்ளது. இச் சேவையினால் பல நன்மைகள் உள. இருப்பினும் சட்டபாது

காவலர் எனப் பெயர்பெற்ற இச் சேவையாளர் தமது கடமைகளைச் சரிவரச் செய்யும் பொருட்டு பொதுமக்களின் ஆதரவைப் பெற்று அவர்களுடன் இரண்டறக் கலந்து அவர்களுக்கு உதவி புரியும் சேவையாளராக இராது பொதுமக்களை நசுக்குபவராகவே இருக்கின்றனர் என்பனபோன்ற பாரதூரமான குற்றச்சாட்டுகள் இச் சேவையாளருக் கெதிராகக் கூறப்படுகின்றன. சட்டபாதுகாவலராகக் கடமையாற்றும் பொழுது பொதுமக்களின் வெறுப்பையும் குரோதத்தையும் பெறவேண்டிய அவசியமே இல்லை. பொதுமக்களின் சிறந்த நண்பராக இருந்து, பொதுமக்களுக்கு உதவிபுரிந்து, பொதுமக்களை நல்வழிப் பாதையில் நடாத்த முயற்சிப்பதே இவர்களின் குறிக்கோளாக இருக்கவேண்டும். இதை விடுத்து பொதுமக்களுக்கு மேலிருக்கக்கூடிய அதிகார வர்க்கத்தினர்போல் கடமையாற்றுவது ஜனநாயக முறைக்கு விரோதமானது. இத்தகைய எண்ணத்தை அகற்றி, பொலீஸ் சேவையாளர் பொதுமக்களின் சிறந்த நண்பர் என்ற உணர்ச்சியை வளர்ப்பதற்கு அரசாங்கமும் பொலீஸ் சேவையாளரும் உதவிபுரியவேண்டும். பொதுமக்களுக்கு மேலிருந்துகொண்டு சட்டத்தைப் பச்சைப்படியே நிலைநாட்டும் சேவையன்று, பொலீஸ் சேவை. இத்தகைய அபிப்பிராயம் அகலவேண்டுமாயின் அரசாங்கத்தின் கொள்கையும் நோக்கமும் மாற்றமடைவது அவசியமன்றோ. உண்மையான ஜனநாயகத்தின்கீழ் அரசாங்கம், அதன் பொலீஸ் சேவை, ஆகியன மக்களுக்கு அப்பாற்பட்டதாக இராது மக்களுடையவாக இருக்கும். இத்தகைய நிலையை அடைய நாம் முயற்சிப்பது எமது கடமையன்றோ.

பொலீஸ் சேவையாளரின் கடமைகள் (i) கொலை, களவு, சண்டை முதலிய குற்றங்களைத் தடுத்தல். (ii) இத்தகைய செயல்கள் செய்யப்பட்டால் அவற்றை விசாரணை செய்தல். (iii) விசாரணையின்போது குற்றம் செய்தவரைக் கண்டுபிடித்தல் அதன்பின்னர் வழக்குத் தொடரல் ஆகியவைகளாகும். (iv) அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுதல். (vi) போக்கு வரத்து வசதிகளைப் பொதுமக்களுக்கு அளித்தல்; போன்ற கடமைகளைச் செய்தல். இக் கடமைகளைப்

பொலீஸ் சேவையாளர் செய்வதனால் குற்றம் செய்வோர் தண்டிக்கப்படுவதற்கு உதவியளிப்பதுடன் சமுதாயத்தின் நலனுக்கு விரோதமான செயல்களைச் செய்யாது தடுப்பதற்கும் உதவியளிக்கின்றனர். இலங்கையில் கொலை, களவு சாதாரணமான செயல்களாக இருக்கின்றன. சராசரியாக நாளொன்றிற்கு 1½க் கொலை வீதம் செய்யப்படுகின்றது. உயிருக்கு ஆபத்தான காயங்களை விளைவித்தல், வலோற்காரமாக விபசாரம் செய்தல், களவெடுத்தல் போன்றவை இப்போது நம் நாட்டில் தாண்டவமாடுகின்றன. சமுதாயம் முன்னேற்றமடைவதற்கு இத்தகைய குற்றங்களைச் செய்வோரின் தொகை குறைவது அவசியமாகும். இவற்றை ஒழிப்பதற்காகவே பொலீஸ் இலாகா முயற்சி செய்கின்றது. தற்பொழுது பொலீஸ் பகுதித் தலைவர் (Inspector General of Police) க்குக் கீழிருக்கும் இவ்விலாகாவில் ஏறக்குறைய 8,000 உத்தியோகஸ்தர் கடமையாற்றுகின்றனர். பிரதானமான இடங்களிலெல்லாம் பொலீஸ் நிலையங்கள், சுமார் 225, ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந் நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்கள், நகரபாதுகாவலர் பயிற்சி பெறுவதற்காகக் கட்டுக்குறுந்தையில் ஒரு பயிற்சிச் சாலையும் உண்டு, தேர்ச்சியடைந்த பொலீஸ் சேயையாளர்கள் பொதுமக்களுக்கு உதவி புரிவதே பிரதானமான நோக்கமாயினும் அவர்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்வதில்லையெனக் குற்றம் சாட்டப்படுகின்றனர். இத்தகைய குற்றச் சாட்டுகளுக்கு ஆளாகாது கடமையைச் செய்து சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்க ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும்.

பொலீஸ் இலாகா தன் கடமையைச் சரிவரச் செய்வதற்காக விசேஷ பகுதிகள் உடையதாக இருக்கின்றது. குற்றம் செய்பவர்களைக் கண்டுபிடிப்பதற்கும் விசாரணை செய்வதற்கும், விரலடையாளம் முதலியவற்றிலிருந்து குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது போன்ற விசேஷ கடமைகளைச் செய்வதற்காக இவ்விலாகாவில் விசேஷ பயிற்சி பெற்றவர்கள் உளர். இவர்கள் பொலீஸ் இலாகாவின் நோக்கங்களைச் செய்து முடிப்பதற்காக உதவி புரிகின்றனர்.

## நீதிஸ்தலங்கள் :

இலங்கையில் பலதரப்பட்ட நீதிஸ்தலங்கள் உண்டு. குற்றவாளிகள் எனப் பொலீசாரால் கண்டு பிடிக்கப்பட்டவர்களுக்கு எதிராகவும் குற்றம் செய்தவர்களுக்கு எதிராகச் சாதாரணமான ஒருவரும் வழக்குத் தொடரலாம். குற்றவாளிகளைத் தண்டிக்கப் பொலீசாருக்கோ அல்லது வேறு எவருக்கோ உரிமையில்லை. தண்டிக்கும் உரிமை அரசு ஒன்றிற்கே உண்டு. இவ்வுரிமையை அரசின் சார்பாக நீதிஸ்தலங்கள் செய்து வருகின்றன. மேலும் தண்டிப்பதற்கு முன்பு குற்றங்களை விசாரணை செய்து, குற்றத்திற்குத் தகுந்த தண்டனையை நீதிஸ்தலங்கள் செய்து வருகின்றன. இலங்கையிலுள்ள நீதிஸ்தலங்கள் பின் வருவனவாகும் :

(i) **கிராமக் கோடுகள்** – நீதி சேவைக் கொமிஸனால் (Judicial Service Commission) நியமிக்கப்பட்ட கிராமக் கோட்டு நீதிபதிகள் (President) இக் கோடுகளில் கடமையாற்றுவார்கள். இக் கோடுகளில் கடன், நிலம் சம்பந்தமான தகராறுகள், கிராமச் சங்கச் சட்டங்களை மீறுதல், கிராமக் கோட்டு சட்டத்தை மீறுதல் போன்ற விஷயங்கள் விசாரணைக்கு எடுக்கப்படும். இக் கோடுகளால் விதிக்கப்படும் அபராதம் ரூ. 50 க்கு அல்லது 14 நாள் சிறைத் தண்டனைக்கு மேலதிகமாக இருக்கலாகாது. நியாயதுரந்தரர், நியாயவாதி ஆகியோர் குற்றவாளிகளுக்காக இக் கோடுகளில் வாதாட முடியாது. இயன்றளவில் சமரசமான முறையில் தகராறுகளைத் தீர்ப்பதே இக் கோடுகளின் நோக்கமாகும்.

(ii) **'றிக்குவஸ்ட்' கோடுகள் (Courts of Requests)** கொழும்பில் 'றிக்குவஸ்ட்' கொமிஷனரும், மற்றுமிடங்களில் 'டிஸ்றிக்ற்' (ஜில்லா) நீதவான்களும் இக் கோடுகளுக்கு நீதவானகக் கடமையாற்றுவார்கள். ரூ. 300க்கு அதிகப்படாத கடன், நிலம் சம்பந்தமான தகராறுகள் முதலியவற்றை விசாரணை செய்து தீர்ப்புக் கூறத் தத்துவமுண்டு. அத்துடன் சிறு பிள்ளைகளைப் பெற்றோரல்லாதோர் வளர்ப்பதற்கு உத்தரவளிக்கவும் இக் கோட்டிற்கு உரிமையுண்டு.

**(iii) 'மஜிஸ்றேற்' கோடுகள் (Magistrates Courts)** நீதி சேவைக் கொமிஷனால் நியமிக்கப்படும் 'மஜிஸ்றேற்' இக் கோடுகளுக்கு வரும் வழக்குகளை விளங்குவார். இக் கோட்டில் கிறிமினல் பிரோசீட்ஜர் கோட் - சட்டத்திற்கு விரோதமான செயல்களைச் செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடிய விதிமுறை (Criminal Procedure Code)-க்கு அமைந்த வழக்குகள் விளங்கித் தண்டனை விதிக்கத் தத்துவமுண்டு. இக் கோடுகளால் விதிக்கக்கூடிய தண்டனை பின்வருமாறு: ஆறு மாதத்திற்கு அதிகப்படாத சிறைத் தண்டனை; ரூ. 100 க்கு அதிகப்படாத அபராதம்; பதினாறு வயதிற்குட்பட்டவர்களுக்குச் சவுக்கடி; மேலே குறிப்பிட்ட தண்டனைகளுள் ஏதாவது இரண்டு தண்டனைகளையும் விதிக்கலாம். ஒருவன் ஒரு தடவைக்கு மேற்பட்டதாகக் குற்றம் செய்வானேயாகில், அவனுக்கு மேலே குறிப்பிட்ட தண்டனைகளுள் இருமடங்கிற்கு அதிகப்படாத வண்ணம் தண்டிக்கலாம்.

இவற்றைவிட கொலை முதலிய கொடூரமான குற்றங்கள் செய்யப்பட்டால், அவற்றை விசாரணை செய்து மேல் கோடுகளுக்குத் தாக்கல் செய்யலாம். அத்துடன், மனைவி மக்களைக் கைவிட்ட கணவன்மாருக் கெதிராகத் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் விளங்கிப் பராமரிப்புத் தொகை விதிக்கலாம். மேலும், மாநகர சட்டங்களை மீறுபவர்களைத் தண்டிக்க இக் கோட்டிற்கு அதிகாரமுண்டு. கொழும்பு மாநகரில் மாநகர மஜிஸ்டிரேட் என அழைக்கப்படுபவர் மாநகர மஜிஸ்டிரேட் கோடுகளுக்கு வரும் வழக்குகளை விசாரணை செய்து தண்டனை விதிப்பார். ஏனைய இடங்களில், மஜிஸ்டிரேட் இக் கடமையை ஏற்று நடாத்துவார்.

**(iv) 'டிஸ்றிக்ற்' (ஜில்லா) கோடுகள் – (District Courts)** இக் கோடுகளில் சிவில் அல்லது நிலம், பணம் சம்பந்தமானவை வருமானம், விவாகம், மரண சாதனம் சம்பந்தமான வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்புக் கூறத் தத்துவமுண்டு. இத்துடன் அநாதைப்பிள்ளைகள், விசரர், பைத்திய

காரர் முதலியோருடைய சொத்துக்கள் சம்பந்தமான வழக்குகளை விசாரிக்கவும் அச் சொத்துக்களைப் பரியாலனம் செய்வதற்குத் தத்துவகாரரை நியமிக்கவும் உரிமையுண்டு. மேலும் மஜிஸ்டிரேட் கோட்டாலும் 'சுப்ரீம்' கோட்டாலும் பாரப்படுத்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்புக் கூறவும் உரிமையுண்டு. கிராமக் கோட்டுத் தீர்ப்பை எதிர்த்து எடுக்கப்படும் 'அப்பீல்' இக் கோட்டால் விசாரிக்கப்படும். இக் கோட்டால் விதிக்கக்கூடிய தண்டனை பின்வருமாறு:

(i) இரண்டு வருடத்திற்கு அதிகப்படாத சிறைவாசம்.

(ii) ரூ. 1000 க்கு அதிகப்படாத அபராதம்.

(iii) சவுக்கடி.

(iv) மேலே குறிப்பிட்ட தண்டனைகளுள் ஏதாவது இரண்டையும் சேர்த்த தண்டனை.

**(v) 'பிரிவிக்' கவுன்சில்** – இராணியின் அந்தரங்க சபையின் நீதிஸ்தல பகுதி – **(Privy Council)** — 'சிவில்' வழக்குகளின் தீர்ப்புகளை ஏற்காது அத் தீர்ப்புகளை நிராகரித்து தீர்ப்பளிக்கும் வண்ணம் பிரிவிக் கவுன்சிலுக்கு 'அப்பீல்' எடுக்கலாம். இவ்வாறு அப்பீல் எடுப்பதற்கு முன்னர் அவ் வழக்கிற்கு முடிவான தீர்ப்பு இலங்கையின் நீதிஸ்தலங்களால் அளிக்கப்படல் வேண்டும். மேலும், அப்பீல் எடுக்கப்படும் வழக்குகள் 5,000 ரூபாவிற்கு மேலதிக பணம் சம்பந்தப்பட்டதாக அல்லது 5,000 ரூபாவிற்கு மேலதிகமான பெறுமதியுடைய நிலம் சம்பந்தப்பட்டதாக அல்லது பிரஜா உரிமை சம்பந்தப்பட்டதாக இருத்தல் வேண்டும். 'பிரிவிக் கவுன்சி'லின் தீர்ப்பு முடிவான தீர்ப்பாகும்.

**(vi) 'கிறிமினல் அப்பீல் கோர்ட்' – (The Court of Criminal Appeal)** — இக் கோடு 1940-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இக் கோட்டில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை அநேகமாக 3 நீதி அரசர்கள் விளங்குவார்கள் இல்லையேல் அதற்கு மேற்பட்ட ஒற்றைத் தானமுடைய நீதியரசர்கள்

வழக்குகளை விளங்குவார்கள். இவர்களுள் ஒருவர் பிரதான நீதியரசராவர் (Chief Justice) ஏனையோர் சிறிய நீதியரசராவர் (Puisne Judges). சுப்பிரீம் கோர்ட் தீர்ப்புகளுக்கு எதிராகத் தீர்ப்புக் கூறும்வண்ணம் இக் கோட்டாருக்கு அப்பீல் எடுக்கப் படும். இவ்வாறு எடுக்கப்படும் அப்பீல் வழக்குகளுக்கு அளிக் கப்படும் தீர்ப்புகள் முடிவான தீர்ப்புகளாகும்.

**(vii) 'சுப்ரீம் கோட்' – (Supreme Court)** கீழ்க் கோடுகளிலிருந்து விசாரணை செய்து தீர்ப்பளிக்கும் வண்ணம் இக் கோட்டிற்குத் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படும். இலங்கையில் ஒரே ஒரு சுப்ரீம் கோடுதான் உண்டு. ஆனால், அதில் தாக்கல் செய்யப் படும் வழக்குகள் யாவையும் சீக்கிரமாக விசாரணை செய்து தீர்ப்புக் கூறுவதற்காக இக் கோட்டின் சார்பாக 'அசைஸ்' கோட் என அழைக்கப்படும் கோடுகள் வெவ்வேறு இடங் களில் காலத்திற்குக் காலம் கூடும். இக் கோடுகளுக்கு 'அசைஸ் கோமிஷனர்' (Commissioner of Assize) நியமிக்கப்படுவார். இவர்களுக்கு உதவியளிக்கும் வண்ணம் 'ஜுரி'மாரும் உளர். நீதியரசர் 'ஜுரி'மாரின் தீர்ப்பைக் கேட்ட பின்னரே தனது தீர்ப்பையும் தண்டனையையும் அளிப்பார்.

**ஜுரி சேவை** – நீதியரசர்கள் ஜுரிமாருடன் வழக்கு விசாரணை செய்யும் முறை முதன் முதலாக இங்கிலாந்திலேயே ஆரம்பமாயது. இம் முறை சட்ட அமைப்பின் பிரகாரம் தோன்றவில்லை. ஆனால், கோட் வழமையிலிருந்து தோன்றிய தாகும். இம் முறை பண்டைக்காலத்து முறையாக இருப் பினும் இக்காலத்திற்கு ஏற்க அமைக்கப்பட்டுள்ளது. இலங்கை யின் நீதி பரிபாலனம் பெரும்பாலும் ஆங்கில முறையைக் கடைப்பிடித்து அமைக்கப்பட்டமையால் ஜுரி சேவை முறை யையும் இலங்கையின் நீதி பரிபாலனத்தின் அம்சமாக விளங்கு கின்றது.

இம்முறையின் பிரகாரம் நீதியரசர் ஜுரிமாருடன் சேர்ந்து வழக்குகளை விளங்குகின்றார் என்பதை நாம் மறக்கலாகாது. எனவே, வழக்குகள் விளங்கப்படும் பொழுது, ஜுரிமாருடைய

கடமை என்ன என்பதை அறிவது நலம். வழக்கு விசாரணையின் போது தோன்றுகின்ற உண்மைகள் - **உண்மைகள் மட்டுமே** ஒழிய **சட்டமல்ல**—எது என அறிந்து தீர்ப்புக் கூறுவதே இவர்களின் கடமையாகும். இதற்கு மேலதிகமான தத்துவம் இவர்களுக்கு இல்லை. மேலும், விசாரணையில் தோன்றுகின்ற உண்மைகளைக் கணிக்கலாமே ஒழிய தமது சொந்த அறிவி லிருந்து தீர்ப்புக் கூறலாகாது. எனவே, விசாரணை குறுக்கு விசாரணை முதலியவற்றில் எழுகின்றவற்றிலிருந்து உண்மை கள் எது எனக் கணித்துத் தீர்ப்புக் கூறுவதே ஜூரிமாரின் கடமையாகும். இக் கடமையைச் செய்வதற்கு நீதி அரசரும் உதவியளிப்பர். வழக்கு விசாரணை முடிவடைந்ததும், விசா ரணையில் எழுந்த பிரதானமானவை எவை எனவும் அவற்றுள் எவற்றை எவற்றை ஏற்கவேண்டும், நிராகரிக்க வேண்டுமெனவும் நீதியரசர் ஜூரிமாருக்கு எடுத்து விளக்குவார். இதன் பின்னர், ஜூரிமார் தமது தீர்ப்பை முடிவு செய்யும்பொழுது, வழக்கில் தோன்றிய உண்மைகளையும் நீதியரசர் குறிப்பிட்ட முக்கிய மான பகுதிகளையும் ஆதாரமாகக் கொண்டே தீர்ப்பளிப்பர். எனவே, வழக்கில் தோன்றிய உண்மைகளிலிருந்தே ஜூரிமார் தீர்ப்புக் கூறுவதெனக் கருதப்பட்டாலும் உண்மையில் ஜூரி மார் நீதியரசரின் குறிப்புரைகளின் ஆதாரத்தைக் கொண்டே தீர்ப்பளிக்கின்றனர். இருப்பினும் ஜூரிமார் நீதியரசர்களின் குறிப்புரைகளை ஏற்காது தமது விருப்பப்படி தீர்ப்பளிக்கலாம். இவ்வாறு தீர்ப்பளிக்கும் பொழுது, நீதியிலிருந்து வழுவா திருப்பது அவசியமாகும்.

ஜூரி முறையினால் நன்மை உண்டு. ஜூரிமாராக இருப்ப வர்கள் புத்திசாலிகளாகவும் அறிவுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். அவர்கள் நீதியான தீர்ப்பை அளிப்பதற்கு ஒத் தாசையாக இருக்கவேண்டும். தற்பொழுது, ஜூரிமாரைத் தேர்ந்தெடுப்பதற்கென இருக்கும் நிபந்தனை ஏறக்குறைய 70 வருடங்களுக்கு முன்னர் இடப்பட்டது. இதனை மாற்றி அமைத்தாற்றான் நீதி வழங்கும். ஜூரிமுறையும் மிகவும் சிறந்த முறையாக இருக்கும்.

## நீதி பரிபாலனத்தின் சுதந்திரம்:

சட்டங்கள் பல இயற்றப்படலாம். ஆனால் ஒவ்வொரு வரும் சட்டங்களுக்குப் பணிந்து கட்டுப்பட்டு நடப்பதற்கு நீதியை வழங்குபவர் சுதந்திரமுடையவராக இருத்தல் வேண்டும். சுதந்திரம் எனக் கூறும்பொழுது, அவர்களின் தனிப்பட்ட சுதந்திரத்தைக் கருதவில்லை. ஆனால், அவர்கள் எவருக்கும் கட்டுப்படாதவர்களாக இருத்தல் வேண்டும். இவ்வாறு இருந்தாற்றான் அவர்கள் அரசாங்கத்திற்கும் எதிராகத் தீர்ப்புக் கூறக்கூடியதாக இருக்கும். இத்தகைய சுதந்திரம் அவசியமானபடியாற்றான் அவர்களின் சம்பளம் மிகவும் கூடுதலான சம்பளமாக இருப்பதுடன் அவர்களைத் தனிப்பட்ட ஒருவர் வேலையிலிருந்து நீக்க முடியாது. வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு இரு சபைகளும் கூடித் தீர்மானிக்கவேண்டும். நீதியரசர் இவ்வாறு பதவியிலிருந்து நீக்கப்படுவது அருமையிலும் அருமை. இதனால், சட்டங்கள் மட்டுமே பெரிது, அவற்றை மீறுகின்றவர்கள், எத்தகையவராயினும் சரி, தண்டிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே நீதி வழங்கப்படுகின்றது. இக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டே இலங்கையில் நீதிபரிபாலன முறை அமைக்கப்பட்டுள்ளது.

## சிறைச்சாலைகள் முதலியன:

சட்டங்களை மீறுபவர்கள் தண்டிக்கப்படுவர். இவ்வாறு தண்டனை விதிக்கப்படுவதன் மூலம், குற்றங்களைச் செய்யாது தடுக்கவேண்டும் என்பதே நோக்கமாகும். தண்டனை இல்லையேல், குற்றங்களைத் தொடர்ந்து செய்யும் எண்ணம் மக்களிடையே ஏற்படுமாதலால், தண்டனைக்குப் பயந்து குற்றங்களைச் செய்யாதிருப்பர். எனவே, தண்டனை மக்களின் மனதில் பயத்தை உண்டுபண்ணுகின்றபடியால் குற்றம் செய்பவர்களின் தொகையைக் குறைக்க அரசு முயல்கின்றது. மேலும், தண்டனைகள் விதிக்கும்பொழுது தண்டனை மனிதத் தன்மையற்றதாக இருததலாகாது. உதாரணமாக, குற்றம் செய்தவர்கள் ஒன்றாகப் பிணைக்கப்பட்ட இரு கமுக மரங்களில் கட்டப்பட்ட பின்னர் பிணைப்பை அவிழ்த்து விட்டவுடன் கமுகுகளில் கட்டப்பட்டவர் இரண்டாகப் பிளக்கப்படுவார்கள். இத்தகைய தண்

டனைகள் அக்காலத்தில் விதிக்கப்பட்டாலும் இக் காலத்திற்கு ஏற்றதல்ல. இக் காலத்தில் தூக்குத் தண்டனை ஒன்றுதான் கொடூரமான தண்டனையாகும். இத் தண்டனையைக்கூட விதிக்க லாகாது எனப் பலர் அபிப்பிராயப்படுகின்றனர். இலங்கையில் இத் தண்டனைகள் தற்காலிகமாக இரண்டு வருடங்களுக்கு நிற பாட்டப்பட்டுள்ளது. தண்டனை கொடூரமான தண்டனையாக இருக்கப்படாதென்றால், அதன் நோக்கம் எத்தகையதாக இருத் தல் வேண்டும் என்ற பிரச்சனை எழுகின்றது. குற்றம் செய் பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றால், தண்டனைக்குப் பயந்து குற்றம் செய்யாமலிருப்பது ஒன்று, ஆனால் இதிலும் முக்கியமான காரணம் இன்னுமொன்றுண்டு. குற்றம் செய்த வர்கள் தண்டிக்கப்படும் பொழுது அவர்கள் தண்டனையினால் திருந்தி சமூக முன்னேற்றத்திற்காக உழைக்க வல்ல நல்ல பிர ஜையாக மாற்றமடையச் செய்வது மிகவும் பிரதானமான காரணமாக இருத்தல் வேண்டும். இவ்வாறு, திருந்தினாற்றான் குற்றம் செய்தவர்கள் சமூகத்திலிருந்து பிரிந்து சமூக நல னுக்கு விரோதமானவர்களாக இராது சமூகத்தில் அங்கத்த வனாக விளங்கும் வண்ணம் இருத்தற்கு வழியுண்டு.

இலங்கையின் நீதிஸ்தலங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை விசாரணை செய்து தண்டனை விதிக்கும்பொழுது, அத்தண்டனை பண அபராதமாக இருக்கும், சிறைத் தண்டனை யாக இருக்கும், சவுக்கடித் தணடனையாக இருக்கும் இல்லையேல் தூக்குத் தண்டனையாக இருக்கும். இவர்களுள் சிறைத் தண் டனை விதிக்கப்பட்டவர்கள் தண்டனை விதிக்கப்பட்ட காலத் திற்குச் சிறையிலடைக்கப்படுவார்கள். இலங்கையில் எல்லா மாக 13 சிறைச்சாலைகள் உள. இவற்றுள் வெலிக்கடை, மகாறை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ளவை பெரிய சிறைச்சாலைகளாகும். சிறைச்சாலைகளில் அடைத்து வைப்பதால் குற்றம் செய்தவர்களைத் திருத்த முடியாது. குற் றம் செய்பவர்கள் குற்றம் செய்யவேண்டும் என்ற காரணத்திற் காகக் குற்றம் செய்யவில்லை. ஆனால், அவர்களுடைய அறிவுக் குறைவினால் அல்லது திடீரெனக் கோபமூட்டப்படுவதால் அல்லது சரியான முறையிலே யோசிக்கக்கூடிய தத்துவமின்

மையால் குற்றம் செய்கின்ருர்கள். எனவே, குற்றம் செய்கின்றவர்களுக்குப் போதிய நல்லறிவு ஊட்டப்பட வேண்டும். மேலும் அவர்களுடைய யோசனு சக்தியிலிருக்கும் குறைபாடுகளைத் திருத்தியமைக்க வேண்டும். குற்றம் செய்பவர்கள் சமூகத்திற்கு ஏற்காதவர்கள் எனக் கருதப்படாமல் அவர்களைத் திருத்தியமைக்கக்கூடிய முறைகளிலே சிறைச்சாலைகள் அமைக்கப்பட வேண்டும். இலங்கையிலிருக்கும் சிறைச்சாலைகளுள் பெரும்பாலானவை இன்னும் பண்டைக்கால முறைப்படி அமைக்கப்பட்டிருக்கின்றபடியால், சிறைச்சாலை சீர்திருத்தம் செய்வது அவசியமாகின்றது. சீர்திருத்தப்பட்ட சிறைச்சாலைகளில் இருக்கின்றவர் எவ்வளவோ திருந்தி சமூகத்தின் சிறந்த பிரஜைகளாக இருப்பதாக மேல்நாட்டு நிபுணர்கள் கூறுகின்றனர். ஆதலினுல் இலங்கையிலும் இத்தகைய சீர்திருத்தப்பட்ட சிறைச்சாலைகள் இருப்பது அவசியமெனத் தோன்றுகின்றது. இது சம்பந்தமாகக் கடந்த சில வருடங்களாக இலங்கையிலே கையாளப்பட்ட சில சீர்திருத்தங்களையும் அவற்ருல் ஏற்பட்ட பயனையும் அறிவது உதவியாக இருக்கும்.

குண்டசாலையில் அடைக்கப்படாத சிறைச்சாலை யொன்று உண்டு. அங்கு சுமார் 100 நீண்டகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுள் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் இருக்கின்ருர்கள். இச் சிறைச்சாலையில் சாதாரணமாகச் சிறைச்சாலைகளில் காட்சியளிக்கும் உயர்ந்த சுவர்களில்லை, கடுங்காவலில்லை. அங்கு இருக்கின்றவர்கள் சுதந்திரமாகவும் பரஸ்பர நம்பிக்கையுடனும் வாழ்கின்ருர்கள். மேலும், விவசாயப் பகுதிகளில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இவ்வாறு, அங்கிருப்பவர்கள் தமது சிறைவாசம் ஒழிந்து வெளியேறும்பொழுது சுய நம்பிக்கையுடனும் சுதந்திரத்துடனும் வெளியேறுகின்ருர்கள். மேலும், அவர்கள் ஒரு தொழிலைச் செய்வதற்குப் போதிய பயிற்சியுடன் வெளியேறுகின்ருர்கள். இப்பயிற்சி அளிக்கப்படும் பொழுது கல்வி, ஓய்வு நேரத்தைப் போக்குவதற்கு விளையாட்டு முதலியவற்றிலும் பயிற்சி கொடுக்கப்படுகின்றது. சோதனைக்காக முதன் முதலாக அமைக்கப்பட்ட இந்த அடைக்கப்படாத சிறைச்சாலையால் அங்கு இருங்

தவர்கள் பயனடைந்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது. ஆதலினால், இத்தகைய சிறைச்சாலைகள் பல அமைக்கப்பட வேண்டும். குற்றம் செய்தவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும் என்பது வெளிப்படை.

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தமது கால எல்லை முடியும் வரை சிறையில் காலம் கழித்துவிட்டு வெளியேறும் பொழுது கதியற்றவர்களாக இருக்கின்றனர். இதன் காரணமாக, தமது வாழ்க்கையை நடாத்துவதற்காக களவு முதலிய குற்றங்களை மீண்டும் செய்ய ஆரம்பிக்கின்றனர். இதனால், ஒரு தடவை குற்றம் செய்தவன் மீண்டும் குற்றம் செய்யும் நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஆகவே தான், சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு தச்சுவேலை, தையல்வேலை, சப்பாத்து தைக்கும் வேலை முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இவ் வசதிகள் வெலிக்கடை, கண்டி ஆகிய சிறைச்சாலைகளில் உண்டு. இத்துடன் கல்வி வசதிகள் முதலியனவும் உண்டு. இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் சிறைகளிலிருந்து வெளியேறிய பின்னர், ஒரு வேலையைச் செய்து பிழைக்கக் கூடியதாக இருக்கின்றது. மேலும், சிறைக்குச் சென்றவர்களுக்கு வேலை கொடுக்க அனேகமாக எல்லோரும் தயங்குகின்றார்கள். இது தவறு. வேலை கொடாவிட்டால் அவர்கள் மீண்டும் குற்றப் பாதையிலேயே செல்வார்கள். வாழ்க்கையில் ஒருவன் ஒரு தடவை குற்றம் செய்துவிட்டான் என்ற காரணத்திற்காக அவனை என்றும் சமூகத்திலிருந்து விலக்கி வைப்பது ஒரு சமுதாயத்திற்கு ஏற்றதல்ல. அவ்வாறு விலக்கி வைப்பதினால் அவன் மீண்டும் குற்றம் செய்யும்படி சமுதாயத்தால் தூண்டப்படுகின்றான். ஆதலினால், அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக எல்லோரும் முன்வரவேண்டும். இவ்வாறு, சிறைக்குச் சென்றவர்களைச் சமூக நலனுக்காக உழைக்கக் கூடியவர்களாக அவர்களை மாற்றலாம்.

குற்றம் செய்பவர்களுள் இளம் வாலிபர்களும் உளர். இவர்கள் தெரிந்தோ தெரியாமலோ ஒருதடவை குற்றம் செய்துவிட்டால் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் சமூகத்தால் வெறுக்கப்படுவது நியாயமல்ல. இவர்களைச் சமூகம் மீட்டு நல்ல பாதையிலே செல்வதற்கு உதவியளித்தல் வேண்டும். இதனை உணர்ந்த அரசாங்கம் 16 வயதிற்கும் 21 வயதிற்குமிடையேயுள்ள இளம் குற்றவாளிகளுக்கு இரண்டு சிறைச்சாலைகளை அமைத்துள்ளது. ஒன்று வத்துப்பிற்றியாவிலும் மற்றது

[redacted]



நீர்கொழும்பிலும் உள. இவ்விரண்டினுள் முதலாவதாகக் குறிப்பிட்ட வத்துப்பிற்றிவலவில் அடைக்கப்படாத சிறை உண்டு. அங்கு சுமார் 250 பேர் உளர். இச் சிறைச்சாலை ஒரு பள்ளிக்கூடம் மாதிரியே நடாத்தப்படுகின்றது. குற்றம் செய்தவர்கள் பல இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு இல்லத்தவரும் ஒவ்வொருவரின் பொறுப்பில் இருப்பர். கூட்டு உணர்ச்சியின் மூலம் இவர்களுக்குச் சகல துறைகளிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. நீர்கொழும்பிலிருப்பது அடைக்கப்பட்ட சிறையாகும். அங்கு சுமார் 200 பேர் உளர். இவர்களுக்கும் சகல துறைகளிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. வெலிக்கடை சிறையில் 16 — 21 வயதிற்குட்பட்ட குற்றவாளிகளுக்கு சாரணர் இயக்கத்தில் பயிற்சி கொடுக்கப்படுவதுமல்லாமல் அவர்களைக் கொண்ட 'ரோவர்' படை (Rover Troop) யினர் மிகவும் உன்னத நிலையை அடைந்துள்ளனர். இம் முயற்சியை நாம் பாராட்ட வேண்டும். மேலே குறிப்பிட்ட இரு சிறைகளும் 'பொர்ஸ்டல்' ஸ்தாபனங்கள் (Borstal Institutions) என அழைக்கப்படும். 16 வயதிற்குட்பட்ட குற்றவாளிகளுக்கு ஹிக்கடுவாவிலும் கொக்கலவிலும் இரு பள்ளிக்கூடங்கள் உள. இங்குள்ள சுமார் 400 வாலிபர்களுக்கும் 'பொர்ஸ்டல்' ஸ்தாபன முறைப்படி பயிற்சி அளிக்கப்படுகின்றது. இவ்வாறு இளம் குற்றவாளிகளைத் திருத்தியெடுக்க அரசாங்கம் முயற்சி செய்கின்றது. இத்துடன் பொதுமக்களுடைய ஆதரவும் ஒத்தாசையும் இருத்தல் வேண்டும்.

## நன்னடத்தைச் சேவை: (Probation Service)

நன்னடத்தைச் சேவை 1944-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. குற்றம் செய்த இளம் வாலிபர்கள், நன்னடத்தைப் பிணையில் விடப்பட்டவர்கள், 'பொர்ஸ்டல்' ஸ்தாபனத்திலிருந்து வெளியேறியவர்கள் ஆகியோரை அவதானித்தல்; குற்றம் செய்த இளம் வாலிபர்களுக்கென பன்னிப்பிற்றியா, கொக்கல ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட 'றிமான்ட்' (Remand) வீடுகளிலுள்ளவர்களை மேற்பார்வை செய்தல்; மணம் செய்த பின் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து ஒன்று சேர்த்தல்; வயது வராதவர்கள் மணம் செய்ய விரும்பி மனுப்பண்ணினால் மணம் செய்யச் சம்மதமா என விசாரணை செய்தல்; பிள்ளைகளை வளர்ப்பதற்காக வேண்டிய விசாரணை செய்தல்; வழப்புப் பிள்ளைகளின் மேற்பார்வையாளராக இருத்தல்போன்ற சேவைகளைச் செய்வதே இச் சேவையின் நோக்கமாகும்.

# 6. இலங்கையின் பொருளாதாரம்

## 1. பழையன கழிதலும் புதியன புகுதலும்

ஒரு நாடு முன்னேற்றமடையவேண்டுமானுல் அந் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றமடையவேண்டும். பொருளாதாரம் முன்னேற்றமடைவதற்கு காலத்திற்குக் காலம் பொருளாதார அமைப்பு மாற்றமடைதல் வேண்டும். எனவே, இலங்கையின் பொருளாதார அமைப்பும் காலத்திற்குக் காலம் மாற்றி அமைக்கப்பட்டாற்ருன் இலங்கையர் முன்னேற்றமடைய முடியும் என்பது புலனுகின்றது.

இலங்கையின் பொருளாதாரம் பல நூற்ருண்டுகளாக எவ்வித மாற்றமுமடையாது ஸ்தம்பித்த நிலையிலேயே இருந்தது. ஆனுல் ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றிய பின்னர் ஆங்கிலேயரின் முயற்சியினுல் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆங்கிலேயர் வருவதற்குமுன்னர் மிகவும் முக்கியமான சம்பவங்கள் ஏற்பட்டதனுல் இலங்கையின் பொருளாதாரத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனுல் இவை பொருளாதார அமைப்பை மாற்றவில்லை. சிங்களவர் இலங்கையில் குடியேறி இலங்கையைத் தமது நாடாக்கிய பின்னர் தென்னிந்தியாவிலுள்ள தமிழர்கள் இலக்கையைப் பல தடவைகளில் தாக்கி அதனைக் கைப்பற்ற முயன்றனர். இதனுல் இந்த இருபாலாருக்குமிடையே பல நூற்ருண்டுகளாகப் போர் நடந்தது. ஈற்றில், இலங்கையின் வட பாகத்தில் தமிழர்கள் குடியேறினர். சிங்களவருக்கும் தமிழருக்குமிடையே போர் நடந்த காலத்தில் சேதமேற்பட்டிருந்தாலும் சமுதாயத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. தமிழர்கள் இலங்கைக்கு வந்த பின்னர், அராபிய தேசத்து முஸ்லிம் மக்கள் தமது வியாபாரத்தைப் பெருக்குவதற்காக இலங்கையோடு தொடர்பு பூண்டனர். இதன் பயனுக, இலங்கையிலிருந்த வாசனைத் திரவியங்கள், வைரங்கள், முத்துக்கள், யானைத் தந்தங்கள் முதலியன பிற நாடுகளுக்கு

ஏற்றுமதி செய்யப்பட்டன. முஸ்லிம் மக்கள் நடாத்திய வியாபாரத்தினுல் பொருளுற்பத்தி ஓரளவிற்குப் பெருகினுலும் சமுதாய அமைப்பில் மாற்றம் ஏற்படவில்லை. முஸ்லிம் மக்களுக்குப் பின்னர் போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் இலங்கைக்கு வந்தனர். இவர்களும் வியாபாரத்தைப் பெருக்கினுர்கள், ஆனுல் இவர்களின் காலத்திலும் சமுதாய பொருளாதார அமைப்பில் மாற்றங்கள் ஏற்படவில்லை. இவர்களுக்குப் பின் ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றினர். ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றிய காலத்தில் ஐரோப்பாவில் இயந்திரப் புரட்சி ஏற்பட்டதன் பயனுக அங்கு பொருளுற்பத்தி பன்மடங்கு அதிகரித்தது. இதன் காரணமாக, பொருளுற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் பிற நாடுகளிலிருந்து இங்கிலாந்திற்கு இறக்குமதி செய்யப்பட வேண்டிய அவசியமேற்பட்டது. அன்றியும் ஆலைத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஆக்கப்பொருள்களை ஏற்றுமதி செய்து அவற்றை விற்பனை செய்வதற்கு உலக சந்தைகளைக் கைப்பற்றும் அவசியமும் ஏற்பட்டது. எனவே, மேலைத் தேசங்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இணங்க இலங்கை போன்ற நாடுகளிலும் பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டது. இலங்கையிலேற்பட்ட இம்மாற்றங்களுக்கு ஆங்கிலேயரே காரணகர்த்தராக இருந்தனர்.

இலங்கையில் புதிதாகத் தோன்றிய மாற்றங்களை அறிவதற்கு முன்பாக, ஆங்கிலேயர் வருவதற்கு முன்னர் இலங்கையிலிருந்த சமுதாய அமைப்பையும் அவ்வமைப்பு மாற்றமடைவதற்கு உதவியாக இருந்த காரணங்களையும் விரிவாக அறிவது நலம். ஆங்கிலேயர் வருவதற்கு முன் பல முக்கியமான சம்பவங்கள் ஏற்பட்டாலும் அவை இலங்கையின் சமுதாய அமைப்பையும் பொருளாதார அமைப்பையும் பெருமளவிற்கு மாற்றவில்லை எனக் கூறினேம். ஆகவே, ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்தபோது பண்டைக்காலத்தில் இலங்கையிலிருந்த சமுதாய அமைப்பே நிலைத்திருந்தது எனலாம். இவ்வாருக, இலங்கையின் பொருளாதாரம் எவ்வித மாற்றமுமடையாது ஸ்தம்பித்த நிலையிலிருந்தமையினுல் அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் அதனுல் பயனடையாதிருந்தனர். உதாரணமாக, ஒரு தென்னைமரத்தை

நட்டால் 6, 7 வருடங்கள் சென்ற பின்னரே அது காய்க்க ஆரம்பிக்கும். அதன் இளம் பிராயத்தில் அத் தென்னை வருடா வருடம் கூடுதலாகக் காய்க்கும். ஆனால் 50 வருடங்கள் சென்ற பின்னர் அது காய்க்கும் தொகை குறைந்துவிடும். அதன்பின்னர் காய்களே இல்லாமற் போய்விடும். எனவே, காய்கள் குறையும் காலத்தில் அத் தென்னையால் போதிய பயனில்லாத படியினால் அதன் அருகாமையிற் புதிதாக ஒரு தென்னம்பிள்ளையை நட்டால் தொடர்ச்சியாகப் பயனைப் பெறக்கூடியதாக இருக்கும். பழைய மரம் பயனளிக்காது விடும்போது அதனை அழித்து விடலாம். அதுபோலவே, சமுதாயமும் ஆரம்ப காலங்களில் பயனுடையதாக இருந்தாலும், அச் சமுதாயம் வளர்ச்சியடைந்து முதுமையடைந்த காலம்—அதாவது ஸ்தம்பித்திருக்கும் காலம்—பயனற்ற காலமாக இருக்கும். இந் நிலையிலே, அதனை அழித்துப் புதிதான ஒரு சமுதாயத்தை உருவாக்குவது சமூகத்தினருக்கு நன்மையைப் பயக்கும். இதுவே, பொதுவான விதியாகும். இலங்கையைப் பொறுத்த வரையில் ஆங்கிலேயர் வந்த காலத்தில் இலங்கையிலிருந்த பிரபுத்துவ சமுதாயம் வளர்ச்சியடைந்து ஸ்தம்பித்த நிலையிலிருந்தது. இச் சமுதாயத்தை அழிப்பதற்கு மக்கள் முயற்சிக்காவிட்டாலும் தவிர்க்கமுடியாத காரணங்களால் இலங்கையிலிருந்த இச் சமுதாயம் மாற்றமடைந்தது. இவ்வாறு மாற்றமடைவதற்குக் காரணங்கள் எவை என அறிவதற்கு முன்னர், ஆங்கிலேயர் வந்தபொழுது இலங்கையிலிருந்த சமுதாய அமைப்பைச் சற்றுச் சுருக்கமாக அறிவோமாக.

பண்டைக் காலத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கிராமங்களில் வாழ்ந்தனர். இவர்கள் விவசாயத் தொழிலையே பிரதானமான தொழிலாகக் கருதி வந்தனர். மேலும், போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைவாக இருந்தமையினால், கிராமங்கள் யாவும் **சுயதேவையைப் பூர்த்தி செய்யும் கிராமங்க**ளாக (Self - Sufficient) இருந்தன. இதனால் கைத்தொழில்களும் கிராமங்களில் ஒரு அம்சமாக விளங்கின. கிராமங்களில் வாழ்கின்றவர்கள் உண்டு களிப்பதற்கு உணவு அத்தியாவசியமான படியால் உணவுற்பத்தி ஏனைய தொழில்களிலும் பார்க்க முக்

யத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஆகவே, உணவுற்பத்திக்கு வேண்டிய நிலம் முக்கியமான உற்பத்தி சாதனமாக (Means of Production) இருந்தது. ஒரு சமுதாயத்தின் அமைப்பு எத்தகையது என அறிவதற்கு அச் சமுதாயத்தின் உற்பத்தி சாதனம் எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தது என அறியவேண்டும். ஆங்கிலேயர் வந்த காலத்திலிருந்த முறைக்கும் பண்டைக் காலத்திலிருந்த முறைக்கும் வேறுபாடுகள் பல இருப்பினும், நாம், ஆங்கிலேயர் வந்த காலத்திலிருந்த சமுதாய அமைப்பை அறிந்தால் எமக்குப் போதுமானதாகும்.

பிரதானமான உற்பத்தி சாதனமாகிய நிலம் அரசனுடையதாக இருந்தது. ஆனால், அரசன் தனது அரசாங்க நிர்வாகத்தை நடாத்துவதற்கு உதவியாக, தனக்கு உதவியளிப்போருக்கு நிலத்தை இனமாகக் கொடுத்துதவினான். அரசனிடம் நிலத்தைப் பெற்றவர்கள் தாம் செய்யவேண்டிய கடமைகளை அரசனுக்குச் செய்யவேண்டும். எனவே, ஒருவன் அரசனுக்குச் செய்யும் சேவைக்குப் பதிலாக நிலம் கொடுக்கப்பட்டது எனலாம். அவ்வாறு கொடுக்கப்பட்ட பொழுது, சேவைக்கேற்ப நிலத்தின் பரப்பளவும் கூடிக் குறைந்திருந்தது. இவ்வாறு நாடு பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒன்று பெரியதாகவும் இன்னுமொன்று சிறியதாகவும் இருக்கும். இவ்வாறு கொடுக்கப்பட்ட பிரதேசங்களின் சொந்தக்காரரான பிரபுக்கள் தத்தம் பகுதிகளுக்கு அரசனின் பிரதிநிதிகளாக இருந்து அரசாழ்பவராகக் கருதப்பட்டனர். ஒவ்வொரு பிரபுவும் தனக்குச் சொந்தமான பாகத்தை நிர்வாகம் செய்வதற்காகச் சேவை புரிகின்றவர்கள் எல்லோருக்கும் தனது நிலத்தைப் பிரித்து வழங்குவான். இம்முறையினால், பிரபிக்கள் தாம் அரசனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யத் தமக்கு உதவி புரிகின்றவர்களுக்கு நிலத்தை வழங்கி அரசனுக்குத் தாம் செய்ய வேண்டிய சேவைகள் யாவற்றையும் அவர்கள் மூலம் செய்து முடிப்பார்கள். எனவே, பிரதானமான உற்பத்தி சாதனமாகிய நிலம் அரசனுடையதாக இருந்தாலும் உண்மையில் அரசனுக்கும், பிரபுக்களுக்கும் சேவை புரிகின்றவர்களுக்கே உபயோகமாக இருந்தது.

மேலே குறிப்பிடப்பட்டவாறு நிலம் பங்கிடு செய்யப்பட்டிருந்தாலும், நிலமுடையோர் நிலத்தைப் பண்படுத்தவில்லை. இந் நிலத்தைப் பண்ணையாட்களே பண்படுத்தி வந்தனர். நிலத்தைப் பண்படுத்திய பண்ணையாட்கள், நிலத்தைப் பண்படுத்திய கூலிக்காக உற்பத்தியில் ஒரு சிறிய பாகத்தை எடுத்துக்கொண்டு ஏனையவற்றை நிலச் சொந்தக்காரனுக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. ஆகவே, அக்காலத்தில் நிலமுடையோர் எனவும் நிலமற்ற பண்ணையாட்கள் எனவும் இரு சாரார் இருந்தனர். இவ் விருசாராரும் சமுதாயத்தின் முக்கியமான பகுதியினராகும். இவர்களைவிட மற்றும் கைத்தொழில்களைச் செய்பவர்களும் இருந்தனர். இவர்கள் தமது தொழிலுக்கேற்க வெவ்வேறு பிரிவினராகப் பிரிக்கப்பட்டனர். தொழில் அடிப்படையில் பிரிக்கப்பட்டவர்கள் வெவ்வேறு சாதியினராகக் கணிக்கப்பட்டனர். இச் சாதிப் பிரிவினை இன்றும் நிலைத்துள்ளது. இக் காலத்தில் சாதி வேற்றுமை மிகவும் பிற்போக்கானதாகக் கருதப்பட்டாலும் அம்முறை ஆரம்பித்த காலத்தில் பயனளித்ததெனவே கூறவேண்டும். ஒரு தொழிலை, குறித்த ஒரு சிலர் செய்து வந்ததால் அத் தொழிலைச் செய்த அனைவரும், கிராமத்தின் தேவைக்கேற்ப, அவர்கள் தம் கடமையைச் செய்யக்கூடியதாக இருந்தது. இவ்வாறாக, ஒவ்வொரு தொழிலைச் செய்து வரும் ஏனையோருக்குச் சேவை செய்து வந்தனர். உதாரணமாக, தச்சுவேலை செய்பவர்களும் கொல்வேலை செய்பவர்களும் விவசாயிகளுக்குக் கலப்பை போன்ற பொருள்களைச் செய்து கொடுத்து அதற்கு ஊதியமாக நெல்லைப் பெற்றனர். இதுபோலவே ஆடை நெய்பவன் ஆடையைக் கொடுத்து விவசாயியிடமிருந்து நெல்லை வாங்கினான். இவ்விதமாக, இப்பொழுது நாம் கொடுப்பதுபோல் பணம் கொடுக்கப்படாது பண்டமாற்றுச் செய்யப்பட்டது. இவ்வாறாக, சமுதாயத்தினர் பல பிரிவினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர். இவர்களுள் நிலமுடைய பிரபுக்களே சமுதாயத்தின் உயர்ந்த வகுப்பினராக இருந்தனர். இவர்களே அரசாங்க பரிபாலனத்தை நடாத்தி வந்தனர். இதன் காரணமாக நீதி பரிபாலனமும் அவர்களுடையதாக இருந்தது. ஏனையோர் அவர்களுக்குச் சேவை

செய்யும் கீழ் வகுப்பினராக இருந்தனர். இவ்வாறு மக்கள் தரப்படுத்தப்பட்ட முறையிலே பிரிக்கப்பட்டிருந்ததுடன் நில முடைய பிரபுக்கள் ஏனையோரை நசுக்கி வாழ்ந்தனர். இத் தகைய சமுதாய அமைப்பே **பிரபுத்துவ சமுதாயம்** என அழைக்கப்படும்.

ஆங்கிலேயர் இலங்கைக்கு வருவதற்கு முன்னரிருந்த பிர புத்துவ சமுதாயம் பல நூற்றாண்டுகளாக நிலைத்திருந்தது இச் சமுதாயத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் அதன் முக்கியமான அம்சங்கள் மாற்றமடையாதிருந்தன. இந்த பிரபுத்துவ சமுதாயத்திலே **இராஜகாரிய முறை** இருந்தது. இதன்பிரகாரம், அரசனுக்கும் பிரபுக்களுக்கும் சேவை செய்வோர் தமது தொழில்களைச் செய்வதைவிட நாட்டின் அத்தியாவசியமான சேவைகளை, உதாரணமாகத் தெருவீதி களைப் பழுதடையாது பாதுகாத்தல், நீர்ப்பாசன வாய்க்கால் களைப் பழுதுபார்த்தல் போன்றவற்றை, ஊதியமின்றிச் செய்ய வேண்டியிருந்தது. இச்சேவை அரசனுக்குச் செய்யும் சேவை யாகும். இதனை எல்லோரும் செய்வதினால் நாடு கேவலமடை யாது தடுக்க முடிந்தது. இத்தகைய சேவைகள் யுத்த காலங் களிலும் அதற்குப் பின்பும் கூடுதலாக இருக்கும். இந்த இராஜ காரிய முறையும் பிரபுத்துவ சமுதாயத்தின் அம்சமாக விளங் கியது.

ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்த பின்னர் இலங்கையி லிருந்த பிரபுத்துவ முறை அழிந்து முதலாளித்துவ முறை தோன்றியது. ஏற்கனவே கூறியவாறு, மேலைத் தேசங்களில் இயந்திரப் புரட்சி ஏற்பட்டதன் பயனால் இலங்கையிலிருந்த பிரபுத்துவ முறை அழிந்தது. மேலைத் தேசங்களில் பிரபுத் துவ சமுதாயம் மாற்றமடைவதற்கு அந்நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களே காரணமாக இருந்தது. ஆனால் இலங்கையில் அத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டபொழுது வெளிநாடுகளில் ஏற்பட்ட மாற்றமே மூலகாரணமாக இருந்தது. இக் காரணத் துடன் வேறு பல காரணங்களும் ஆதரவளித்தன. அவை யாவும் தனித்தனியாக மாற்றங்களைக் கொண்டுவரக்கூடியதாக

இருந்தாலும் அக்காரணங்கள் ஒருங்கு சேர்ந்தமையாலேயே சமுதாய மாற்றமேற்பட்டது.

இக்காரணங்களை ஒவ்வொன்றாக ஆராய்வது நலம் :—

(1) **ஐக்கிய இலங்கை** – இலங்கையின் கரைப் பிரதேசங்கள் 1796-ம் ஆண்டு ஆங்கிலேயரின் வசமாயது. பின்னர், 1815-ம் ஆண்டில் மலைப்பிரதேசமும் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது. இவ்வாறாக, இலங்கையின் சரித்திரத்திலே 1815ல் இலங்கை முழுவதும் முதன் முதலாக ஒரு ஆட்சியின் கீழ் வந்தது. இருப்பினும், நிர்வாகம் பிறிம்பு பிறிம்பாகவே இருந்தது. ஆனால் **கோல்புறுக் கொமிஷனின்** (Colebrooke Commission) சிபார்சின் பிரகாரம் 1833-ல் இலங்கையின் நிர்வாகம் ஒரு அமைப்பின்கீழ் கொண்டுவரப்பட்டது. இதனால், இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவும் முழு இலங்கையையும் பாதித்தன. கோல்புறாக் கொமிஷனின் சிபார்சு இலங்கையின் முன்னேற்றத்திற்கு அடிகோலியது எனலாம். (கோல்புறாக் கொமிஷனின் சிபார்சின் விபரத்தை "ஜனநாயகப் பாதை" என்ற அத்தியாயத்தின் முதலாம் பகுதியில் காண்க).

(2) **இராஜகாரிய முறை** – பண்டைக்காலத்து பிரபுத்துவ முறையின் ஒரு அம்சமான இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமையால் பிரபுக்களுக்குக் கட்டுப்பட்டிருந்த பண்ணையாட்கள் விடுதலை யடைந்ததுமல்லாமல் நிலத்தைப் பண்படுத்தும் தொழிலை விடுத்து வேற்று இடங்களுக்குச் சென்று வேறு தொழில்களைச் செய்து தொழிலுக்கேற்ற ஊதியத்தைப் பெற்றுச் சுதந்தரமாக வாழக்கூடிய நிலை ஏற்பட்டது. 1848-ம் ஆண்டில் பிரிட்டிஸ் ஆட்சியை எதிர்த்து பிரபுக்களின் தலைமையில் ஏற்பட்ட புரட்சி முறியடிக்கப்பட்ட பின்னர், இராஜகாரிய முறை சட்டபூர்வமாக அழிந்தது. இதன் பின்னர், விடுதலை பெற்ற பண்ணையாட்கள் பிரபுத்துவ முறையை ஒழித்துக் கட்டுவதற்குச் சுதந்திரம் பெற்றனர். எனவே, நிலங்களுக்குக் கட்டுப்பட்டிருந்தவர்கள் மீட்சியடைந்ததினால் பிரபுத்துவ முறை ஒழிவதற்கு ஒரு காரணமாயிருந்தது.

(3) **கிறீஸ்தவ சமயம்** – போத்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்க சமயமும் ஒல்லாந்தர் காலத்தில் பிரொட்டஸ்தாந்து சமயமும் ஆங்கிலேயர் காலத்தில் மேலே குறிப்பிட்ட இரு சமயங்களும் ஓங்கி வளர்ந்தமையினால் மக்களிடையே வேற்றுமையில்லை, எல்லோரும் சமம் என்ற எண்ணங்கள் பரவின. இதனால் பண்டைக்காலத்து பிரபுத்துவ முறையின் அம்சமாயிருந்த சாதி வேற்றுமை அழிய ஆரம்பித்தது. ஆங்கிலேயரின் ஆட்சிகாலத்தில் இவ்வேற்றுமை அழிவதற்கு கிறீஸ்தவ சமயங்களின் வளர்ச்சி பிரதானமாக இருந்தது. எனவே, சாதி வேற்றுமையை அடிப்படையாகக் கொண்ட பிரபுத்துவ முறையும் இதனால் பலவீனமடைந்தது.

(4) **கல்வி** – மேல் நாட்டவர் இலங்கைக்கு வந்தபின்னர் கல்வி வசதிகள் அளிக்கப்பட்ட பொழுதிலும் ஆங்கிலேயர் வந்த பின்னரே இவ்வசதி வளர்ச்சியடைந்தது. கல்வி வசதியளிக்கப்பட்டமையினால், கல்வி கற்றவர்கள் மேல் நாடுகளிலிருந்த முற்போக்கு எண்ணங்களைப் பெறக்கூடியதாயிருந்தது. இதனால், சீர்திருத்தத்தின் அவசியத்தைக் கற்றோர் உணர்ந்தனர். எனவே. கல்வி வசதி பண்டைக்காலத்துப் பிரபுத்துவ முறையை ஒழிப்பதற்கு உதவியளித்தது. இவ்வசதியை ஆரம்பத்தில் அளித்த கிறீஸ்தவ குருமாருக்கு நாம் எல்லோரும் கடமைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(5) **சட்டம்** – ஒல்லாந்தர் காலத்தில் றோமன் – டச்சு சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் ஆங்கிலேயரினால் இலங்கை பூராகவும் அமுல் நடத்தப்பட்டது. நீதி பரிபாலனத்தை ஆங்கிலேயர் நடத்தியபொழுது மக்களிடையேயுள்ள வேற்றுமையைப் பொருட்படுத்தாது குற்றம் செய்தவர்கள் எவராயினும் தண்டிக்கப்பட்டனர். மேலும், நீதிபரிபாலனம் அகில இலங்கைக்கும் ஒன்றாக இருந்தது. இதனால் வேற்றுமை அழிவதற்கு ஏதுவாக இருந்ததுடன் பிரபுத்துவ சமுதாயமும் அழிய உதவியளித்தது.

(6) **வியாபாரமும் வர்த்தகமும்** – ஆங்கிலேயர் அரசாள ஆரம்பித்த காலத்தில் இங்கிலாந்தில் இயந்திரப் புரட்சி ஏற்பட்டது. இதன் பயனாக பொருளுற்பத்தி பன்மடங்கு அதிகரித்தது. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட ஆக்கப்பொருட்கள் வெளிநாடுகளில் விற்பனை செய்யப்பட்டன. இந்த ஆக்கப் பொருட்கள் (Finished Products) இலங்கைக்கும் இறக்குமதி செய்யப்பட்டு இலங்கையில் குறைந்த விலையிலே விற்பனை செய்யப்பட்டன. இதனால், இலங்கையின் கைத்தொழில் முறியடிக்கப் பட்டது; இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகும் பொருட்களை இலங்கையில் மக்கள் நம்பிவாழ ஆரம்பித்தனர்; கைத்தொழிலில் ஈடுபட்டவர்கள் வேலையற்றவர்வளாகி வேறு வேலை தேட ஆரம்பித்தனர். இவ்வாறாக, ஆங்கிலேயரின் காலத்தில் ஏற்பட்ட வியாபார வர்த்தக வளர்ச்சியினால் பண்டைக்காலத்திலிருந்த சுய தேவையைப் பூர்த்தி செய்யும் கிராமங்கள் வெளிநாடுகளை நம்பி வாழும் கிராமங்களாக மாறியதுமல்லாமல், அக்கிராமங்களில் வாழ்ந்தவர்களில் பெரும்பாலானோர் வேலையற்றவர்களாகினர். இம்மாற்றம் காரணமாக வேலையற்றவர்கள் தமது கிராமங்களை விடுத்து வேறு இடங்களுக்குச் சென்று வேலைதேட முயன்றனர். எனவே, உள்நாட்டு வியாபார வர்த்தக வளர்ச்சி பிரபுத்துவ சமுதாயத்தை அழிக்க உதவிபுரிந்தது.

(7) **போக்குவரத்து வசதி** – வியாபாரம் வளர்ச்சியடைவதற்கு போக்குவரத்து வசதி அவசியம். ஆகவே, ஆங்கிலேயர் தெருவீதிகளையும் பின்னர் புகையிரதப் போக்குவரத்தையும் அமைத்ததால் வியாபாரம் பெருகியது. இத்துடன், போக்குவரத்து வசதியின்மையால் கிராமங்களுக்கிடையே தொடர்பு இல்லாதிருந்த நிலை ஒழிய நேரிட்டது. இக்காரணங்களினால் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் கிராமங்களாக இருந்த கிராமங்கள் வெளிநாட்டுப் பொருட்களை நம்பி வாழும் கிராமங்களாகின. எனவே, கிராமங்கள் தமது சுதந்திரத்தை இழந்ததுடன் பிரபுத்துவ முறையும் அழிவதற்கு ஏதுவாக இருந்தது.

(8) **முதலாளித்துவ ஸ்தாபனங்கள்** — ஆங்கிலேயர் இலங்கையிலிருக்கும் பொருட்களை ஏற்றுமதி செய்து இலாபத்தை அடைய எண்ணவில்லை. ஆனால் தமக்குத் தேவையான மூலப் பொருட்களைத் தமக்குக்கீழ் உள்ள நாடுகளில் உற்பத்தி செய்து, அவற்றை இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்து இங்கிலாந்திலுள்ள ஆலைத் தொழிற்சாலைகளை இயக்கினர். பின்னர் அத் தொழிற்சாலைகளில் செய்யப்படும் ஆக்கப் பொருட்களை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பன்மடங்கு இலாபத்தைப் பெற்றனர். ஆகவே, கொக்கோ, தேயிலை, றப்பர் போன்றவற்றை இலங்கையில் உற்பத்தி செய்ய ஆரம்பித்தனர். இதனால், முதலாளித்துவ முறையை இலங்கையிலும் புகுத்தினர். இதனைத் தொடர்ந்து, வர்த்தக ஸ்தாபனங்கள், வங்கிகள், இன்சுயரன்ஸ் கொம்பனிகள், எஞ்சினியரிங் கொம்பனிகள் போன்ற முதலாளித்துவ ஸ்தாபனங்கள் இலங்கையில் தோன்றின. இவ்வாறு, 19-ம் நூற்றாண்டின் கடைப்பாகத்தில் தோன்றிய முதலாளித்துவ ஸ்தாபனங்கள் பிரபுத்துவ முறையை அழித்தன. புதிதாகத் தோன்றிய முதலாளித்துவ ஸ்தாபனங்களை ஆரம்பிப்பதற்கு மூலதனம் வேண்டும். இம்மூலதனத்தை ஆங்கிலேயர் இலங்கைக்குக் கொண்டு வந்து மேலே குறிப்பிட்ட ஸ்தாபனங்களை ஆரம்பித்தனர். இவ்வாறாக, அவர்கள் வருடாவருடம் தமது மூலதனத்திலிருந்து இலாபமடைந்தனர். இந்த முதலாளித்துவ முறையின் பிரகாரம் இரு வர்க்கத்தினர் சமுதாயத்தின் முக்கியமானவர்களாகின்றனர். இவர்களில் ஒரு சாரார் மூலதனமுடையோர் தமது மூலதனத்தை இட்டு முதலாளித்துவ ஸ்தாபனத்தை அமைப்பர். இந்த ஸ்தாபனங்களைத் தனித்து உருவாக்க முடியாதபடியால் பலர் ஒன்றுகூடி அவற்றை இயக்குவர். இவ்வாறு அமைக்கப்பட்ட ஸ்தாபனங்களை இயக்குகின்ற தொழிலாளர்கள் இரண்டாவது முக்கியமான வர்க்கத்தினராவர். இலங்கையில் முதலாளித்துவ முறை ஆரம்பித்த காலத்திலே மூலதனத்தை இட்டவர்கள் இலங்கையரல்ல ஆனால் ஆங்கிலேயராவர். 19-ம் நூற்றாண்டின் கடைப்பாகத்திலேதான் இலங்கையரும் இத்தகைய ஸ்தாபனங்களை ஆரம்பிக்க முன்வந்தனர். இவ்வாறு தோன்றிய முதலாளித்துவ ஸ்தாபனங்களும் முதலாளித்துவ முறையும் பிரபுத்துவ முறையை அழித்தது.

(9) **பணம்** – ஆங்கிலேயர் வருவதற்கு முன் பணம் உபயோகிக்கப்பட்டாலும், ஆங்கிலேயர் வந்த பின்னரே பணம் பண்ட மாற்றிற்கு அவசியமான பொருளாக மாறியது. வேலை செய்பவர்களுக்குச் சம்பளம் கொடுத்தல், பொருட்களை வாங்குவதற்குப் பணம் கொடுத்தல் போன்ற முறைகள் தோன்றின. முதலாளித்துவ முறையில் பணம் பிரதானமான பொருளாகும். இப்பொருளை உடையவர்கள் தான் செல்வர்கள் எனக் கருதப்பட்டதால் அதனைத் தேட முயல்வதே ஒருவனின் குறிக்கோளாக இருந்தது. நிலமுடையவர் பிரபுத்துவ காலத்தில் செல்வர்களாக வாழ்ந்திருந்தால் சமுதாய முறை மாற்றமடைந்த பின்னர், பணமுடையவர்களே செல்வராக மாறினர். பணம் பிரதானமான பொருளாக மாறியதால் பிரபுத்துவ சமுதாயம் மாற்றமடைந்தது.

மேலே குறிப்பிட்ட காரணங்களும் மற்றும் பலவும் தனித்தும் ஒருமித்தும் இலங்கையிலிருந்த பிரபுத்துவ சமுதாயத்தை மாற்றின. இக் காரணங்களால் பிரபுத்துவ சமுதாயம் அழிவுற்றதென்றாலும் மேல் நாடுகளில் ஏற்பட்ட இயந்திரப் புரட்சியே மூலகாரணமாக இருந்தது என்பதை மறக்கலாகாது. மேலும், பிரபுத்துவ சமுதாயம் அழிந்தது எனக் கூறும் பொழுது, அச்சமுதாயம் ஒரேயடியாக அழிந்தது எனக் கூற முடியாது. உண்மையில் பிரபுத்துவ சமுதாயம் படிப்படியாக அழிந்து, புதிய முதலாளித்துவ சமுதாயத்திற்கு இடம் கொடுத்தது. புதிதாகத் தோன்றிய முதலாளித்துவ சமுதாயம் இன்று ஸ்திரமான சமுதாயமாக நிலைத்திருக்கின்ற பொழுதிலும் பிரபுத்துவ சமுதாயத்தின் அம்சங்களும் ஆங்காங்கு காட்சியளிக்கின்றன. உதாரணமாக, தென்னிலங்கையில் 'ஆண்டே' முறை அல்லது குத்தகை முறை பிரபுத்துவ சமுதாயத்திற்குச் சேர்ந்த முறையாகும். சாதி வேற்றுமையும் பிரபுத்துவ சமுதாயத்திற்குச் சேர்மதியானதே. ஆதலினால் பிரபுத்துவ சமுதாயத்தின் முக்கிய அம்சங்கள் அழிந்தொழிந்து போனாலும் அதன் அறிகுறிகள் இன்றைய முதலாளித்துவ சமுதாயத்துடன் சேர்ந்திருக்கின்றன.

பிரபுத்துவ சமுதாயம் அழிந்து அதனளவில் தோன்றிய முதலாளித்துவ சமுதாயத்தில் இரு பிரதானமான வர்க்கத்தினர் உளர். இச் சமுதாயத்தில், உற்பத்தி சாதனங்கள்—தேயிலைத் தோட்டம் முதலியன, வர்த்தக ஸ்தாபனங்கள், போக்குவரத்து ஸ்தாபனங்கள், வங்கிகள் முதலியன—மூலதனமுடைய முதலாளிகளுடைய தனிச் சொத்துரிமையாக இருக்கின்றன. இவற்றில் சொந்தக்காரரான முதலாளிகள் முதலாளித்துவ சமுதாயத்தின் முக்கிய வர்க்கத்தினராவர். இவர்களுடைய உற்பத்தி சாதனங்களை இயக்குகின்ற தொழிலாளர்கள் முதலாளித்துவ சமுதாயத்தின் இரண்டாவது முக்கியமான வர்க்கத்தினராவர். இவ் விரு வர்க்கத்தினரும் இல்லாவிட்டால் முதலாளித்துவ சமுதாய அமைப்பு முறை இல்லையெனக் கூறலாம். பிரபுத்துவ சமுதாயத்தில் நிலம் பிரதானமான உற்பத்தி சாதனமாகும். அச்சமுதாயத்தில் நிலத்தின் சொந்தக்காரரான பிரபுக்களும் அவற்றைப் பண்படுத்தும் பண்ணையாட்களும் பிரதானமான வர்க்கத்தினராவர். எனவே, பிரபுத்துவ சமுதாயம் அழிந்து முதலாளித்துவ சமுதாயம் தோன்றியது எனக் கூறும்பொழுது உற்பத்திமுறை மாற்றமடைந்து புதிய உற்பத்தி சாதனங்கள் தோன்றி அந்த உற்பத்தி சாதனங்களின் சொந்தக்காரர் மாற்றமடைந்ததைக் குறிக்கின்றது இத்துடன் இன்னுமோர் அம்சம் மாற்றமடைந்துள்ளது. அதாவது, பிரபுத்துவ சமுதாயத்தில் ஆட்சிமுறை பிரபுக்களுடையதாக இருந்தது. ஆனால் முதலாளித்துவ சமுதாயத்தில் ஆட்சிமுறை முதலாளிகளுடையதாக இருக்கின்றது. எனவே, உற்பத்திமுறை முதலியன மாற்றமடைவதுடன் ஆட்சி முறையும் முதலாளிகள் வசமானுற்றுன் பிரபுத்துவ சமுதாயம் அழிந்து முதலாளித்துவ சமுதாயம் தோன்றியது எனலாம். இத்தகைய மாற்றம் 19-ம் நூற்றாண்டில் ஏற்பட்டது.

ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவ சமுதாயம் தோன்றியபொழுது அந்நாடுகளிலுள்ள முதலாளிகளே முதலாளித்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்காக முயற்சி செய்து வெற்றி ஈட்டினார்கள். உதாரணமாக, பிரஞ்சுப் புரட்சி ஏற்பட்ட பொழுது, பிரான்சு தேசத்து முதலாளிகளே பொது

மக்களின் வெறுப்பை ஆயுதமாக உபயோகித்து பிரபுத்துவ முறையை ஒழித்துக் கட்டினர். ஆனல் இலங்கையில் பிரபுத்துவ சமுதாயம் அழிந்து முதலாளித்துவ சமுதாயம் தோன்றிய பொழுது, இலங்கையிலுள்ள முதலாளிகள் பிரபுத்துவ சமுதாயத்தை அழிக்காது இங்கிலாந்திலுள்ள முதலாளிகளே அதனை அழிக்க உதவி புரிந்தனர். இவ்வாறு வெளிநாடுகளிலுள்ள முதலாளிகள் இலங்கையிலிருந்த பிரபுத்துவ சமுதாயத்தை அழித்து முதலாளித்துவ சமுதாயத்தை உருவாக்கிய பொழுது, இலங்கையிலும் தம்மைப் போன்ற முதலாளித்துவ வர்க்கத்தினரை உருவாக்க வேண்டியதாயிருந்தது. இந்த உள்நாட்டு முதலாளிகள் 19-ம் நூற்றுண்டில் அதிகமாகத் தோன்றவில்லை. ஆனல் 20-ம் நூற்றுண்டில், படிப்படியாக உள்நாட்டு முதலாளிகளின் தொகையும் பலமும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. தற்பொழுது, இலங்கையிலுள்ள முதலாளித்துவ வர்க்கத்தினர் எத்தனையோ மடங்கு வளர்ச்சியடைந்து இலங்கையின் பொருளாதார அமைப்பில் பெரும் பாகத்தைப் பெற்றுள்ளனர். ஆகவே, பிரபுத்துவ சமுதாயம் இலங்கையிலுள்ள முதலாளிகளால் அழிக்கப்படாவிட்டாலும், வெளிநாட்டு முதலாளிகளால் அழிக்கப்பட்ட பின்னர் அதனளவில் முதலாளித் சமுதாயத்தை உருவாக்கினர்.

19-ம் நூற்றுண்டின் கடைப்பாகத்தில் இலங்கையில் பல புதிய முதலாளித்துவ ஸ்தாபனங்கள் தோன்றின. இவற்றுள் கொக்கோ, தேயிலை, றப்பர் தோட்டங்களை ஆரம்பித்தது மிகவும் முக்கியமானதாகும். இந்த ஸ்தாபனங்கள் தோன்றி வளர்ச்சியடைந்ததால் போக்குவரத்து வசதிகள் கூடுதலாகத் தேவையாக இருந்தன. இதனல் நல்ல தெருவீதிகள், புகையிரதப் போக்குவரத்து முதலியன அமைக்கப்பட்டன. மேலும், இலங்கையில் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும் வெளிநாடுகளிலுள்ள பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் வர்த்தக ஸ்தாபனங்கள் தோன்றின. இயந்திரப் புரட்சி ஏற்பட்ட பின்னர் பொருளுற்பத்தி செய்வதற்கு இயந்திரங்கள் அவசியமானபடியால் 'எஞ்ஜினியரிங்' கொம்பனி

களும் தோன்றின. இந்த ஸ்தாபனங்களுக்குப் பண உதவிபுரிவ தற்கும் பணத்தை வைத்திருப்பதற்கும் வங்கிகள் தோன்றின. இவ்வாருகப் 19-ம் நூற்ருண்டு முடிவதற்கு முன்னரே பற்பல முதலாளித்துவ ஸ்தாபனங்கள் தோன்றின. மேலும், இக் காலத்தில் பணம் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாகியது. வேலை செய்பவர்களுக்குச் சம்பளமாகப் பணம் கொடுக்கப் பட்டது. பொருள்களை வாங்குவதற்குப் பணம் கொடுத்தே வாங்கும் முறை தோன்றியது. இவ்வாருக, பணம் சகல தேவைகளுக்கும் மூலப்பொருளாகியது. இத்தகைய முதலா ளித்துவ சமுதாயமும் தோன்றி வளர்ச்சியடைந்தது.

---

## 2. இன்றைய பொருளாதார நிலை

கடந்த நூற்ருண்டிற்குள் இலங்கையின் பொருளாதார அமைப்பு பெருமளவிற்கு மாற்றமடைந்துள்ளது. இருப்பினும், இலங்கையின் பொருளாதாரம் இன்று ஸ்தம்பித்த நிலையிலிருக் கின்றது. இலங்கையில் வாழும் 85 இலட்சு மக்களின் வாழ்க் கைத் தரம் முன்னேற்றமடைய வேண்டுமாயின் பொருளாதாரம் இன்றைய நிலையிலிருந்து இன்னும் இருமடங்கிற்குக் குறையாது ஓங்கிவளரவேண்டும். இப்பிரச்சனையைச் சற்று விரிவாக ஆராய்ந்தறிந்தாற்ருன் எமது பொருளாதாரத்தை வளரச் செய் வதற்கு ஆவனசெய்ய முயலலாம்.

இலங்கை ஒரு விவசாய நாடு. விவசாயம் எனக் கூறும் பொழுது, நெல் உற்பத்தியை மட்டும் குறிக்கவில்லை. அத் துடன் தேயிலை, றப்பர், தென்னை, கொக்கோ போன்ற பண வருவாயுடைய விவசாயப் பொருள்களும் (Cash Crops) உற் பத்தி செய்யப்படுகின்றன. மேலும், இலங்கையில் ஆலைத் தொழிற்சாலைகள் இல்லாமையால் ஆக்கப்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதில்லை. எனவே, இலங்கையின் பொருளாதாரம் விவசாயத்தில் தங்கியிருப்பதால் இலங்கை ஒரு விவசாய நாடு

எனப்படும். இயந்திரப் புரட்சி நடந்த பின்னர் ஆக்கப்பொருள் உற்பத்தி மன்மடங்கு அதிகரித்ததுடன் சகல விதமான பொருளுற்பத்திக்கும் இயந்திரங்கள் உபயோகிக்கப்படும் இக்காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் ஆலைத் தொழிற்சாலைகளை ஆதாரமாகக் கொண்டதாக இருத்தல் வேண்டும். இத்தகைய மாற்றம் ஏற்பட்டாற்றான் இலங்கையின் வாழ்க்கைத் தரம் உயரும் எனப் பொதுவாகக் கூறலாம்.

இலங்கை விவசாய நாடாக இருந்தாலும் விவசாய உற்பத்தியில் பிரதானமான அம்சமாக விளங்கும் நெல் உற்பத்தி இலங்கையின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இல்லை. ஏறக்குறைய இலங்கையின் நெல் உற்பத்தி எமது தேவையின் அரைப்பங்கையே பூர்த்தி செய்கின்றது. இதனால் எஞ்சிய தேவையை நாம் சீனு, பர்மா போன்ற வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றோம். இவ்வாறு இறக்குமதி செய்வதினால் வருடாவருடம் பெரும் தொகையான பணம் வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டியதாயிருக்கின்றது. 1954-ம் ஆண்டு 27½ கோடி ரூபாயும், 1955ல் 22 கோடி ரூபாயும் அரிசி இறக்குமதி செய்வதற்காகச் செலவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும், இத்தொகை முழு இறக்குமதி செலவில் ஏறக்குறைய 18 வீதமாக இருக்கின்றது. எனவே, இலங்கையின் நெல் உற்பத்தி இலங்கையின் தேவைக்குப் போதுமானதாக இல்லை எனவும் இதனால் உணவிறக்குமதி செய்வதற்காகப் பெருந் தொகையான பணத்தை அரசாங்கம் செலவிடுகின்றது எனவும் கூறலாம். ஆகவேதான் அரசாங்கம் நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தீவிர முயற்சிகளை எடுத்து வருகின்றது.

கடந்த சில வருடங்களாக இலங்கை அரசாங்கம் எடுத்து வரும் முயற்சியினால் நெற்காணியின் பரப்பளவும் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. இருப்பினும் சராசரி உற்பத்தி அதிகரிக்கவில்லை என்றே கூறவேண்டும். இதனை அடுத்த பக்கத்தில் தரப்படும் புள்ளி விபரத்தில் காண்க:

| வருடம் | விதைக்கப் பட்ட பரப்பளவு (ஏக்கர்) | அறுவடை செய்யப் பட்ட பரப்பளவு (ஏக்கர்) | விளைந்த நெற்தொகை (புசல்) | 1 ஏக்கரின் சராசரி விளைவு (புசல்) | |
|---|---|---|---|---|---|
| 1952 | 11,61,869 | 9,36,000 | 2,89,00,000 | 30·77 | 4 வருடங்களுக்கும் சராசரி விளைவு 1 ஏக்கருக்கு 30, 23 புசல்கள் |
| 1953 | 10,48,228 | 8,09,000 | 2,19,00,000 | 27·17 | |
| 1954 | 12,62,542 | 10,30,015 | 3,12,00,000 | 30·29 | |
| 1955 | 13,43,551 | 10,92,000 | 3,57,00,000 | 32·69 | |

மேலே எடுத்து விளக்கிய புள்ளி விபரத்தின் பிரகாரம் சராசரியாக ஒவ்வொரு ஏக்கருக்கும் 30 புசல் நெல் மட்டுமே விளைகின்றது. ஆனால், ஜப்பானில் ஏறக்குறைய 1 ஏக்கருக்கு 150 புசல் நெல் விளைகின்றது. ஆகவே, ஒவ்வொரு ஏக்கருக்கும் விளையும் நெற் தொகை இரண்டு மடங்காகப் பெருகினால் எமது தேவைக்கேற்ற நெல் உற்பத்தி செய்யலாம். அல்லது நெற்காணியின் பரப்பளவை இரண்டு மடங்காக்கினால் எமது இன்றைய தேவையைப் பூர்த்தி செய்யலாம். கடைசியாகக் குறிப்பிட்ட வழியை உடனடியாகக் கையாள முடியாததால் நெல் உற்பத்தியைப் பெருக்க முயல்வதுடன் (நெற் காணியின்) பரப்பளவையும் பெருக்குவதே வழியாகும். 3-வது அத்தியாயத்தில், விவசாயத்தைப்பற்றி விளக்கியபொழுது நெல் உற்பத்தியை பெருக்குவதற்கு நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்கச் செய்து புதிய விஞ்ஞான முறைகளைக் கையாளவேண்டும் எனக் குறிப்பிட்டோம். இவற்றைச் செய்தாற்றான் மீட்சி உண்டு.

இலங்கையின் ஜனத்தொகையில் ஏறக்குறைய 50-60 வீதத்தவர் விவசாயத் தொழிலையே செய்து வருகின்றனர். இத்தொகை மிகவும் கூடுதலாகும். ஏனெனில், பண்படுத்தப்படும் நிலப்பரப்பை இந்த 60 வீதத்தவருமே பங்கீடு செய்யவேண்டும். இதன் காரணமாக, ஒவ்வொரு ஏக்கர் நிலத்தை நம்பிவாழும் மக்களின் தொகை கூடுதலாக இருக்கின்றது. இதனால் ஒவ்வொருவரின் சராசரி வருமானம் குறைவாக இருக்கின்றது.

உதாரணமாக, 100 ஏக்கர் நிலத்தை நம்பி வாழ்கின்றவர்கள் 100 பேர் என்றால், அந்நிலத்திலிருந்து உற்பத்தி செய்யக் கூடிய 3,000 புசல் நெல்லின் பெறுமதியான 36,000 ரூபாவை 100 பேர் பங்கிடவேண்டும். எனவே, ஒருவரின் சராசரி வருமானம் ஒரு வருடத்திற்கு 360 ரூபாயே. இரு போகம் பண்படுத்தப்படுவதாயின் வருமானம் 720 ரூபாவாக அதிகரிக்கும். ஆனால் அந்நிலத்தை நம்பி வாழ்கின்றவர்களின் தொகை 50 ஆகக் குறைந்தால் ஒருவரின் வருமானம் 1440 ரூபாயாக அதிகரிக்கும். அத்துடன் புதிய விஞ்ஞான முறைகளைக் கையாண்டு உற்பத்தியை இருமடங்காகப் பெருக்கினால் வருமானம் 2880 ரூபாயாக அதிகரிக்கும். எனவே, விவசாயத்தொழிலில் ஈடுபடுகின்றவர்களின் தொகை கூடுதலாக இருப்பதினால் அவர்களின் சராசரி வருமானம் குறைவாக இருக்கின்றது என மேலே குறிப்பிட்ட உத்தேசக் கணக்கிலிருந்து அறியலாம். விவசாயிகளுடைய சராசரி வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கு ஒவ்வொரு ஏக்கரிலும் நம்பி வாழ்கின்றவர்களின் தொகையைக் குறைத்து ஒவ்வொரு ஏக்கரின் சராசரி உற்பத்தியைப் பெருக்கவேண்டும் எனப் பொதுப்படையாகக் கூறலாம். இப்பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமேயாயின் (1) நெற்காணியின் பரப்பளவைப் பெருக்கவேண்டும்; (2) விவசாயத்தில் ஈடுபடுகின்றவர்களுக்கு வேறு தொழில்கள் கொடுக்கப்படல் வேண்டும்; (3) ஆலைத் தொழிற்சாலைகள் முதலியவற்றை அமைத்து வேறு தொழில் வசதிகள் தேடவேண்டும்; (4) உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் புதிய முறைகளைக் கையாளவேண்டும். இவ்வழிகளை உடனடியாகக் கடைப்பிடித்தாற்றான் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம்.

அடுத்ததாக, இலங்கையின் சனத்தொகையில் ஏறக்குறைய 50 வீதத்தவர் விவசாயிகளாக இருக்கின்றனர் எனக் கூறினோம். இவர்களில் பெரும்பாலோருக்குச் சொந்தமான நிலம் ஒரு

ஞண்டுகூட இல்லை. 1950-ம் ஆண்டு எடுத்த புள்ளி விபரத்தின் பிரகாரம், விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் குடும்பங்களில் 26·3 வீதத்தவருக்கு நிலமில்லை. மேலும் 31·4 வீதத்தவர் ½ ஏக்கர் நிலமுடையவராகவே இருக்கின்றனர். இதனுல், இலங்கையிலுள்ள விவசாயிகளில் பெரும்பாலானேர் நிலமற்ற வறிய விவசாயிகளாவர். இதன் விபரத்தைக் கீழே காண்க.

## (1) விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் குடும்பங்களுக்குச் சொந்தமான நிலப்பரப்பு விபரம் — 1950.

| நிலப்பரப்பளவு | முழு குடும்பங்களின் விகிதம் |
|---|---|
| நிலமில்லாதவர் | 26 · 3 % |
| 0 — ½ ஏக்கர் | 16 · 0 % |
| ½ — 1 ,, | 11 · 8 % |
| 1 — 2 ,, | 15 · 0 % |
| 2 — 3 ,, | 6 · 0 % |
| 3 — 4 ,, | 9 · 0 % |
| 4 — 5 ,, | 4 · 1 % |
| 5 ,, க்குமேலே | 11 · 8 % |
| | 100 · 0 %. |

(செஷனல் பேப்பர், XIII, 1952 லிருந்து தொகுக்கப்பட்டது)

## (2) நெற்காணியுடையவரின் விகிதம், 1950.

| பரப்பளவு | நெற்காணியுடைய விகிதத்தவர் |
|---|---|
| 0 — ½ ஏக்கர் | 31 · 4 % |
| ½ — 1 ,, | 32 · 8 % |
| 1 — 2 ,, | 21 · 0 % |
| 2 — 5 ,, | 11 · 1 % |
| 5 — 10 ,, | 2 · 6 % |
| 10 ,, க்குமேலே | 1 · 1 % |
| | 100 · 0 % |

(செஷனல் பேப்பர் XIII, 1952)

மேலே கொடுக்கப்பட்ட முழுப் புள்ளி விபரத்திலிருந்து 1 ஏக்கர் நிலமுடைய குடும்பங்கள் 100-ற்கு 54·1 வீதத்தவர் என்னும் 1 ஏக்கர் நெற்காணியுடையவர் 100-ற்கு 64·2 வீதத்தவர் எனவும் அறியலாம். இத்தொகையினரில் நிலமில்லாதவர்களின் தொகை மிகவும் கூடுதலாக இருக்கின்றது. இதன்காரணமாகப் பல பிரச்சினைகள் உள. இவற்றுள் நிலமில்லாதவரின் பிரச்சினை மிகவும் முக்கியமான பிரச்சினையாகும். வருடா வருடம் இலங்கையின் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டு போகும்பொழுது நிலமற்றவர்களின் தொகையும் அதிகரித்துக் கொண்டே போகும். நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதாயின் அரசாங்கம் கையாளும் கொள்கையை இன்னும் தீவிரமாகக் கையாண்டாற்றான் தீரும். ஆனால், இவர்களுக்குக் கொடுக்கக்கூடிய நிலம் கட்டுமட்டாக இருப்பதினால், நிலத்தைப் பெறுவதற்காக நடாத்தப்படும் போட்டி பெரும் போட்டியாக இருக்கின்றது. மேலும் நிலமற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய நிலம் வட-கீழ்மாகாணங்கள், வட மத்திய மாகாணம், ஊவாமாகாணம் ஆகிய மாகாணங்களிலேயே கூடுதலாக இருப்பதினால், இம்மாகாணங்களில் நிலத்தைப் பெற

பல்லாயிரக்கணக்கானோர் போட்டியிடுகின்றனர். நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுக்கும் பிரச்சினை ஒரு தேசியப்பிரச்சினையாகும். இதனை எவ்விதத்தாலும் தீர்ப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டும்.

நெற்காணியுடையவர்களின் புள்ளி விபரத்தை அவதானிக்கும்பொழுது, 2 ஏக்கர் நெற்காணியுடையவர்கள் 100-க்கு 85·2 % எனத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. எனவே, விவசாயிகளில் பெரும் பாகத்தவர் மிகவும் வறிய விவசாயிகளாக இருக்கின்றனர். இரண்டு ஏக்கருடைய ஒரு விவசாயி இரு போகத்திற்கும் நெல் பண்படுத்தினால் சராசரியாக 120 புசல் நெல் மட்டுமே விளையும். எனவே, இவனின் வருட வருமானம் சராசரியாக 1440 ரூபாயாகவே இருக்கும். இவ் வருமானம் அவனுக்குப் போதாது. மேலும், 2 ஏக்கருக்குக் குறைவான நெற்காணியுடையவர்கள் மிகவும் வறியவர்களாக இருப்பதினால் அவர்கள் கூடுதலான மூலதனத்தை இட்டு உற்பத்தியைப் பெருக்க முடியாத நிலையில் வாழ்கின்றனர். அத்துடன் நெற்காணியற்ற விவசாயிகள் குத்தகைக்கு நிலத்தைப் பண்படுத்தும்பொழுது, குத்தகையைக் கொடுத்த பின்னர் செலவு செய்த தொகையையும் பெற முடியாத அவல நிலையிலேயே இருக்கின்றனர். எனவே, விவசாயிகளில் பெரும் பாகத்தவர் நிலமற்றவர்களாக அல்லது மிகவும் குறைவான நிலப்பரப்புடையவராக இருப்பதுடன் அவர்களுடைய வருமானத்தைக் கொண்டு சீரான வாழ்க்கையை நடாத்த முடியாதவர்களாக இருக்கின்றனர் எனலாம்.

நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் கொடுப்பதுடன் விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகளையும் கையாளல் வேண்டும். விவசாயிகளின் சராசரி வருமானம் அதிகரிப்பதற்கு நெல் உற்பத்தி அதிகரிக்கவேண்டும்; இதற்கு புதிய முறைகளைக் கையாளவேண்டும். ஆனால், புதிய விஞ்ஞான முறைகளைக் கையாள்வதற்கு கூடிய முதல் அவசியமாக இருப்பதுடன் பண்படுத்தப்படும் நிலப்பரப்பும் கூடுதலாக இருக்கவேண்டும். இந்நிபந்தனையை இலங்கையிலுள்ள விவசாயி

களால் தீர்க்கமுடியாது. ஏனெனில் அவசியமான இரண்டும் அவர்களிடம் இல்லை. ஆகவே, இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே ஒரு வழி உண்டு. அதாவது விவசாயிகள் தமது நிலத்தை ஒன்றாகச் சேர்த்துக் கூட்டுறவு முறையிலே (Co-operative Farm) பண்படுத்தலாம். இதனால், மூலதனம் கூடும், இயந்திரங்களை இலகுவாக உபயோகிக்க முடியும், புதிய முறைகளைக் கையாளலாம், தொழில் சக்தி அதிகரிக்கும். மேலும், நெல் உற்பத்தி செய்வதுடன் பால்பண்ணை, கோழிப்பண்ணை போன்றனவும் செய்யப்பட்டால் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கச் செய்யலாம். இது ஒரு வழி. இவ்வாறாக உபயோகிக்கத் தகுந்த வழிகளை உபயோகித்து விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கவேண்டும்.

விவசாய உற்பத்தியில் நெல் உற்பத்தி மிகவும் முக்கியமானது. இதை விடுத்து வெண்காயம், புகையிலை, மிளகாய், காய்கறி, மிளகு போன்ற பொருளுற்பத்தியிலும் பலர் ஈடுபடுகின்றனர். இத் தொழில்களால் வரக்கூடிய வருமானம் போதுமானதாக இல்லாதமையால் வேறு தொழில்களையும் செய்கின்றனர். இருப்பினும், இத்தொழில்களில் ஈடுபடுகின்றவர்களுடைய வருமானம் அவர்களின் தேவைக்குப் போதுமானதல்ல என்றே குறிப்பிடவேண்டும்.

மேலே குறிப்பிட்ட விவசாய உற்பத்தியை விட இலங்கையின் பொருளாதாரத்தில் பிரதானமாக விளங்குவது தேயிலை, றப்பர், தென்னை ஆகியவைகளே. இலங்கையின் தேசிய வருமானத்தில் பெரும் பாகத்தை இம் மூன்றும் கொடுக்கின்றன. 1954-ம் ஆண்டு இலங்கையிலிருந்து பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதனால் வந்த வருமானத்தில் தேயிலை, றப்பர், தென்னம்பொருள்கள் ஆகியவற்றால் வந்த வருமானம் 96·3 வீதமாகும். 1955-ல் 96·4 வீதமாகக் கூடியது. இம்மூன்றினுள், தேயிலையினால் வந்த வருமானம் 63·8 வீதமும், றப்பரினால் 18·7 வீதமுந் தென்னம்பொருள்கள் 13·9 வீதமாகும். இவற்றைவிட கொக்கோ, காரீயம் (Plumbago), 'பப்பேயின்' (Papain – காய்ந்த பப்பாசிப்பால்), கறுவா, பாக்கு முதலிய பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

1955-ல் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் விபரம் பின்வருமாறு :

| | தொகை (ஆயிரத்தில்) | பெறுமதி (ஆயிரத்தில்) | முழுத்தொகையில் வீதம் |
|---|---|---|---|
| தேயிலை | 3,62,235 று. | ரூ 11,94,227 | 63·8 |
| றப்பர் | 2,09,355 ,, | ரூ. 3,50,348 | 18·7 |
| தே. எண்ணை | 1.945 அந்தர் | ரூ. 1,13,291 | 6·1 |
| கொப்பரு | 1,367 ,, | ரூ. 57,281 | 3·1 |
| தே. பூ. | 1,157 ,, | ரூ. 54,807 | 2·9 |
| ஏனைய தெ. பொருள்கள் | | ரூ. 33,973 | 1·8 |
| கொக்கோ | 50 ,, | ரூ. 10,668 | 0·6 |
| கறுவா | 42 ,, | ரூ. 12,033 | 0·6 |
| பாக்கு | 198 ,, | ரூ. 6,202 | 0·3 |
| 'பப்பேயின்' | 258 று. | ரூ. 2,090 | 0·1 |
| ஏனையவை | | ரூ. 33,845 | 1·8 |
| | | | 100·0. |

இந்தப் புள்ளி விபரத்திலிருந்து தேயிலை, றப்பர், தென்னம்பொருள்கள் ஆகியவை எமது தேசீய செல்வத்தைப் பெருக்குவதற்கு உதவுகின்றன என்பது வெளிப்படை. எனவே, அப்பொருள்களின் உற்பத்தி விபரத்தை அறிவது நலம்.

| | பண்படுத்தப்படும் பரப்பளவு (ஏக்கர்) | உற்பத்தி தொகை |
|---|---|---|
| தேயிலை | 5,65,518 | 38,00,12,637 று. |
| றப்பர் | 6,60,985 | 93,830 தொன் |
| தென்னை | 10,70,942 | 2,58,20,00,000 தேங்காய்கள் |

இந்த மூன்று துறைகளிலுமிருந்து வரக்கூடிய வருமானம் நிலையானதல்ல. வெளிநாடுகளில் இப்பொருள்களுக்குக் கிடைக்கக்கூடிய விலையிலேயே அவற்றின் வருமானம் தங்கியிருக்கின்றது. வெளிநாடுகளில் இப்பொருள்களின் விலை குறையுமாயின் இலங்கையின் வருமானம் குறையும்; விலைகூடுமாயின் வருமானம் அதிகரிக்கும். ஆகவே, இப்பொருள்களுக்குக் கிடைக்கும் விலையிலேயே இலங்கையின் தேசிய செல்வத்தின் ஏற்றத் தாழ்வு தங்கியுள்ளது எனலாம். இந்நிலை இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததல்ல. ஆதலினால், இம்மூன்று துறைகளிலுமிருந்து வரக்கூடிய வருமானத்தை இலங்கை நம்பிவாழாது வேறு துறைகளிலுமிருந்து வரக்கூடிய வருமானத்தைப் பெருக்க முயலவேண்டும். மேலும், இலங்கையிலுள்ள தொழிலாளர்களில் பெரும்பகுதியினர் இம்மூன்று துறைகளிலுமே கடமையாற்றுகின்றனர். இலங்கையிலுள்ள தொழிலாளர்களுள் ஏறக்குறைய 90 வீதத்தவர் தேயிலை, றப்பர், தென்னந்தோட்டங்களிலேயே கடமையாற்றுகின்றனர். ஏனைய 10 வீதத்தவரும் பொருளுற்பத்தி சாதனங்கள், இயந்திர சாலைகள் முதலியவற்றில் கடமையாற்றுகின்றனர். ஆதலினால், தேயிலை. றப்பர், தென்னந்தோட்டங்கள் இலங்கையின் தேசிய வருமானத்திற்குப் பெரும்பாகத்தைக் கொடுத்துதவுவதுடன் பெரும் தொகையான மக்களுக்குத் தொழில் வசதியும் கொடுக்கின்றன எனலாம்.

இலங்கையின் கூடிய பாகத்தினர் விவசாயத்தொழிலிலும், தோட்டங்களிலும் கடமையாற்றுகின்றனர் எனக் கூறினோம். இவர்களைவிட இன்னும் பலர் வேறு தொழில்களிலும் – உதாரணமாக, போக்குவரத்து சேவை, தொழிற்சாலைகள், வியாபாரம் வர்த்தகம், அரசாங்க சேவையும் மற்றும் உத்தியோகங்களிலும் – ஈடுபடுகின்றனர். இத்துறைகளில் கடமையாற்றுகின்றவர்களின் வீதம் முறையே 9%, 6%, 11%, 16% ஆகும். ஏனைய 58%விவசாயத்திலும் மற்றும் தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். எனவே, தொழில் செய்கின்றவர்களில் விவசாயத் தொழிலை நீக்கினால், உத்தியோக சேவையாலேயே கூடுதலான மக்கள் உழைக்கின்றனர். இத்தகைய அமைப்பின்கீழ் விவசாயி

களின் தொகை கூடுதலாக இருப்பதுடன் தொழிலாளருடைய தொகை குறைவாக இருக்கின்றது. இதன் காரணமாகவே இலங்கையில் வேலையில்லாத் திண்டாட்டமும் பெரும் பிரச்சினை யாக இருக்கின்றது. இலங்கையில் வேலையற்றோரை இரு பிரி வினராகப் பிரிக்கலாம் – வேலையற்றவர்கள், குறைந்த உழைப் புடையோர் (வருடம் முழுவதிற்கும் போதிய வேலையற்றவர்கள் (Under Employment). இவர்களின் தொகையைச் சரிவரக் கூற முடியாவிட்டாலும் மத்திய வங்கியின் (Central Bank) உத்தேசத்தின் பிரகாரம் இவர்களின் தொகை 5 இலட்சத்திற்கு மேலதிகமாக இருக்குமெனலாம். ஆகவே, வேலையற்றவர் களுக்கு வேலை தேடும் பிரச்சினை மிகவும் முக்கியமான பிரச் சினையாக இருக்கின்றது. மேலும், இலங்கையரின் வருமானம் மிகவும் குறைவாகவே இருக்கின்றது. இலங்கையரின் சராசரி வருமானம் ஒரு மாதத்திற்கு ரூபா 35(!) என்றால் வாழ்க் கைத் தரம் எவ்வளவு கீழ்த்தரமான நிலையிலிருக்கின்றது எனக் கூறவேண்டியதில்லை. வருமானமெடுப்பவரின் விபரத்தைக் கணக்கிடும்பொழுது மாதம் 100 ரூபாய்க்குக் குறைந்த வரு மானமுடையவர்களின் தொகை 70%; ரூபாய் 100க்கும் 350க்கு மிடையே வருமானமுடையவர்களின் தொகை 27%; ரூபாய் 350 க்கு மேல் வருமானமுடையவர்களின் தொகை 3% என்றால் வறியவர்களின் தொகை எவ்வளவு எனக் கூறத் தேவையில்லை. இதன் பிரகாரம் விவசாயிகளும் சகலவிதமான தொழிலாளரும், குறைந்த வருமானமுடைய சேவையாளருமே மாதம் 100 ரூபாய்க்குக் குறைவான வருமானமுடையவர் எனலாம். ஆதலினால், வருமானத்தை உயரச் செய்து மக்களின் வாழ்க் கைத் தரத்தை உயர்த்துவது ஒரு முக்கியமான பிரச்சினை யாகும்.

மேலே குறிப்பிட்டதன் பிரகாரம் வேலையில்லாத் திண் டாட்டத்தையும் ஒழித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்படல்வேண்டும். இலங்கையின் பொருளாதாரம் கடந்த 50 வருடங்களாக எவ்வித மாற்றமு மடையாது ஸ்தம்பித்த நிலையிலேயே இருக்கின்றது. இக் காலத்தில் தொழிற்சாலைகள் இன்று இரண்டு இங்குமங்குமாகத்

தோன்றினும் அவை இலங்கையின் தேவைக்குப் போதுமான தல்ல. மேலும், இலங்கையின் பொருளாதாரம் மாற்றமடைந்து முன்னேற்றமடையாமல் ஸ்தம்பித்த நிலையிலிருக்கும்பொழுது, சனத்தொகை இன்று அதிகரித்துக்கொண்டு போவதுபோலவே இனிமேலும் அதிகரித்துக்கொண்டு போகுமாயின் வாழ்க்கைத் தரம் மேலும் குன்றும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆகவே ஸ்தம்பித்த நிலையிலிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மாற்றி முன்னேற்றமடையச் செய்தாற்றான் இலங்கையை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து இலங்கையரின் வாழ்க் கைத் தரத்தை உயரச்செய்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கலாம். இதற்கு வழி என்ன?

பொருளாதார நிபுணர்கள், எத்தகைய அபிப்பிராயமுடைய வர்களாக இருந்தாலும், ஒரு வழியையே எடுத்துக் காட்டுகின்ற னர். அதாவது தொழிற்சாலைகளை அமைத்து இலங்கையின் பொருளாதாரம் தொழிற்சாலைப் பொருளாதாரத்தில் (Industrial Economy) ஆதாரமுடையதாக இருத்தல் வேண்டுமெனக் கூறுகின்றனர். இப்பொழுது இலங்கையில் தொழிற்சாலைகள் இல்லை என்றே கூறலாம். ஏனெனில் இயங்குகின்ற தொழிற் சாலைகளின் உற்பத்தியின் பெறுமதி தேசீய பொருளுற்பத்தி யில் – 490 கோடி ரூபாய் – 5% கூட இல்லை என்றால் தொழிற் சாலை உற்பத்தி எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்துள்ளது எனக் கூறவேண்டியதில்லை. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற் சாலைகளில் பல, யுத்தகாலத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இதனால், சீரானமுறையில் அவை அமைக்கப்படவில்லை. மேலும், யுத்தம் ஒழிந்த பின்னர் வெளிநாடுகளிலிருந்து மலிவான நல்ல பொருள் கள் இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக, அவசரமவசர மாக அமைக்கப்பட்ட தொழிற்சாலைகளில் உற்பத்திசெய்யப் பட்ட பொருள்கள் வெளிநாட்டுப் பொருள்களுடன் போட்டியிட முடியாததினால் அத்தொழிற்சாலைகளில் பல மூடப்பட்டன. இவற்றைவிட, சீமேந்து தொழிற்சாலை, பிளைவூட் தொழிற் சாலை, பேப்பர் (காகிதம்) தொழிற்சாலை, கிளாஸ் தொழிற்சாலை, செறமிக் (கோப்பை) தொழிற்சாலை முதலிய தொழிற்சாலை களே உள. எனவே, இலங்கையின் பொருளாதாரம் மாற்ற மடைந்து முன்னேறவேண்டுமேயாயின் தொழிற்சாலைகள் பல அமைக்கப்பட வேண்டும். இதன் அத்தியாவசியத்தை வற்புறுத் திக் கூறவேண்டிய அவசியமே இல்லை.

## 3. தொழிற்சாலை மயமாக்குதல்

இலங்கையில் தொழிற்சாலைகள் அமைக்கப்படவேண்டும், ஆனால் மூலப்பொருள்கள் இலங்கையிலில்லை; அதற்கு வேண்டிய மூலதனம் போதிய அளவு இல்லையெனப் பலர் கூறுவார்கள். ஆனால் சிலர் மூலப் பொருளும், மூலதனமும் இருந்தாலும் தொழில்நுட்ப அறிவுடையோர் இல்லையெனக் கூறுவர். இவ்வாறாகப் பல நியாயங்களை இதுகாறும் ஓதியதினால் இலங்கையில் தொழிற்சாலைகளை அமைக்க முடியாது என்னும் எண்ணம் பலரின் மனதில் ஊறிக்கிடக்கின்றது.

மேலே குறிப்பிட்ட காரணங்களுள் முதலாவதாகக் குறிப்பிட்ட மூலப்பொருள்பற்றி, இலங்கையில் என்னென்ன மூலப் பொருள்கள் எவ்வெவ்வளவிற்கு இருக்கின்றன என இதுவரையிலும் ஆராய்ச்சி செய்யப்படவில்லை. எனவே புதைந்து கிடக்கும் மூலப் பொருள்கள் என்னென்ன எனவும் அவை எங்கெங்கிருக்கின்றன எனவும் ஆராய்வது முக்கியமாகும். இத்தகைய ஆராய்ச்சி செய்யப்பட்டாற்றான் இலங்கையில் அமைக்கக்கூடிய தொழிற்சாலைகள் எவையெனத் திட்டமிட்டு அமைக்கக்கூடியதாயிருக்கும். 1956-ம் ஆண்டு எம். இ. பி. கட்சி அரசாங்கத்தைக் கைப்பற்றியபொழுது, தொழிற்சாலை மீன்பிடி மந்திரியாக நியமிக்கப்பட்ட கௌரவ திரு. P. H. W. டி சில்வா அவர்கள் தொழிற்சாலை வளர்ச்சிக்காக தான் கையாளவிருக்கும் வேலைத் திட்டத்தை வெளியிட்டார். அதில் நிலத்திற்குள் மறைந்து கிடக்கும் மூலப் பொருள்கள் எவை உற்பத்தி செய்யக்கூடிய மூலப் பொருள்கள் எவையென அறிவது முக்கியம் எனவும் கூறினார். இதுவரை இத்தகைய ஆராய்ச்சி நடாத்தப்படவில்லை. எனினும், ஆராய்ந்தறிந்ததை ஆதாரமாகக்கொண்டு பல தொழிற்சாலைகள் உடனடியாக ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கின்றன.

இலங்கையில் ஆரம்பிக்கக்கூடிய தொழிற்சாலைகள் என்ன என்ற முழு விபரத்தையும் குறிப்பிட இயலாததாயினும் பொதுவான அபிப்பிராயங்களை இங்கு கூறக்கூடியதாக இருக்கின்

றது. இலங்கையில் அமைக்கக்கூடிய தொழிற்சாலைகளைக் கீழ்க் காணும் பிரிவுகளாகப் பிரித்து அவ்வப்பகுதிகளில் அடயகிய தொழிற்சாலைகளைக் குறிப்பிடுவது சுலபமாகும். அவற்றின் விபரம் பின்வருமாறு:-

1. **விவசாயத் தொழிற்சாலைகள்:** (Agricultural Industries) இத்தொழிற்சாலைகள் விவசாய உற்பத்தியை வளரச் செய் வதற்கு உதவியாக இருக்கும். உதாரணமாக, செயற்கை உரத் தொழிற்சாலைகள்; விவசாயத் துறையில் உபயோகிக்கப்படும் ஆயுத தொழிற்சாலைகள் முதலியனவாகும். இத்தொழிற்சாலை களை அமைப்பதற்குப் போதிய வசதிகளுண்டு.

2. **உணவுத் தொழிற்சாலைகள்:** (Food Industries) மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய தொழிற்சாலை களாகும். இத்தொழிற்சாலைகள் பல ஆரம்பிக்க இடமுண்டு. உதாரணமாக சீனித் தொழிற்சாலைகள், மீன், பழவகைகள் போன்றவற்றைப் பழுதடையாவண்ணம் டின்களில் அடைக்கும் தொழிற்சாலைகள்; சவ்வரிசித் தொழிற்சாலை (மரவள்ளியில் இருந்து செய்யலாம்); முதலிய பல விதமான தொழிற்சாலை களை அமைக்கலாம் இவற்றுள் சீனித் தொழிற்சாலை, எண் ணெய், கொழுப்பு தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன.

3. **உபயோக தொழிற்சாலைகள்:** (Consumer Industries) மக்களின் அன்றாட உபயோகத்திற்கு அவசியமான பொருள்களை உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகளாகும். குடை தொழிற்சாலைகள்; 'பிளாஸ்டிக்' (Plastic) தொழிற்சாலைகள்; 'பற்றறி' (Battery) தொழிற்சாலைகள்; 'பைசிக்கில்' (துவிச் சக்கர வண்டி) தொழிற்சாலைகள்; மின்சார 'பல்ப்' (Bulb) தொழிற்சாலைகள் முதலியனவற்றை அமைக்க முடியும்.

4. **இரசாயன தொழிற்சாலைகள்:** (Chemical Industries) இரசாயன பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள். மருந்துத் தொழிற்சாலைகள், டி. டி. ரி. (D. D. T.) தொழிற் சாலைகள் போன்றவைகளாகும்.

5. பாரப்பொருள் தொழிற்சாலைகள்: (Heavy Industries) 'கார்' (Car) தொழிற்சாலைகள், முதலிய பெரிய தொழிற் சாலைகளாகும். இத்தகைய தொழிற்சாலைகள் அமைக்கமுடியுமோ எனத் தீர ஆராய்ந்துதான் செய்யவேண்டும்.

எனவே, மேலே குறிப்பிட்ட ஐந்து விதமான தொழிற் சாலைகளுள் முதல் நான்கு பகுதிகளிலும் அடங்கிய தொழிற் சாலைகள் பலவற்றை இலங்கையில் ஆரம்பிப்பதற்குப் போதிய வசதியுண்டு. ஆனால், எந்தத் தொழிற்சாலைகள் முதல் ஆரம் பிக்கப்படவேண்டும்; அவற்றை ஆரம்பிப்பதற்கு எவ்வளவு மூலதனம் இடவேண்டும்; அத்தொழிற்சாலைகளை எங்கு ஆரம் பிக்க வேண்டும்; அவற்றில் வேலை செய்வதற்கு வேண்டிய தொழிலாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள், நிர்வாகிகள் முதலியோர் எத்தனைபேர் தேவையெனத் திட்டமிடவேண்டும். இவ்வாறு சகல விஷயங்களையும் தீர ஆராய்ந்து திட்டத்தின் பிரகாரம் தொழிற்சாலைகளை அமைத்தாற்றான் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கலாம். ஆகவேதான் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை எல்லையாகக்கொண்டு அதனை அடைய முயலும்போது வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இடப்படும் திட்டமாகிய பொருளாதாரத் திட்டம் (Economic Plan) ஒன்றை அமைக்கவேண்டும். அதன்பிரகாரம் செய்துமுடிக்கவும் வேண்டும்.

பொருளாதாரத் திட்டம் முதன் முதலாக சோவியற் ருஷ்யாவில் வரையப்பட்டு அமுல் நடாத்தப்பட்டது. இத் திட்டத்தை ஆரம்பித்த காலத்திலும் அதன் பின்னரும் பொரு ளாதாரத் திட்டத்திற்கு எதிராகப் பல கண்டனங்கள் எழுந் தன. இருப்பினும், அவற்றைப் பொருட்படுத்தாது ருஷ்ய அரசாங்கம் 5 வருடத் திட்டங்களை வரைந்து அத்திட் டங்களை கஷ்டப்பட்டு அமுல் நடத்தியது. இதன் பயனாக, சோவியற் ருஷ்யாவின் பொருளாதாரம் ஏறக்குறைய 20 மடங் காகக் கடந்த 30 வருடங்களுள் வளர்ச்சி அடைந்தது. இது இவ்வாறிருக்க, பொருளாதாரத் திட்டத்தை ஆதரிக்கும் நிபுணர்

களின் தொகையும் வளர்ச்சியடைந்ததுமல்லாமல் இம்முறை ஒன்றினுலேயே பொருளாதார வளர்ச்சியடையாத பிற்போக்கான நாடுகள் முன்னேற்றமடையாலாம் என்ற அபிப்பிராயமும் வலுவடைந்துள்ளது. அத்துடன், இதுவரை பொருளாதாரத் திட்டங்கள் கொம்யூனிஸ்ட் நாடுகளில் கையாளப் பட்டாலும் முதலாளித்துவ முறையை ஒழியாத இந்தியா போன்ற நாடுகளும் பொருளாதாரத் திட்டங்களை வரைந்து அமுல் நடத்துகின்றன. நாமும் 6 வருடத் திட்டத்தை வரைந்தோம், ஆனல் அதனைச் சரிவர அமுல் நடாத்தவில்லை. இப்பொழுது பொருளாதாரத் திட்ட சபை (Economic Planning Council) அமைக்கப்பட்டுள்ளது. ஆனல் பொருளாதாரத்திட்டம் இன்னும் வரையப்படவில்லை. பொருளாதாரத் திட்டத்தை வரைந்து அதன் பிரகாரம் திட்டப்படி செய்துமுடித்து இலங்கையின் பொருளாதாரத்தை வளரச்செய்ய வேண்டும் என்ற அபிப்பிராயம் குடிகொண்டிருக்கும் பொழுது பொருளாதாரத் திட்டம் என்றால் என்னவெனச் சுருக்கமாக அறிவது நலம்.

பொருளாதாரத் திட்டம் ஒரு குறிக்கப்பட்ட கால எல்லையைக் கொண்டதாக இருக்கும். சிலர் 3 வருடங்களுக்குத் திட்டமிடுவர் இன்னும் சிலர் 5 வருடங்களுக்குத் திட்டமிடுவர். இதன் கால எல்லை இத்தனை வருடங்களைக் கொண்டதாய் இருக்க வேண்டும் என நிபந்தனை இல்லை. பொருளாதாரத் திட்டம் ஒரு வருடத்திற்குமிடலாம் ஆனல் இவ்வருட எல்லைக்குள் இடப்பட்ட திட்டத்தைச் செய்துமுடிக்க இயலாததன் காரணத்தாலும், நியாயமான ஒரு திட்டத்தைச் செய்துமுடிப்பதற்கு நீண்டகாலம் வேண்டுமென்ற காரணத்தாலும், இத்திட்டங்கள் 5 வருடத்திற்கு மேற்பட்ட கால எல்லையுடையனவாக இருந்தால் அதனை மனிதனல் கட்டுப்படுத்தி நடாத்த முடியாது என்றதினுலும் பொருளாதாரத் திட்டங்கள் 5 வருட எல்லையுடையனவாக இருக்கின்றன. அடுத்ததாக, ஆரம்பிக்கவிருக்கும் தொழிற்சாலைகளின் விபரம், அத்தொழிற்சாலைகளின் பெருமை ஆரம்பிக்கப்படும் இடம், அத்தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்காக இடவேண்டிய மூலதனம், அந்த மூலதனத்தைத் தேடும் முறை, தொழிற்சாலைகளைக் கட்டி முடிப்பதற்கு வேண்

டிய கால எல்லை, தொழிற்சாலைகளுக்கு வேண்டிய தொழிலாளர்கள் தொழில்நுட்ப நிபுணர்கள், உற்பத்தி செய்யக்கூடிய ஆக்கப்பொருள்கள் எவ்வளவு என்ற அம்சங்கள் பொருளாதாரத் திட்டத்தில் இடம் பெறும். மேலும், இத்திட்டத்தை அமுல் நடத்துவதினுல் வேலையில்லாத் திண்டாட்டம் எவ்வளவுக்குக் குறையும், பொருளுற்பத்தி அதிகரிப்பதினுல் தேசீய வருமானம் எவ்வளவு வீதத்தால் அதிகரிக்கும், மக்களின் வாழ்க்கைத்தரம் எத்தனை வீதத்தால் அதிகரிக்கும் எனவும் திட்டமிடப்படும். இவ்வாருகப் புதிதாக அமைக்கப்படும் தொழிற்சாலைகள், ஏற்கனவே இருந்த தொழிற்சாலைகள், விவசாயம் ஆகியவை வளர்ச்சியடைவதற்காக ஒரு குறிக்கப்பட்ட எல்லை இடப்பட்டு அவ்வெல்லையை அடைவதே பொருளாதாரத் திட்டத்தின் நோக்கமாகும். எனவே, குறிக்கப்பட்ட எல்லையைத் திட்டத்தின் பிரகாரம் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் செய்துமுடிப்பதே பொருளாதாரத் திட்டத்தின் நோக்கமாகும்.

ஒரு பொருளாதாரத் திட்டம் சகல அம்சங்களையும் கொண்டதாக இருக்கும். தொழிற்சாலை வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, கல்வி விருத்தி, வரவு செலவு, சேமிப்பு, மூலதனம், சமூக சேவைகளின் வளர்ச்சி முதலிய சகல துறைகளைக் கொண்டதாக இருப்பதுடன் எல்லாப் பகுதிகளையும் கட்டுப்பாடான முறையிலே நாட்டின் வளர்ச்சியை ஓங்கச் செய்ய முயலும். சகல அம்சங்களையும் ஒன்றுதிரட்டி ஒரு குறிக்கப்பட்ட காலத்திற்குத் திட்டமிடும்பொழுது அத்திட்டம் திட்டவட்டமான திட்டமாக இருக்கமுடியாது. திட்டமிட்ட பின்னர், அத்திட்டத்தை நடைமுறையில் கொண்டுவரும்பொழுது மாற்றங்கள் செய்யவேண்டிய நிலைமை ஏற்படும். ஆதலினுல் பொருளாதாரத் திட்டங்கள் மாற்றம் செய்யமுடியாத கடினமான திட்டங்களல்ல. ஆனுல் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பொதுவான கொள்கைகளை ஆதாரமாகக்கொண்டு மாற்றம்செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும். பொருளாதாரத் திட்டம் ஒன்றை மட்டும் நடைமுறையிலே கொண்டுவந்தாற் போதாது. பல திட்டங்களை அமுல் நடத்தினுற்ருன் பயன் ஏற்படும்.

பொருளாதாரத் திட்டம் முதன் முதலாக ருஷ்யாவில் 1929-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இத்தகைய திட்டங்களைக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் சீனவும் கையாளுகின்றன. இந்நாடுகளில் முதலாளித்துவ முறை ஒழிக்கப்பட்டமையினல் பொருள் உற்பத்தி சாதனங்கள் யாவும் அரசின், அதாவது மக்களின், சொத்தாக இருக்கின்றன. ஆதலினல் பொருளாதாரத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு உற்பத்திசாதனங்கள் யாவும் அரசினுடையதாக இருக்கவேண்டும் எனக் கூறப்படுகின்றது. இருப்பினும், முதலாளித்துவ முறை இயங்குகின்ற இந்தியாவிலும் பொருளாதாரத் திட்டத்தை இட்டு அதன் பிரகாரம் தமது வேலைகளைச் செய்துமுடிக்கின்றனர். ஆகவே, உற்பத்திசாதனங்கள் அரசின் சொத்தாக இருக்கவேண்டியதில்லை எனவும் கூறப்படுகின்றது. அவ்வாறிருப்பின், முதலாளிகள் பொருளாதாரத் திட்டத்தின் நோக்கங்களுக்குக் கட்டுப்பட்டு நடத்தல்வேண்டும். இந்நிபந்தனை மிகவும் முக்கியமானதாகும். இல்லையேல் முதலாளிகளுக்கும் அரசிற்குமிடையே போட்டியும் வேற்றுமையும் எழுந்து திட்டத்தின் நோக்கங்கள் முறியடிக்கப்படும் என்பது வெளிப்படை. ஆதலினல் முதலாளிகள் அரசுடன் ஒன்றுசேர்ந்து திட்டத்தின் பிரகாரம் செய்து முடித்தால் முதலாளித்துவ முறையிலும் பொருளாதாரத் திட்டத்தை அமைக்கலாமெனக் கூறப்படுகின்றது.

இத்தகைய பொருளாதாரத் திட்டத்தின் அவசியத்தை வற்புறுத்திக் கூறவேண்டியதில்லை. திட்டமின்றி எக்கருமத்தையும் செய்யமுடியாது. எனவே சர்வ அம்சங்களையும் கொண்ட திட்டம் ஒன்றின் மூலமாக நாட்டின் முன்னேற்றத்தை நாடுவதே பொருளாதாரத் திட்டத்தின் நோக்கமாகும். இத்தகைய திட்டத்தின் மூலமாக இலங்கையின் பொருளாதாரத்தை வளரச் செய்யவேண்டும் என்ற அபிப்பிராயம் இப்பொழுது வலுப்பெறுகின்றது. இதற்காக வேண்டிய திட்டங்களை வரைவதற்காகப் பொருளாதாரத்திட்ட சபை அமைக்கப்பட்டுள்ளது. இச்சபையினல் வரையப்படும் திட்டத்தின் பிரகாரம் விவசாயம், தொழிற்சாலை ஆகிய பகுதிகளை வளரச்செய்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசாங்கம் தீவிரமுயற்சி செய்யும் எனப் பலர் எதிர்பார்க்கின்றனர்.

இலங்கையின் பொருளாதாரம் ஸ்தம்பித்த நிலையில் இருக்கின்றது என்றும் ஜனத்தொகை வருடா வருடம் வளர்ச்சியடைந்து கொண்டே போகின்றபடியினல் தொழிற்சாலை பலவற்றையும் விவசாய விருத்தியையும் ஒரு திட்டத்தின் பிரகாரம் வளரச்செய்வது அவசியம் என்றும் கூறினேம். இவ்வாறு ஒரு திட்டத்தை அமுல் நடத்துவதற்கு மூலதனம் வேண்டும். யூ. என். பி. ஆட்சியிலிருந்த காலத்தில், அதாவது 8 வருட காலத்தில், சுமார் 275·7 கோடி ரூபா பொருளாதார முன்னேற்றத்திற்காகச் செலவு செய்யப்பட்டது. இத்தொகை பெரும் தொகையாக இருப்பினும் அதனல் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை என்றே கூறவேண்டும். இதற்குத் திட்டமின்றிச் செலவு செய்தது ஒரு காரணம். அதைவிடச் செலவு செய்த பணத்தில் பெரும்பகுதி விவசாய விருத்திக்காகவே செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், செலவு செய்யப்பட்ட பணத்தில் ஒரு பகுதி வீண்தனமான முறையிலும் விரயம் செய்யப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் எமது தேசிய வருமானத்தில் வருடம் 5 அல்லது 6 வீதம் பணம் முதலீடு செய்யப்பட்டு பொருளுற்பத்தியைப் பெருக்குவதற்காக உபயோகிக்கப்படுகின்றது. ஆனல், ஜனத்தொகை அதிகரித்துக் கொண்டு போகும் விகிதத்திற்கு ஏற்ப பொருளுற்பத்தி அதிகரிக்கவேண்டுமேயாயின் தேசிய வருமானத்தில் 10 வீதம் முதலீடு செய்யப்படவேண்டும். அவ்வாறு முதலீடு செய்யப்பட்டால் நாம் இன்றைய வாழ்க்கைத் தரத்தைக் குறையவிடாது தடுக்கக்கூடியதாயிருக்கும். எனவே, வாழ்க்கைத் தரத்தை இரண்டு மடங்காகப் பெருக்கவேண்டுமேயாயின் தேசிய வருமானத்தில் 20 வீதம் முதலீடு செய்தல் வேண்டும். ஆதலினலே, பொருளாதாரத் திட்டமிட்டு அதன் பிரகாரம் திட்டத்தைச் செய்து முடிப்பதாயின் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய உற்பத்தி சாதனங்களை அமைப்பதற்குத் தேவையான மூலதனம் பன்மடங்கு கூடுதலாக வேண்டும். இதனை எவ்வாறு தேடுவது?

மூலதனம் பல துறைகளிலிருந்து பெறமுடியும். இது வரைகாலமும் மூலதனமுடைய முதலாளிகளே முதலீடு செய்து வந்தார்கள். ஆனால், இலங்கை போன்ற பின்தங்கிய நாடுகளில் (Backward Countries) முதலீடு செய்து தொழிற்சாலைகளை அமைத்து ஆக்கப்பொருள்களை உற்பத்தி செய்யும்பொழுது, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஆக்கப் பொருள்களுடன் போட்டியிடமுடியாத காரணத்தினால் முதலீடு செய்யத் தயங்குகின்றனர், முதலாளிகள். ஆதலினாற்றான் அரசாங்கம் புதிய தொழிற்சாலைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் எனக் கோருகின்றனர். அவ்வாறு பாதுகாப்பு அளிக்கப்பட்டபொழுதிலும், முதலாளிகள் போதிய முதலீடு செய்யத் தயங்குகின்றனர். இக்காரணத்தினாற்றான், அரசாங்கம் முன் வந்து முதலீடு செய்யவேண்டியதாக இருக்கின்றது. யார் முதலீடு செய்தாலும், முதலீடு செய்யக்கூடிய வழிமுறைகள் பல. அவற்றுள் முக்கியமானவை :

(1) உள்நாட்டு முதலாளிகள் தனித்து முதலீடு செய்யலாம்.

(2) உள்நாட்டு முதலாளிகள் வெளிநாட்டு முதலாளிகளுடன் கூடி முதலீடு செய்பலாம்.

(3) உள்நாட்டு முதலாளிகளும் அரசாங்கமும் கூடி முதலீடு செய்யலாம்.

(4) வெளிநாட்டு முதலாளிகள் தனித்து முதலீடு செய்யலாம்.

(5) வெளிநாட்டு முதலாளிகளும் அரசாங்கமும் கூடி முதலீடு செய்யலாம்.

(6) அரசாங்கம் தனித்து முதலீடு செய்யலாம்.

மேலே குறிக்கப்பட்டுள்ள முறைகளைக் கையாளும் பொழுது, முதலீடு செய்வதற்கு வேண்டிய மூலதனத்தைத் தேடுவது மிகவும் முக்கியமானதாகும். இதுவரை காலமும் போதிய மூலதனம் முதலீடு செய்யப்பட்டது மிகவும் குறைவாக இருக்கின்றது. இவ்வாறு மூலதனத்தைத் திரட்டி முதலீடு

செய்வதற்கு முதலாளிகள் தயங்குவதால் இக்கடமையை இலங்கை அரசாங்கம் செய்யவேண்டும். ஆகவே, முதலீடு செய்வதற்கு வேண்டிய மூலதனத்தை அரசாங்கம் தேடும் வழிகளை அறிவது நலம்.

(i) செலவு செய்யப்படும் தொகையைச் சிக்கனமாகச் செலவு செய்து சேமித்தல்,

(ii) வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களில் அனுவசியமானவற்றைக் குறைத்தல்,

(iii) சேமிப்பை அதிகரிக்கச் செய்தல்,

(iv) இலாபத்தை வெளிநாட்டு முதலாளிகள் இலங்கையிலிருந்து வெளியே அனுப்பாது இலங்கையிலேயே முதலீடு செய்யச் செய்தல்,

(v) வெளிநாடுகளிலிருந்து கடன் அல்லது உதவி பெறுதல்.

(vi) உலக வங்கி முதலியவற்றிலிருந்து கடன் அல்லது உதவி பெறுதல்,

(vii) வங்கி, இன்சுயரன்ஸ் கொம்பனிகளைத் தேசீயமயமாக்குதல் (Nationalisation).

முதலிய பல வழிகளைக் கடைப்பிடித்தால் எமக்கு வேண்டிய மூலதனத்தை அரசாங்கம் தேடலாம். மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொன்றும் முக்கியமானதாகும். இவற்றைச் சுருக்கமாக விளக்குவது நலம். செலவைச் சிக்கனமாகச் செய்தால், அதாவது இப்பொழுது வீணுக விரயம் செய்வதைக் குறைத்தால், 'கொந்திருக்டர்'மார் கொள்ளை இலாபமடிப்பதைத் தடைசெய்தால் பெரும் தொகையான பணத்தைச் சேமிக்கலாம். அனுவசியமான பொருள்களை இறக்குமதி செய்வதைக் குறைத்தால், எமக்குக் கஷ்டமாயிருப்பினும், மிகவும் முக்கியமான வெளிநாட்டு நாணயத்தைச் சேமிக்கலாம். சேமிப்பு—உதாரணமாக தேசீய சேமிப்பு,—அதிகரிக்கப்படுவதால் அப்பணத்தை மூலதனமாக மாற்றலாம். இலாபத்தை வெளிநாட்

டிற்கு அனுப்பாது தடைசெய்தால் வெளிநாட்டு நாணயத்தைச் சேமிப்பதுடன் அதனை மீண்டும் மூலதனமாக மாற்றலாம். வெளிநாடுகளிலிருந்து பொருளாதார வளர்ச்சிக்காகக் கடன் அல்லது உதவி பெறலாம். கடன் வாங்கினால் அதனை நீண்ட காலத்திற்கும் குறைந்த வட்டியுடன் வருடாவருடம் திருப்பிக் கொடுக்கலாம். வெளிநாடுகளிலிருந்து உதவிபெறும் பொழுது, எவ்வித கட்டுப்பாடுமற்ற உதவியாக இருத்தல் வேண்டும். உலகவங்கி முதலிய தாபனங்களிலிருந்து கடன் பெறலாம். இக்கடன் நீண்டகாலக் கடனாகும். வங்கி, இன்சுயரன்ஸ் கொம்பனி முதலியவற்றைத் தேசிய மயமாக்கினால், முதலீடு செய்வதற்குப் போதிய பணம் அரசாங்கத்தினிடம் இருப்பதுடன் முதலீடு செய்வதைக் கட்டுப்படுத்தவும் முடியும். தேயிலை, றப்பர் தோட்டங்களைத் தேசியமயமாக்க வேண்டும் எனக் கோரப்படுகின்றது. இதன்மூலம் இலாபத்தை வெளிநாடுகளுக்குப் போகாது தடைசெய்யக்கூடியதாக இருப்பதுடன் அவ்விலாபத்தைக் கொண்டு அபிவிருத்தித் திட்டங்களுக்கும் முதலீடு செய்யலாம்.

சிலகாலமாகத் தேயிலை, றப்பர் தோட்டங்கள், பஸ் போக்குவரத்து சேவை, வங்கிகள், இன்சுயரன்ஸ் கொம்பனிகள் முதலியவற்றைத் தேசியமயமாக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் வளர்ச்சியடைந்து வருகின்றது. இன்று அரசாங்க பீடத்திலிருக்கும் எம். இ. பி. யின் தேர்தல் அறிக்கையில் மேலே குறிப்பிட்டவற்றையெல்லாம் தேசிய மயமாக்குவதெனக் கூறப்பட்டது. இதன் பிரகாரம், பஸ் போக்குவரத்து சேவையை எம். இ. பி. அரசாங்கம் தேசியமயமாக்கத் தீர்மானித்து இவ்வருடம் முதல் அமுல் நடத்துகிறது. தேசிய மயமாக்குவதன் மூலம் முதலாளிகளினால் நடாத்தப்படும் தாபனத்தை அரசாங்கம் எடுத்து நடாத்தும். இதனால், முதலாளிகள் எடுக்கக்கூடிய இலாபம் அரசாங்கத்திற்குச் சேரும். இவ்வாறு இலாபமாகப் பெறுகின்ற பணத்தைக் கொண்டு அரசாங்கம் வேறு அத்தியாவசியமான சேவைகளைச் செய்யக்கூடியதாக இருக்கும். மேலும், தேசிய மயமாக்குவதால் முதலாளித்துவ முறையை

யும் ஒரு அளவிற்கு அழிக்கக்கூடியதாக இருக்கும். இவ்வாறு முதலாளித்துவ தாபனங்கள் யாவும் தேசீயமயமாக்கப்பட்டால் முதலாளித்துவ முறையை இல்லாது அழிக்கலாம்.

தேசிய மயமாக்குவதால் ஒரு சிலரான முதலாளிகளுக்குப் போகின்ற இலாபத்தை அரசாங்கம் பெறுவதால், அவ்விலாபத்தைக் கொண்டு வேறு தொழிற்சாலைகளைப் புதிதாக அமைக்கக்கூடியதாக இருப்பதுடன் மக்களின் வருமானங்களிலிருக்கும் பெரும் வித்தியாசத்தை ஒரு அளவிற்குக் குறைக்கக்கூடியதாக இருக்கும். இதனால், குறைந்த வருமானமுடையவரின் வருமானத்தை உயரச் செய்து கூடுதலான வருமானமுடையவர்களின் வருமானத்தைக் குறைக்கலாம். மேலும், தேசீயமயமாக்கப்படும் தாபனங்கள் யாவும் அரசிற்குச் சொந்தமானதாகும். எனவே, அவை நாட்டில் வாழும் மக்களெல்லோருக்கும் சொந்தமானதாகும். இவ்வாறு உற்பத்தி சாதனங்கள் தேசீய மயமாக்கப்படுவதால், ஒரு சிலரின் இலாபத்திற்காக கூலிக்கு மாரடிக்கின்ற தொழிலாளர்கள் சமூகத்தின் இலாபத்திற்காக உழைப்பவர்களாகின்றனர். அவர்கள் இவ்வாறு கூலியைப் பெறுவதோடு சமூகத்தினர் அடையும் இலாபத்திலும் பங்குபற்றுகின்றனர் எனலாம். உற்பத்தி சாதனங்களைத் தேசீய மயமாக்கும்பொழுது அவற்றின் நிர்வாகம் சீராக நடப்பதற்காக அவற்றின் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்குபற்றல் நலம். இவ்வாறு பங்கு பற்றுவார்களேயானல் தேசீயமயமாக்கப்பட்டவை தங்களுடையது எனத் தொழிலாளர்கள் கருதுவார்கள்.

இவ் வத்தியாயத்தில் குறிப்பிட்டபடி ஸ்தம்பித்த நிலையில் இருந்துவரும் இலங்கையின் பொருளாதாரம் வெகு விரைவில் மாற்றியமைக்கப்பட்டாற்றான் வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைத்தரம் முதலிய பிரச்சினைகளைத் தீர்க்கலாம். இக்காலத்திற் கேற்ப புதியதொரு பொருளாதார அமைப்பை நாம் செய்து முடிக்கத் தவறுவோமானல் எமது எதிர்காலம் இருளடையும் என்பதில் ஐயமில்லை.

# 7. ஜனநாயகம்.

**விவரணம் :**

மனித சமுதாயம் தோன்றியகாலம் முதல் எத்தனையோ விதமான அரசியல் முறைகள் தோன்றி மறைந்துள்ளன. பொதுப்படையாகக் கூறுமிடத்து ஒரு அரசியல்முறை ஆரம்பிக்கும் காலத்தில் அதனால் பலனுண்டு. ஆனால் அம்முறை வளர்ச்சியடைந்த பின்னர் பயனற்றதாகிவிடும். அக்காலத்தில் அம்முறையை விடுத்து வேறு ஓர் முறையை மக்கள் தேடுவது இயற்கையாகும். சாதாரணமாக, எமது அன்றாட தேவைக்கு ஒரு 'பைசிக்கில்' இருந்தால் போக்குவரத்திற்கு உதவியாக இருக்கும். ஆனால் எமது தேவைக்கு ஒரு 'பைசிக்கிலி'லும் பார்க்க 'மோட்டார்கார்' இருந்தால் கூடுதலான உதவியுடையதாக இருக்குமேயாயின் 'பைசிக்கி'லை விற்றுவிட்டு 'மோட்டார்' ஒன்றை விலைக்கு வாங்குவது சிறந்தது. அதுபோலவே, ஒரு அரசியல் முறையினால் பலனில்லாமல் போகும் காலத்தில் அதனை விடுத்து வேறு ஓர் முறையை மக்கள் அமைப்பார்கள். இவ்வாறு, காலத்திற்குக்காலம் மக்கள் ஒரு அரசியல் முறையை விடுத்து வேறு ஓர் அரசியல் முறையைத் தேடுவதால் மனித சமுதாயத்தின் சரித்திர காலத்தில் தோன்றிய அரசியல் முறைகள் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று ஜனநாயக முறையாக விளங்குகின்றது. மேலும், ஜனநாயகம் தோன்றிய பின் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டதன் காரணமாக இன்றைய ஜனநாயகம் 19-ம் நூற்றாண்டின் ஜனநாயக முறையிலும் பார்க்க முற்போக்கானதாக இருக்கின்றது. உதாரணமாக, 19-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில், அதாவது ஜனநாயகம் தோன்றிய காலம் எனலாம், தொழிலாளர்கள் ஒருமித்து ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்க அவர்களுக்கு உரிமை இல்லாதிருந்தது. ஆனால் இன்று தொழிற்சங்கத்தை உருவாக்குவதற்கு மட்டுமல்ல வேலை நிறுத்தத்தை நடாத்துவதற்கும் தொழிலாளர்களுக்கு முழு உரிமையுமுண்டு. எனவே அரசியல் முறை தோன்றுவதும், வளர்வதும், அழிவதும் இயற்கைவிதியன்றோ.

இக்காலத்தில் பலவிதமான அரசியல் முறைகள் இருந்தாலும் ஜனநாயக அரசியல் முறையே அதிகமான நாடுகளில் நிலைத்திருக்கின்றது. இலங்கையிலும் இம்முறையே இருக்கின்றது. எனவே ஜனநாயக முறையைப்பற்றிச் சற்று விரிவாக அறிவது நலம்.

ஜனநாயகம் என்ற சொற்றொடர், மக்களுடைய ஆட்சி முறை என்பதைக் குறிக்கும். ஜனநாயகம் 20-ம் நூற்றுண்டில் ஆரம்பமான முறையல்ல. ஆனுல் இம்முறை பண்டைக்காலத்து கிரேக்க தேசத்திலிருந்த அதென்ஸ் (Athens) என்ற நகர அரசில் (City State) இருந்தது. இருப்பினும் அதென்ஸில் நிலவிய ஜனநாயகத்திற்கும் இன்று நிலவும் ஜனநாயகத்திற்கு மிடையே எவ்வளவோ வித்தியாசங்கள் உண்டு. இன்று நிலவும் ஜனநாயகம் அக்காலத்திலிருந்த ஜனநாயகத்திலும் பார்க்க எவ்வளவோ முற்போக்கானது. ஜனநாயக முறையைப்பற்றிப் பலர் விவரணம் கூறியுள்ளனர். உதாரணமாக, **'மக்களுடைய அரசாங்கம், மக்களுக்காக நடாத்தப்படும் அரசாங்கம், மக்களால் நடாத்தப்படும் அரசாங்கம்,'** என **ஏபிரகாம் லிங்கன்** ஜனநாயகத்திற்கு விவரணம் கூறினுர். ஆனுல் இன்று பல முற்போக்கு அரசியல் ஞானிகள் ஜனநாயக முறைக்கு இன்னும் முற்போக்கான விவரணங்கள் கொடுத்துள்ளார்கள். இன்றைய அபிப்பிராயத்திற்கு ஏற்க விவரணம் கொடுப்பதாயின்; **சமத்துவமான அரசியல் – பொருளாதார உரிமைகளும் சுதந்திரமும் எல்லோருக்குமுள்ள அரசியல் முறையே ஜனநாயகம்** எனக் கூறலாம். இதனடிப்படையில், ஒருவனுக்குள்ள உரிமையும் சுதந்திரமும் இன்னொருவனுக்கு ஜனநாயகத்தின் கீழ் இல்லாதிருக்கலாகாது என்பதேயாகும்.

**உரிமைகள் :**

ஒரு அரசியலமைப்பின் தன்மையை ஆராயுமிடத்து அவ்வமைப்பின்கீழ் மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை ஆதாரமாகக்கொண்டே ஆராய்வது வழமையாகும். பிரபுத்துவ அரசியல் முறையில் மக்களுக்கிருந்த உரிமைகளிலும் பார்க்க இன்றைய ஜனநாயக முறையின்கீழ் மக்களுக்கு உரிமைகள்

கூடுதலாக இருக்கின்றன. எனவே, ஒரு அரசியல் முறையிலிருக்கும் உரிமைகளே, அவ்வரசியல் முறையின் தன்மையை விளக்குவதால், ஜனநாயக முறையின்கீழ் மக்களுக்குள்ள உரிமைகள் என்ன என அறிதல் வேண்டும். ஜனநாயகமுறை நாளுதோறும் வளர்ச்சியடைந்துகொண்டே போகும்பொழுது அம்முறையிலுள்ள உரிமைகள் என்ன என விரிவாகக் கூறமுடியாது. ஏனெனில், இன்றில்லாத உரிமை நாளையதினம் அங்கீகரிக்கப்படுவதை நாம் நன்கு உணர்வோம். ஆகவேதான், ஜனநாயக முறையின்கீழ், உரிமைகள் எல்லோருக்கும் சமத்துவமான அரசியல் – பொருளாதார உரிமைகள் உள எனப் பொதுவாகக் கூறப்பட்டது. **ஒருவன் தன் சமூக வாழ்க்கையை நடாத்துவதற்கு அவனுக்கு உரிமைகள் இல்லையேல் அவன் மனிதனாக வாழ முடியாது.** இவ்வாறு உரிமையுடன் இருந்தாற்றான் அவன் சுயமாகவும் திறமையுடனும் வாழமுடியும். ஆகவேதான், ஜனநாயக முறையின்கீழ் மனிதனுக்குள்ள உரிமைகளின் பெறுமதி கூடுதலாக இருக்கின்றது. இரண்டாம் அத்தியாயத்தில் அரசு ஓர் சங்கம் என்பதை விளக்கும்பொழுது, ஒருவன் உரிமையுடன் பிறந்தாலும் பிறந்தவுடன் அரசு என்ற சங்கத்தில் தான் விரும்பியோ விரும்பாமலோ அங்கத்தவனாகின்றபடியினால் அவன் பிறக்கும்பொழுது ஒரு அளவிற்குத் தன் உரிமையை இழந்தவனாகின்றான் எனக் கூறினோம். இவ்வுரிமையைவிட, பெறக்கூடிய மற்ற எல்லா உரிமைகளையும் ஜனநாயக முறையின்கீழ் பெறுவதற்கு எமக்கு முழு உரிமையும் உண்டு. மேலும், ஒரு அரசின் கீழ் உள்ளவன் அதனை விடுத்து வேறு ஒரு அரசின் கீழ் வாழ அவனுக்கு உரிமை உண்டு. உதாரணமாக, பிரபல விஞ்ஞானியாகிய திரு. J. B. S. ஹல்டேனும் அவர் பாரியாரும் இங்கிலாந்திலிருந்து வெளியேறி இந்தியாவில் வாழ்வதை நாம் அறிவோம். ஆகவே, ஜனநாயக முறையின் கீழ் உரிமைகள் முக்கியமானதாகும்.

உரிமைகள் எத்தன்மையானவை? நாம் சமுதாயத்தின் அங்கத்தினராக இருப்பதால் எமது உரிமைகள் எமது நலன்களுக்காக இருப்பதுடன் சமுதாயத்தின் நலனுக்காகவுமே இருக்கின்றன. ஆதலினால், நாம் உரிமைகளுடன் வாழும்பொழுது

எமது உரிமைகள் சமுதாயத்தின் நலனைப் பாதிக்காததாக இருத்தல் வேண்டும். உதாரணமாக, எனக்குக் கள் அல்லது சாராயம் குடிப்பதற்கு முழு உரிமையுமுண்டு. அதனைக் குடித்த பின் எனக்கு வெறியேறினால் பாடவும் உரிமையுண்டு. ஆனால் இவ்வுரிமை இருக்கின்றபடியினால் நான் நள்ளிரவில் ஓலமிட்டுப் பாடி அயலவனின் தூக்கத்தைக் குழப்ப எனக்குரிமையில்லை. குடிப்பதற்கு எவ்வாறு எனக்கு உரிமை இருக்கின்றதோ அவ்வாறே எனது அயலவன் உறங்குவதற்கும் உரிமையுண்டு. ஆதலினால் எனது உரிமை அயலவனின் உரிமையைப் பாதிக்காத வண்ணமாயிருத்தல்வேண்டும். மேலும், நான் வாழ்வதற்கு எவ்வாறு உரிமை எனக்கிருக்கின்றதோ அவ்வாறே இன்னொருவனுக்கும் உரிமையுண்டு. ஆதலினால், அவன் தவறுதலாக ஒன்றைச் செய்துவிட்டால் அவனைக் கொல்ல எனக்கு உரிமை இல்லை. அடுத்ததாக, நான் சமூகத்தவனாக இருக்கும்பொழுது சமூகத்தின் நலனுக்காக உழைப்பதே எனது கடமையாகும். இதை விடுத்து "வாழ்வதால் பயனில்லை" எனக் கூறி எனது உயிரைத் தானும் நான் போக்கிக்கொள்ள எனக்கு உரிமை இல்லை. ஆகவே, எமக்கு உரிமைகள் இருக்கின்றன. ஆனால் அந்த உரிமைகளுடன் கடமைகளும் உண்டு. உரிமைகளை நாம் அநுபவிக்கும்பொழுது, எமக்கும் மற்றவர்களுக்கும் நன்மையைப் பயக்கக்கூடியதாகவே நடத்தல் வேண்டும். உரிமைகளை அநுபவிக்கின்ற நாம் சமுதாய நலனுக்காகச் செய்யவேண்டிய கடமை இதுவே.

ஜனநாயக முறையின்கீழ் எமக்கிருக்கும் உரிமைகள் அனைத்தையும் கூறமுடியாது. இருப்பினும் முக்கியமானவை ஒரு சில உண்டு. இவற்றுள் முதலாவதாக **அரசியலதிகாரத்தைப் பெறும் உரிமை** முக்கியமானது. ஜனநாயக முறையின்கீழ் அரசாங்கம் மக்களுடைய அரசாங்கமாக இருப்பதால் இவ்வுரிமையிலிருந்து வேறு மூன்று உரிமைகள் எழுகின்றன: அதாவது **வாக்குரிமை, பிரதிநிதித்துவ உரிமை, அரசாளும் உரிமை** இவற்றுள் முதலாவதாகக் குறிப்பிட்ட வாக்குரிமையின் மூலம் எமது பிரதிநிதிகளை நாம் தேர்ந்தெடுப்பதற்கு எமக்கு உரிமை

இருத்தல் வேண்டும். இரண்டாவதாக, பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் எமக்கு உரிமை இருத்தல் வேண்டும். கடைசியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அரசாங்க நிர்வாகத்தில் பங்குபற்றி அரசாள்வதற்கும் உரிமையிருத்தல் வேண்டும். இவ்வுரிமைகளைப் பெறும்பொழுது எவ்வித வேறுபாடும் இருத்தலாகாது. எல்லோருக்கும் இவ்வுரிமைகள் சமத்துவமாக இருத்தல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட உரிமைகளைவிடப் **பேச்சுரிமை, எழுத்துரிமை, கண்டனவுரிமை, சங்கங்களை அமைக்குமுரிமை** அல்லது **சங்கங்களில் சேருமுரிமை** அல்லது **சங்கக் கூட்டங்கள் கூடுமுரிமை** முதலிய உரிமைகள் பல உண்டு. இவ்வாறு எமது வாழ்க்கையை நடாத்துவதற்காகவும், நாம் திறம்பட வாழ்வதற்காகவும் எமக்கு அரசியலுரிமைகள் உண்டு. ஆனால் இந்த அரசியலுரிமைகள் இருந்தாலும் பொருளாதார உரிமைகளில்லாவிட்டால் அரசியலுரிமைகளால் பயனேதுமில்லை. பொருளாதார உரிமை எனக் கூறும்பொழுது **வேலை செய்வதற்குரிமை** எமக்கு இருப்பதோடு அவ்வேலை செய்வதினால் எமது வாழ்க்கையை நடாத்துவதற்கு தேவையான **குறைந்தபட்ச ஊதியம் பெறும் உரிமையும்** இருத்தல் வேண்டும். மேலும், எமக்கு வாக்குரிமையும் பிரதிநிதித்துவ உரிமையும் இருக்கின்றது. ஆனால் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் போதிய பொருளாதாரம் இல்லாவிட்டால் பிரதிநிதித்துவ உரிமை இருப்பதினால் பயனென்ன? ஆதலினாற்றான், அரசியல் உரிமைகளும் பொருளாதார உரிமைகளும் ஒருமித்து இருப்பதுடன் அவ்வுரிமைகள் எல்லோருக்கும் சமத்துவமாக இருத்தல் வேண்டும். ஒருவனுக்குள்ள உரிமை அல்லது வசதி இன்னொருவனுக்கு இல்லாதிருக்கலாகாது. அவ்வாறு இருக்குமேயாயின் சமத்துவமான உரிமைகள் எல்லோருக்கும் இல்லை என்ற காரணத்தினால் ஜனநாயகம் சரியான முறையிலே அமையவில்லை எனக் கூறவேண்டும்.

மேலே குறிப்பிட்ட உரிமைகளைவிட சமயவழிபாட்டுரிமை மிகவும் முக்கியமானது. இதன் பிரகாரம், ஒருவன் தான் விரும்பும் சமயத்தை ஒழுகுவதற்கு உரிமையிருத்தல் வேண்டும். சமய வழிபாடு பண்டைக்காலத்திலிருந்து தொன்று தொட்டு

இருந்து வருவதாலும், ஆத்மாவைச் சுத்தி செய்து கடவுளுடன் ஒன்றுசேர வேண்டும் என்ற கொள்கை மக்களிடையே நிலேத்து வருவதாலும் அந்நோக்கத்தை அடைவதற்கு வழி காட்டும் சமயங்களுள் சரியான சமயம் எது என ஆராய்ந்தறிந்து அதனை ஒழுகுவதற்கு உரிமை இருத்தல் வேண்டும். இவ்வுரிமையைப் பறிக்கலாகாது. அதுபோலவே மொழிஉரிமையுமாகும். ஒருவன் பேசுகின்ற மொழியைப் பேசுவதற்கும், அம்மொழியை வளர்ப்பதற்கும், அம்மொழி மூலம் அரசாங்கத்தோடு தொடர்பு வைத்திருப்பதற்கும் ஒருவனுக்கு உரிமை உண்டு. ஒரு மொழியைப் பேசுகின்றவன் மொழி காரணமாக எவ்விதத்தாலும் உரிமைகளை இழக்கலாகாது. உதாரணமாக, இலங்கையில் சிங்களம் பேசுகின்றவர்களுக்குள்ள உரிமை தமிழ் பேசுகின்றவர்களுக்கு இல்லாதிருக்கலாகாது. ஆதலினுற்றுன், உரிமைகள் எல்லோருக்கும் சமத்துவமாக இருத்தல் வேண்டும் எனப்படும்.

**சுதந்திரம்** – எமக்கு அரசியல்–பொருளாதார உரிமைகள் இருப்பதுடன் **சுதந்திரமும்** இருத்தல் வேண்டும். சுதந்திரம் இல்லேயேல் மனிதன் தன் சுய தன்மையை வளர்க்கமுடியாது. அவ்வாறு சுயதன்மை வளர்ச்சியடையாவிட்டால் அவனின் சிந்தனைச் சக்தியும் அழிந்துவிடும். ஆதலினுல், சுதந்திரம் ஜனநாயக முறையில் ஒவ்வொருவருக்கும் இருத்தல் வேண்டும். சுதந்திரம், ஒருவனுக்குள்ள உரிமைகளைப் பொறுத்தது. உதாரணமாக, அதென்ஸ் என்ற நகர அரசில் ஜனநாயக முறை இருந்தாலும், அங்கு வாழ்ந்த அடிமை மக்களுக்கு எவ்வித உரிமையும் இருக்கவில்லே. அவர்கள் அன்றிருந்த ஜனநாயக அரசாங்கத்தில் பங்குபற்ற முடியாதிருந்தனர். ஆதலினுல், ஜனநாயகம் என்ற அரசியல்முறை இருப்பதால் பிரயோசனமில்லே; அதில் முழு உரிமைகளும் இருத்தல் வேண்டும். உரிமைகளிருந்தாற்றுன் சுதந்திரமும் இருக்கும். சுதந்திரமிருந்தாற்றுன் ஒருவன் தனது சுயதன்மையை வளர்க்கமுடியும் சுதந்திரம்; **அரசியல் சுதந்திரம், பொருளாதாரச் சுதந்திரம்** என இருவகைப்படும். அரசியற் சுதந்திரத்தின்மூலம் ஒருவன் அரசகரும விஷயங்களில் எவ்வித தடையுமின்றிப் பங்குபற்றுவதற்கு முழு உரிமையும் இருக்கும். ஒருவனுக்கு வழங்கப்படவேண்டிய அரசிய

லுரிமைகள் வழங்கப்படாவிட்டால் அவனுக்குள்ள சுதந்திரத்தைப் பூரண சுதந்திரம் எனக் கூறமுடியாது. மேலும், அவனிடமுள்ள அரசியல் சுதந்திரத்தை அநுபவித்தற்குப் பொருளாதாரச் சுதந்திரமும் இருக்கவேண்டும். பொருளாதாரம், ஒருவனுக்குக் கூடிய சலுகைகளையும் இன்னொருவனுக்குக் குறைந்த சலுகைகளையும் கொடுக்கும்வண்ணம் அமைந்திருக்குமேயாயின் பொருளாதாரச் சுதந்திரம் எல்லோருக்கும் சமத்துவமாக இல்லாதிருப்பதோடு, அரசியல் சுதந்திரமும் சமத்துவமாக இராது. ஆதலினால் உரிமைகளும் சுதந்திரமும் எல்லோருக்கும் சமத்துவமாக இருத்தல் வேண்டும். இவ்வாறிருந்தாற்றான் ஜனநாயகம் பூரணமான ஜனநாயகமாக இருக்கும்.

இவ் வடிப்படையின்படி இலங்கையில் பூரண ஜனநாயகம் இல்லை என்றே கூறவேண்டும். அரசியல் உரிமைகளும் சுதந்திரமும் எமக்குண்டு. ஆனால் பொருளாதார உரிமைகள் இல்லை. நாம் இலங்கை அரசாங்கத்தை விரும்பியவாறு கண்டிப்பதற்கு எமக்கு உரிமை உண்டு. ஆனால், பொருளாதார உரிமைகள் — வேலை செய்வதற்கு உரிமை, வாழ்க்கையை நடாத்துவதற்குத் தேவையான குறைந்த பட்ச ஊதியம் பெறும் உரிமை — எல்லோருக்குமில்லை. சோவியற் ரூஷ்யாவில் பொருளாதார உரிமைகள் உண்டு. ஆனால் அரசியலுரிமைகள் இல்லவேயில்லை. ஆதலினால், ஒன்றிருந்து மற்றொன்று இல்லாதிருந்தால் ஜனநாயகம் இல்லை என்றே கூறவேண்டும். சகல உரிமைகளும் சுதந்திரமும் ஒன்றுசேர இருந்தாற்றான் ஜனநாயகம் நிலைக்குமென்ற காரணத்தினால் அவ்வெல்லையை அடைய நாம் முயலவேண்டும். இதற்கு இன்றுள்ள ஜனநாயக முறையை ஆராய்ந்தறிதல் அவசியமன்றோ.

**வாக்குரிமை :** ஜனநாயகமுறை இருக்கும் நாடுகளில், வாழ்கின்ற மக்கள் அனைவரும் அரசாங்க நிர்வாகத்தில் நேரடியாகப் பங்குபற்றுவதில்லை. அதென்ஸிலிருந்த ஜனநாயக முறையின் பிரகாரம், சுதந்திரமுடையோர் எனக் கருதப்பட்டவர்கள் அரசாங்க நிர்வாகத்தில் நேரடியாகப் பங்குபற்றினர்கள். இக்காலத்தில் ஒரு நாட்டில் வாழ்கின்ற அனைவரும் ஒரு இடத்தில்

ஒருநேரத்தில் கூடித்தீர்மானங்கள் எடுக்கமுடியாத காரணத்தால் மக்களின் பிரதிநிதிகள் மக்களின் சார்பாக அரசாங்கத்தை நடாத்தும் முறையைத் தான் நாம் காண்கின்றோம். இதனால் இன்றைய ஜனநாயகம் **பாராளுமன்ற ஜனநாயகம்** எனவும் அழைக்கப்படுகின்றது. பாராளுமன்ற ஜனநாயகத்தில் மக்களின் பிரதிநிதிகள் மக்களின் சார்பாக அரசாங்கத்தை நடாத்துவதால், பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை மிகவும் முக்கியமான அம்சமாகும். இங்கிலாந்தில் அரசியல் சீர்திருத்த மசோதா அங்கீகரிக்கப்படும் வரை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஒரு சிலருக்கே இருந்தது. பிரதிநிதிகள் மக்களின் பிரதிநிதிகளெனக் கருதப்பட்டால், அப்பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களெல்லோருக்கும் இருத்தல் வேண்டும். இவ்வுரிமையை வழங்கும்பொழுது எவ்வித தடைகளும் இருத்தலாகாது. ஆகவேதான் மக்களெல்லோருக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டது. மேலும், இவ்வுரிமையைச் சரியான முறையில் எல்லோரும் உபயோகிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக, வயது வந்த ஒவ்வொருவருக்கும், அதாவது 21 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும், பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட்டது. இவ்வுரிமை **சர்வஜன வாக்குரிமை** எனவும் கூறப்படும். இந்த உரிமைக்காக ஆங்கில மக்களே முதன்முதலாகப் போராடி வெற்றி பெற்றனர். ஆரம்பத்தில் பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்படவில்லை. ஆனால் முதலாவது உலக யுத்தத்திற்குப் பின்னர் பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. ரூஷ்யா போன்ற நாடுகளில் 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வாக்குரிமை உண்டு. சுவிற்சலாந்து தேசத்தில் பெண்களுக்கு வாக்குரிமை இல்லை. இலங்கையில் 1931-ம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை, டொனமூர் கொமிஷனரின் சிபார்சிற்கு இணங்க வழங்கப்பட்டது. இப்பொழுது, 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் எனப் பலர் விரும்புகின்றனர். இலங்கை அரசியலமைப்பின் திருத்தத்தை ஆராய்ந்த சபையும் இப்பிரேரணையை ஆதரிக்கின்றது. 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வாக்

குரிமை வழங்கப்பட்டால், இலங்கையில் வாழ்கின்றவர்களி பெரும்பகுதியினர் வாக்குரிமையுடையவர்களாக இருப்பதினா மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மக்களின் உண மையான பிரதிநிதிகளாக விளங்குவார்கள். **ஜனத்தொகையி வாக்காளர்களின் வீதம் எவ்வளவிற்கு அதிகமாக இரு கின்றதோ அவ்வளவிற்குப் பிரதிநிதிகள் மக்களின் பிரதி நிதிகளாக இருப்பர்** எனப் பொதுவாகக் கூறலாம்.

## பிரதிநிதித்துவ உரிமை :

வாக்குரிமைக்கு அடுத்தாற் போல் பிரதிநிதித்துவ உரி மையும் முக்கியமான உரிமையாகும். வாக்குரிமையுடைய ஒவ் வொருவரும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரிமை இருத்தல் வேண்டும். இவ்வுரிமை எமக்கெல்லோருக் முண்டு. இவ்வுரிமை வழங்கப்பட்டமையாற்றான் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஸ்தலஸ்தாபன சங்கங்களில் அங்கத் வர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். ஆனால் சாதி வேறு பாடு மக்களின் மனதில் ஊறியிருப்பதினால், தாழ்த்தப்பட்ட வர்கள் எனக் கருதப்படுவோர் அறிவும் ஆற்றலுமுடையவராக இருந்தாலும் தாழ்த்தப்பட்டோர் கூடுதலாக வாழாத தொகுதி களிலிருந்து பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படும் காலம் இன்னும் இலங்கையில் ஏற்படவில்லை. அதுவுமன்றி, இன்றைய தேர்தல் முறைகளின்படி எல்லோரும் தேர்தலில் போட்டியிட உரிமையிருந்தும் சந்தர்ப்பமில்லை. தேர்தலில் போட்டியிடுகின்ற வர்கள் பணம் படைத்தவர்களாக இருந்தாற்றான் போட்டியிட்டு வெற்றி ஈட்டக்கூடியதாக இருக்கின்றது. ஆகவேதான், பிரதி நிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமை ஒவ்வொருவருக்கும் இருந்தாலும் செயலளவில் அவ்வுரிமையைப் பெற இயலாத நிலையில் அதிகமானோர் இருக்கின்றனர். இவ்வசதி எல்லோ ருக்கும் இருக்குமேயாயின் ஜனநாயகத்தில் இருக்கவேண்டிய பிரதானமான உரிமை மக்களுக்குக் கிடைத்துள்ளது எனலாம். இதற்கு, இப்பொழுதுள்ள தேர்தல் சட்டம் மாற்றியமைக்கப் படுவதுடன் மக்களின் கல்வி அறிவு வளர்ச்சியடைந்து சிறந்த பிரஜைகளாக வாழும் நிலை ஏற்படல் வேண்டும். இலங்கையில்

வாழ்கின்றவர்களில் பெரும்பகுதியினர் ஜன நாயக முறையி லுள்ள பிரதானமான உரிமைகளான வாக்குரிமை, பிரதிநிதித் துவ உரிமை ஆகியவற்றின் பெறுமதியை உணராதவர்களாக இருப்பதினால் தமதுரிமையைப் பணத்திற்கும் குடிவகைகளுக் கும் விற்கத் தயாராக இருக்கின்றனர். ஆதலினால், ஜனநாயக முறையைப் பற்றி இவர்களுக்கு விளக்கி இவர்களைச் சிறந்த பிரஜைகளாக மாற்றினாற்றான் நாம் பெற்றுள்ள உரிமைகளின் பலாபலனைப் பெறக் கூடியதாக இருக்கும்.

இலங்கையில் அல்லது இங்கிலாந்துபோன்ற நாடுகளில் அநேகமாக ஒவ்வொரு தொகுதிக்கும் ஒன்றிற்கு மேற்பட்ட வர்கள் போட்டியிடுவது வழக்கம். போட்டியிடுகின்றவர்களில் ஒருவரை வாக்காளர்கள் தேர்ந்தெடுப்பதற்கு உரிமையுண்டு. இவ்வாறு ஒருவரைத் தெரியும்பொழுது, போட்டியிடுகின்றவர் களில் ஒருவர் தேர்தெடுக்கப்படுவார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப் படுபவர் போட்டியிடுபவர்களில் சிறந்த கொள்கை, திறமை வேலைத் திட்டம் முதலியனவற்றை உடையவராய் இருப்பர். இம் முறையிருப்பதினால், போட்டியிடுபவர்களுள் தமக்கு விரும்பிய கொள்கை, வேலைத்திட்டம் முதலியவற்றை ஆதாரமாகக்கொண்டு போட்டியிடுகின்றவர்களையே வாக்காளர் தெரிவு செய்கின்றனர். ஆனால் சோவியற் ருஷ்யாவில் இந்த உரிமை வாக்காளர்களுக்கு இல்லை. அங்கு ஆதிக்கத்திலிருக்கும் கொம்யூனிஸ்ட்கட்சிக்கு ஏற்ற வர்களே அபேட்சகர்களாக நியமிக்கப்படுவதாலும், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு அபேட்சகர் மட்டுமே நியமிக்கப் படுவதாலும் பிரதிநிதிகளை மக்கள் தேர்ந்தெடுப்பதற்கு உரிமை யில்லை. தெரிவுகாலங்களில், கொம்யூனிஸ்ட் கட்சியின் பிரதி நிதியை ஆதரிக்கின்றார்களா அல்லது எதிர்க்கின்றார்களா என் பதை மட்டுமே தெரிவிக்க வாக்காளர்களுக்கு உரிமையுண்டு. ஆனால், தமக்கு விரும்பிய பிரதிநிதியைத் தெரிவு செய்ய ரஷ்ய மக்களுக்கு உரிமையில்லை. ஆதலினால், மக்கள் தமது பிரதிநிதி களைத் தேர்ந்தெடுப்பதாயின் ஒன்றிற்கு மேற்பட்ட அபேட் சகர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருந்தாற்றான் பிரதிநிதிகள் மக்களின் பிரதிநிதிகளாகக் கருதப்படலாம்.

**தொகுதிகள் :** ஒரு நாட்டில் வாழ்கின்ற மக்கள் எல்லோரும் ஒருமித்துத் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கமுடியாது. ஆதலினாற்றான், ஒரு சிறிய பிரதேசத்தில் வாழ்கின்றவர்கள் ஒன்று அல்லது பல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை கையாளப்பட்டுவருகின்றது. இவ்வாறு பிரிக்கப்படுகின்ற பிரதேசங்கள் **தேர்தல் தொகுதிகள்** எனப்படும். தொகுதிகள் எவ்வளவிற்குச் சிறியதாக இருக்கின்றதோ அல்லது தொகுதிகளிலிருக்கும் மக்களின் தொகை எவ்வளவிற்குக் குறைவாக இருக்கின்றதோ அவ்வளவிற்குத் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் மக்களுடன் கூடிய தொடர்பு வைத்திருக்கமுடியும் எனலாம். ஆதலினால், தொகுதிகள் பிரிக்கப்படும் பொழுது, அதன் விஸ்தீரணமும் அதில் வாழும் மக்களின் தொகையும் குறைவாக இருந்தால் நன்று எனலாம். மேலும் தொகுதிகள் பிரிக்கப்படும்பொழுது எல்லாத் தொகுதிகளுக்கும் ஏறக்குறைய ஒரே தொகையான வாக்காளர்கள் இருத்தல் அவசியம். இதை விடுத்து ஒரு தொகுதியில் குறைந்த வாக்காளர்களும் இன்னொன்றில் கூடுதலான வாக்காளர்களும் இருக்குமேயாயின், குறைந்த வாக்காளர்களின் பிரதிநிதிக்கும் கூடிய வாக்காளர்களின் பிரதிநிதிக்கும் சமத்துவம் இல்லையெனக் கூறவேண்டும். கூடிய தொகை வாக்காளர்களுடைய பிரதிநிதி குறைவான வாக்காளருடைய பிரதிநிதியிலும் பார்க்கக் கூடுதலான பொறுப்பும் கடமையும் உடையவராவர். உதாரணமாகக் கொலனியாத் தொகுதியில் ஏறக்குறைய 70,000 வாக்காளர்கள் இருக்கும் பொழுது தலவாக்கொலைத் தொகுதியில் ஏறக்குறைய 4,000 வாக்காளர்கள் இருப்பதென்றால் இவ்விரு தொகுதிகளின் பிரதிநிதிகளுக்கிடையே சமத்துவம் உண்டா? எல்லாத் தொகுதிகளிலும் ஒரே தொகையான வாக்காளர்கள் இருக்குமாறு தொகுதிகள் பிரிக்கப்படுவது கஷ்டம். ஆனால் கிட்டத்தட்ட ஒரே அளவான வாக்காளர்கள் இருக்கும் வண்ணம் தொகுதிகள் பிரிக்கப்படவேண்டும். அவ்வாறு பிரிக்கப்பட்டாற்றான் பிரதிநிதிகளுக்குச் சமத்துவமான உரிமைகள் இருக்கும்.

மேலும் அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடும் பொழுது, ஒரு தொகுதியில் கூடுதலான வாக்காளர்களும் இன்னொரு தொகுதியில் குறைவான வாக்காளர்கள் இருக்குமேயாயின், தேர்தல் முடிவின் பின்னர் சகல தொகுதிகளிலும் ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் வீழ்ந்த வாக்குகளின் தொகையைக் கூட்டிப்பார்க்குமிடத்து, கூடுதலான வாக்குகளைப் பெற்ற அரசியல் கட்சிக்குக் குறைவான பிரதிநிதிகளும் குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சிக்குக் கூடுதலான பிரதிநிதிகளும் இருக்கக்கூடும். உதாரணமாக, 1951-ம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த பொதுத் தேர்தலில் லேபர் கட்சி (Labour Party - தொழிற் கட்சி) க்குக் கூடுதலான வாக்குகளுக் குறைந்த பிரதிநிதிகளும் கொன்சர்வேட்டிவ் கட்சிக்கு (Concervative Party - பழமை விரும்பும் கட்சி) குறைவான வாக்குகளும் கூடுதலான பிரதிநிதிகளும் கிடைத்தன. இதற்குக் காரணமென்ன? உதாரணமாக 40,000 வாக்காளர் கொண்ட ஒரு தொகுதிக்கு மூவர் போட்டியிடுகின்றனர் என எடுத்துக்கொள்வோம். வாக்காளர்களுள் 35,000 பேர் வாக்களிக்கும் பொழுது 13,000; 12,000; 10,000 என மூவருக்கும் வாக்களித்தால் 13,000 வாக்குடையவர் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி கூடுதலான வாக்குகளைப் பெற்றாலும் அத்தொகுதியின் பெரும்பான்மை வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றுள்ளார் எனக் கூற முடியாது. இவ்வாறு எல்லாத் தொகுதிகளுக்கும் சமத்துவமான வாக்குகள் இல்லாதிருந்தால் கூடிய வாக்குகளைப் பெற்ற கட்சிக்குக் குறைந்த பிரதிநிதிகள் கிடைப்பது சகஜம்.

தொகுதிகள் பிரிக்கப்படும் பொழுது பல அடிப்படைகளில் தொகுதிகளைப் பிரிக்கலாம். இங்கிலாந்தில் ஒரே ஒரு முறைதான் உண்டு. அங்கு ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு பிரதிநிதிதான் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். அ. ஐ. நாடுகளிலும் இம்முறைதான் கையாளப்படுகின்றது. இத்தொகுதிகள் **ஒரு அங்கத்தவ தொகுதிகள்** (Single - Member Constituency) எனப்படும். இலங்கையில் இத்தொகுதிகளும் **பல அங்**

கத்தவ தொகுதிகளும் (Multi - Member Constituency) உண்டு. இதன் பிரகாரம் ஒன்றிற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் இத்தொகுதிகளிலிருந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இலங்கையில் எல்லாமாக 89 தொகுதிகளிலிருந்து 95 அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவற்றுள் 84 தொகுதிகள் ஒரு அங்கத்தவ தொகுதிகளாகும். ஏனைய 5 தொகுதிகளும் பல அங்கத்தவ தொகுதிகளாகும். விபரம் பின்வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 84 அங்கத்தவ தொகுதிகள் | ... | 84 | அங்கத்தவர்கள் |
| 1 அம்பலாங்கொடை - பலப்பிட்டி தொகுதி | | 2 | ,, |
| 1 கொழும்பு மத்திய | ,, | 3 | ,, |
| 1 பலாங்கொடை | ,, | 2 | ,, |
| 1 கடுகண்ணாவை | ,, | 2 | ,, |
| 1 பதுளை | ,, | 2 | ,, |
| 89 தொகுதிகள் | | 95 | அங்கத்தவர்கள் |

இவ்விருவிதமான தொகுதிகளுள்ளும் ஒரு அங்கத்துவ தொகுதிகளையே ஜனநாயக நாடுகள் கூடுதலாக விரும்புகின்றன. இதன் பிரகாரம், ஒவ்வொரு தொகுதியின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் மக்களோடு நேரடியான தொடர்பு வைத்திருப்பதற்கு இலகுவாக இருக்கும். இன்றைய அரசியலில் அரசியல் கட்சிகள் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கும் பொழுது நெருங்கிய தொடர்பு மக்களுக்கும் பிரதிநிதிகளுக்குமிடையே இருப்பது நலம். ஆனால் ஒரு அங்கத்துவ தொகுதிகளில் சிறுபான்மையினர் இருக்குமிடத்து, கொள்கை அடிப்படையில் தேர்தல் நடாத்தப்படாவிட்டால், சிறுபான்மையினராக இருக்கின்றவர்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு அங்கத்துவ தொகுதிகள் இடமளியா. உதாரணமாக ஒரு தொகுதியில் 50,000 வாக்காளர்கள் இருக்கும் பொழுது 10,000 வாக்காளர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தால், தாழ்த்தப்பட்டவர்களில் ஒருவர் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவது மிகவும் கஷ்டமாகும். வகுப்புவாதத்தை விடுத்துக் கொள்கை அடிப்படையில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்களேயானால், தனிப்பட்டவர்களுக்கல்ல ஆனால் கொள்கைக்கே

வாக்களிக்கப்படுவதால் பிரதிநிதிகள் எந்த வகுப்பைச் சேர்ந்த வராயிருந்தாலும் அதனைப் பொருட்படுத்தாது ஒரு கொள்கைக் காகப் போராடுகின்றார் என்ற காரணத்தினால் அவர் தேர்ந் தெடுக்கப்படுவார். இத்தகைய முற்போக்கான அபிப்பிராயம் ஆங்கில மக்களிடையே இருக்கின்றது, இலங்கையில் இல்லை. இலங்கையில் வாழ்பவர் வாக்குரிமையை 1931-ம் ஆண்டு முதல் பெற்றிருந்தாலும் இன்னும் சாதி, பணம், தனிப்பட்ட செல் வாக்கு முதலியவை முக்கியமாக இருக்கின்றன. இன்னும் அரசி யல் கட்சிகளின் கொள்கைக்காக வாக்களிக்கப்படுவதில்லை. ஆகவே அரசியல் கட்சிகள் தேர்தலில் பங்குபற்றினாலும்கூடப் பயனற்றதாகவே இருக்கின்றது.

அரசியல் கொள்கைக்கும் வேலைத் திட்டத்திற்கும் வாக் களிக்காத நாடுகளில் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவர் கள் தமது பிரதிநிதிகளை ஒரு அங்கத்துவ தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்க முடியாது. இக்காரணத்திற்காகப் **பல அங்கத் தவ தொகுதிகள்** மூலம் சிறுபான்மை வகுப்பினர் தமது பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு இடமளிக்கின்றது எனலாம். உதாரணமாக, 50,000 வாக்காளர்கள் உள்ள இரு அங்கத்துவ தொகுதியில் 20,000 வாக்காளர்கள் சிறுபான்மை வகுப்பினராக இருக்கின்றனர் என எடுத்துக்கொள்ளுவோம். இத்தொகுதிக்கு இருவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமாயின் 20,000 பேரும் ஒரு மித்து ஒருவரைத் தேர்ந்தெடுக்கக்கூடியதாக இருக்கும். ஏனெ னில் இத்தொகுதி வாக்காளர்களுக்கு இரு வாக்குகள் இருப்பதி னால் 20,000 பேரும் ஒருமித்து ஒருவருக்கு வாக்களிப்பார்களே யானால் அவர்களின் வாக்குகள் 40,000 த்திற்குச் சமானமாக இருக்கும். ஏனைய 30,000 வாக்காளர்களும் ஒருமித்துத் தமது வகுப்பைச் சேர்ந்தவருக்கு மட்டுமே எந்த விதத்திலும் பிரித்து வாக்களித்தாலும் ஒருவரையே தேர்ந்தெடுக்க முடியும். ஆதலி னால், சிறுபான்மை வகுப்பைச் சேர்த்தவர் எவ்விதத்திலும் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கமுடியும்.

பல அங்கத்தவ தொகுதிகள் மூலம் சிறுபான்மை இனத் திற்கு பிரதிநிதித்துவ உரிமை வழங்கப்படுகின்றது. ஆனால் வகுப்புவாத வேறுபாடற்ற ஒரு நாட்டில் கொள்கை அடிப்படை

யில் வாக்காளர்கள் வாக்களிப்பார்களேயானல் பல அங்கத்துவ தொகுதிகள் அவசியமற்றதாக இருக்கும். ஆனல் இத்தகைய நிலைமை ஒரு நாட்டில் ஏற்படாவிட்டால் சகலருக்கும் சமத்துவமான சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டுமென்ற காரணத்திற்காக பல அங்கத்தவ தொகுதிகளை அமைக்கும் முறை கையாளப்படுகின்றது. இம்முறை சிறுபான்மையினரின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஒரு நிரந்தரமான வழியல்ல. சிறுபான்மை வகுப்பினர், பெரும்பான்மை வகுப்பினர் எனப் பிரிந்திராது இரு வகுப்பினரும் இரண்டறக் கலந்து தமது பிரச்சனைகளைத் தேசிய அடிப்படையில் நோக்குவார்களேயானல் பல அங்கத்தவ தொகுதிகளினல் அவசியமில்லை எனக் கூறவேண்டும்.

பல அங்கத்தவ தொகுதிகள் இலங்கையிலுள. இவற்றுள் இரண்டைத் தவிர ஏனைய மூன்று தொகுதிகள் மூலம் இலங்கை இந்தியர் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காகவே அமைக்கப்பட்டன. ஆனல், இலங்கை இந்தியரின் வாக்குரிமை பறிக்கப்பட்டமையினல் இம் மூன்று பல அங்கத்தவ தொகுதிகள் இன்று இருப்பதினல் பயனேதுமில்லை. ஏனைய இரு தொகுதிகளுள் அம்பலாங்கொடை பலப்பிட்டியா தொகுதியில் இரு சாதியினர் - சலாகம, கறுவ சாதியினர்-வாழ்கின்றனர். இவ்விருவருள்ளும் சிறுபான்மையினராகிய சலாகம சாதியினருக்கும் பிரதிநிதித்துவம் கொடுப்பதற்காக அம்பலாங்கொடை - பலப்பிட்டியா தொகுதி பிரிக்கப்பட்டது. பல அங்கத்தவ தொகுதிகள் மூலம் சிறுபான்மை இனத்தவர் பிரதிநிதித்துவ உரிமையைப் பெறக்கூடியதாக இருக்கின்றதேயொழிய சிறுபான்மையினர் தமது பிரதிநிதிகள் மூலம் சாதிக்கக்கூடியது ஒன்றுமில்லை. இதன் காரணமாக சிறுபான்மையினருக்கும் பெரும்பான்மையினருக்குமிடையே வேறுபாடுகள் இருப்பதுமல்லாமல் இவர்களிடையேயுள்ள வேற்றுமை அழிந்து ஒற்றுமை ஏற்படுவது கஷ்டமெனத் தோன்றுகின்றது. இத்தகைய பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வழி உண்டா? (இக்கேள்விக்கு, சிறுபான்மையும் பெரும்பான்மையும் என்ற பகுதியின்கீழ் விடையைக் காண்க)

**அரசியல் கட்சிகள் :**

ஆங்கில அரசியல் சரித்திரத்தில் தோன்றிய ஒரு அம்சமான அரசியல் கட்சிகள் இன்றைய ஜனநாயகத்தில் ஒரு நிரதானமான இடத்தைப் பெற்றுள்ளன. 17-ம் நூற்றுண்டு இங்கிலாந்தில் அரசியல கட்சிகள் தோன்றியபொழுது அவை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவில்லை. அன்று ஒரு கட்சியின் தலைவராக இருந்தவர் கட்சியின் அதிகாரத்தைத் தொடர்ந்து நடாத்துவதற்காக எத்தனையோ தந்திரங்களை உபயோகித்து அரசாங்கத்தை நடாத்தினர். உதாரணமாக, பதவிகளைக் கொடுத்து அல்லது மேல் சபைக்கு நியமித்து கட்சியின் பலத்தை நிலை நாட்டினர், கட்சித் தலைவர்கள். இம்முறை இன்றைய இலங்கையில் கையாளப்பட்டு வந்தாலும் இது ஜனநாயக முறைக்கு உகந்ததல்ல. ஜனநாயக அரசியல் முறையின் அம்சமாக விளங்குகின்ற அரசியல் கட்சியின் பலாபலனை அறிவதற்கு அவற்றின் தன்மையை அறிதல் அவசியமாகும்.

அரசியல் கட்சிகள் சங்கங்களாகும். ஜனநாயக உரிமைகளுள் அரசியல் கட்சிகளை ஸ்தாபிப்பதற்கு அல்லது அவற்றில் சேர்ந்து அவற்றின் நோக்கங்களுக்காக உழைப்பதற்கு ஒவ்வொருவனுக்கும் உரிமை உண்டு. இத்தகைய உரிமை ஒருவனுக்கு இல்லையேல் ஜனநாயகம் அந்நாட்டில் இல்லை என்றே கூறவேண்டும். உதாரணமாக சோவியற் யூனியனின் அரசியல் அமைப்பின் பிரகாரம் கொம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே ரூஷ்யாவில் இயங்குவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் அதனை விடுத்து வேறு ஒரு கட்சியை ஆரம்பிப்பதற்கு ரூஷ்ய மக்களுக்கு உரிமை இல்லாதபடியினுல் அவர்களுக்கு முழு ஜனநாயக உரிமையும் இல்லை. ஜனநாயக நாடுகளில் அரசியல் கட்சிகளை ஆரம்பித்து அவற்றை வளர்ப்பதற்காக பிரசாரம் செய்து அரசாங்க நிர்வாகத்தையே கைப்பற்றுவதற்கு உரிமையும் உண்டு. மேலும், அரசியல் கட்சிகளை இயங்காது தடுப்பது ஜனநாயக உரிமையைப் பறிப்பதாகும்.

அரசியல் கட்சிகளுக்கு கொள்கைகளும் வேலைத்திட்டமும் இருந்தல் வேண்டும். இவைதான் அரசியல் கட்சிகளுக்கு வழிகாட்டியாக இருக்கும். இவற்றை அடைவதற்காகவே மக்களின்

ஆதரவை அவைபெற முயல்கின்றன. மக்களின் ஆதரவுகிடைக்கு மேயாயின் அரசாங்க நிர்வாகத்தைக் கைப்பற்றக்கூடியதாக இருக்கும். ஜனநாயக முறையின் பிரகாரம் மக்களின் பிரதிநிதிகளே அரசாங்கத்தை நடாத்த வேண்டும் எனக் கூறப்படுவதால், அரசியல் கட்சிகள் அரசாங்க நிர்வாகத்தை ஏற்று நடாத்துவதாயின் அக்கட்சிகளின் அங்கத்தவர்கள் மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவ்வாறு பிரதிநிதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதாயின் மக்கள் எக்காரணத்திற்காக ஒரு கட்சியை ஆதரிக்க வேண்டும்? ஒரு அரசியல் கட்சியின் கொள்கையும் வேலைத்திட்டமும் மக்களின் நலனுக்கு உகந்தது என மக்கள் கருதினால் அதனை அவர்கள் ஆதரிப்பார்கள். இவ்வாறாக, பொதுமக்கள் தமது விருப்பத்திற்கு இணங்கிய பிரதிநிதிகளை, அதாவது அரசியல் கட்சியின் சார்பாகப் போட்டியிடுகின்றவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். ஜனநாயகமுறையின் பிரகாரம் மக்களின் பிரதிநிதிகளைக்கொண்ட பாராளுமன்றமே அரசாங்கத்தை நடாத்த வேண்டும். ஆனால் நடைமுறையிலே பாராளுமன்றத்தின் பிரதிநிதிகளில் பெரும்பான்மையான அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு கட்சி அல்லது ஒன்று திரண்ட பல கட்சிகள் தான் அரசாங்கத்தைப் பாராளுமன்றத்தின் சார்பாக நடாத்துகின்றது.

ஜனநாயக அரசியல் வளர்ச்சியிலே பாராளுமன்றத்தின் பெரும்பான்மையான செல்வாக்குடைய ஒரு அரசியல் கட்சி அரசாங்க ஆதிக்கத்தை ஏற்று நடாத்தும் முறை 17-ம் நூற்றாண்டிலேயே தோன்றினாலும் கூட அம்முறை 19-ம் நூற்றாண்டிலேயே வலுவடைந்தது மல்லாமல் ஜனநாயகத்தின் அம்சமாக விளங்கிற்று. இவ்வாறு வலுவடைவதற்கு மக்களெல்லோருக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட்டதே காரணமாகும். ஒரு அரசியல் கட்சி பாராளுமன்றத்தின் செல்வாக்கைப் பெற்றிருக்கின்றபடியினால் அரசாங்க ஆதிக்கத்தைப் பெறுகின்றது. இந்த ஆதிக்கத்தை, **கட்சியின் சர்வாதிகார ஆட்சி** (Dictatorship of the Party) என அழைக்கப்படும். ஒரு அரசியல் கட்சி பொதுமக்களுடைய ஆதரவைப்பெற்று அரசாங்க நிர்வாகத்தைக் கைப்பற்றிய பின்னர் தன் வேலைத்திட்டத்தை, அதாவது

பொதுமக்கள் தேர்தல் காலத்தில் ஆதரித்த வேலைத் திட்டத்தை, அமுல் நடாத்தும்பொழுது பாராளுமன்றத்திலிருக்கும் ஆதரவைப் பயன்படுத்தி எதிர்ப்புகள் யாவையும் நிராகரித்து ஈன இரக்கமின்றி அமுல் நடத்துவதையே கட்சியின் சர்வாதிகாரம் எனப்படும். உதாரணமாக, எம். இ. பி. அரசாங்கத்தைக் கைப்பற்றியபொழுது சிங்களப் பாஷையை அரசாங்க பாஷையாக்குவோம் என்ற ஒரு வேலைத்திட்டத்தைச் சமர்ப்பித்து அரசாங்கத்தைக் கைப்பற்றியது. இதனை அமுல் நடத்தும் பொழுது இதற்கு எதிர்ப்பு இருந்தபொழுதிலும் இவற்றைப் பொருட்படுத்தாது 'சிங்களம் மட்டும்' என்ற மசோதாவைச் சட்டமாக்கினர். இவ்வாறு சட்டமாக்குவதற்கு பாராளுமன்றத்தில் எம். இ. பி. க்குப் போதிய ஆதரவு பாராளுமன்றத்திலிருந்ததே ஒரு காரணமாகும். இந்த உதாரணத்திலிருந்து கட்சியின் சர்வாதிகாரம் விளக்கப்பட்டாலும் இவ்வுதாரணத்தைக் கொண்டு கட்சியின் சர்வாதிகாரம் கூடாது எனக் கூற முடியாது. பஸ் சேவையைத் தேசிய மயமாக்குவது அல்லது நெற்காணி மசோதாவை அமுல் நடத்துவதால் ஒரு சிலருக்குத் தீமையாக இருந்தாலும் பொதுமக்களுக்குப் பெரும் நன்மையைக் கொடுக்கும் என்ற காரணத்திற்காக எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாது அவற்றை அமுல் நடத்துவது நன்மையைப் பயக்கும். ஆதலினால் கட்சியின் சர்வாதிகாரம் சில சந்தர்ப்பங்களில் நன்மையையும் சில சந்தர்ப்பங்களில் தீமையையும் கொண்டுவரும் எனப் பொதுவாகக் கூறலாம். பொதுமக்களின் நலன்களை வளர்ப்பதற்காக கட்சியின் சர்வாதிகார ஆட்சியை உபயோகிக்க வேண்டிய அவசியம் ஜனநாயக நாடுகளில் ஏற்படுவது வழக்கம். இவ்வதிகாரத்தை மக்களுக்கு விரோதமாக உபயோகிக்காது விடுவதே முக்கியமாகும்.

**எதிர்க்கட்சி** — கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்பர். எதிர்க்கடையிருக்குமேயாயின் கீரையின் விலை குறையும் அக்கடை இல்லையேல் விலை கூடும். இதனை நாம் சாதாரணமாக ஒவ்வொரு நாளும் அறியக்கூடியதாக இருக்கின்றது. அது போலவே தனி ஒரு கட்சி ஒரு நாட்டிலிருப்பதிலும் பார்க்க அதற்கு எதிரான இன்னொரு கட்சியிருப்பது அவசிய

மாகும். எதிர்க்கட்சி இருக்குமாயின் அரசாங்கத்தை நடாத்தும் கட்சி அரசாங்க அதிகாரத்தை எதிர்க்கட்சி கைப்பற்றுதிருக்க வேண்டுமென்ற காரணத்திற்காக மக்களுக்குச் செய்யவேண்டியனவற்றையெல்லாம் செய்து மக்களின் ஆதரவைப் பெற முயலும். இதனால் மக்களுக்கு நன்மையைத் தொடர்ந்து செய்வதற்கு எதிர்க்கட்சி தூண்டுகோலாக இருக்கின்றது எனலாம். மேலும், எதிர்க்கட்சி ஒன்றிருப்பதினால் ஜனநாயகத்தின் முக்கியமான உரிமையாகிய கண்டன உரிமை மக்களுக்கு வழங்கப்படுகின்றது. ஜனநாயக அரசியல் முறையின்படி அரசாங்கத்தைக் கண்டித்தாற்றான் அரசாங்கம் செய்கின்ற, அதாவது அரசாங்கத்தை நடாத்தும் கட்சி செய்கின்ற தவறுதல்களைத் திருத்தியமைக்கக்கூடியதாக இருக்கும். கண்டனம் செய்ய உரிமை இல்லையேல் அரசாங்கம் செய்வது சரியா பிழையா என மக்களுக்குத் தெரியவராது. ஆதலினாற்றான் கண்டன உரிமை அதிமுக்கியமானது எனக் கருதப்படுகின்றது.

நாம் முன் கூறியபடி சோவியற் ருஷ்யாவில் ஒரே ஒரு கட்சிதான் உண்டு. அக்கட்சி - கொம்யூனிஸ்ட் கட்சி - இயங்குவதற்கு ருஷ்யாவின் அரசியலமைப்பே இடங்கொடுத்திருக்கின்றது, கொம்யூனிஸ்ட் கட்சியை விட வேறு ஒரு கட்சியும் இயங்கலாகாதெனச் சட்டபூர்வமாகக் குறிப்பிடப்பட்டமையினால், ஒரு கட்சியின் சர்வாதிகாரம் சோவியற் யூனியனில் நிலவுகின்றது எனலாம். இம்முறை ஜனநாயகத்திற்கும், -ஏன் சோஷலிஸத்திற்குமே-விரோதமானது. கண்டன உரிமையற்ற நாடு, ஜனநாயக நாடல்ல. ஆதலினால் சோவியற் யூனியனில் ஜனநாயகம் இல்லை என்பது வெளிப்படை. ஆனால் அங்கு சோஷலிஸம் உண்டு எனக் கூறுவதும் தவறு. "சோஷலிஸம் = மின்சாரம் (அதிக பொருளுற்பத்தி) + சோவியற் (ஜனநாயகம்)", என லெனின் கூறியதை ஆதாரமாக வைத்துக் கணிக்குமிடத்து ஜனநாயகமில்லாத சோவியற் யூனியனில் பூரண சோஷலிஸம் இல்லையெனக் கூறவேண்டும். இதிலிருந்து நாம் அறியக்கூடியது ஒன்று: ஜனநாயகம் வளர்ச்சியடைவதற்கு கண்டனம் இருத்தல் அவசியம். ஆதலினால் அரசாங்கத்திற்கு எதிராகக் கண்டனம் செய்வதற்கு எதிர்க் கட்சியும் இருத்தல் வேண்டும்.

ஜனநாயக முறையில் கண்டனம் முக்கியமானதாயின் கண்டனம் எத்தன்மையதாக இருத்தல் வேண்டும்? விஷமத்திற்கு கண்டிக்கவேண்டும் என்ற காரணத்திற்காகக் கண்டனம் செய்யப்படுவதும் வழமை. இத்தகைய பிழை பிடிக்கும் கண்டனத்தினுல் பிரயோசனமில்லை. பிழை பிடிக்கும் நோக்கத்திற்காகக் கண்டனம் செய்யப்படுமேயாயின் கண்டனம் உண்மையான கண்டனமல்ல. கண்டனத்தினுல் பிரயோசனமிருக்கவேண்டுமாயின் அது உண்மையான கண்டனமாக இருத்தல் வேண்டும். இத்தகைய கண்டனத்தினுல் தீமை என்ன என விளக்கிக் காட்டப்படல் வேண்டும். அத்துடன் செய்யவேண்டியது என்ன என எடுத்துரைக்கப்படவேண்டும். ஆதலினுல் கண்டனமும், எதிர்க்கட்சியும் இருத்தல் போதாது. எதிர்க்கட்சியின் கண்டனம் கண்டிக்க வேண்டுமென்ற காரணத்திற்காகக் கண்டிக்காது தீமைகளை எடுத்துக்காட்டி அவற்றை நிவர்த்திபண்ணுவதற்கு ஏற்ற வழிகளைக் கொண்ட உபயோகமுள்ள கண்டனமாக (Constructive Criticism) இருத்தல் வேண்டும்.

**விவாதம், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை:**

மேலே குறிப்பிட்டவாறு கண்டனம் உபயோகமுள்ள கண்டனமாக இருப்பதுடன் ஜனநாயக முறையிலே ஒரு கட்சியின் ஆதிக்கத்திற்குப் பதிலாக விவாதமும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் முக்கியமான அம்சங்களாக விளங்கவேண்டும். இதன் பிரகாரம், ஒரு கட்சி தன் வேலைத் திட்டத்தை ஆதாரமாகக்கொண்டு பொதுமக்களுடைய ஆதரவைப் பெற்று பாராளுமன்றத்திலே பிரதானமான கட்சியாக இருக்கும்பொழுது தன் வேலைத்திட்டத்தை நடைமுறையில் கொண்டுவருவது வழக்கம். அவ்வாறு செய்யும்பொழுது பாராளுமன்றத்தில் கூடிய ஆதரவு இருக்கின்றது என்ற மமதையுடைய கட்சியாக இருக்கலாகாது. அமுல் நடத்துவதற்காகப் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைக் கோரும் ஒரு திட்டம் நல்ல நோக்கமுடையதாக இருந்தாலும் அத்திட்டத்திலிருக்கின்ற குறைபாடுகளை நீக்கினுற்ருன் அதனுல் பயனுண்டு. ஆதலினுல் ஒரு கட்சியின் திட்டங்களை அமுல் நடாத்துவதற்கு முன் அத்திட்டங்களை

அலசி ஆராயவேண்டும், குறைகள் இருப்பின் அவற்றைக் களைந் தெறியவேண்டும், புகுத்தப்பட வேண்டிய நல்லெண்ணங்களை அத்திட்டத்தினுள் புகுத்தவேண்டும். இத்தகைய பரந்த மனப் பான்மை அரசாங்க ஆதிக்கத்திலிருக்கும் கட்சியிடம் இருக்குமே யாயின் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் திட்டங்கள் விவாதிக்கப்படுமேயன்றி கண்டிக்கப்படமாட்டா. விவாதத்திற் குப்பின் தீய பகுதிகள் நீக்கப்பட்டு நல்ல பகுதிகள் சேர்க்கப் படும்பொழுது விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை எல்லோரிட மும் இருக்கும்.

ஜனநாயக முறையின் பிரகாரம் ஒருவனுடைய அல்லது ஒரு சிலருடைய அல்லது ஒரு கட்சியினுடைய தனிப்பட்ட ஆதிக்கம் இருக்கலாகாது. இத்தகைய ஆதிக்கத்தை அழிப்பதற் காகவே கண்டனம் இருத்தல் வேண்டும் என்றும், பாராளுமன் றத்தின் அங்கீகாரத்திற்கு முன்னர் ஒவ்வொரு பிரச்சனையும் தீர விவாதிக்கம்படவேண்டுமென்றும், விவாதத்தில் எழுந்துள்ள உபயோகமுள்ள கண்டனங்களை மதித்து அவற்றிற்கிணங்கச் செய்யவேண்டிய மாற்றங்களைச் செய்யவேண்டுமென்றும் கூறு வது சகஜம். ஆனால், இத்தகைய மனப்பான்மை ஜனநாயக நாடு களில் இருப்பதாகத் தெரியவில்லை. அரசியலதிகாரத்திலிருக்கும் கட்சிகள் தமது ஆதிக்கத்தைச் செலுத்தும்பொழுது உபயோக முள்ள கண்டனங்களை மதியாதிருக்கும் காட்சியைத் தினமும் காண்பது சகஜமாக இருக்கின்றது. பாராளுமன்றத்தில் பெரும் பான்மையான ஆதரவிருக்கின்றது என்ற காரணத்தினால் உப யோகமுள்ள கண்டனங்களை மதியாதிருப்பது உண்மை ஜன நாயகமன்று. பெரும்பான்மையான ஆதரவுண்டென்ற மமதை யினால் நியாயமான கண்டனங்களைப் பொருட்படுத்தாது நடக் கும் கட்சிகள் அதிகாரமிருக்குமளவிற்கும் வெறியர்போல் கண் மூடித்தனமாக நடந்தால் அக்கட்சிகளுக்குக் கொடுக்கவேண்டிய தண்டனையைப் பொதுமக்கள் கொடுப்பார்கள். உதாரணத்திற்கு யூ. என். பியின் வீழ்ச்சி ஒன்றே போதுமான உதாரணமாகும்.

### எதிர்க்கட்சியின் பலம்:

ஒரு கட்சியின் சர்வாதிகாரம் ஜனநாயகக் கொள்கைகளுக்கு விரோதமானது என்ற காரணத்திற்காக எதிர்க்கட்சி அவசியமாக இருப்பதுடன் எதிர்க்கட்சி பலம்வாய்ந்ததாகவும் இருத்தல் அவசியமாகும். எதிர்க்கட்சி பலவீனமுடையதாக இருக்குமேயாயின், பிறரை மதியாது முரட்டுத்தனமாக நடக்க அரசாங்க கட்சி முயலும். இக்காணத்திற்காக எதிர்க்கட்சி பலம் வாய்ந்ததாக இருக்குமேயாயின் அரசாங்க கட்சி எப்பொழுதும் எதிர்க்கட்சிக்குப் பயந்து நடக்கும். அத்துடன், அக்கட்சி நான் என்ற மமதையையும் இழந்து பொதுமக்களின் நலனுக்காகச் செய்யவேண்டியவற்றைச் செய்து மக்களுடைய ஆதரவைத் தொடர்ந்து பெற முயலும். இக்காரணத்திற்காகவே பலம் வாய்ந்த எதிர்க்கட்சி இருத்தல் வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

இலங்கையில், அரசியல் கட்சிகள் சமீப காலத்திற்கு முன்னரே தோன்றியமையினால் அவற்றின் நன்மை தீமையை உணராது, அரசாங்க கட்சியை ஆதரித்தால் பெறக்கூடியவற்றையெல்லாம் பெறலாம் எனச் சாதாரண மக்கள் எண்ணுகின்றார்கள். இது தவறு. நாம் ஆதரிக்கும் கட்சி அரசாங்க கட்சியாயின் அக்கட்சியின் திட்டங்களை அமுல் நடத்துவிக்க முயலவேண்டும். அவ்வாறில்லையேல் நாம் எதிர்க்கட்சியை ஆதரித்து அதன் பலத்தைக் குன்றவிடாது வளரச் செய்யவேண்டும். இன்றைய ஜனநாயக முறையின் பிரகாரம், எதிர்க்கட்சியின் பலம் ஜனநாயகத்தின் காவல் காக்கும் நாயாக விளங்குகின்றது எனலாம். எதிர்க்கட்சியின் பலம் எவ்வளவிற்கு அதிகரிக்கின்றதோ அவ்வளவிற்கு ஜனநாயகமும் ஜனநாயக உரிமைகளும் பாதுகாக்கப்படலாம் எனலாம். இங்கிலாந்து தேசத்தில் பல நூற்றாண்டுகளாக அரசியல் கட்சிகள் படிப்படியாக வளர்ந்து வந்தமையினாலும், அரசியல் கட்சிகளின் நடைமுறைகளில் ஊக்கமான முறையிலே மக்கள் பங்கெடுத்து வந்தமையினாலும் அரசியல் கட்சிகளின் முக்கியத்துவத்தை அவர்கள் உணர்கின்றார்கள். அதனால் பயனுமடைகின்றனர். இத்தகைய அறிவு இலங்கையருக்கில்லாமையால் அரசியல் கட்சிகளின் முக்கியத்துவத்தை

அறியாதவர்களாக இருக்கின்றனர். இக்காரணத்தினுல் எதிர்க் கட்சியின் பலமும் குறைந்திருக்கின்றது. ஆதலினுல், அரசியல் கட்சிகளின் விவகாரங்களில் ஊக்கமெடுப்பதுமல்லாமல் எதிர்க் கட்சியையும் பலம் வாய்ந்ததாகச் செய்தல் வேண்டும்.

**எத்தனை கட்சிகள் இருத்தல் நன்று?**

எதிர்க்கட்சி பலம் வாய்ந்ததாக இருக்கவேண்டுமேயாயின் ஒரு நாட்டில் ஆக இரண்டு கட்சிகள் மட்டுமே இருத்தல் வேண்டும் எனச் சிலர் கூறுகின்றனர். இதற்கு உதாரணமாக இங்கிலாந்து தேசத்தை எடுத்துக் காட்டுகின்றனர். இங்கிலாந்து தேசத்தில் பல கட்சிகள் இருந்தாலும் இரண்டு கட்சிகள்தான் பிரதானமான கட்சிகளாக இருந்து வருகின்றன. இப்பொழுது கொன்சர்வேட்டிவ் (பழமை தழுவுங் கட்சி – Conservative Party) தொழிற் கட்சி (Labour Party) ஆகிய இரு கட்சிகள் முக்கியமான கட்சிகளாக இருக்கின்றன. இதற்கு முன்னர் லிபரல் கட்சியும் (Liberal Party) கொன்சர்வேட்டிவ் கட்சியும் முக்கியமான கட்சிகளாக இருந்தன. இவ்வாருக, எந்நாளும் இரு கட்சிகள் மட்டுமே இருந்து வந்தமையினுல் இங்கிலாந்தின் அரசியல் ஒரு உறுதியான அல்லது ஸ்திரமான அரசியலாக இருந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு மாருக, பிரான்சு தேசத்தில் பல ஆரசியல் கட்சிகள் ஏறக்குறைய சம ஆதரவுடையதாக இருப்பதினுல் இங்கிலாந்திலிருக்கிற ஸ்திரம் பிரான்சு தேசத்தின் அரசியலில் இல்லாதிருக்கின்றது எனக் கூறுகின்ருர்கள்.

மேலே குறிப்பிட்ட நியாயத்தில் உண்மை உண்டு. இதனை உதாரணம் மூலமாக விளக்குவதாயின் 100 அங்கத்தவர்கள் கொண்ட சபையில் 5 அரசியல் கட்சிகளுக்கு முறையே 30, 25, 17, 15, 13 அங்கத்தினர் உளர். இந்த 5 கட்சிகளுள் ஏதாவதொன்று தனித்து அரசாங்கத்தை நடாத்த முடியாது. இச்சந்தர்ப்பத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட கட்சிகள் ஒன்றுகூடி ஒரு கூட்டு அரசாங்கத்தை அமைக்கவேண்டும். ஒவ்வொரு கட்சிக்கும் வெவ்வேருன அரசியல் கொள்கைகளும் வேலைத்திட்டமும் இருந்தாலும் ஒரு குறிக்கப்பட்ட கொள்கை, வேலைத்திட்டம்

ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கூட்டு அரசாங்கத்தில் கட்சிகள் ஒன்றுசேர்வது வழக்கம். அவ்வாறு ஒன்றுசேர்ந்தாலும் அக்கட்சிகள் தமது தாபனங்களை வெவ்வேருகவே வளர்ப்பார்கள். இந்நிலைமையில் ஏதாவதொரு பிரச்சனையில் கூட்டு அரசாங்கத்திலிருக்கின்ற கட்சிகளுக்கிடையே தவிர்க்க முடியாத பிளவு ஏற்படுமாயின் இக் கூட்டு அரசாங்கம் ஒருமித்து அரசாங்கத்தை நடாத்த முடியாத நிலை ஏற்படும். ஆகவே, இரண்டிற்கு மேற்பட்ட பல கட்சிகளின் பலம் ஏறக் குறைய ஒரே அளவாக இருக்குமேயாயின் ஒரு கட்சி தனித்து அரசாங்கத்தை நடாத்த முடியாது. இக்காரணத்திஞல் ஒன்றிற்கு மேற்பட்ட கட்சிகள் கூடி அமைக்கப்படும் கூட்டு அரசாங்கம் நிலைக்கக்கூடிய அரசாங்கமல்ல. இதன் காரணமாக அரசாங்கங்கள் பாராளுமன்றத்தின் கால எல்லை முடியும்வரை நிலைத்திராது காலத்திற்குக் காலம் மாற்றமடையும். இத்தகைய நிலையையே நாம் பிரான்சு தேசத்தில் இன்று காண்கின்ருேம். அரசாங்கங்கள் மிகவும் குறுகிய காலத்திற்கு நிலைத்திருப்பதிஞல் நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமான முக்கிய வேலைகளை ஒரு திட்டத்தின் பிரகாரம் நடாத்த முடியாது. அரசாங்கங்கள் மாற்றமடையும் பொழுதெல்லாம் வேலைத் திட்டங்களும் மாற்றமடையுமாதலால் ஒழுங்கான முறையிலே அரசாங்கம் தன் கடமைகளைக் கவனிக்க முடியாது. ஆதலிஞற்ருன், பல அரசியல் கட்சிகள் ஏறக்குறைய சம பலத்துடன் இருப்பது ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல எனக் கூறப்படுகின்றது.

பல அரசியல் கட்சிகள் ஏறக்குறைய சம பலத்துடன் இருப்பது ஜனநாயக முறைக்கு உகந்ததல்ல எனக் கூறிஞல், இரண்டு அரசியல் கட்சிகள் மட்டுமே இருத்தல் வேண்டும் எனக் கூறத் தகுமா? என்ற கேள்வி எழுகின்றது. இரண்டு கட்சிகள் மட்டுமே இருத்தல் வேண்டும் எனக் கூறுவது தவறு. முதலாவதாக, அரசியல் கட்சிகளை ஆரம்பிக்கவும், அவற்றை வளர்க்கவும், அக்கட்சிகளின் கொள்கைகளுக்காக வாதாடிப் பிரசாரம் செய்யவும் எமக்கு உரிமை உண்டு. இவ்வுரிமை பறிமுதலாக்கப்பட்டால், ஜனநாயக உரிமை பறிமுதலாக்கப்பட்டது

என்பது வெளிப்படை. ஆகவே, இரண்டு கட்சிகள் [illegible] இருந்தாற்றான் ஜனநாயகம் ஓங்கி வளரும் என்னும் காரணத்திற்காகப் பல அரசியல் கட்சிகளை ஆரம்பிக்கும் உரிமை [illegible] முதலாக்கப்படலாகாது. எத்தனையாயினும் கட்சிகளை ஆரம்பிக்க வேண்டுமென ஒரு நாட்டு மக்கள் விரும்புகின்றார்களோ அத்தனை கட்சிகளையும் ஆரம்பிக்க அவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும். இவ்வுரிமை மக்களுக்கு வளங்கப்படுவதால் ஜனநாயக முறை பாழாகின்றதே எனக் கூறலாகாது. "எத்தனை கட்சிகள் இருந்தாலும் அக்கறை இல்லை, நாம் அக்கட்சிகளுள் சிறந்த இரு கட்சிகளையே ஆதரிப்போம்" என நாட்டு மக்கள் அந்த இரு கட்சிகளையும் தேர்ந்தெடுத்தலே முறை. இம்முறை ஒன்றுலேயே ஜனநாயக முறை பறிக்கப்படாதிருக்கும், இரு கட்சிகளும் ஒரு நாட்டில் இருக்கும். இதை விடுத்து, ஒரே ஒரு கட்சி அல்லது இரண்டு கட்சி மட்டுமே இருத்தல் வேண்டும் எனச் சட்டமியற்றுவது ஜனநாயகத்திற்கு முரண்பட்டதாகும்.

இரண்டாவதாக, இங்கிலாந்து தேசத்தையும் அ. ஐ. நாடுகளையும் ஆதாரமாக எடுத்து அங்கு இருக்கும் கட்சி முறைகளை ஆராய்வோமாக. இங்கிலாந்து தேசத்தில் பல கட்சிகள் உள. ஆனல் இரண்டு கட்சிசளே பிரதானமான கட்சிகளாக இருக்கின்றன. அவ்வாறே அ. ஐ. நாடுகளிலும், இருப்பினும் இவ்விரண்டு நாடுகளுக்குமிடையே வித்தியாசங்கள் உண்டு. இங்கிலாந்து தேசத்திலிருக்கின்ற இரண்டு முக்கிய கட்சிகளும் ஒன்றிற்கொன்று முரண்பட்டவைகளாகும். கொன்சர்வேட்டிவ் கட்சி முதலாளிகளின் கட்சியாக இருக்கும்பொழுது தொழிற் கட்சி தொழிலாளர்களின் கட்சியாக இருக்கின்றது. இவ்விருசாராருடைய நலன்களும் ஒன்றிற்கொன்று முரண்பட்டதாக இருக்கின்றமையினல் இக்கட்சிகளுக்கிடையே ஏற்படக்கூடிய போட்டியும் மிகவும் கடினமான போட்டியாக இருக்கும். இத்துடன் இக்கட்சிகளை ஆதரிக்கின்றவர்கள் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டிருக்கும் வர்க்கத்தினராக இருக்கின்றபடியினல் எக்கட்சி எதிர்க்கட்சியாக இருந்தாலும் அதன் பலம் பொருட்படுத்தக் கூடிய பலமுடையதாக இருக்கும். மேலும், இவர்களுக்கிடையே

யுள்ள நலன் முரண்பட்டதாக இருக்கின்றமையினால், இக்கட்சிகளுடைய கொள்கையும் வேலைத் திட்டமும் நேர்விரோதமானதாக இருக்கும். இக்காரணத்தினால் இங்கிலாந்து தேசத்தவர் தமது நலனை வளரச் செய்வதற்கு எக்கட்சியின் வேலைத் திட்டம் சிறந்தது என மிகவும் இலகுவாக அறியக் கூடியதாக இருக்கும். அ. ஐ. நாட்டில் இரு பிரதானமான கட்சிகள் இருப்பினும், அக்கட்சிகள் ஒரு வர்க்கத்தவரை ஆதரிக்கும் கட்சிகளாக விளங்குறன. இதன் காரணமாக, அவர்களிடையேயுள்ள கொள்கை வேலைத் திட்டம் முரண்பட்டதாக இருக்கவில்லை. அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்காக இக்கட்சிகளிடையே போட்டியிருந்தாலும்கூட கொள்கையளவில் போட்டியில்லை. ஒரு நாட்டில் இரு கட்சிகள் இருக்குமேயாயின் அக்கட்சிகள் ஒன்றிற்கொன்று முரண்பட்ட கொள்கைகளுடையதாயிருந்தாற்றான் எதிர்க்கட்சியினால் பயனேற்படும். இக்காரணத்திற்காக அ. ஐ. நாட்டில் இரு கட்சிகள் இருப்பினும் எதிர்க்கட்சியினால் போதிய பயனில்லை என்றே கூறவேண்டும்.

மேலே குறிப்பிட்ட காரணங்கள் முதலாளித்துவ சமுதாயத்திற்கே தகுந்தவையாகும். ஒரு நாட்டில் சோஷலிஸ அரசாங்கம் இருக்குமேயாயின், அங்கு முதலாளித்துவ முறை ஒழிக்கப்படும். இதன்பயனாக முதலாளித்துவ வர்க்கம் அழிந்துவிடும். பொதுமக்களுடைய நலனைப் பாதுகாப்பதற்காகவும் சோஷலிஸ எல்லையை அடைவதற்காகவும் மக்கள் ஒற்றுமையாக முன்னேறுகின்றார்கள் எனக் கருதினாலும், அந்நாட்டில் முரண்பாடான நலனுடைய வர்க்கத்தினர் இல்லையெனக் கூறினாலும் அங்கு ஒன்றிற்கு மேற்பட்ட கட்சிகள் இருத்தல் வேண்டும். ஏனெனில் அங்கு இருக்கின்ற ஒரே ஒரு கட்சி சர்வாதிகாரக் கட்சியாக மாறாதிருப்பதைத் தடைசெய்வதற்காகவும், அக்கட்சியின் கொள்கையும் வேலைத்திட்டமும் பிழையான வழியிலே கொண்டு செல்லப்படுவதைத் தடுப்பதற்காகவும் ஒன்றிற்கு மேற்பட்ட கட்சியிருத்தல் அவசியமாகும்.

ஜனநாயக முறையிலே அரசியல் கட்சிகள் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றாலும் உலகிலுள்ள ஜனநாயக நாடுகளில் அரசியல் கட்சிகள் வகிக்கவேண்டிய இடத்தை வகிக்கவில்லை. இங்கி

லாந்து தேசத்தில் சில நூற்றுண்டுகளாக கட்சிகள் இருந்து வந்தமையாலும் எதிர்க்கட்சிகளின் கண்டனத்தையும் பொறுத்திருக்கும் தன்மையுடையவர்கள் அங்கு வாழ்கின்றபடியாலும் ஜனநாயக முறை உச்ச நிலையை அடைந்துள்ளது. இத்தகைய வளர்ச்சி மற்ற நாடுகளிலில்லை. அ. ஐ. நாட்டில் அமெரிக்க அரசாங்கத்திற்கு எதிரான கொள்கையுடையவர்கள் நசுக்கப்படுகின்றனர். கொம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களையும் அதற்கு ஆதரவளித்தவர்களையும் அமெரிக்காவிற்குத் துரோகம் செய்யும் செயல்களில் (Un - American Activities) ஈடுபடுகின்றவர்கள் எனக் கணிக்கப்படுவதுமல்லாமல் அவர்களுக்கு பெரும் இன்னல்களையும் அமெரிக்க அரசாங்கம் விளைவிக்கின்றது. கொம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகள் சரி, பிழை என்ற பிரச்சனை இங்கு எழவில்லை. ஆனால் மக்களின் உரிமைகள் பறிமுதலாக்கப்படுகின்றன. அமெரிக்காவில் கொம்யூனிஸ்ட்டுகள் நசுக்கப்படுவது போல் இங்கிலாந்தில் நசுங்கப்படுவதில்லை. ஏன்? ஒரு அரசியல் கட்சியை நசுக்குவதால் அக்கட்சியின் கொள்கைகளையும் நசுக்கி அழித்துவிடமுடியாது என்பதை ஆங்கிலேயர் அறிவதுடன் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கப்படாது என ஒவ்வொரு ஆங்கிலேயரின் மனதிலும் ஊறியிருக்கின்றது. இத்தகைய உணர்ச்சி அவர்களிடம் இருப்பதற்கு அவர்களுடைய அரசியலறிவே காரணமாகும்.

**அரசியலறிவு :**

ஜனநாயக முறை வளர்ச்சியடைவதற்கு மக்களின் அரசியலறிவும் வளர்ச்சியடையவேண்டும். அரசியலறிவு எனக் கூறும்பொழுது ஒரு நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் தம் நாட்டின் அரசியலில் பங்குபற்றுவதற்கு உணர்ச்சியுடையவராயிருத்தல் வேண்டும். நன்மை தீமை எது என ஆராயும் தத்துவம் உடையவராயிருத்தல் வேண்டும். இவ்விரண்டும் ஒவ்வொருவனிடமும் இருத்தல் அவசியமாகும். "அரசியலுக்கும் எனக்கும் வெகுதூரம்", எனக் கூறுவோர் பலர், இது தவறு. இவ்வாறு கூறுகின்றவர்கள்தான் ஆட்டு மந்தைகளைப்போல் மற்றவர்களுக்குப்பின் சென்று பாதாளக் கிணற்றில் வீழ்கின்றவர்களாவர். நாம் முன்னேறவேண்டுமேயாயின் எமது முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்ற அரசாங்கம் செய்கின்ற ஒவ்வொரு கருமமும்

எம்மைப் பாதிக்கின்றபடியினுல் நாம் ஒவ்வொருவரும் ஊக்கத்துடனும் உணர்ச்சியுடனும் அவற்றின் நன்மை தீமையை ஆராய வேண்டியது அவசியமாகும். இவ்வாறு நாம் செய்திருப்போமேயானுல் பாஷைப் பிரச்சினை இன்று வகுப்பு வாதத்தைக் கிளப்பி இருக்காது.

அரசியலறிவைப் புத்தகங்கள் மூலம் ஒரு அளவிற்குப் பெறக்கூடியதாயிருந்தாலும் பூரணமான அறிவைப் பெறமுடியாது. இருப்பினும், அவ்வழி ஒன்றுதான் மிகவும் சுலபமானதாகும். ஆனுல், எல்லாப் பாஷைகளிலும் அரசியல் நூல்கள் போதிய அளவிற்குப் பிரசுரிக்கப்படாமையினுல் எல்லோரும் புத்தகங்கள்மூலம் அரசியலறிவைப் பெறமுடியாது. அரசியல் நூல்கள் இல்லை என்ற காரணத்திற்காக நாம் வீணே வீற்றிருக்க முடியாது. 'மனிதன் ஒரு அரசியல் மிருகம்', என்ருர் ஒரு மேதாவி. அதற்கிணங்க, புத்தகங்கள் இல்லாவிட்டாலும் ஒவ்வொரு அரசியல் பிரச்சினையும் ஏற்படும்பொழுது உணர்ச்சிவசப்படாது அவ்வப்பிரச்சினையின் நன்மை தீமையை ஆராய்வதற்காக அவற்றைப்பற்றி மற்றவர்கள் என்ன கூறுகின்ருர்களென முதல் அறியவேண்டும். அதன்பின்னர் எது சரியென அமைதியுடன் ஆராய்ந்தறிய வேண்டும். இதுவே ஒவ்வொருவனுடைய கடமையாகும். இத்தகைய உணர்ச்சி இலங்கைபோன்ற வளர்ச்சியடையாத நாடுகளில் எல்லோரிடமும் இருக்காது. ஆனுல் அதனை நாம் வளர்க்க முயலவேண்டும். இங்கிலாந்து தேசம் இன்று அரசியலுணர்ச்சியுடைய நாடாக விளங்குகின்றதென்ருல் அவர்களுடைய நீண்டகால அரசியல் சரித்திரமே முக்கியமான காரணமாகும். எமது அரசியல் சரித்திரம் ஒரு சில வருடங்களுடையதே. இக்காரணத்தினுற்ருன் அரசியலுணர்ச்சி மக்களிடையே இன்னும் எழவில்லை. தூங்கிக்கிடக்கும் இவ்வுணர்ச்சியைத் தட்டிக்கிளப்ப வேண்டும். அரசியலறிவும் அரசியலுணர்ச்சியும் எல்லோரிடமும் இருக்குமேயாயின் ஜனநாயக முறை ஓங்கி வளரும் என்பதில் ஐயமில்லை.

**பொதுஜன அபிப்பிராயம்:**

மக்கள் அரசியலறிவுடையவர்களாக இருப்பின் அரசியல் பிரச்சனைகள் கிளம்பும் காலத்தில் அவற்றின் நன்மை தீமையை மக்கள் ஆராய்ந்து அறிவதுமல்லாமல், அப்பிரச்சனைகள் நன்மையுடையதாக இருந்தால் அவற்றை ஆதரிப்பார்கள் இல்லையேல் எதிர்ப்பார்கள். பொதுமக்களுடைய எதிர்ப்பு இல்லாத பிரச்சனையே இராது. ஆனால், எதிர்ப்பு பலம்வாய்ந்த எதிர்ப்பாக இருக்குமேயாயின், அதாவது பெரும்பான்மையானோர் எதிர்க்கின்றார்களேயாயின், அப்பிரச்சனைகளை அமுல் நடாத்த அரசாங்கம் துணியாது. ஆதலினாற்றான், பொதுஜன அபிப்பிராயம் ஜனநாயக முறையிலே ஒரு முக்கிய அம்சமாக இருக்கின்றது. பொதுஜன அபிப்பிராயத்தின் மூலம் அரசாங்கத்தின் தீய செயல்களைத் தடை செய்யலாம். உதாரணமாக, அரிசியின் விலை 70 சதத்திற்குக் கூட்டப்பட்டவுடன் பொதுமக்கள் அதனை எதிர்த்து 1953-ம் ஆண்டு ஆவணி மாதம் 12-ம் தேதி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இதன் பயனாக அரிசியின் விலை 10 சதத்தால் குறைக்கப்பட்டது. ஆகவே, பொதுஜன அபிப்பிராயம் எவ்வளவிற்குப் பலமாகவிருக்கின்றதோ அவ்வளவிற்கு ஜனநாயக உரிமைகளும் நலன்களும் பாதுகாக்கப்படும் எனலாம்.

பொதுஜன அபிப்பிராயத்தை மக்களிடையே வளரச் செய்வதற்கு பத்திரிகைகள் பெருமுதவியாக இருக்கின்றன. பத்திரிகைகள் நாட்டில் நடக்கும் சம்பவங்களையும் உலக விஷயங்களையும் பிரசுரித்து வருகின்றமையினால் அநேகமாக எல்லோரும் வாங்கி வாசிப்பது வழக்கம். பத்திரிகை வாசியாதவன் உலகத்தோடு தொடர்பற்றவன் என்று கூறினாலும் மிகையாகாது. இதன் காரணமாக, பத்திரிகை வாசிக்கும் வழக்கம் நம் நாட்டில் அதிகரித்துக்கொண்டே போகின்றது. இருப்பினும் மேல் நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இலங்கையில் பத்திரிகை வாசிப்பவர்களின் தொகை மிகவும் குறைவு. பத்திரிகைகளை வாசிப்பதினால், மற்ற இடங்களில் நடக்கும் சம்பவங்களை அறியக்கூடியதாக இருப்பதுடன் அப்பத்திரிகைகள் வெளியிடும் அபிப்பிராயங்களையும் வாசித்தறியும் சந்தர்ப்பமும்

ஏற்படுகின்றது. இவ்வாறு பத்திரிகைகளில் தெரிவிக்கப்படும் அபிப்பிராயங்களை அறிவதினால், மக்கள் அவற்றைப்பற்றி அலசி ஆராயும் சந்தர்ப்பமும் எழுகின்றது. இதனால், மக்களுக்குத் தீமையை விளைவிக்கும் செயல்களை அரசாங்கம் செய்யத் துணியும்கால் மக்கள் தமது வெறுப்பைக் கூட்டங்கள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள் மூலமாகத் தெரிவிப்பார்கள்.

மேலும், பத்திரிகைகளை மக்கள் தினமும் வாசிப்பதினால் பத்திரிகை முதலாளிகள் தமது தினத்தாள் மூலமாக மக்களின் அரசியல் கொள்கைகளை நிர்ணயிக்கக் கூடியதாயிருக்கின்றது. ஒரு பொய்யை ஒருதரம் சொன்னால் அதனைப் பொய்யெனக் கூறுவது சுலபம். ஆனால் அப்பொய்யைப் பல தடவைகளில் திருப்பித் திருப்பிச் சொன்னால் அப்பொய் மெய்யாகும். நாசி ஜெர்மனியிலிருந்த கோயெபெல்ஸ் என்னும் பிரசார நிபுணர் இம்முறையையே கையாண்டு பொய்களை மெய்யாக்கினர். பத்திரிகைகளும் இம்முறையையே கையாளுகின்றன. உதாரணமாக, தேயிலைத் தோட்டங்களைத் தேசிய மயமாக்குவதைப் பத்திரிகை முதலாளிகள் ஆதரிக்கவில்லை என எடுத்துக்கொள்வோம். தினமும் இதனால் ஏற்படக்கூடிய நட்டங்களை மட்டும் திருப்பித் திருப்பிப் பத்திரிகைகள் கூறினால், அவற்றை வாசிக்கின்ற நாமும் தேசிய மயமாக்குவது கூடாது என்ற எண்ணமுடையவர்களாகிவிடுவோம். ஆகவே, பத்திரிகைகள் மூலம் பொது மக்கள் தமது அபிப்பிராயத்தை ஆக்கக்கூடியதாயிருப்பதுடன் எமது அபிப்பிராயம் எத்தகையதாக இருத்தல் வேண்டும் என்ற தத்துவமும் பத்திரிகைகளுக்கு உண்டு. இவ்விரண்டினுள் முதலாவதாகக் குறிப்பிட்டபடி பத்திரிகைகளை வாசித்த பின்னர் எமது அபிப்பிராயத்தை நாம் தனித்து உருவாக்கும் தத்துவத்திற்குப் பத்திரிகைகள் உதவிபுரிதல் பத்திரிகைகளின் நல்ல அம்சங்களில் ஒன்றாகும். ஆனால் எமது அபிப்பிராயத்தைப் பத்திரிகைகள் உருவாக்கினால் நாம் ஊகித்து அறியும் தன்மையற்றவர்களாகிப் பத்திரிகைக்குப் பின் இழுபட்டுச் செல்பவர்களாவோம். பத்திரிகைக்குள்ள இத்தன்மை ஜனநாயகமுறைக்கு ஆபத்தை விளைவிக்கும்.

இக்காரணத்திற்காகவே பத்திரிகைகள் சுதந்திரமுடைய பிரசுரமாக (Free Press) இருத்தல்வேண்டும். அதாவது ஒரு குறிப்பிட்ட கொள்கையைக் கடைப்பிடிக்காத கட்டுப்பாடற்ற பத்திரிகையாக இருத்தல் வேண்டும். இச் சுதந்திரம் பத்திரிகைகளுக்கு இருக்குமேயாயின், பத்திரிகையாளர் எவ்வித கட்டுப்பாடுமின்றி நன்மை என்ன தீமை என்ன எனத் தயங்காது எடுத்துரைப்பர். அத்துடன், பொதுமக்களும் தமது அபிப்பிராயங்களை வெளியாகத் தெரிவிக்கக் கூடியதாயிருக்கும். இன்று, பத்திரிகையின் கொள்கைக்கு எதிர்மாறான அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படும் கட்டுரைகள், பேச்சுகள் முதலியன பத்திரிகைகளில் இடம் பெறுவது மிகவும் குறைவென்றே கூற வேண்டும். எதிர்மாறான அபிப்பிராயங்கள் இடம்பெறாத காரணத்தினால், எப் பிரச்சனையாவது தீர ஆராயப்படுவதில்லை. மேலும், பத்திரிகைகளின் தலையங்கங்கள் (Editorials) ஆழ்ந்து ஆராய்ந்ததாகவும் நீதியையும் நியாயத்தையும் கடைப்பிடிக்கும் கட்டுரைகளாகவும் இருத்தல் வேண்டும். இலங்கையிலுள்ள பத்திரிகைகள் சுதந்திரமுடைய பிரசுரங்களல்ல. இச் சுதந்திரமுடைய பிரசுரங்கள் இருந்தாற்றான் ஜனநாயக முறையை வளர்ப்பதற்கு அத்தியாவசியமான விவாதத்தையும் பொதுஜன அபிப்பிராயத்தையும் வளர்க்கக்கூடியதாயிருக்கும்.

பொதுஜன அபிப்பிராயத்தை வளரச்செய்வதற்கு பிரசுரச் சுதந்திரம் (Freedom of the Press) இருத்தல் அவசியமாகும். இச் சுதந்திரமிருக்குமேயாயின் நாம் எமது அபிப்பிராயங்களை, கொள்கைகளை பத்திரிகைகள் மூலமாகவோ அல்லது வேறு வகையான பிரசுரங்கள் மூலமாகவோ ஏனைய மக்களுக்குத் தெரிவிப்பதற்கு எமக்குச் சுதந்திரமுண்டு என்பதாகும். எமக்கு இச் சுதந்திரம் இன்று இருக்கின்றது. ருஷ்யாவில் இச் சுதந்திரம் இல்லை. இதன் காரணமாக, அங்கு அரசாங்கத்திற்கு எதிராகக் கண்டனம் செய்வதற்குச் சுதந்திரம் இல்லை. இச் சுதந்திரமும் முக்கியமான சுதந்திரமாகும்.

**உரிமைகளும் சுதந்திரங்களும் :**

இதுவரையிலும் ஜனநாயக உரிமைகள் சுதந்திரங்கள் ஆகியவற்றின் முக்கியமான ஒரு சிலவற்றைப் பற்றிக் குறிப்பிட்

டோம். ஒரு ஜனநாயக நாட்டில் உரிமைகளும் சுதந்திரங்களும் இல்லையேல் ஜனநாயக முறை இல்லையென்பது வெளிப்படை. மேலும், ஜனநாயகத்திற்குரிய உரிமைகளும் சுதந்திரங்களும் என்ன எனக் குறிப்பிடப்படவில்லை. இவை நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து கொண்டே போகின்றன. அவ்வாறு வளர்ச்சியடையும்பொழுது ஜனநாயகத்தின் தன்மையும் விரிவடைந்து கொண்டே போகும். ஆதலினால், தற்பொழுதிருக்கின்ற உரிமைகளையும் சுதந்திரங்களையும் வளரச்செய்ய வேண்டும். இதுவே ஜனநாயக நாடுகளிலிருக்கின்றவர்களுடைய கடமையாகும்.

மேலே குறிப்பிட்டவற்றை ஆதாரமாகக் கொண்டு உலகிலுள்ள நாடுகளில் எந்நாட்டில் ஜனநாயக முறை உண்டு எனக் கவனித்தால் எந்நாட்டிலும் பூரணமான ஜனநாயக முறை இல்லை எனக் கூறவேண்டும். இருப்பினும், இங்கிலாந்து ஏனைய நாடுகளிலிருக்கின்ற ஜனநாயக முறையிலும் பார்க்கச் சிறந்த அல்லது கூடுதலாக வளர்ச்சியடைந்த நாடாக இருக்கின்றது எனலாம். தத்துவ ஞானத்திற்கிணங்கிய ஒரு அமைப்பு முறையை மிகவும் இலகுவாக அமைக்க முடியாது. இத்தகைய அமைப்பை படிப்படியாகவே அமைக்க முடியும். அவ்வாறு அமைக்க முயலும் பொழுது கூடிய சீக்கிரத்தில் அமைக்க முயல்வதே எமது நோக்கமாக இருத்தல் வேண்டும்.

ஜனநாயக முறையைப் பற்றி இதுவரையிலும் ஆராயும் பொழுது மிகவும் பொதுப்படையாகவே ஆராய்ந்தோம். மேலும், ஜனநாயக நாட்டிலே வாழ்கின்றவர்கள் எத்தனை வெவ்வேறான சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவ் வேறுபாடுகளைப் பொருட்படுத்தாது எல்லோரும் ஒரு சமூகத்தை அல்லது ஒரு தேசீய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்ச்சியுடைய நாட்டிலே வாழக்கூடியவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் நாம் பொதுவாக ஆராய்ந்தோம். ஆனால், ஒரு தேசீய இனத்தவரிடையே வெவ்வேறு பிரிவினைகள் இருக்கின்ற காரணத்தினால் தேசீய ஒற்றுமை வளராது வேறுபட்ட நலன் அவர்களைப் பிரிக்குமேயாயின் மேலே குறிப்பிட்ட உரிமைகளையும் சுதந்திரங்களையும்விட வேறு உரிமைகளும் சுதந்திரங்களும் இருக்கவேண்டியது அவசியமாகும்.

ஜனநாயக முறையின் பிரகாரம் உரிமைகளும் சுதந்திரமும் எல்லோருக்கும் சமத்துவமாக இருக்கவேண்டும் என்ற காரணத்தினுல் சமூக வேறுபாடு ஒரு சமூகத்தினருக்குக் கூடுதலான உரிமைகளையும் இன்னெரு சமூகத்தவருக்குக் குறைவான உரிமைகளையும் சுதந்திரங்களையும் வழங்கலாகாது. சமூகங்களுக்கிடையே சமத்துவம் இருத்தல் வேண்டும்.

## பல இன நாட்டில் (Hetrogenous State) சமத்துவம்.

ஒரு நாட்டில் தனி ஒரு இனத்தவர் அல்லது சமயத்தவர் அல்லது ஒரு மொழியைப் பேசியவர் வாழ்வது அரிதிலுமரிது. இத்தகைய நாடு ஒரு இன நாடு (Homogenous State) எனப்படும். இதற்கு மாருகப் பல இனத்தவர் அல்லது சமயத்தவர் அல்லது மொழியைப் பேசுபவர் வாழும் நாடு பல இன நாடு எனப்படும். ஒரு இனத்தவர் ஒரு நாட்டில் வாழும்பொழுது இன வேறுபாடு அவர்களைப் பிரியாதபடியினுல் அவர்களிடையே ஒற்றுமை அல்லது ஒன்றுபட்ட உணர்ச்சி இயற்கையாகவே இருக்கும். ஆனுல் பல இனத்தவர் வாழும் பொழுது ஒன்றுபட்ட உணர்ச்சியைச் செயற்கை முறையாலேயே கொண்டுவர முடியும்.

பல இனத்தவர் வாழும் நாட்டில் ஒன்றுபட்ட உணர்ச்சியை அவர்களிடையே உருவாக்குவதற்குச் சமத்துவம் அவசியமாகும். சமத்துவம் இல்லையேல் அவ்வினத்தவருக்கு வேறுபட்ட நலவுரிமைகள் இருக்கும். இவ்வேறுபாட்டினுல் கூடிக் குறைந்த உரிமைகளும் சுதந்திரங்களும் இருக்கும். இதன் பயனுக, குறைவான உரிமைகளையும் சுதந்திரத்தையுமுடையவர்கள் ஏனையோருக்குக் கட்டுப்பட்டு அடிமைகளாக வாழ வேண்டி நேரிடும். ஆகவேதான் எல்லாச் சமூகத்தவருக்குமிடையே சமத்துவம் இருத்தல் அவசியம். சமத்துவம் எனக் கூறும்பொழுது, கணிதத்திலுள்ள சமத்துவத்தைக் குறிப்பிடவில்லை. உதாரணமாக ஒரு நாட்டில் இரு சமூகத்தவர் உளர் என்றும் அச்சமூகத்தினரின் வீதம் 75, 25 எனவும் எடுத்துக் கொள்வோம். இவ்விரு சமூகத்தவரிடையே சமத்துவம் இருத்தல் வேண்டுமென்ருல் 75 வீதத்தவருக்குமுள்ள உரிமைக்கும்

25 வீதத்தவருக்குமுள்ள உரிமைக்கும் சமத்துவம் இருக்கின்றது எனக் கூறி இவ்விரு இனத்தவருக்கும் சமத்துவமான பிரதிநிதித்துவம் அதாவது 50 : 50, இருக்கவேண்டும் எனக் கூறுவது தவறு. அரசியல் சமத்துவம் கணித சமத்துவமன்று. அரசியலிலே இரு இனங்களுக்குச் சமத்துவம் உண்டு என்றால் ஒரு சமூகத்தவருக்குள்ள உரிமைகளும் சுதந்திரங்களும் மற்றச் சமூகத்தவருக்கும் இருப்பதையே கருதும் அல்லது ஒரு சமூகத்தவருக்குள்ள உரிமையும் சுதந்திரமும் மற்றச் சமூகத்தவருக்கு இல்லாதிருக்கலாகாது என்பதையே கருதும். இனம், மொழி, சமயம், சாதி, நிறம் முதலிய வேறுபாடுகள் ஒரு சமூகத்தவருக்கு இருக்கவேண்டிய உரிமைகளையும் சுதந்திரத்தையும் பறிக்காது எல்லாச் சமூகத்தவருக்கும் சமத்துவமான உரிமைகளைக் கொடுக்க வேண்டும். இதுவே அரசியல் சமத்துவமாகும்.

அரசியல் சமத்துவத்தைப் பற்றிக் குறிப்பாகக் கூறும் பொழுது, இலங்கையில் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு பாஷைகளைப் பேசுகின்றவர்கள் வாழ்கின்றனர். இவ்விரு பாஷைகளுள் சிங்களத்தை மட்டும் அரசாங்க பாஷையாக்குவது தவறு. இதனால் சிங்களம் பேசுகின்றவர்களுக்கும் தமிழ் பேசுகின்றவர்களுக்குமிடையே பாஷைச் சமத்துவம் இல்லை. இதன் பயனாகத் தமிழ் பேசும் மக்களின் மொழி உரிமை பறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறே, இலங்கையில் பல சமயங்கள் உண்டு. இச் சமயங்களுக்கிடையே சமய சமத்துவம் இருத்தல் வேண்டும். சமய சம்பந்தமாக, எல்லாச் சமயங்களுக்குமிடையே சமத்துவம் இருப்பதற்கு இலங்கை அரசாங்கம், எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான **'சமயப்பற்றற்ற அரசு'** (Secular State) ஆக இருத்தல் வேண்டு. இவ்வாறே மற்ற ஒவ்வொரு பிரச்சனையிலும் சமத்துவம் இருத்தல் வேண்டும். ஒரு சமூகத்தவருக்குள்ள உரிமை அல்லது உரிமைகள் இன்னொரு சமூகத்தவருக்கு இல்லாதிருக்கலாகாது. இவ்வாறிருந்தாற்றான் சகல சமூகத்தினருக்குமிடையிலும் தனிப்பட்டவர்களுக்குமிடையிலும் வேறுபாடான நலவுரிமைகள் இல்லாதிருக்கமுடியும்.

அரசியல் சமத்துவம் சமூகத்தினருக்கு இருத்தல் அவசியம் என்ற காரணத்தினுலேயே ஒவ்வொரு நாட்டின் அரசியலமைப்பிலும் அடிப்படை உரிமைகள் (Fundermental Rights) இடம் பெறுகின்றன. இதன் பிரகாரம் ஒவ்வொரு பிரஜையின் உரிமை இன்னதின்னதெனக் குறிப்பிடப்பட்டிருக்கும். மேலும், இவ்வுரிமைகள் எல்லோருக்கும் பொதுவானதாகவும் பாரபட்சம் காட்டாததாகவும் இருக்கும். இத்தகைய அடிப்படை உரிமைகள் மிகவும் விரிவான முறையிலே இந்திய அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ளன. அத்துடன், வேறு எந்த அரசியலமைப்பிலும் குறிப்பிடாத வண்ணம் இவ்வுரிமைகள் இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தகைய அடிப்படை உரிமைகள் இலங்கை அரசியலமைப்பில் இடம் பெறவில்லை. அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுவதால் பயனென்ன? அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்ட உரிமைகளுள் ஏதாவதொன்றை அரசாங்கம் பறிக்க எத்தனிக்கும் பொழுது, பிரதான நீதிஸ்தலத்தில் அரசாங்கத்திற்கெதிராக வழக்குத் தொடர்ந்து அரசாங்கத்தின் முயற்சியைத் தவிடு பொடியாக்கலாம். உதாரணமாக, இந்தியாவின் தேசீய பாஷைகளுள் ஆங்கிலமும் ஒன்ருகும். எனவே, ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் ஆங்கிலப்பாஷை மூலம் கல்வி கற்பதற்கு உரிமை உண்டு. ஆனுல், பம்பாய் அரசாங்கம் இவ்வுரிமையைப் பறிக்க முயன்றபொழுது அதற்கெதிராக வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு விசாரணை முடிவில் அரசாங்கத்தின் கொள்கை தவறு எனத் தீர்ப்புக் கூறப்பட்டது. இதன் பின்னர், பம்பாய் அரசாங்கம் ஆங்கிலத்தின் மூலம் கல்வி கற்பிக்காது தடுக்கும் திட்டத்தைக் கைவிட வேண்டியதாயிற்று. ஆகவே, இந்தியாவில் சிறுபான்மையினராக வாழ்கின்ற ஆங்கிலோ – இந்தியர் (Anglo – Indians) என அழைக்கப்படுவோர் தமது மொழி உரிமையைப் பாதுகாக்கக்கூடியதாயிருந்தது. இதிலிருந்து நாம் அறியக்கூடியது ஒன்று: அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் எவை எனக் குறிப்பிடப்படுமேயாயின், அவ்வுரிமைகளில் ஏதாவதொன்றை அரசாங்கம் பறிக்க முயன்ருலும் அரசியலமைப்பு இடங்கொடாது. ஆதலினுல், பல

சமூகத்தவர் வாழ்கின்ற நாட்டில் -- உதாரணமாக இலங்கையில் -- எல்லாச் சமூகத்தினருக்கும் சமத்துவம் அளிக்கின்ற அடிப் படை உரிமைகள் எவை என விரிவான முறையிலே அரசிய லமைப்பில் இடம் பெறுமேயாயின், எச்சமூகத்தைச் சேர்ந்த வரும் உரிமையை இழக்காது வாழக்கூடியதாயிருக்கும். இக் காரணத்தினால், இலங்கையின் அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளைச் சேர்த்து எல்லாச் சமூகத்தவருக்குமிடையே அரசியல் சமத்துவம் இருக்கச் செய்தல் வேண்டும். இதனைப் பரிசீலனை செய்வதற்காக பாராளுமன்ற அங்கத்தவர் கொண்ட குழு ஒன்றை எம். இ. பி. அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

## சிறுபான்மையும் பெரும்பான்மையும் :

பல இனங்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் ஒரு இனம் பெரும்பான்மை இனமாகவும் ஏனைய இனங்கள் சிறுபான்மை இனமாகவும் இருத்தல் சகஜம். ஒரு நாட்டு மக்கள் எத்தனை இனங்களாகவோ சமூகத்தினராகவோ பிரிக்கக்கூடியதாக இருந் தாலும் அவ்வினத்தவர் அனைவரும் ஒரு நாட்டு மக்களே. இனம் முதலிய வேறுபாடுகள் அவர்களைப் பிரிக்கலாகாது. அவ்வாறே அவ்வினத்தவரை நல உரிமைகளும் பிரிக்கலாகாது. மேலும், ஒரு இனம் பெரும்பான்மை இனமாக இருக்கின்ற காரணத்தினால் ஏனைய சிறுபான்மை இனங்களை நசுக்கலாகாது. உதாரணமாக, தென் ஆபிரிக்காவில் தொகையில் கூடியவர்களும் அரசியல் உரிமைகள் இல்லாமலுமிருக்கின்ற கறுத்தவர்களை அரசியலதிகாரமுடைய வெள்ளையர் நசுக்கின்றனர். இலங்கை யில் பெரும்பான்மையினராகிய சிங்கள இனவெறியர் அரசாங் கத்தைக் கைப்பற்றக் கூடியதாயிருப்பதால் சிறுபான்மையின ராகிய தமிழர்களை நசுக்கக்கூடியதாயிருக்கின்றது. இது ஜனநா யகக் கொள்கைகளுக்கு விரோதமானதாகும். பெரும்பான்மை சிறுபான்மையினருக்கிடையே சமத்துவம் இருத்தல் வேண்டும்.

பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் இருக்கவேண்டிய சமத்துவத்தை மேலே குறிப்பிட்ட அடிப் படை உரிமைகள் கொடுக்க வல்லது. இக்காரணத்தினாற்றான் அடிப்படை உரிமைகளை வரையும்பொழுது, எல்லோருக்கும் சமத்துவத்தைக் கொடுக்கக்கூடிய உரிமைகளாக இருக்கும் வண்

ணம் வரைதல் வேண்டும். மேலும், இவ்வடிப்படை உரிமைகளை இலேசாக மாற்றியமைக்கக் கூடியதாக அமைக்கப்படாது. இவ்வாறு அடிப்படை உரிமைகளில் மாற்றம் செய்வதைத் தடுத்தாற்ருன், சிறுபான்மையினரைப் பாதுகாக்கக்கூடியதாக இருக்கும். அநேகமாக, அரசியலமைப்பை அல்லது ஏதாவதொரு பகுதியை மாற்றுவதற்குப் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பாக அங்கத்தவர் சாதகமாக வாக்களிக்க வேண்டுமென்ற நிபந்தனை இருப்பதால் அரசியலமைப்பில் மாற்றங்கள் ஏற்படுவது மிகவும் கஷ்டமாகும். சில நாடுகளில் இந்நிபந்தனையை விட வேறு நிபந்தனைகளும் உண்டு. இத்தகைய தடைகளினுல் சிறுபான்மையினரின் உரிமைகளையும், அவர்களுக்கும் பெரும்பான்மையினருக்குமிடையே உள்ள சமத்துவத்தையும் பாதுகாக்கக் கூடியதாயிருக்கும்.

மேலே குறிப்பிட்டவாறு பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் சமத்துவத்தைச் சட்டரீதியிலே நிலைநாட்டினுலும்கூட உண்மையான சமத்துவத்தை இவ்விரு சாராரும் அடைவதற்கு அவர்களிடையே பரஸ்பர சகோதரத்துவமும் நம்பிக்கையும் இருக்கவேண்டும். சட்டங்கள் சட்டப்படி சமத்துவத்தை அளிக்கலாம். ஆனுல் பெரும்பான்மை சிறுபான்மை என்ற வேறுபாடற்று எல்லோரும் ஒன்று என்ற எண்ணம் அவர்களிடையே இருக்கும் காலத்தில் சட்டம் வழங்கக்கூடிய சமத்துவ உரிமைகளிலும் பார்க்க உண்மையான சமத்துவம் அவர்களிடையே தானுகவே இருக்கும். இந்தச் சமத்துவம் இருக்குமேயாயின் ஒருவருக்கு ஒருவர் பயந்து வாழமாட்டார்கள், ஆனுல் நம்பி வாழ்வார்கள். அ. ஐ. நாட்டில் எத்தனையோ இனத்தவர்கள் வாழ்கின்ற பொழுதிலும், எல்லோருக்குமிடையே - கறுத்தவர்களைவிட - பரஸ்பர சகோதரத்துவமும் சமத்துவமும் இருக்கின்றது. இவ்வொற்றுமை சட்டத்திலும் பார்க்க வலிமையுடையது என்பதை நாம் மறக்கலாகாது.

**பாராளுமன்ற ஜனநாயகம்: (Parliamentary Democracy)**

ஜனநாயக ஆட்சிமுறையில் இருக்கவேண்டிய உரிமைகளையும் சுதந்திரங்களையும் நாம் மேலே எடுத்து விளக்கினுேம். சகல உரிமைகளையும் சுதந்திரங்களையும் கொண்ட ஒரு நாடு

உலகிலில்லை எனக் கூறவேண்டும். இருப்பினும். இங்கிலாந்து தேசத்தில் ஏனைய நாடுகளிலும் பார்க்கக் கூடுதலான உரிமைகளும் சுதந்திரங்களும் உண்டு. இக்காரணத்தினலேயே இங்கிலாந்து தேசத்தை ஏனைய நாடுகள் பின்பற்றுகின்றன.

இன்று ஜனநாயகமெனக் கூறும்பொழுது பாராளுமன்ற ஜனநாயகத்தையே கருதுகின்றனர். ஜனநாயக உரிமைகளும் சுதந்திரமும் இல்லாவிட்டாலும், பாராளுமன்ற முறை இருக்கின்ற நாடுகள் ஜனநாயக நாடுகள் எனக் கருதப்படுகின்றன. இதன் பிரகாரம் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள்மூலம் அரசாங்கத்தை நடாத்தும் முறை பாராளுமன்ற ஜனநாயகம் எனப்படும். ஆனல் இம்முறையுடன், மக்களுக்கிருக்கவேண்டிய **சமத்துவமான** உரிமைகளும் சுதந்திரமும் இல்லாவிட்டால், அதனை ஜனநாயகம் எனக் கூறுவது தவறு.

பாராளுமன்ற ஜனநாயக முறையிலே மக்களின் பிரதிநிதிகள் மக்களின்பேரால் அரசாங்கத்தை நடாத்துகின்றனர். ஆகவே, அரசாங்கத்தை நடாத்துபவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதால் மக்களின் விருப்பத்திற்கிணங்கவே அரசாங்கத்தை நடாத்தப்படுகின்றது. இக்காரணத்திற்காகவே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு வாக்குரிமை எல்லோருக்கும் இருத்தல் வேண்டும் என்றும், பிரதிநிதிகளைக் தேர்ந்தெடுக்கும் தேர்தல்கள் ஒரு குறிக்கப்பட்ட கால எல்லையுடையதாக (நாலு அல்லது ஐந்து வருடங்கள்) இருத்தல் வேண்டுமெனவும் கூறப்படுகின்றது. இதனல், பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மக்களின் சார்பாகத் தமது கடமைகளைச் சரிவரச்செய்யாத பட்சத்தில் அவர்களைவிடுத்து வேறு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கக்கூடியதாக இருக்கும். இக்காரணத்திற்காகவே, காலத்திற்குக்காலம் நடாத்தப்படவேண்டிய தேர்தல்கள் நடாத்தப்படாவிட்டால் ஒருதரம் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தொடர்ந்து பிரதிநிதிகளாகக் கடமையாற்றத் தகுதியில்லை எனலாம். எனவே, பாராளுமன்ற ஜனநாயக முறையின்கீழ் குறிக்கப்பட்ட காலத்திற்குள் தேர்தல்கள் நடாத்தப்பட வேண்டும்.

தேர்தல்கள் ஒழுங்காக நடைபெறும் காலத்தில் ஒவ்வொரு வாக்காளனும் தனது வாக்குரிமையை உபயோகிக்கும்பொழுது இரகசியமாகவே உபயோகிக்கவேண்டும். இது **இரகசிய வாக்கெடுப்பு** எனப்படும். வாக்குரிமையை உபயோகிக்கு முன்னர், வாக்கு எவருக்குக் கொடுக்கப்படும் என்றோ அல்லது வாக்குப் பண்ணியபின் எவருக்கு வாக்களிக்கப்பட்டது என்றோ கூறலாகாது. வாக்கு அளிக்கும் பொழுது, சிறந்த பிரதிநிதி யார் என்ற ஒன்றையே ஆராய்ந்து வாக்குப்பண்ண வேண்டும். அடுத்ததாக, "அவர் எனக்கு வாக்குப்பண்ணினார் அல்லது வாக்குப்பண்ண வில்லை" எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிக்குத் தெரியாத தால், அப்பிரதிநிதி ஒருவருக்கு அல்லது ஒரு குறிப்பிட்டவர் களுக்குச் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ நடக்க வேண்டி எற்படாது. மக்களின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மக்களின் நலனுக்காக உழைப்பதே கடமை. இக் கடமையைச் செய்யாதவர்கள் மீண்டும் பிரதிநிதிகளாகத் தேர்ந் தெடுக்கப்படலாகாது.

இன்றைய பாராளுமன்ற முறையின் பிரகாரம் மக்களுக்கும் பிரதிநிதிகளுக்குமிடையே உள்ள தொடர்பு மிகவும் குறைவு. அநேகமாக, தேர்தல் காலத்திலேயே மக்கள் தமது பிரதிநிதி களைச் சந்திக்கக்கூடியதாக இருக்கின்றது. மக்கள் தமது பிரதி நிதிகள் மூலமாக அரசாங்கத்தை நடாத்துகின்ற பொழுதிலும், மக்களுக்கும் பிரதிநிதிகளுக்குமிடையே தொடர்பு இல்லாமை யினால், ஜனநாயக முறையின் பிரகாரம் மக்களுக்குள்ள அதிகார மும் தத்துவமும் மிகவும் குறைவாகவே இருக்கின்றது. இதனால் மக்களாட்சி எனக் கூறுவது அர்த்தமற்றதாகும். உண்மையான மக்களாட்சி முறையிலே, மக்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுத்து அவர்கள் மூலம் அரசாங்க நிர்வாகத்தை நடாத்தினு லும் அரசாங்க விஷயங்களைப் பொறுத்தவரையிலே மக்களுக் கும் பிரதிநிதிகளுக்கும் நேரடியான தொடர்பு இருத்தல் அவசிய மாகும். இத்தொடர்பை வளர்ப்பதற்காகவே **விசேஷ வாக்கெடுப்பு, அபிப்பிராய வாக்கெடுப்பு, மசோதாவை ஆரம்பித்து வைத்தல், திரும்ப அழைத்தல்** என அழைக்கப்படும் **ஜன நாயகத் தடைகள்** (Democratic Checks) உபயோகிக்கப் படுகின்றன.

## விசேஷ வாக்கெடுப்பு: (Plebisite)

விசேஷ வாக்கெடுப்பின் மூலம் முக்கியமான அரசியல் விஷயங்களைப்பற்றி மக்களின் அபிப்பிராயத்தை அறியமுடியும். மக்கள் விசேஷ வாக்கெடுப்பின் மூலம் தெரிவிக்கின்ற தீர்மானம் **நிரந்தரமான** தீர்மானமாகும். அதாவது அத்தீர்மானம் நல்லதோ கூடாததோ அத்தீர்மானத்தை எடுக்கின்ற சந்ததியினரும் அடுத்து வருகின்ற சந்ததியினரும் ஏற்கவேண்டிய நிரந்தரமான தீர்மானமாகும். உதாரணமாக 1947-ம் ஆண்டு பாரத நாடு இரண்டு கூறுகளாகப் பிரிப்பதற்குமுன் விசேஷ வாக்கெடுப்பின் மூலம் முஸ்லீம் மக்கள் தமக்கென வேறான ஒரு அரசு வேண்டுமோ வேண்டாமோ எனத் தமது அபிப்பிராயத்தைக் கூறிய பின்னரே பாக்கிஸ்தான் என்ற அரசு அமைக்கப்பட்டது. அதுபோலவே, இலங்கையில் சமஷ்டி அரசியல் முறையைத் தமிழ் பேசும் மக்கள் விரும்புகின்றார்களோ என ஒரு விசேஷ வாக்கெடுப்பின் மூலமே அறியலாம்.

இம்முறையால் தீமை ஒன்றுண்டு. ஒரு சந்ததியினர் அவசர புத்தியினாலும் ஆழ்ந்து ஆராயாமலும் எடுக்கின்ற தீர்மானத்தை அடுத்துவருகின்ற சந்ததியினரும் அதனை ஏற்க வேண்டியதாயிருக்கும். எடுக்கப்பட்ட தீர்மானம் பயனுடையதாக இருந்தால் ஒருவரும் கவலைப்படமாட்டார்கள். ஆனால் தீமையை விளைவிக்குமாயின் ஒருவர் செய்த தவறிற்காக இன்னுமொருவர் தீமையை அனுபவிக்க வேண்டியதாயிருக்கும். மேலும், தீர்மானமெடுக்கின்றவர்கள் சகல விஷயங்களையும் ஆழ்ந்து ஆராயக்கூடிய அரசியலறிவுடையவர்களாக இருத்தல் வேண்டும். அவ்வாறில்லையேல் வருங்கால சந்ததியினரைப் பாதிக்கக்கூடிய தீர்மானத்தை நிர்ணயிக்க அவர்களுக்குத் தகுதி இல்லை என்றே கூறவேண்டும்.

## அபிப்பிராய வாக்கெடுப்பு: (Referendum)

சட்டசபை எடுத்துள்ள தீர்மானத்தை மக்கள் ஆதரிக்கின்றார்களா அல்லது எதிர்க்கின்றார்களா என அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் அறியக்கூடியதாயிருக்கும். இவ்வாறு பொதுமக்களின் அபிப்பிராயத்தை அறிந்து அதற்கு இணங்க

அரசாங்கம் தன் திட்டங்களை நடைமுறையிற் கொண்டுவரலாம். எனவே, முக்கியமான பிரச்சனைகளை அமுல் நடத்துவதற்கு முன்னர் மக்களின் அபிப்பிராயத்தை அரசாங்கம் அறியக்கூடிய முறையிருப்பின், ஜனநாயக முறையிலே மக்கள் ஒரு அளவிற்கு நேரடியாகப் பங்குபற்றக் கூடியதாயிருக்கும் எனலாம். உதாரணமாக நெற்காணி மசோதாவை அமுல் நடத்த வேண்டுமா என மக்கள் தீர்மானத்திற்கு விடப்படுகின்றதென எடுத்துக் கொள்வோம். இதனை மக்கள் ஆதரித்தால் அத்திட்டத்தை அரசாங்கம் அமுல் நடத்த வேண்டும். இம்முறையை ஜனநாயக நாடுகளின் அரசியலமைப்பில் சேர்த்தால், காலத்திற்குக் காலம் நடாத்தப்படுகின்ற தேர்தல்களில் மட்டும் வாக்களிக்கின்ற மக்கள் அரசாங்கத்தின் கொள்கையையும் திட்டத்தையும் நிர்ணயிக்கும் விஷயங்களில் எந்நாளும் பங்குபற்றக் கூடியதாயிருக்கும். ஆதலினாற்றான் இந்த ஜனநாயக முறையை அரசியலமைப்பில் சேர்ப்பது நன்மையுடையதாகும்.

சுவிற்சலாந்து, அவுஸ்திரேலியா, பிரான்சு போன்ற தேசங்களின் அரசியலமைப்பை மாற்றுவதற்காகக் கொண்டுவரப்படும் திருத்தங்களை அமுல் நடாத்துவதற்கு முன்னர், மக்களின் அபிப்பிராயத்தை அறிவதற்காக இந்த முறை உபயோகிக்கப்படுகின்றது. மேலும், சுவிற்சலாந்து தேசத்தில் சாதாரணமான மசோதாக்களைப்பற்றிய அபிப்பிராயத்தை அறிவதற்காகவும் இம்முறை உபயோகிக்கப்படுகின்றது. இருப்பினும் அபிப்பிராய வாக்கெடுப்பு முறையை எல்லா ஜனநாயக நாடுகளும் கையாளுவதில்லை. ஏனெனில், இம்முறையைக் கையாளுவதால் சட்டங்களை அமுல் நடாத்துவதற்குக் காலதாமதம் ஏற்படும். இக்காரணத்திற்காக, மக்களின் அபிப்பிராயத்தை அறியவேண்டிய அவசியமில்லை எனச் சட்டசபை தீர்மானிக்கும் விஷயங்களை அபிப்பிராய வாக்கெடுப்பிற்கு விடாது தடுக்கும் அதிகாரம் சட்டசபைக்குக் கொடுக்கப்படுவதுண்டு. இவ்வாறு கொடுக்கப்பட்டால் இந்த அதிகாரத்தைக் கொண்டு மக்களின் ஆதரவு கண்டிப்பாகக் கிடையாது என்ற மசோதாக்களை அபிப்பிராய வாக்கெடுப்பிற்கு விடாது தடுக்கச் சட்ட சபையினால் முடியும். எனவே, அபிப்பிராய வாக்கெடுப்பிற்கு விடாது தடுத்துவைக்கும் அதிகாரத்தை

சட்ட சபை துஷ்பிரயோகம் செய்யலாகாது. அபிப்பிராய வாக்கெடுப்பு முறை பயனுள்ளதாக இருப்பதற்கு மக்களின் அரசியலறிவு அவசியம். இவ்வுரிமை மக்களுக்குக் கொடுக்கப்படுமேயாயின், அவர்கள் அரசியல் விஷயங்களில் கூடுதலான அக்கறையுடையவர்களாகி அவ்வுரிமையை உபயோகிப்பதன் மூலம் தமது நலன்களை வளர்க்கக்கூடியவர்களாக இருப்பர். ஆதலினால், அபிப்பிராய வாக்கெடுப்பு முறையை ஜனநாயக நாடுகள் கூடுதலாகக் கைபாண்டால், ஜனநாயகம் உண்மையான ஜனநாயகமாகத் திகழக் கூடியதாயிருக்கும்.

## மசோதாவை ஆரம்பித்துவைத்தல்: (Initiative)

சட்டசபை எவ்வித நடவடிக்கையுமெடுக்காத விஷயங்களில் மக்கள் சிரத்தை காட்டினால் அவ்விஷயங்களை மசோதாக்கள் மூலம் ஆரம்பித்து வைப்பதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்கப்படும். உதாரணமாக, தேயிலை, இறப்பர் தோட்டங்களைத் தேசியமயமாக்குவதாக எம். இ. பி. தேர்தல் காலத்தில் வாக்களித்துவிட்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்காதிருக்கின்றபடியினால் தோட்டங்களைத் தேசியமயமாக்க வேண்டும் என்ற பிரேரணையை, மசோதாவை ஆரம்பித்துவைக்கும் முறையின் மூலம் மக்கள் துவக்கலாம். ஆகவே இந்த முறையிருப்பதினால் சட்டசபை கவனமெடுக்காத விஷயங்களை மக்கள் அதன் கவனத்திற்குக் கொண்டுவரக்கூடியதாயிருக்கும். இவ்வாறு சட்டசபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் விஷயங்களை சட்டசபை ஆராய்ந்து அதில் திருத்தங்கள் செய்யப்படவேண்டியிருப்பின் அவற்றைச் செய்து மக்களுடைய அபிப்பிராயத்தை அபிப்பிராய வாக்கெடுப்பின்மூலம் அறியலாம். இதன் பின்னர் மசோதா சட்டசபையினால் ஏற்கப்படும் அல்லது நிராகரிக்கப்படும்.

இம் முறை சுவிற்சலாந்தில் உபயோகிக்கப்படுகின்றது. சட்டத்தை ஆக்கும் உரிமை சட்டசபைக்குக் கொடுக்கப்பட்டாலும் மக்களின் விருப்பத்திற்கிணங்கிய சட்டங்களை ஆக்கும்படி மக்கள் கோருவதற்கு இம்முறை இடமளிக்கின்றது. எனவே ஜனநாயக முறையில் இம்முறையும் இடம்பெற்றால் மக்களின் உரிமைகள், கடமைகள் முதலியன கூடுதலாக இருக்கும். இம்

முறையையும் தவறுதலான வழிகளால் துஷ்பிரயோகம் செய்வதற்கு இடமுண்டு. உதாரணமாக, ஒரு மசோதாவைப் பிரேரிக்க குறிக்கப்பட்ட தொகையினரின் ஆதரவு இருக்கவேண்டும் என நிபந்தனை இருப்பின், அத்தொகையினரின் ஆதரவைப் பெறுவதற்காக மக்களின் கள்ளக் கையொப்பங்களை இட்டுப் பிரேரிக்க முயல்வர். இத்தகைய முறைகளைக் கையாளாதிருந்தாற்றான் இம்முறையினால் பயனேற்படும்.

## திரும்ப அமைத்தல்: (Recall)

மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தமது கடமைகளைச் சரிவரச் செய்யவில்லையென மக்கள் கருதினால் அவர்கள் அப்பிரதிநிதிகளை இம்முறையின் மூலம் அங்கத்துவப் பதவியிலிருந்து நீக்கலாம். இதனால் பல நன்மைகள் உண்டு. முதலாவதாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி தேர்தல் காலங்களிலேயே மக்களிடம் போகும் வழமையுண்டு. இம்முறை இருக்குமேயாயின் பிரதிநிதிகள் மக்களுடன் என்றும் தொடர்பு வைத்திருக்க முயல்வார். இரண்டாவதாக, பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் மக்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளைச் செய்யாதிருக்கக் கூடும். ஆகவே, இம்முறை இருக்குமேயாயின் மக்கள் தன்னைப் பிரதிநிதிப் பதவியிலிருந்து நீக்கிவிடுவார்கள் எனப் பயந்து தன் கடமையைச் செய்துகொண்டேயிருப்பார்கள். ஆகவே, திரும்ப அழைத்தல் என்ற முறை இருப்பதால் பிரதிநிதிகளைக் கொண்டு தமது கடமைகளை மக்கள் செய்விக்கக்கூடியதாயிருப்பதுடன், தமது பிரதிநிதிகளாக இருக்கத் தகுந்தவர் யார் எனவும் மக்கள் அறியக் கூடியதாயிருக்கும்.

இம்முறை சோவியற் யூனியனின் முதலாவது அரசியலமைப்பில் இடம்பெற்றது. ஆனால், 1936-ல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பில் இம்முறை இடம்பெறவில்லை.

## முடிவுரை :-

மேலே குறிப்பிட்ட யாவற்றையும் ஆதாரமாகக்கொண்டு நோக்குங்கால் ஜனநாயக அரசியல் முறையின்கண் சமத்துவ

மான அரசியல் பொருளாதார உரிமைகள் இருப்பதுடன் சமத்துவமான சுதந்திரமும் எல்லோருக்கும் இருத்தல்வேண்டும். இத்துடன் இன்றைய ஜனநாயக அமைப்பிலே, பாராளுமன்ற ஜனநாயக முறையே முக்கியமான அம்சமாக விளங்குகின்றதெனவும், உண்மையான ஜனநாயகம் தோன்றுவதற்கு மக்கள் அரசியலில் நேரடியாகப் பங்குபற்ற முடியாவிட்டாலும் மறைமுகமாகப் பங்குபற்ற வேண்டுமெனவும் அறியக்கூடியதாயிருக்கின்றது. எனவே, ஜனநாயகம், மக்களாட்சி என்ற சொற்றொடர்களை உபயோகித்துப் பெருமிதப்படாது உண்மையான ஜனநாயக முறையை வளர்க்க நாம் முயலவேண்டும்.

**ஜனநாயகம் ஒரு வாழ்க்கை முறை** எனவும் கூறுவோர் உண்டு. இது உண்மை ஆனால் வாழ்க்கையைத் தொடர்ந்து நடாத்துவதற்கு உணவு எவ்வாறு அத்தியாவசியமோ அவ்வாறே ஜனநாயகத்திற்கு அத்தியாவசியமான சமத்துவமான உரிமைகளும் சுதந்திரமும் இருந்தாற்றான் மக்கள் ஒற்றுமையாகவும் சகோதரத்துவத்துடனும் ஒருமித்து வாழக்கூடியதாயிருக்கும். இத்தகைய நிலையை நாம் சும்மா வீற்றிருக்கப் பெறலாம் என எண்ணுவது தவறு. உரிமைகளுக்காகவும் சுதந்திரத்திற்காகவும் நாம் போராடினாற்றான் அவற்றைப் பெறலாம். ஆதலினால் நாம் எவ்வாறு எமது வாழ்க்கைக்காகப் போராடுகின்றோமோ அவ்வாறே உண்மையான ஜனநாயகத்திற்காகவும் போராடவேண்டும்.

# 8. சர்வாதிகாரம், பொதுநல அரசு, சோஷலிஸம்.

மனிதன், அரசு (State) என்ற ஸ்தாபனத்தை அமைத்த காலம் முதல் அரசின் அமைப்பு, தன்மை, நோக்கம், கடமை முதலியனவற்றைப் பற்றி ஆராய்ந்துகொண்டே வருகின்ருன். இத்துடன் காலத்திற்குக் காலம் வெவ்வேருன அரசு முறைகளையும் அமைத்துள்ளான். இவற்றுள் எத்தனையோ அரசு முறைகள் மனிதனுல் கழிக்கப்பட்டுள்ளன. இன்று அவற்றுள் ஒரு சில அரசு முறைகளே நிலைத்திருக்கின்றன. நாளைக்கு எவை இருக்கும் எவை நீக்கப்படும் எனத் திட்டவட்டமாகக் கூறமுடியா விட்டாலும் அவனின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உபயோக மற்ற யாவும் நீக்கப்படும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு தீய அரசு முறைகள் அழிக்கப்பட்ட பின் ஈற்றில் எந்த முறை சிறந்தது, குற்றமற்றது எனவோ அல்லது எந்தமுறை நிலைக் கப்போகின்றது எனவோ இன்று நாம் கூற முடியாது. இருப் பினும், கடந்த அத்தியாயத்தில் ஜனநாயக முறையைப் பற்றி அறிந்த பின்னர் உலகிலுள்ள மற்றைய அரசியல் முறைகளில் முக்கியமான ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிடுவது நலம்.

**சர்வாதிகாரம் :**

சர்வாதிகார அரசியல் முறையின் தன்மையை அச் சொற் றொடரிலிருந்தே சுலபமாக அறிந்துகொள்ளலாம். சர்வம் என்ருல் எல்லாம் எனப் பொருள்படும். எனவே, சர்வாதி காரம் என்பது எல்லா அதிகாரம் என்று பொருள்படும். ஆதலினுல் சரவாதிகாரம் எனக் கூறும்பொழுது எல்லா அதி காரமும் ஒருவரிடம் அல்லது ஒரு சிலரிடம் இருத்தலைக் குறிக் கும். ஜனநாயகம் எனக் கூறும்பொழுது மக்கள் ஆட்சி அல்லது அதிகாரம் மக்களிடமிருக்கின்றது எனக் கூறுவது போல் சர்வாதிகாரத்தில் அதிகாரம் ஒருவரிடம் அல்லது ஒரு சிலரிடம் இருக்கின்றது என்பதைக் குறிக்கும். இவ் அரசியல் முறை ஜனநாயக முறைக்கு நேர்விரோதமானதாகும்.

ஜனநாயக ஆட்சி முறை இருக்கவேண்டிய வண்ணம் எல்லா நாடுகளிலும் இல்லாவிட்டாலும் இம்முறை இருக்கின்ற நாடுகளில் மக்களுக்கு ஒரு சில உரிமைகளும் சுதந்திரமும் இருக்கின்றன. இவை சில நாடுகளில் குறைவாகவும் சில நாடுகளில் கூடுதலாகவும் இருக்கின்றன. உரிமைகளும் சுதந்திரமும் கூடிக் குறைந்திருக்கும் வீதத்திற்கு இணங்க ஜனநாயகமும் இருக்கச் செய்யும். எனவே, உரிமைகளும் சுதந்திரமுமற்ற நாடு ஜனநாயக நாடல்ல எனக் கூறலாம். ஆனால் ஜனநாயகமற்ற நாடுகள் யாவும் சர்வாதிகார நாடு எனக் கூறலாகாது. சர்வாதிகார ஆட்சி முறையிலே அதிகாரம் யாவும் ஒரு சிலரின் அல்லது ஒருவரின் கையிலடங்கி இருக்கும். அவ்வாறிருப்பினும் இம்முறையின் கீழ் சகல உரிமைகளும் சுதந்திரமும் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டன எனக் கூறலாகாது. உண்மையில் சர்வாதிகார ஆட்சி முறையிலே, அரசாங்க அதிகாரம் மக்களிடமில்லை, ஆனால் ஒரு சிலரிடமுண்டு எனலாம்.

அரசாங்க அதிகாரம் ஒரு சிலரிடமிருந்தாலும் இவ்வரசாங்கம் தீய அரசாங்கம் எனக் கூறலாகாது. சில சர்வாதிகார அரசாங்கங்கள் மக்களுக்கு நன்மையைச் செய்யக்கூடியதாக இருக்கும். இவற்றை நன்மையைப் பயக்கக்கூடிய சரவாதிகார அரசாங்கங்கள் எனப்படும். சில சர்வாதிகார அரசாங்கங்கள் தீயனவாகும். சர்வாதிகார அரசியல் முறை எத்தகையதாயிருந்தாலும், அரசாங்கத்தில் பங்குபற்றுவதற்கு மக்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையிருக்கும்பொழுது ஒருவர் அல்லது ஒரு சிலர் அரசாங்கத்தை நடாத்துவது வரவேற்கத்தக்கதல்ல. ஏனெனில், அரசாங்கத்தை நடாத்துகின்றவர்கள் மக்களுடைய அரசியல் உரிமைகளைப் பறித்துத்தான் தாம் அரசாள முனைகின்றனர்.

இக்காலத்தில் பற்பல நாடுகள் சர்வாதிகார ஆட்சியின் கீழ் இருக்கின்றன. இவற்றுள் சில, ஒரு அரசியல் கட்சியின் ஆதிக்கத்திலிருக்கின்றன. இன்னும் சில இராணுவத்தின் ஆதிக்கத்திலிருக்கின்றன. உதாரணமாக, எகிப்து மன்னர், பரூக், பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் இராணுவக் கட்டுப்பாட்

டின் கீழ் அரசாங்கம் நடாத்தப்பட்டது. இம்முறைகள் யாவும் ஜனநாயக முறைக்கு நேர்விரோதமானது.

சர்வாதிகார முறைகள் பல இருப்பதினால், ஒவ்வொன்றையும் விரிவாக ஆராய்வது மிகவும் கஷ்டமாகும். இருப்பினும், அவற்றைப்பற்றிய பொதுவான உண்மைகளைக் குறிப்பிட்டால் சர்வாதிகார அரசியல் முறைக்கும் ஜனநாயக அரசியல் முறைக்குமுள்ள வித்தியாசத்தைச் சுலபமாக அறியலாம். சர்வாதிகார அரசியல் முறைகளிலே (1) உரிமைகளும் சுதந்திரமும் மக்களிடமிருந்து பறிமுதலாக்கப்படும். சில நாடுகளில் கூடுதலான உரிமைகளும் சில நாடுகளில் குறைவான உரிமைகளும் மக்களிடமிருந்து பறிக்கப்படும். ஜனநாயக நாடுகளில் உரிமைகள் பறிக்கப்படும்பொழுது ஆட்சியாளர் சர்வாதிகார ஆட்சிமுறையை அமைக்க முயல்கின்றனர் எனக் கூறுவது இயற்கை. (2) மக்களின் பிரதிநிதித்துவ சபை நீக்கப்படும் அல்லது சர்வாதிகாரிகளின் கைப்பொம்மையாக விளங்கும் சபைகள் அமைக்கப்படும். (3) பொலீஸ், இராணுவ படையினரின் அடக்குமுறை தாண்டவமாடும். (4) ஒற்றர் முறை தீவிரமாக அமுல் நடாத்தப்படும்.

இவ்வாறு மக்கள் ஆட்சிக்குப் பதிலாக அதிகாரத்தைக் கைப்பற்றிய ஒரு சிலர் பல தந்திரங்களை உபயோகித்து தமது ஆட்சியைப் பலப்படுத்துவர். மேலும், சர்வாதிகாரிகள் மக்களுக்கு ஒரு சிலவற்றைக் கொடுத்து அவர்களுடைய ஆதரவையும் பெற முயலுவர். இவர்கள் கையாளக்கூடிய தந்திரங்கள் பல. அவற்றை விபரமாகக் கூறுவது சுலபமன்று.

இன்று சர்வாதிகார நாடுகள் எனக் கருதப்படும் நாடுகள் பல. அவற்றுள் சோவியற் ருஷ்யா ஒன்று. இங்கு ஒரு அரசியல் கட்சியின் சர்வாதிகாரம் நடைபெறுகின்றது. கொம்யூனிஸ்ட் கட்சி ஒன்றே இயங்குவதற்கு அங்கு உரிமை உண்டு. மேலும் அவ்வுரிமை சோவியற் அரசியல் சட்டத்திலேயே வழங்கப்பட்டுள்ளது. இக்காரணத்தினால், இக்கட்சியின் தலைமைப் பீடத்திலிருக்கின்றவர்கள் கட்சியின் மூலம் அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் கட்டுப்படுத்தும் அதிகார

முடையவர்களாக விளங்குகின்றனர். ஆதலினால், சோவியற் ருஷ்யாவில் ஒரு கட்சி மட்டும் இருப்பதுமல்லாமல் அக்கட்சியின் அந்தஸ்து அரசியல் சட்டத்தினால் பலப்படுத்தப்பட்டமையினால் அங்கிருக்கின்ற கொம்யூனிஸ்ட் கட்சியின் சர்வாதிகார ஆட்சி சட்டத்திற்கு அமைந்ததாக இருக்கின்றது. இது ஜனநாயகத்திற்கும் சோஷலிஸத்திற்கும் விரோதமானது.

ஒரு கட்சியின் அதிகாரத்தை அங்கு வைத்திருப்பதற்கும் பல காரணங்களை ஆதாரமாகக் கூறுகின்றனர். இவற்றுள், சோவியற் யூனியனில் முதலாளித்துவ முறை அழிக்கப்பட்டமையினாலும் அங்கு சோஷலிஸ முறை இருப்பதினாலும் அவ்வெல்லையை அடைய மக்கள் விரும்புகின்ற காரணத்தினாலும் சோஷலிஸ எல்லையை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்சி இருந்தால் போதும் என்கின்றனர். இது தவறுதலான நியாயமாகும். நோக்கம் ஒன்றாக இருந்தாலும் கட்சி ஒன்று மட்டுமே இருக்கவேண்டுமென்ற நியதியில்லை. ஒரே ஒரு கட்சி இருக்குமளவிற்கும் ஒன்றிற்கு மேற்பட்ட அபிப்பிராயங்கள் அல்லது எண்ணங்கள் இருக்குமெனக் கூறமுடியாது. ஒரு கட்சி இருந்தாலும் கண்டன உரிமை இருக்கும்பொழுது ஒன்றிற்கு மேற்பட்ட கட்சிகள் இருக்கவேண்டியதில்லை எனக் கொம்யூனிஸ்டுகள் கூறுவார்கள். ஆனால் கண்டன உரிமை இல்லாததன் காரணமாகவே, ஒரு கட்சியின் ஆதிக்கம், ஜனநாயக உரிமைகளை வழங்காது. லெனின் சோஷலிஸத்தைப் பற்றி விளக்கும்பொழுது போதிய பொருளுற்பத்தியும் தொழிலாள வர்க்கத்தின் ஜனநாயகமும் இருக்கவேண்டும் எனக் கூறினார். மேலும், ஜனநாயக முறையை விளக்கியபொழுது, பாராளுமன்ற ஜனநாயகத்திலும் பார்க்க வளர்ச்சியடைந்த ஜனநாயக முறையே தொழிலாளர்களின் ஜனநாயகம் என்றார். லெனின் கண்ட ஜனநாயகத்தில், மக்கள், அரசாங்கத்தில் மறைமுகமாகவல்ல. ஆனால், நேரடியாகவே பங்குபற்றுவார்கள் எனக் கூறினார். ஆதலினால் சோவியற் யூனியனில் ஒரு கட்சியின் சர்வாதிகாரம் இருத்தல்வேண்டும் என லெனின் அல்லது சோஷலிஸக் கொள்கைகள் கூறவில்லை. ஒரு கட்சியின் ஆதிக்கம் இருக்கும் நாட்டில் சர்வாதிகார முறையே இருக்கும். இது ஜனநாயகத்திற்கும் சோஷலிஸத்திற்கும் விரோதமானது.

சர்வாதிகார ஆட்சி இருக்கும் நாடுகளில் உரிமைகளும் சுதந்திரமும் இராது எனக் கூறினோம். சோவியற் யூனியனில் அடிப்படை ஜனநாயக உரிமைகள் இல்லை. கண்டன உரிமை இல்லை. பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் முதலியன இல்லை. பிரயாண உரிமையில்லை. இவ்வாறு எத்தனையோ உரிமைகளும் சுதந்திரமும் இல்லை. அத்துடன் 'துரோகி' எனக் கருதப்படுபவனுக்கு எதிராக வழக்குத் தொடரப்படுவதில்லை. இதனால் 'குற்றவாளி,' தான் குற்றவாளி அல்ல என நிரூபிப்பதற்கு உரிமை இல்லை. இவ்வாறு எத்தனையோ உதாரணங்களை எடுத்துரைக்கலாம். ஆனால் இவற்றிலிருந்து அறியக் கூடியது ஒன்று: மனிதன் சுய உரிமையுடன் சோவியற் யூனியனில் வாழ இடமில்லை. இரகசியப் பொலீசாருக்கும் கட்சி அங்கத்தவர்களுக்கும் பயந்து வாழும்பொழுது சைபீரியாவிற்குப் போவது இன்றைக்கோ நாளைக்கோ எனத் தெரியாது. மேலும், ஒரு கட்சியின் ஆதிக்கம் இருப்பதினால் தலைவர்களுக்கிடையே வேற்றுமை ஏற்படும் காலத்தில் கட்சியின் ஆதரவு குன்றியவனும், கட்சியின் (பலம் வாய்ந்த தலைவர்களின்) கொள்கையை ஏற்காதவனும் அதிகாரத்திலிருந்து அகற்றப்படுவது சகஜம். இவையெல்லாம் சர்வாதிகார ஆட்சிமுறையின் தன்மையாகும். இம்முறை மக்களின் அரசியல் சுபீட்சத்திற்கும் சுதந்திரத்திற்கும் ஏற்றதல்ல. இத்தகைய சர்வாதிகார அரசியல் முறைகளை உலகிலிருந்து அழிப்பதே நலம்.

சர்வாதிகார ஆட்சிமுறை நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கமாட்டாது. உதாரணமாக, இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன் ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளில் சர்வாதிகார முறை இயங்கியது. இந்நாடுகளில் மக்கள் சுதந்திரமற்று வாழ்ந்தனர். இரண்டாவது உலக யுத்தத்தில் தோல்வியுற்ற பின்னர் இந்நாடுகளில் சர்வாதிகார முறை இல்லாது அழிக்கப்பட்டது. இவ்வழிவிற்கு யுத்தம் மூலகாரணமாயிருந்தது எனலாம். சில சந்தர்ப்பங்களில், சர்வாதிகார ஆட்சிமுறை இருக்கும் நாடுகளில் வாழும் மக்கள் அவ்வாட்சி முறைக்கு எதிராக எழுந்து அதனை அழிக்க முயல்வர், சில வேளைகளில் வெற்றியுமடைவர். உதாரணமாக ஹங்கேரி தேசத்து மக்கள்

தமது அரசாங்கத்திற்கு எதிராக எழுந்தனர். ஆனால் அவர்கள் தோல்வியடைந்தனர் என்பதை நாம் நன்கு அறிவோம். ஆகவே, சர்வாதிகார ஆட்சி முறையை அந்நாட்டு மக்களே அழிக்க முயல்வர்.

சோவியற் யூனியனில் சர்வாதிகார ஆட்சிமுறை இருக்கின்ற பொழுதிலும் அங்கு மக்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரமுண்டு. கடந்த 25 வருடங்களுள், சோவியற் யூனியனின் பொருளாதார உற்பத்தி முதலியவை பன்மடங்காக வளர்ச்சியடைந்ததால் மக்கள் முன்னையிலும் பார்க்க எவ்வளவோ சிறப்பாக வாழ்கின்றனர். இந்தக் குறுகிய கால எல்லைக்குள் உலகிலுள்ள வேறு எந்த நாடாவது இவ்வளவு தூரம் முன்னேற்றமடையவில்லை எனக் கூறவேண்டும். இருப்பினும், அரசியல் சுதந்திரம் அங்கு இல்லாமையினால் சோவியற் யூனியனின் அரசியலமைப்பால் நன்மை ஏற்பட்டிருந்தாலும் அதனை வரவேற்க முடியாது. ஹவட் பாஸ்ட் (Howard Fast) என்னும் பிரபல எழுத்தாளர் சோவியற் யூனியனைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, அங்கு லெனின் கூறியவாறு ஜனநாயகம் இருக்குமேயாயின் சோவியற் யூனியன் இன்னும் எத்தனையோ மடங்கு முன்னேற்றமடையும் என்றார். இது உண்மை.

சர்வாதிகார ஆட்சி முறையின்கீழ் தீமைகள் கண்டிப்பாக உண்டு, ஆனால் நன்மையுமுண்டு. இருப்பினும் சுதந்திர உணர்ச்சி ததும்பும் இக்காலத்தில் மனிதனின் உரிமைகளைப் பறிக்கும் இம் முறையை அழித்து ஒழிக்கப்படவேண்டும்.

**பொதுநல அரசாங்கம் :**

ஒரு நாட்டில் வாழ்கின்ற மக்களில் ஆகக் கூடிய தொகையினருக்கு ஆகக் கூடிய பொதுநலனுக்காக உழைக்கும் அரசாங்கம் பொதுநல அரசாங்கம் எனப்படும். அரசாங்கத்தின் அரசியல் கொள்கை **ஆகக் கூடிய பொது நலன்** என்பதிலேயே அடங்கியிருக்கின்றது. ஆகக் கூடியது என்ற சொற்றொடர் இன்னொன்றோடு சம்பந்தப்பட்டதாகவே இருக்கின்றது. இந்தத் தண்ணீர் நல்லது என்றால் இன்னொன்

ரோடு ஒப்பிடும்பொழுது இது நல்லது எனப் பொருள்படும். ஆதலினால், 'ஆகக் கூடிய பொதுநலன்' என்றால் இன்றைய நிலையில் அல்லது சந்தர்ப்பத்தில் கொடுக்கக்கூடிய பொதுநலனில் ஆகக் கூடிய பொதுநலனைக் கொடுப்பது என்பதையே கருதும். இக்காரணத்தினாற்றான், அரசியல் முறைகளைப் படித்தறிந்தவர்களில் ஒரு சிலர் அரசியல் முறையில் சடுதியான மாற்றங்களை ஆதரியாது ஆகக்கூடிய பொதுநலனை அளிக்கும் அரசாங்கமாக ஒவ்வொரு அரசாங்கமும் விளங்கவேண்டும் என்கின்றனர். இத்தகைய அரசாங்கத்தை ஆதரிக்கின்றவர்கள், அரசாங்கம் படிப்படியாக மாற்றமடைய வேண்டுமென்ற கொள்கையை ஆதரிப்பவர்களாகும்.

ஒரு அரசாங்கம் ஆகக்கூடிய மக்களின் பொது நலனுக்காக உழைக்கவேண்டுமாயின் குறைவான பொது நலனுடைய பெரும்பான்மை மக்களின் நன்மைக்காக, கூடுதலான பொது நலனைப் பெறுகின்ற குறைவான மக்களைக் கட்டுப்படுத்த வேண்டியதாய் இருக்கும். இதனால், தனிப்பட்டவர்களின் நல உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரமுடைய அரசாங்கமாக விளங்கும். உதாரணமாக, ஒரு நாட்டில் வாழ்கின்றவர்கள் பெரும்பான்மையினர் மாதம் ரூபா 100 க்குக் கீழ் வருமானமுடையவர்களாக இருந்தால், வருமானம் குறைவாகப் பெறுகின்றவர்களுக்கு அத்தியாவசியமான பொதுநலன்களை அளிப்பதற்காக எவருக்காவது மாதம் ரூ. 2,000 ற்கு மேல் சம்பளம் அல்லது வருமானம் இருக்கலாகாது எனச் சட்டம் விதித்து இத்தொகைக்கு மேலதிகமான பணத் தொகையை அரசாங்கம் அபகரிக்கலாம். எனவே, ஆகக் கூடிய மக்களுக்கு ஆகக் கூடிய பொதுநலனை அளிப்பதற்காக ஒரு சிலரின் நலஉரிமைகளை ஒரு பொதுநல அரசாங்கம் பறிக்கவேண்டும். இதனால், தனிப்பட்ட ஒருவனின் நலன்களைப் பறிக்க அல்லது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த ஒரு அரசாங்கத்திற்கு உரிமை உண்டா?

முற்காலத்திலிருந்த அரசாங்கங்கள் ஆகக் கூடிய மக்களின் நலனுக்காக உழைக்கவேண்டுமெனக் கருதவில்லை. ஆனால் 19-ம் நூற்றாண்டில் மக்களிடையே ஏற்பட்ட ஏற்றத்தாழ்வான பிரி

வின் காரணமாக, ஆகக் கூடிய தொகையான மக்களின் ஆகக் கூடிய பொதுநலனுக்காக உழைக்கும் நோக்கத்தையே அரசாங்கம் ஏற்கவேண்டுமென்றும் அத்தகைய அரசாங்கம் ஒரு பொது நல அரசாங்கம் எனவும் அரசியல் அறிஞர் கூறினர். இவ்வாறு கூறியபொழுது, இந் நோக்கத்தை எல்லையாகக்கொண்ட அரசாங்கம் மக்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும் எனவும் வற்புறுத்தினர். ஆதலினால், 19-ம் நூற்றாண்டின் பின்னர் அரசாங்கத்தின் அதிகாரமும் கடமைகளும் கூடியதுமல்லாமல் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. உதாரணமாக, இந்நூற்றாண்டு ஆரம்பமான காலத்தில் உற்பத்தி சாதனங்களை அரசாங்கம் தேசியமயமாக்கி மக்களிடையேயுள்ள பண வேறுபாட்டைக் குறைக்கவேண்டுமென ஒரு சிலரே அபிப்பிராயப்பட்டனர். ஆனால், இன்று சோஷலிஸத்தையே எல்லையாகக் கொள்ளாத அரசாங்கங்கள், சில உற்பத்திசாதனங்களைத் தேசியமயமாக்க வேண்டும் எனக் கூறுகின்றன. ஆதலினால் ஒரு அரசாங்கம் பொதுநல அரசாங்கமாக விளங்குவதற்கு இன்ன இன்ன செய்யவேண்டுமெனக் கூற முடியாது. ஒரு பொதுநல அரசாங்கத்தின் வேலைத் திட்டங்கள் சட்டங்கள் யாவும் ஆகக் கூடிய பொதுநலனைப் பெறுவதற்காக உழைக்கும்பொழுது காலத்திற்கும் தேவைக்கும் ஏற்றவாறு நடந்து தனது குறிக்கோளை அடைய முயலும்.

ஒரு பொதுநல அரசாங்கத்தின் நன்மையை விரிவாகக் கூற முடியாவிட்டாலும் அதன் முக்கிய அம்சங்கள் பின்வருவனவாக இருத்தல் அவசியமாகும். (1) சட்டங்கள் ஒரு சிலருக்கு நன்மையைக் கொடாது ஆகக் கூடிய தொகையினருக்கு நன்மையைக் கொடுக்கக் கூடியதாயிருத்தல் வேண்டும். (2) சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும்பொழுது அதனை ஒரு சிலரின் நன்மைக்காக உபயோகிக்கலாகாது. (3) மக்களுக்குச் செய்யக்கூடிய சேவைகளுள் ஆகக் கூடிய சேவையைச் செய்து ஆகக் கூடிய தொகையினர் நன்மையடையச் செய்தல். (4) வாழ்க்கையை நடாத்துவதற்கு அத்தியாவசியமான தொழில், ஊதியம் ஆகியவற்றை அளித்து பொருளாதாரச்

சுதந்திரத்தைக் கொடுத்தல். (5) அரசாங்க நிர்வாகத்தை எல்லோருக்கும் பொதுவான முறையிலே நடாத்தி எல்லோருக்கும் ஏறக்குறையச் சமத்துவமான உரிமைகளேயும் சுதந்திரத்தையும் கொடுத்து அவர்களுக்குச் சேவை செய்தல்.

இத்தகைய பொதுநல அரசாங்கம் ஒன்றே மக்களுக்கு நன்மையைப் பயக்குமென்றும் அதனை அடைவதற்குப் புரட்சி வேண்டியதில்லையெனவும் அத்தகைய அரசாங்கத்தை அமைத்து விட்டால் அவ்வரசாங்கம் சகல விஷயங்களையும் படிப்படியாக மாற்றி மக்களின் நலனுக்காக உழைக்கும் அரசாங்கமாக விளங்கும் எனவும் கூறுகின்றனர். பொதுநல அரசாங்கத்தின் நோக்கங்களைச் செய்கையால் காட்டவல்ல அரசாங்கத்தை அமைப்பது கஷ்டம். அவ்வாறு அமைத்துவிட்டால் அதனுல் நன்மை உண்டு.

**சோஷலிஸம்:**

'எமதெல்லே சோஷலிஸம்' எனக் கூறுவோர் பலர். ஆனுல் அவ்வாறுகூறுவோரில் பெரும்பான்மையினர் சோஷலிஸக் கொள்கையை ஆதரிப்பவரல்ல. சோஷலிஸம் என்ருல் என்ன? **ஒரு தொழிலாள விவசாய அரசாங்கத்தை அமைத்து அதன் மூலம் தொழிலாள - விவசாயிகளுக்கு நன்மை பயக்கக் கூடிய வேலைத் திட்டங்களைச் செய்யும் அரசாங்கம் சோஷலிஸ அரசாங்கம் எனப்படும்.**

சோஷலிஸக் கொள்கைகள்பற்றி 19-ம் நூற்ருண்டின் ஆரம்பகாலம்முதல் பேசப்பட்டாலும் அதனைப்பற்றிய தத்துவக் கொள்கைகள் அந்நூற்ருண்டின் கடைப்பாகத்திலேயே ஸ்திரமடைந்தன. சோஷலிஸத்தின் அடிப்படைத் தத்துவங்கள் மார்க்ஸ்-ஏங்கல்ஸ் ஆகிய இருவரின் முயற்சியினுலேயே வரையப்பட்டன. இவர்களுடைய ஆராய்ச்சியின் பயனுக, மனித சரித்திரம் எழுதப்பட்ட காலம் முதல் உடையவன் இல்லாதவன் எனச் சமுதாயம் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும், இவ்விருவர்க்கங்களிடையே முரண்பாடும் போராட்டமும் இருந்துவருகின்றதென்றும், இதுகாலவரை இவ்விருவர்க்கத்தினருள் உடையவரே அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றி அரசாட்சி செய்து

வருகின்றனரென்றும், இன்றுள்ள முதலாளித்துவ சமுதாயத்திலே உரிமையற்றவர்களாக வாழ்ந்து முதலாளிகளுக்குக் கொள்ளை இலாபமெடுத்துக் கொடுக்கும் தொழிலாள வர்க்கத்தினர் அரசாங்க அதிகாரத்தை முதலாளிகளிடமிருந்து கைப்பற்றித் தமதாட்சியை அமைத்த பின்னர் அடிமைகளாக வாழ்ந்த தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் நன்மையைப் பயக்கவல்ல சோஷலிஸத் திட்டங்களைக் கையாளவேண்டுமென்றும் சோஷலிஸ அரசாங்கத்தினூடாக எவ்வித வர்க்கப் பிரிவுமற்ற சமுதாயத்தை - கொம்யூனிஸ சமுதாயத்தை — அமைப்பதற்கு சோஷலிஸ சமுதாயம் முதற்படியாக இருக்குமென்றும் கூறினார்கள். இவர்களின் தத்துவமே சோஷலிஸத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கியது.

மார்க்ஸ் - ஏங்கல்ஸ் ஆகிய இருவரின் ஆராய்ச்சியின்படி இதுகாலவரை உற்பத்தி சாதனங்களை வைத்திருந்தவரே அரசாட்சி புரிந்து வந்தனர். அதுமட்டுமன்றி செல்வந்தர்களாக வாழ்ந்து சகல சுக போகங்களையும் அனுபவித்தனர். ஆனால் இவர்களின் தொகையோ மிகக் குறைவு. இவர்களின் உற்பத்திசாதனங்களில் உழைத்து இவர்களுக்கு அதிக இலாபத்தைத் தேடிக்கொடுக்கும் தொழிலாளர்களின் தொகையோ மிக அதிகம். முதலாளிகள் பெறும் இலாபம் தொழிலாளர்களின் நலனுக்காக உபயோகிக்கப்படாமையால் அவர்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் கேவலமான நிலையிலிருக்கின்றது. இக்காரணத்திற்காகவே முதலாளிகளின் உற்பத்தி சாதனங்களைப் பொதுச்சொத்தாக்க வேண்டுமென்றனர். அவ்வாறு ஆக்கப்பட்டால் உற்பத்தி சாதனங்களால் கிடைக்கக்கூடிய இலாபம் முழுவதும் ஒரு சிலரின் கைக்குள் செல்வதைத் தடுத்து பொதுமக்களின் நன்மைக்காகவும் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் அப்பணத்தை உபயோகிக்கலாமெனவும் கூறினர். இத்தத்துவத்தின்முக்கிய அம்சம், உற்பத்தி சாதனங்களைப் பொதுச் சொத்தாக்குவதேயாகும்.

உற்பத்தி சாதனங்கள் ஒரு சிலரின் கைக்குள் சிக்கிக்கிடப்பதால் அவர்கள் இலாபத்தைப் பெறுவதுடன் தமது மூலதனத்தைப் பெருக்கக்கூடியதாயுமிருக்கின்றது. இதனால் உற்பத்தி சாதனங்களையுடையவர் இன்னும் கூடுதலான உற்பத்தி சாதனங்

களை அமைத்து அவற்றின் மூலமாக இலாபத்தை இன்னும் பெருக்கக்கூடியதாயிருக்கும். ஆதலினாற்றான் தனிப்பட்ட முதலாளிகளின் கையிலிருக்கும் உற்பத்தி சாதனங்களை அவர்களிடமிருந்து அபகரித்து அவற்றைப் பொதுச் சொத்தாக்கினால் பணம் முழுவதும் ஒரு சில முதலாளிகளிடம் செல்வதைத் தடுக்கலாம். அத்துடன் அப்பணத்தைச் சமுதாயத்தினர் அனுபவிக்கக் கூடியதாயுமிருக்கும்.

சோஷலிஸக் கொள்கைகளை மார்க்ஸ் ஏங்கல்ஸ் 19-ம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் எடுத்துரைத்தனர். இதன் பின்னர் எத்தனையோ விதமான சோஷலிஸக் கொள்கைகளை அவர்களுக்குப் பின் வந்தவர்கள் எடுத்துரைத்தாலும் இன்று சோஷலிஸம் எனக் கூறும்பொழுது உற்பத்தி சாதனங்களைத் தேசீயமயமாக்க வேண்டுமென்ற நோக்கத்தையே சோஷலிஸ வாதிகள் கைக்கொள்கின்றனர். எனவே, மார்க்ஸ் - ஏங்கல்ஸ் ஆகியவர்களின் தத்துவ ஆராய்ச்சிகள் ஏற்கப்பட்டாலென்ன படாவிட்டாலென்ன உற்பத்தி சாதனங்களைப் பொதுச் சொத்தாக ஆக்க வெண்டுமென உலகெங்குமுள்ள சோஷலிஸ வாதிகள் ஏற்பதினால்; **சோஷலிஸம் எனக் கூறும்பொழுது ஒரு நாட்டில் வாழ்கின்ற மக்களிடையே இருக்கின்ற வேறுபாடுகளை ஒழிப்பதற்காக இவ்வேறுபாடுகளுக்குக் காரணமான உற்பத்தி சாதனங்களைத் தேசீயமயமாக்குகின்ற கொள்கையை அடிப்படையாகக்கொண்ட அரசாங்கமே சோஷலிஸ அரசாங்கமெனப்படும்.** இதைவிடுத்து சாஸ்திர ரீதியான தர்க்கங்களை இங்கு ஆராய்வது உசிதமல்ல.

இக்காலத்தில், உலகிலுள்ள அரசாங்கங்களில் பல சோஷலிஸத்தையே எல்லையாகக்கொண்டுள்ளன. உதாரணமாக, இந்திய அரசாங்கம் சோஷலிஸத்தையே எல்லையாகக்கொண்டு பொருளாதாரத் திட்டங்கள் மூலமாக அவ்வெல்லையை அடைய முயலுகின்றது. அவ்வாறே எம். இ. பி. ஆட்சியின் கீழுள்ள இலங்கை அரசாங்கமும் சோஷலிஸ எல்லையையே தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இவ்வெல்லையை அடைவதற்காகப் பொருளாதாரத திட்டங்களை அமுல் நடாத்துவதற்காகப் பொருளாதாரத் திட்டக் கொமிஷன் ஒன்றை அமைத்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் திட்டங்கள் இன்னும் அமைக்கப்படாமையால் அவற்றைப் பற்றி இன்று நாம் ஆராய முடியாத நிலையிலுள்ளோம். ஆனால் இவற்றை இனிவரும் காலத்தில் விரிவாக ஆராய முடியும்.

இலங்கை அரசாங்கம் சோஷலிஸத்தை எல்லையாகக்கொண்டமையினாற்றான் உற்பத்தி சாதனங்களைத் தேசிய மயமாக்கும் திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. தற்பொழுது பஸ் போக்குவரத்து சேவை இவ்வருடம் முதல் தேசிய மயமாக்கப்பட்டுள்ளது. தேயிலை, றப்பர் தோட்டங்களையும் தேசிய மயமாக்குவதென எம். இ. பி. கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட பொழுதிலும் அதைப்பற்றிய தீர்மானம் இன்னும் முடிவாக்கப்படவில்லை. விவசாயிகளுக்குச் சலுகை செய்வதற்காக நெற்காணி மசோதா தயாரித்துப் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதனை நிலச் சுவாந்தார் எதிர்த்தனர். இம்மசோதா அமுல் நடாத்தப்படுமேயாயின் 26·3 வீத நிலமற்ற விவசாயிகளும், ½ ஏக்கருக்குக் குறைந்த 16·0 வீத விவசாயிகளுக்கும், ½ ஏக்கருக்கும் 1 ஏக்கருக்குமிடையே நிலமுடைய 11·8 வீத விவசாயிகளும் - எல்லாமாக 54·1 வீத விவசாயிகள் - அளவற்ற நன்மையை அடைவார்கள். இவ்வாறு, இலங்கை அரசாங்கம் இன்னும் தன் சோஷலிஸத் திட்டங்களைத் திட்டவட்டமாக வரையாவிட்டாலும், சோஷலிஸ எல்லையை அடைவதற்காக முயற்சி எடுக்கின்றது எனலாம்.

ஆகவே, சோஷலிஸம் ஒரு அரசியல் முறையாகும் இம்முறை தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் நன்மையைக் கொடுக்கக்கூடியதாகும். இம்முறையை இக்காலத்தவர் கூடுதலாக ஏற்று வருகின்றனர். மேலும், சோஷலிஸம் ஜனநாயக முறையிலும்பார்க்க முற்போக்கான முறையாகும். உலக ஜனநாயக நாடுகளை நன்கு ஆராயுமிடத்து, ஜனநாயம் மக்களுக்கு அரசியல் சுதந்திரத்தைக் கொடுத்துள்ளதாயினும் அதனை முதலாளித்துவ வர்க்கத்தினரே ஆயுதமாக உபயோகித்துப் பலனைப் பெறுகின்றனர். ஆனால், சோஷலிஸ முறையின் பிரகாரம் இதுவரைகாலமாக அடிமைகளாக வாழ்ந்து கேவலமான வாழ்க்கையை நடாத்திய தொழிலாள விவசாயிகளே பலனடைவார்கள். இந்த சோஷலிஸ முறையின் மூலம் ஒரு பொதுநல அரசாங்கத்தின் நோக்கமாகிய ஆகக் கூடிய மக்களுக்கு ஆகக் கூடிய பொதுநலனைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

சோஷலிஸம் எனக் கூறும்பொழுது, அம்முறையில் ஜன நாயக முறையிலே இருக்கின்ற உரிமைகளும் சுதந்திரங்களும் இல்லாதிருக்கும் எனக் கூறுவது தவறு. சோஷலிசத்தில் ஜன நாயக முறையின் முக்கிய அம்சங்கள் யாவும் நிலைத்திருக்கும்.

சமுதாயங்கள் மாற்றமடையும் பொழுதும் ஒரு அரசியல் முறைக்குப் பதிலாக இன்னுமொரு அரசியல் முறை அமைக்கப் படும்பொழுதும் முன்னையதிலுள்ள நல்ல அமசங்கள் யாவும் புதிதாகத் தோன்றுகின்ற அரசியலமைப்பில் சேர்வது இயற்கை. ஆகவே, ஜனநாயகத்திலுள்ள சிறந்தவையாவும் சோஷலிஸத்தில் இடம் பெறும்.

**அரசும் தனி ஒரு நபரும்: (The State & the Individual)**

உலக நாடுகளிடையேயுள்ள பலவிதமான அரசியல் முறை களில் முக்கியமான ஒரு சிலவற்றைப்பற்றி நாம் அறிந்தோம். இவ்வரசியல் முறைகள் நிரந்தரமானவையல்ல. இவை காலத்திற் குக்காலம் மாற்றமடையும். இவ்வாறு மாற்றமடையும் பொழுது அரசிற்கும் தனி ஒரு நபருக்குமிடையேயுள்ள தொடர்பும் மாற்றமடையும். உதாரணமாக, பிரபுத்துவ அரசியல் முறை இருந்த காலத்தில் அரசியலதிகாரம் பிரபுக்களிடம் இருந்தது. அவர்களுக்குக் கீழிருந்த பண்ணையாட்கள் அடிமைகளாக வாழ்ந் தனர். பிரபுத்துவ முறையின்பின் முதலாளித்துவ சமுதாயம் ஏற்பட்ட பின்னர், அரசியலதிகாரம் முதலாளிகளிடம் சென் றது. அடிமைகளாக வாழ்ந்த பண்ணையாட்கள் சுதந்திரத்தைப் பெற்றுத் தொழிலாளர்களாக மாறினர். இம்மாற்றம் ஏற்பட்ட துடன், தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காகவும் நலனுக் காகவும் வாதாடி அல்லது போராடியதனால் எத்தனையோ உரிமை களைப் பெற்றுத் தமது நலனை வளரச் செய்துள்ளனர். இன் றைய முதலாளித்துவ முறையில் ஒருவன் இன்னொருவனுக்கு அடிமையாக வாழ இடமில்லாததுடன் எவனொருவனையும் கட்டுப் படுத்துவதற்கு எவருக்கும் உரிமையில்லை. ஆகவே, பிரபுத்துவ சமுதாயம் அழிந்து அதனழிவில் தோன்றிய முதலாளித்துவ சமுதாயத்தில் அரசிற்கும் தனி ஒரு நபருக்குமுள்ள தொடர்பு ஆண்டான் அடிமைத் தொடர்பல்ல ஆனால் தனி ஒரு நபரின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தாத அரசிற்கும் உரிமைகளுடைய ஒருவருக்கும் இடையே உள்ள தொடர்பேயா கும். இன்றுள்ள இத்தொடர்பு காலத்திக்குக் காலம் மாற்ற மடைவதுடன் இம்மாற்றம் முற்போக்கான மாற்றமாகவும் இருக்கும்.

மேலே குறிப்பிட்ட தொடர்பு மாற்றமடைவதற்கு அரசியல் சீர்திருத்த வாதிகள் முதலியோரின் இடைவிடாத முயற்சி மூலகாரணமாக இருந்தது. 19-ம் நூற்றுண்டில் அரசியல் சீர்திருத்த வாதிகள் நடாத்திய போராட்டத்தின் காரணமாக நாம் இன்று அனுபவிக்கின்ற உரிமைகளில் பலவற்றைப்பெற்றோம். மேலும், தொழிலாளர்களின் இயக்கங்களான தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடின. தொழிலாளர்களின் போராட்டங்களுக்குத் தலைமைதாங்கிய தலைவர்கள், பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைப் பாகத்தில் பாமர மக்களின் மனதைக் கவர்ந்த சோஷலிஸக் கொள்கைகளை ஏற்று அவ் வெல்லையை அடையும்பொருட்டுப் போராடியதால் அரசிற்கும் தனி ஒரு நபருக்குமிடையேயுள்ள தொடர்பு பெருமளவிற்கு மாற்றமடைந்தது. இவ்வாறு மாற்றமடைவதற்கும் பல காரணங்கள் இருந்தன. இருப்பினும் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட சக்தியைத் திரட்டித் தொழிலாளரின் உரிமைகளுக்காகப் போராடிய தொழிற் சங்கங்களும் சோஷலிஸக் கட்சிகளும் மேலே குறிப்பிட்ட மாற்றங்களுக்குப் பேருதவியளித்தன.

## தொழிற் சங்கங்கள்:

முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்தி சாதனங்கள் யாவும் முதலாளிகளுடையதாகும். இச்சாதனங்களைத் தொழிலாளர்கள் இயக்குகின்றனர். முதலாளிகளுடைய நலஉரிமைகளும் தொழிலாளர்களுடைய நலஉரிமைகளும் ஒன்றிற்கொன்று முரண்பட்டதாகும். எனவே, தொழிலாளர்கள் தமது நலன்களை வளர்ப்பதற்காக அவர்கள் ஒன்றுதிரண்டு தொழிற் சங்கமென்ற ஸ்தாபனத்தை அமைத்துள்ளனர். 19-ம் நூற்றுண்டின் ஆரம்பகாலத்தில் தொழிற் சங்கங்களை அமைக்கும் உரிமையை இங்கிலாந்து தேசத்துத் தொழிலாளர்கள் போராடியே பெற்றனர். அவர்களின் போராட்டத்தின் பயனுகவே உலகிலுள்ள மற்றத் தொழிலாளர்களும் இவ்வுரிமையை மிகவும் இலகுவாகப் பெறக்கூடியதாக இருந்தது. இந்தஸ்தாபனத்தின் நோக்கம்: (1) அன்றாட வாழ்க்கையை நடாத்துவதற்கு அத்தியாவசியமான நலன்களுக்காக, (உதாரணமாக உயர்ந்த சம்பளம், 8 மணித்தியால வேலை முதலியன) போராடுதல் (2) தொழிலாளர்களின் நலன்களை நிரந்தரமாகப் பாதுகாப்பதற்காகத் தொழிலாளர்களின் அரசாங்கத்தை அமைத்தல். இது நீண்ட கால எல்லையாகும்.

மேலே குறிப்பிட்ட நோக்கங்களுக்காகத் தொழிற் சங்கங்கள் போராடும்பொழுது, தொழிலாளர்கள் தமது போராட்டத்

தின்மூலம் பெறுகின்ற வெற்றி ஒவ்வொன்றும் அவர்களை முன்னேற்றப் பாதையிலே கொண்டு செல்லும். உதாரணமாக, சிக்காக்கோ (அமெரிக்கா) நகரில் 1887-ம் ஆண்டு 8 மணித்தியால வேலைக்காக நடாத்திய போராட்டத்தில் உயிர்ப்பலி கொடுத்து இவ்வுரிமையைப் பெற்றனர். அப்போராட்டத்தை ஞாபகமூட்டுவதற்காகவே உலகத் தொழிலாளர்கள் மே தினத்தைக் (மே மாதம் 1-ம் திகதி) கொண்டாடுகின்றனர். இவ்வுரிமையை இன்னும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் பெறுதிருக்கின்றனர். ஆகவே, தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களின் நல உரிமைகளுக்காகப் போராடும் நோக்கத்தைக் கொண்டவைகளாகும்.

தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடும் பொழுது இரு முறைகளைக் கையாளமுடியும். ஒன்று சமாதானமான முறையிலே முதலாளிகளும் தொழிலாளர்களும் கூடிக் குறைகளைத் தீர்த்தல். இரண்டு, சமாதான முறையினுற் தீர்க்க முடியாவிட்டால் வேலை நிறுத்தத்தின் மூலம் குறைகளைத் தீர்த்தல். இவ்வழிகளை உபயோகித்துத் தமது குறைகளைத் தீர்க்க முடியும், இல்லையேல் உரிமைகளுக்காகப் போராடி வெற்றிபெற முடியும்.

இலங்கையில் தொழிற் சங்கங்கள் சிறந்த முறையில் இன்னும் வளர்ச்சியடையவில்லை. இதற்கு, தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் போராட வேண்டுமென்ற உணர்ச்சி அவர்களிடம் இல்லாததே காரணமாகும். இங்கிலாந்து தேசத்தில் தொழிலாளர்கள் இவ்வுணர்ச்சியுடையவர்களாக இருக்கின்றமையினுல் தொழிற்சங்க இயக்கம் பலம் வாய்ந்ததாக இருக்கின்றது. இக்காரணத்தினுலேயே இங்கிலாந்திலுள்ள தொழிலாளர்கள் தமது நலன்களையும் உரிமைகளையும் பெறக்கூடியதாக இருப்பதுடன் தாம் பெற்ற நலன்களையும் உரிமைகளையும் இழக்காது பாதுகாக்கக்கூடியதாக இருக்கின்றது. எனவேதான், தொழிற்சங்கம் எவ்வளவிற்கு வளர்ச்சியடைந்து பலம் வாய்ந்ததாக இருக்கின்றதோ அவ்வளவிற்குத் தொழிலாளர்கள் தமது நலன்களையும் உரிமைகளையும் பெற்று உரிமையுடன் மனிதர்களாக வாழ முடியும் எனலாம். இக்காலத்தில் தொழிற் சங்கங்கள் பிரதானமான ஸ்தாபனமாகும். இவற்றின் மூலமாகத் தொழிலாளர்கள் தமது நலன்களை வளர்க்கக்கூடியதாக இருப்பதினுல் இந்த ஸ்தாபனத்தை வளர்க்க அவர்கள் முயலவேண்டும்.

இந்நூலாசிரியர் இயற்றிய நூல்கள்:

1. குடியியல், 7-ம், 8-ம், வகுப்புகளுக்குரியது.

2. குடியியல், G. C. E. 1-ம் பாகம்.

„ „ 2-ம் பாகம். (அச்சில்)

ஸ்ரீ பார்வதி அச்சகம்,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.